...தராங்கி

1036
3·15

...ரினிய தமிழ் நாடகம்

OFFICE OF THE REGISTRAR
27 SEP 1915
MADRAS

வடுவூர் கே. துரைசாமி அய்யங்கார், பி.ஏ.,
இயற்றியது

சைதாப்பேட்டை
டி. ஏ. ராமய்யா, எம். ஏ., எல். டி., அவர்களால்
முன்னுரை எழுதப்பெற்றது.

இரண்டாம் பதிப்பு

சென்னை, திருவல்லிக்கேணி
லலிதா விலாஸ புத்தகசாலையாரால்
வெளியிடப்பெற்றது

...15

O-12 MDS, 5
N15
85572

[விலை அணா 14

நவீன தமிழ் நாவல்கள்.

	ரூ.	அ.	ப.
தனபாலன் I, & II ...	1	8	0
கண்ணகி ...	0	12	0
பத்மநாபன் ...	0	10	0
லலிதாங்கி ...	0	8	0
மனோரமா ...	0	8	0
பங்கஜாக்ஷி ...	0	8	0
ராஜப்பிரபா ...	0	6	0
ஆரியகுமாரி ...	0	6	0
மூன்றுவைரங்கள் ...	0	5	0
புகழேந்திப்புலவர் நளவெண்பா சுயம்வரகாண்டம் தெளிபொருளுரையுடன்	0	4	0
நவநீதம் ...	0	3	0
பத்மினி ...	0	3	0
மரியாதைராமன் ...	0	2	0
தைரியமுள்ள சிறுவன் ...	0	2	0
ராயர் அப்பாஜி ...	0	1	6

லலிதாவிலாஸ புத்தகசாலையார்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

Copyright to the Publishers

85572

2009
894.8112
III
OFFICE OF THE REGISTRAR OF BOOKS 24 SEP 1915 MADRAS

PUBLISHERS' NOTE TO THE REVISED EDITION

This edition of "Sundarangi" has been thoroughly revised by the author and suggestions and alterations which came too late for the first edition have been carefully embodied. "Sundarangi" was, in a shorter form, staged by Mr. T. A. Ramaiya, last year at Kumbakonam, when he was the conductor of the Vani Vilas Sabha there, and it proved to be a great success. We have no hesitation whatsoever in saying that this revised edition will be exceedingly popular and we join the author in expressing our sense of indebtedness to Mr. T. A. Ramaiya for valuable suggestions which he has been kind enough to make and which, we are sure, enhance the value of the book.

TRIPLICANE,
28th August, 1915. — LALITA VILAS BOOK DEPOT.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 SEP 1915
MADRAS.

FOREWORD

"GOOD wine needs no bush," says the master dramatist. The Tamil play before us, entitled *Sundarangi*, needs no foreword at all, for it is really very good wine and can surely speak for itself and the author is a great Tamil scholar, having mastered *Tholkappiam* as well as all the old *Sangam* Literature. "Yet to good wine they do use good bushes," continues the immortal play-wright. I would that I had *good* bushes to give! But the fact is I have almost no bushes to give or lend, for I cannot pretend to have any extensive or intensive knowledge of the ancient Tamil Literature. But since I had the unique pleasure of hearing the play read to me by the author himself, I think I shall be failing in my duty to the author as well as to the public, if I let go this opportunity without putting before the reader what I feel I have to say.

The stream of Tamil Literature has been stagnant for many centuries. There have been very many clever imitations, but very few original works. Far-fetched images and cold conventions have been reigning supreme, for those who have drunk deep at the old venerable fountains seldom, if ever, evince a taste for new springs, and, more often than not, look upon every departure, if not with disdain, at least with dislike. But signs are not wanting to show that very soon there will be a new era brighter we may hope than any before.

The lethargy of centuries seems to be breaking up. New ideas are spreading and new inarticulate soul throbs may be heard by the watchful ear. But though there is a sort of *imaginative* restlessness in the air, we are still hesitating about expression. The scant courtesy generally shown to the vernaculars seems to delay in the coming of the New Age. But very soon the choice must and will be made. It will before long be realised that though we may be bread up in a foreign language, we live and move in our vernacular. The English themselves realised the fact some six centuries ago. They tried a form of Latin and chose English and Chaucer paved the way for Shakespeare. Our friends in the north have tried English and are giving it up for their vernacular. I am sure we are going to do the same. Who knows there may be at this very moment a Chaucer or a Rabindra Nath Tagore lisping in Tamil " for the numbers come."

It is therefore mostly as a promise of what is to come that I hail this '*Sundarangi.*' But at the same time I can assure the reader that '*Sundarangi*' can stand severe test by itself. Though it purports to be but a free translation of Shakespeare's '*Cymbeline,*' it is much more than a free translation. Only the main incidents in the life of '*Imogen*' could be followed. The characters, including Imogen after whom the play is named, had to be re-created in consonance with Indian ideas and sentiments. To have done this successfully is no small achievement, especially when it is remembered that this is Mr. Aiyengar's first venture in the literary field. The ideas and atmosphere are purely Indian, and the aroma is essentially the aroma of the land of champak and sirish flowers. Mr. Aiyengar has at his command both an easy and fluent prose style and a sweet and

chaste poetic style. There is one other feature about the work, which calls for special mention. It is Mr. Aiyengar's firm belief, and firmer is mine, that the spirit of the Tamil drama is not fully brought out unless suitable songs are introduced. It is well known, too, that the shades of difference among the different *ragams* indicate shades of difference in ideas and feelings and that each *ragam* has an individuality which tells, as if in a flash. Numerous songs in addition to verses have therefore been introduced in '*Sundarangi*' and the tunes selected are mostly apt and well known tunes. All the objectionable features of the ordinary Tamil dramas are conspicuous by their absence and I feel that this book can safely be placed in the hands of young and old, of both sexes. '*Sundarangi*' should prove specially useful to the student population who are now asking for bread, but are being given stones. The easy flow of the conversational style, the natural sweetness of the verses, the elevated moral sentiment and the refined taste should surely recommend themselves to even a casual reader. Moreover, '*Sundarangi*' may be in a sense looked upon as a type of what future Tamil drama ought to be. And as such I have no hesitation whatsoever to press forward Mr. Aiyengar's claims to the praise and encouragement of the enlightened readers.

SAIDAPET,
27th April, 1914.

T. A. RAMAIYA.

நூன்முகம்.

தமிழ்மகள் நாவினிற் றவழ்பெரு மறிஞர்காள்!
கமைபுரிந் தருளுமின் கசடுகட் பலவுள.
சுந்தராங் கிப்பெயர்ச் சந்தமிகு மிக்கதை
சொந்தமாய்ச் செய்திலேன் சுவையினுக் கிருக்கையாய்ப்
புகழ்மாது பணியப் பூமாதின் வதனமாய்ச்
சகமெலா மிறைஞ்சிடத் தகவினுக் கன்னையாய்த்
தனமாது மகிழ்வுடன் தாண்டவம் புரிந்திட
மனதினுக் கணிதரும் வாணியின்வாசமா
யோங்கிய வணிநக ருலகோ ரேத்திடு
மாங்கில மதனி லமலன தருளால்
வந்துதித் தோனும் வரகவி யியற்கை
யந்தமும் வாய்மையு .மாடிபோற் காட்டுவோன்
கம்பரு மின்புறுங் கவிதரும் ஷேக்ஸ்பியர்
சிம்பலி னென்பதாஞ் சிறியதோர் நாடகஞ்
சிதைவிலாப் புகழுடன் செய்தன னன்னவன்
கதையினைத் தழுவியே கலையிலாப் பேதையா
னிதையிமிழ் தமிழினி லியற்றினேன் வசைபெற.
இத்தகைச் செயலினை யியற்றிடத் தேவையா
மெத்தகைப் பெருமையு மில்லாத வீணன்யா
னினிமைநிறை தமிழ்மாதின் மிசைபெருகு மாசையாற்
கனிவுடை மனத்தனய்க் கடுகியான் வரைந்தனேன்.
முந்திய கதையினை முற்றிலுங் கொண்டிடா
திந்தியற் கினிதாக வேன்றவனா மாற்றினேன்

மிகவெளிய நடைதனில் வினையமில் பனுவல்பல
நகைபெறச் செய்துளேன் நவைபல விருப்பினும்
குறைபல குழுமினும்பொறுத்திட லறிஞர்பொறை
துறையிலேன் மதியிலேன் றுணையிலேன் பிறிதிலேன்.
குழவிய ரியற்றிடுங் குறியமண் வீட்டினை
வழியறி சிற்பியர் வசைமொழிந் திகழ்வரோ.

SAIDAPET,
27—4—14.

K. DURAISWAMI.

அபிதானவிளக்கம்.

பிரதாபசிம்மன்	மாளவதேசத்தரசன்.
சுந்தரன் சந்திரன்	பிரதாபசிம்ம அரசனது புத்திரர்
ஜெயபாலன்	பிரதாபசிம்மனது இரண்டாவது மனைவியின் தமையன்
அனுமந்தன் குணசேகரன்	ஜெயபாலனுடைய தோழர்கள்
கருணகரன் தனபாலன்	நகரத்தினர்
மதிவதனன்	மாளவதேசத்திலிருந்த சூரசேனனென்னும் போர்வீரனது மகன். சுந்தராங்கியின் தோழன், அரசனால் வளர்க்கப்பட்டவன்
நரசிம்மவீரன்	பிரதாபசிம்மனால் நகரைவிட்டு விலக்கப்பட்ட ஓர் போர்வீரன்
புருஷோத்தமன்	மதிவதனனுடைய சேவகன்
பராக்கிரமபாது	கலிங்கதேசத்துச் சேனாதிபதி
சூரசேனன்	கலிங்கதேசத்திலோர் பிரபு
வாசுதேவன்	மாளவதேசத்து அரண்மனை வைத்தியன்
பலராமன்	கலிங்கதேசத்தான். மதிவதனனுடைய நண்பன்
சுந்தராங்கி	மாளவதேசத்தரசனது மூத்த மனைவியின் வயிற்றிலுதித்த புத்திரி
சாசாங்கி	மாளவதேசத்தரசனது இரண்டாவது மனைவி
பத்மாவதி	சுந்தராங்கியின் தாதி
மோகனா	சாசாங்கியின் தாதி. இன்னும் மற்றவர்

இடம் :—மாளவதேசம், கலிங்கதேசம்.

ஓம் சுபம்:

சுந்தராங்கி.

(ஓர் இனிய தமிழ் நாடகம்)

பூரவாகினியே யன்னை புகழ்தரு மினிய பூவை
நாரணனரிய சேய ணயந்திடு புனிதை வாணி
சீரணி தவளப் போதோ டேரண வன்னம் நீங்கிப்
பூரண கருணை தாங்கிப் புரிந்தருள் நடன நாவில்.

முதல் அங்கம்

முதற் களம்

மாளவதேசம்—அரண்மனையை யடுத்த பூஞ்சோலை.

நகரத்தின ரிருவரின் சம்பாஷணை.

கருணாகரன்.—நண்பா! தனபாலா! இன்று தென்றல் வெகு உல்லாசமாய் வீசுகின்றது. மிக்க இரமணீயமான இச்சோலையை விடுத்துச் செல்லுதற்கு எனக்கு மனமே யில்லை. ஆதலின் இன்னம் சிறிது உலாவுவோம்.

தனபாலன்.—நண்பா! அப்படியே ஆகட்டும்.

கருணாகரன்—ஆகா! இச்சோலையின் சிறப்பை எவ்வாறு வர்ணிப்பது!

(இராகம்-தோடி)

மயில்பல நடனமாடக் குயில்சில மகிழ்ந்துபாட
முயல்பல குழுமியோட முகைய விழ்மலர் நகைக்கக்
கயல்விழி மடவோர்மையுண் கண்களாஞ் சுரும்பினங்கள்
செயிரிலாமது வருந்திச் செருக்கிரீங்காரஞ் செய்ய

என்ற வண்ணம் இவ்வனத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் எத்தகைய சுறு சுறுப்பையும், பேரானந்தத்தையும் புலப்படுத்துகின்றது!

தனபாலன்.—நண்பா! விலங்குகள், பறவைகள், புட்பங்கள் முதலிய அற்பமான உயிர்கள்யாவும் இவ்வாறு குதூகலத்தைப் புலப்படுத்த நமது தேசத்து மனிதர்மாத்திரம் துன்பக் கடலிலாழ்ந்திருக்கக் காரணமென்ன? இந்நகரத்தில் யாரைக் காணினும் மிக்க விசனக் குறியுடன் தோன்றுகின்றனர். நகரத்தினர்மட்டோ? இத்தேசத்

செருக்கி=கருவங்கொண்டு; செயிர்=குற்றம்.

தரசனும் அவனைச் சார்ந்தோரும் அவ்வாறு காணப் படுகின்றனரே! காரணமென்ன?

கருணாகரன்.—ஆகா! நேயா! நீ இந்நகரத்திற்றானிருக்கின்றனையோ? அன்றி நித்திரையில் நடப்பவன்போல உணர்வின்றித் திரிகின்றனையோ? யாவருமறிந்த இவ்வற்ப விஷயத்தை நீயுணரா திருத்தல் பெரும் விந்தையாயிருக்கின்றது. நமது அரசன் பிரதாபசிம்மனது ஒரு தனிச் செல்வியும் அவனுக்குப் பின்னர் இத்தேசத்தின் அரசியாதற் குரியவளுமான அழகிற் சிறந்த சுந்தராங்கியென்றோர் மங்கையிருப்பதாய்க் கேள்விப் பட்டிருக்கின்றனையோ? இல்லையோ?

தனபாலன்.—ஆமாம் அதை அறிவேன். அவளது அன்னை மண்ணுலகை விடுத்து விண்ணுலகேகிய பின்னர், நமது முதிய அரசன் சரசாங்கி யென்னுமோர் மாதை மணந்திருப்பதையு மறிவேன்.

கருணாகரன்.—அப்படியா! மெத்த நன்று! அரசன் சுந்தராங்கியைத் தனது இரண்டாங் காதலியின் அண்ணனை ஜெயபாலனுக்கு மணம்புரிவிக்கக் கருதியிருக்கின்றனன். சுந்தராங்கியோ வெனின் இம்மணத்திற்கியையாது வேறோர் புருஷனைத் தனக்கு நாயகனாக வரித்துக் கொண்டு, அவனையே மணப்பதாய் ஒரே மனதாய்க் கூறுகின்றனள். இவளால் விரும்பப் பட்டவன் மிக்க எளியோனேயாயினும் அவளுக்குத் தக்க காதலனே! நகரத்தைவிடுத் தோடிப்போமாறு இவனுக்கு நமதரசன் கட்டளையிந்து தனது புதல்வியைச் சிறைச் சாலையிற் புகுத்தி விட்டனன். இதன் பொருட்டே நகரத்தினர் யாவரும் வியாகூலப்படுவதாய் வெளித் தோற்றத்திற்கு மாத்திரம் நடிக்கின்றனர். எனினும்

இவ்விஷயத்தில் நமதரசன் ஒருவனே உண்மையில் மனம் நொந்து விசனக் கடலிலாழ்ந் திருப்பவனென நினைக்கின்றேன்.

தனபாலன்.—(ஆச்சரியத்துடன்) ஆகா! அப்படியா! அரசனை யொழிந்த மற்றையோர் வருந்த வில்லையோ?

கருணாகரன்.— இம்மணத்தை எப்படியாயினும் நிறைவேற்ற வேண்டு மென அவாக்கொண்ட மன்னனின் இளம்பத்தினியும் அவளுக்கு முன் பிறந்தோனான ஜெயபாலனும் அரசனுக்கதிகமாய்த் துயரிலாழ்ந்திருக்கின்றனர். மற்றையோர் அனைவரும் அரசனது திருப்தியின் பொருட்டு வருந்துவதாய் நடிக்கின்றனரே யன்றி மனதிற்குள் சந்தோஷமே.

தனபாலன்.—அதன் காரண மென்ன?

கருணாகரன்.—நண்பா! உரைக்கின்றேன் கேட்பாய்.

அகவல்

(இராகம்-கல்யாணி)

சுந்தராங்கிப்பெய ரந்தமிகு நாரியை
மணக்கவிரும்பியகு ணமிலா மைத்துனன்
ஜெயபால னென்பான் பயனிலாத் தூர்த்த
னணியிலான் கலையிலான் மணமிலான் நிலையிலா
னுதலின் கல்வி நிறை கோதையாம் செல்வியை
மனைவியாய்க் கோடற்குத் தினையுந் தகாதவன்
மங்கையாம் அழகியின் சங்கையை வென்றவன்
மற்றவனேவெனிற் குற்றமில் குணத்தினன்
வித்தையிற் சூரியன் புத்தியிற் பிரகஸ்பதி

அந்தம்=அழகு; அணி=அழகு; கோடற்கு=கொள்ளுதற்கு; தினையும்=சிறிதும்; சங்கை=மனது.

போழகுதன்னிலோ மாரவே ளென்னலாம்
வெஞ்சமர தனிலோ வஞ்சாத சீயமா
முற்றூர்க்கும் பற்றூர்க்கு முற்று மினியனே
யவனியின் முழுதிலுமிவனைச்சிறிதேனு
மொப்பவரென்ன யாம் செப்பிடப் பிறரிலர்
நிகரிலானுதலின் நகரைத்துறந்தனன்.

ஆகா! தனபாலா! நம் மன்னனது புதல்வி சுந்தராங்கி கலைமடந்தையை யொத்து ஆழ்ந்தகல்வி முதிர்ச்சி முதலிய வற்றைக்கொண்டவள். அழகிலும் நற்குணத்திலும் நிகரற் றவள். இத்தகைய சிறந்த மின்னுளைமணக்க விரும்பிய வேந்தனது மைத்துனன் ஜெயபாலனோ வெனின் கல்விமுத லிய ஓரியல்பு மற்ற வீணன். தீயகுணங்களையுடைய தூர்த் தன். துஷ்டர்களின் நேசன். ஆதலின் இலக்குமியை நிகர்த்த இவ்வழகிக்கு இவன் தகுந்த காதலனன்று. இவ ளது மனதைக் கொள்ளைகொண்ட மதிவதனனே ஒப்பற்ற சீலன். வித்தை, புத்தி, பராக்கிரமம், சுந்தரம், அன்பு, தயை, நற்குண நல்லொழுக்கம் முதலியவை நிறையப்பெற்ற உத்தமன். இப்புவி முற்றுந்தேடினும் இவனை யொப்பவ ரைக் காண்பது ஏலாக்காரியம். ஆகா! இவன் இத்தகைய மேம்பாட்டை யுடையவனு யிருத்தலின் நகரைவிட்டு விலக் கப்பட்டனன்.

தனபாலன்—அப்படியா? அவன் அத்தகைய சிறப்பினனு?

கருணுகரன்—நண்பா! அவனது சிறப்பை முற்றும் விரி வாய்க் கூறுதற்கு யான் வல்லமை யுடையேனல்லேன். யான் உரைத்தது குறைவாய்த் தெரிவித்ததாமே யன் றிச்சரியாய் விவரித்ததாகாது.”

தனபாலன்— ஆகா! அப்படியா! அவனது பிறப்பு, வளர்ப்பு முதலியவற்றை அறிவையோ?

சீயம்=சிங்கம்.

கருணகரன்.—இவனைப்பற்றிய விவரங்களை முற்றும் யான் அறியேனாயினும் தெரிந்தவரையில் செப்புகின்றேன்:— சூரசேனனென்ற இவனது தந்தை, இவ்வரசனின் பிதாவிருந்த காலத்திய சேனாதிபதி. இச்சேனாதிபதி தனதரசனுக்காகத் தன்னுயிரையும் மதியாது பற்பல தேசங்களின்மீது படையெடுத்துப் பகைவரை வென்று மிக்கப் புகழ் பெற்றிருந்தனன். அவ்வரசனிறந்தபின் இப்போதிய வேந்தனான பிரதாபசிம்மன் சிம்மாசன மேறக் குந்தலதேசத்தினர் பெருஞ் சேனைகளுடன் எதிர்த்தனர். சூரசேன னென்ற இச்சேனாதிபதி வய தில் மிக்க முதிர்ந்தவனாயினும் வெகு பராக்கிரமத்தைப் புலப்படுத்திப் போர்செய்து அவரைத் துரத்தினன். இச் சேனாதிபதியின் புதல்வரிருவரும் அப்போரில் வாளுங் கையுமாய்ச் சண்டை செய்து மாண்டனர். வெற்றி பெற்ற சூரசேனன் இதைக் கேள்வியுற்றுத் தீராப்பெரும் விசனத்திற்கிரையாய்க் கடைசியிலிறந்த னன். இச்சேனாதிபதியின் மனைவி அவ்வமயத்தில் கர்ப்பிணியாயிருந்து அதற்கு இரண்டு மாதங்களுக்குப் பின்னர் ஓர் ஆண் குழந்தையை யீந்துவிட்டு விண்ணுல கேகினள். அன்னை தந்தை முதலியோரை யிழந்த யிக் குழந்தையின்மீது அன்புகொண்ட அரசன் அதை எடுத் துத் தனது அரண்மனையில் வளர்த்தனன். இவனது முகக்காந்தியின் விசேஷத்தைக் கண்ட பிரதாபசிம்மன் இவனுக்கு மதிவதன னெனப் பெயரிட்டு இவனை ஆழ் ந்த அபிமானத்துடன் வளர்த்து வித்தைகள் அனைத் திலும் பயிற்றினன்.

(இராகம்—மோகனம்)

குதலையுங் குமரவேளாய் மதித்தி டுஞ்சிறுவனாகித்
துதிபெறக்கலைகளோதித்தன்னுவோர்க்கி னியனாகி

மதியுடை மனத்தனுகி மாண்புடைக் குணத்தனுகி
வதிந்தனன் சுந்தராங்கி மனதினைக் கவர்ந்தான் முற்றும்.

இவன் எவ்வாறு வளர்ந்தனன் ?

"மகன்றந்தைக் காற்று முதவி யிவன் றந்தை
என்னேன்றான் கொல்லென்னுஞ் சொல்."

என ஆன்றோர் கூறி யிருக்கின்றன ரன்றோ !

ஒருவனை நோக்கி இத்தகைய உத்தமனைப் பெற இவனது தந்தை என்ன தவம் புரிந்தனனோ வெனப் பிறர் கூறுவதே மகன் தகப்பனுக்குச் செய்யும் பேருதவி. மதிவதனன் வயது முதிர முதிர இம் மூதுரையை உண்மையாக்கினன். சிறந்த பராக்கிரமசாலியாய் யாவராலும் புகழப்பட்டும், அன்புடன் அபிமானிக்கப்பட்டும், நற்குணங்களுக்கே யிருப்பிடமாய்ச் சிறுவர் யாவரும் இவனைப்பார்த்து நல்லொழுக்கம் முதலியவற்றைக் கற்றுக்கொள்வதற்குரிய வோர் சட்டகமாயினுன். வித்தை முதலியவற்றிற் சிறந்த அரசபுத்திரியே இவனது மேம்பாடுகளைக் கண்டு இவன் மீது காதலித்தன ளெனில் இவனது அருமை பெருமைகளை விரித்தலுந் தேவையோ !

தனபாலன்.—அப்படியா ! மெத்த சந்தோஷம் ! நீ கூறுவதி னின்றே அவன் மீது எனக்கோர்வித அபிமான முண்டாகின்றது. நண்பா ! சுந்தராங்கியைத் தவிர அரசனுக்கு வேறு புதல்வ ரில்லையோ ?"

கருணுகரன்.—இப்பொழுது இவளைத் தவிர வேறு சந்ததி யில்லை. அவனுக்கு இரண்டு ஆண்குழந்தைகளிருந்தனர். மூத்தவன் மூன்று வயதடைந்தவனுயும், மற்றவன் தொட்டிலிற் றுயிலுங் குழவியாயும் இருக்கையில் இருவரையும் யாவரோ இரகசியமாய்க் களவாடிச்

குதலை=குழந்தை= மாண்பு=பெருமை.

சென்றுவிட்டனர். இதுவரையில் அவர்கள் சென்ற விடத்தை அறிந்தோரிலர்.

தனபாலன்—இவ்வாறு நிகழ்ந்து நெடிய காலமாயிற்றோ?

கருணாகரன்—இப்போதைக்குச் சற்றேறக்குறைய இருபது வருஷங்களிருக்கலாம்.

தனபாலன்—(ஏளனமாய்) ஆகா! இதென்ன விந்தை! அரசனது குழந்தைகளைக் களவாடி விட்டனராம். இருபது வருஷங்களாயிற்றாம். காவலரின் எச்சரிக்கையே எச்சரிக்கை! ஆகா-கா! இதுவரையில் அவரைக்காண ஒருவரும் முயலவில்லையா! இது பெரிதும் ஆச்சரியமே;

கருணாகரன்—நில்லு, நில்லு! அதோ அரசன் மனைவியும் சுந்தராங்கியும் வருகின்றனர். இனி நாம் இங்கிருப்பது தவறு. அப்பாலேகி விடுவோம். (சென்றுவிடுதல்)

இரண்டாங் களம்

அச்சோலையில் சுந்தராங்கி மனம் வருந்தி அன்னங்களையும் கிள்ளைகளையும் விளித்து விசனித்துக்கொண்டு வருதல்—சரசாங்கியும் கூடவருதல்.

சுந்தராங்கி—

இந்துஸ்தானி.

(அச்சமொரே லாகிஸே என்ற வர்ணமெட்டு.)

அன்னங்களே யேனோநீர் பாவியேனை மேவுரீர்
மேவுரீர்நே யரே தாவுரீர் (அ)

(1) இன்றோடுநீவி—ரெந்தனைக் காணீர்
எனதாவி—யனையோரே—மனநோகுதே (அ)

(2) கிள்ளைகளேநீர்—துள்ளுவதேனோ
இனியானுந் தனியானே னினியோர்களே (அ)

சரசாங்கி—

(இராகம்—கானடா)

செல்வியே கல்விமிக்கச் செயிரிலா யினியகோதாய்
இல்லிதமொளிரு மெந்தன் விலையிலா மணியே பேதாய்
தல்விநீ யழுதுவிம்மித் தயங்கிடிற் பொறுத்தற்பாற்றோ
வல்லையி லிடரையாற்றி வருந்தலை யொழிப்பாய் பாவாய்.

கண்மணி! சுந்தராங்கி! தமது செல்வர் செல்வியர் வருந்துதலைக் கண்டு தாய்மார் எவ்வாறு சகிப்பர்! மற்றையோரினும் மிக்க மேம்பட்ட விலை மதிப்பற்ற மாணிக்கமாகிய நீ விசனிப்பதைக் கண்ட நினது பகைவரும் பொறுப்பரோ! இனி வருந்தவேண்டாம் எனதரிய புதல்வி சுந்தராங்கி! அரசன் நின்னைச் சிறைபுகுத்துமாறு கட்டளை யீந்திருக்கின்றானாயினும் நீ துன்புறுமாறு யான் விடுவேனோ! காவலர் நினது அத்தப்புரத்தருகிலும் வரா திருக்குமாறும், திறவுகோல்களை நின்பாற் கொடுத்துவிடுமாறும் உத்திர வளித்திருக்கின்றேன். நீ ஓரிடத்திலேயே அடைபட்டிராது நினைத்தவண்ணம் செல்லலாம். இன்னும் நினக்குத் தேவையான உதவியையும் புரியத் தயாராய் இருக்கின்றேன்.

சுந்தராங்கி—அன்னை! என் விஷயத்தில் நீங்கள் புரியும் இத்தகைய உதவிகளுக்கு யான் எவ்வாறு கைம்மாறியற்ற வல்லேனாவேன். எனதாவியுள்ளளவும் இதன் பொருட்டு நன்றி பாராட்டலே அதற்குரிய செயலன்றி வேறிலது.

செயிர்=குற்றம்; இல்லிதம்=அழகு; ஒளிரும்=ப்ரகாசிக்கும்; வல்லை=விரைவில்.

சரசாங்கி—(பூரிப்புடன்)

(இராகம்—மோகனம்.)

தாரணியில் வதியுமாற்றூந் தாயாரைப் போலயானு
மரியநற் புதல்விநின்னை யலக்கணிற் புகுத்தேன் தேற்றம்
வாம்மதி வதனனுன்னைப் பிரியுமுன் விடைகொள் மாறே
யரசிநின் பாங்கர்துன்ன வனுமதி யீந்தேனன்றே.

கண்மணி சுந்தராங்கி! இப்புவியில் தகப்பனுக்கு இரண்டாம் மனைவி வருவளேல் அவள் இறந்துபோன முதல் மனைவியின் செல்வர் செல்வியரை மிக்கத் துன்புறுத்துதல் இயல்பன்றோ. அவ்விளங் காதலியின் மையலிலாழ்ந்து அவளது தலையணை உபதேசத்திற்குச் செவி கொடுத்துத் தகப்பனும் அச்சிறுவர் சிறுமியரைப் புறக்கணித்து வெறுத்து வருத்தலும் நிகழுகின்றதன்றோ. யான் உன் விஷயத்தில் சிறிதும் அவ்வாறு புரியாது சதா சர்வதா உனது நன்மையையே மனதிற் கருதியவளாயிருக்கின்றேன். ஆகா! அதோ மதிவதனன் வந்தனன். அவன் நின்னை விடுத்துப் பிரியுமுன்னர் அவனுடன் ஓர்முறை உரையாடவேண்டுமென நீ விரும்பியவாறு யான் அனுமதி யீந்ததை நமதரசனறிவனேல் என்னைக் கொலைஞர் வாளுக்கிரையாக்குவான். ஆதலின் அவனுடன் விரைவில் சம்பாஷணை புரிந்து அவனுக்கு விடை யீவாய்

(மதிவதனன் வருதல்)

சரசாங்கி—

(இராகம்—தோடி.)

சந்திரவதன வுன்றன் றலைவிதி யென்னோ வந்தோ!
நொந்தனன் யானே மிக்க நுகலொணாத் துயரிலாழ்ந்து

அலக்கண்=துன்பம்; பாங்கர்=சமீபம்; துன்ன=கிட்ட.
நுகலொணா=சொல்லமுடியா.

சொந்தமாய் நினைத்த சுந்தராங்கியைத் துறந்துநீங்கிச்
சந்தத மீடாருந்திச் சகித்தலு மெளிதோ ஐயோ !

ஆகா ! மதிவதனு ! நீயும் சுந்தராங்கியும் உடலும் உயிருமென ஓர் கணமேனும் ஒருவரையொருவர் விடுத்துப் பிரியாது அன்றிற் பறவைகளேயொப்ப இன்புற்றிருந்தீர்கள். ஐயோ ! என்ன உந்தன் தலைவிதியின் கொடுமை ! இத்தகைய இனிய மங்கையைப் பிரிந்து தூரதேசத்தில் நினதாயுட்கால முழுதையும் விசனக் கடலிலாழ்ந்து கழித்தல் எவ்வளவு கடினம் ! ஐயோ ! உனது சந்திரவதனத்தைக் காண என் மனது பாகாயுருகுகின்றதே. என் செய்வேன் ?

மதிவதனன்—அன்னே ! முன் ஜன்ம கருமத்தால் வரும் பயனை வராமல் தடுத்தற்கு யாரால் முடியும். வருவது வந்தேதீரும். அதைப்பற்றி நாம் அழுவதாலும் விசனிப்பதினுலும் என்ன பயன் ?

சரசாங்கி—மதிவதனு ! நமதரசன் இப்பொழுது உன்மீது அடங்காப் பெருங் கோபத்தைக் கொண்டவனுய், அரவமெனச் சீறுகின்றனன். நீ ஆழ்ந்த யோசனை புரிவையேல் இவ்வமையத்தில் இந்நகரை விடுத்தேகுவதே நலமென உனக்குத் தோன்றும். அரசனது கோபம் தணியும் சமயத்தில் யான் அவனைக் களிப்பித்து உன் விஷயத்தைப்பற்றி உரையாடி இக்கட்டளையை மாற்றும்படி செய்கின்றேன். மதிவதனு ! நீ யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம்.

மதிவதனன்—சிறந்த அரசியே ! மெத்த நன்று ! யான் இன்றைக்கே இந்நகரை விட்டேகி விடுகின்றேன்.

சரசாங்கி—(சுந்தராங்கியை நோக்கி)

(இராகம்—மோகனம்).

அரிவையே சுந்தராங்கி யரிய நின் றுணைவன் றன்னைப்
பிரிவையோவென்ன வெந்தன் சங்கையு மேங்குதையோ
வரயனிங் கேகாமுன்ன ருரையாடி முடிப்பீர்யானு
மரமத்திலுலவி மீள்வேன் விரைவினிற் றெரிவையாளே!

செல்வி சுந்தராங்கி! நினதுயிர்த் தோழனை விடுத்து நீ பிரிய நேர்ந்ததே! ஆகா! பிரிந்தபின் நீ எவ்வாறு சகிப்பையோ வென பெரிதும் சஞ்சலப்படுகின்றேன். நீங்களிருவரும் இனி ஒன்று கூடி வசனித்தல் கூடா தென அரசன் கண்டிப்பான கட்டளை யீந்திருப்பினும் உங்களது துர்ப்பாக்கிய நிலைமையைக்காண என் மனது பதைக்கின்றது. யான் இச்சோலையிற் சிறிது உலாவி விட்டு வருகின்றேன். அதற்குள் நீங்களிருவரும் சம்பாஷித்தற் குரியதை வசனித்து முடியுங்கள். அரசன் வருமுன்னர் விரைவில் மதிவதனன் ஏகிவிடவேண்டும்.

(சரசாங்கி சென்றுவிடுதல்.)

சுந்தராங்கி—

(இராகம்—தோடி)

இத்தகைக் கபடிநீலி யெத்தல மதிலுமில்லை
யத்தனை மயக்கியெம்மை யலக்கணிற் புகுத்திப் பின்னர்
தித்தித்த கற்கண்டின்மீது தேன்மாரி பொழிந்தாலென்ன
வுத்தமிபோல நம்பாலுரை யாடுகின்றா ளன்பாய்.

எனதுயிரனைய மதிவதனா! இவளது வஞ்சகமே வஞ்சகம்! இவள் இவ்வரண்மனைக்கு வருவதற்கு முன்னர்

அரமம்=சோலை; தெரிவை=பெண்.
அத்தன்=தகப்பன்; நம்பால்=நம்மிடத்தில்.

எனது தந்தை நம்மீது எத்தகைய அபிமானத்தைக் கொண்டு நம்மையோர் கணமேனும் விடுத்துப்பிரியா திருந்தனரே! இவளது தலையணை மந்திரோபதேசத்தி ஞல் இப்பொழுது அவர் நம்மை விஷமென வெறுத்து வருத்துகின்றனரே! ஓர்விதச் சிறப்புமற்ற ஜெயபாலனை மணக்குமாறு இவரிருவரும் என்னை எவ்வளவோ வற் புறுத்தினும் என் மனம் அதற்கெவ்வாறிசையும். என் னைச் சிறையி லடைப்பித்தும் உன்னை நகரை விட்டுத் துரத்துமாறு செய்வித்தும் இப்பொழுது ஒன்றையும் அறியாதவளைப் போலவும் நம்மீது ஆழ்ந்த அன்பைக் கொண்டவள் போலவும் நடித்து அவளை நாம் நேசித் தற்கு வேண்டியவாறு புரிகின்றனள். இவளது நீலித் தனத்தை என்னென விரித்துரைப்பேன்.

மதிவதனன்—

(இராகம்—தோடி.)

சிறையினிற் புகுத்திட்டாலும் சேய்மையிற் செலுத்திட்டாலும்
பிறவிடஞ் சேமித்தாலும் பெட்டியிற் பூட்டிட்டாலு
மிருத சங்கிலியாற் சுற்றி யிறுகவே பிணித்திட்டாலும்
பிறர் மனப்பற்றை நீக்கிப்பேதித்தலேலா தன்றே.

என்தினிய கண்மணி! சுந்தராங்கி! வலியவர் எளியவ ரின் உடம்பைத் தம் வசப்படுத்துவ தெளிதே! அவரைச் சங்கிலிகளாற் பிணித்தாலும், சிறைச்சாலையி லடைப்பித்தா லும், இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டினும் அவர் மனதின் சுயேச்சையாய் அலையும் சுபாவத்தையும் அதன் பற்றையும் விலக்க வலியோர் எவ்வாறு முயலினும் அக்காரி யம் பலிக்குமோ!

சேய்மை = தூரம்; சேமித்தல் = பாதுகாத்தல்; இருத = அறு காத.

நாம் எங்கிருப்பினென்ன? நமது மனத்தொடர்பை இவர்கள் மாற்றுவதற்கு வல்லவராவரோ ஒருபோதுமில்லை.

சுந்தராங்கி—(கண்ணீர்த் ததும்ப)

(இராகம்–காம்போதி)

மதுநிகர் துணைவாவென்றன் மதிப்பிலா மணியே யன்பா
வதிபனின் சினத்தையானு மதித்திலே னின்னையோர்நாட்
பதியெனக் கொளுமவாவிற் பலகோடி யிடர்களென்னை
வதைப்பினு மதியேன் நின்னை மனத்தினுற்றினமுங் காண்பேன்

எனதுயிரனைய துணைவா! எனது தந்தை என்மீது கோபங்கொண்டதைப் பற்றி யான் சிறிதும் வருந்தினேனில்லை. யான் அவர் விஷயத்தில் யாதொரு பிழையும் செய்யாதிருக்கும்பொழுது அவர் என்மீது சினங்கொள்ளின் அது என்னை என்செய்யும்? நீ அவருடைய கட்டளையின் வண்ணம் நகரை விட்டேக வேண்டிய தவசியமே. யான் இங்கு சிலகாலம் தந்தையின் கோபத்திற் கிலக்காயினும் எவ்வாறு துயரிலாழ்ந்திருப்பினும், எனதுயிர் நிலையை யொத்த நின்னை எப்படியாயினும் திரும்ப எனது பிராணகாந்தனை அடையலாமென்னும் உறுதியான நம்பிக்கையினுல், யான் அத்தகைய பல துன்பங்களைப் பொறுத்துக்கொண்டிருக்கின்றேன்.

மதிவதனன்—(கண்ணீருடன்)

(இராகம்-தோடி)

கண்மணி கனியேதேனே கரைதியோ வென்றன்சங்கை
புண்ணினிற் றீயிட்டாங்கு பொங்குதே நொந்துநைந்து
கண்ணினீ ரொழிப்பாய் கண்டே கனவினுமுன்னை யல்லாப்
பெண்டிரை நினையேன் தேற்றம் பேதையே யன்னப்பேடே.

மது=அமிர்தம்.

கரைதியோ=அழுகின்றனையே; கண்டே=கற்கண்டே.

அடி எனதுயிரனைய சுந்தராங்கி! பெண்மணி! ஐயோ! நீ விம்மியழுகின்றையே! உனது துன்பத்தைக் காண என் மனது பாகாய்க் கரைந்தோடுகின்றதே! என் செய்வேன்! யான் இப்புவியிலுள்ளமட்டும் நின்னையன்றிப் பிறமாதரை மனதிலும் விரும்பேன். என் மனதையும் திரேகத்தையும் உனக்கே அர்ப்பணஞ் செய்தேன். அழுது வருந்தவேண்டாம்.

சுந்தராங்கி—

(இராகம்-சாவேரி. தாளம்-ஏகம்.)

பல்லவி

துணைவா மதிவதன சுந்தரா பிராணேசா
துரையே உயிர்நிலையே (துணை)

அனுபல்லவி

கணமும் பிரிந்தறியோம்—காதலுடன் நேசித்தோம்
இணையற்ற யினியனே யினி நானென்செய்குவேன் (துணை)

சரணம்

ஓர் தலத்தில் வளர்ந்தோம் ஓர் கலத்தினிலுண்டோம்
ஓரிடத்திற் பயின்றோம் ஒன்றாய் நாமாடினோம்
ஓர் மனதைக் கொண்டோம் உடலுமுயிருமானோம்
ஓர் கணம் நீ இன்றேல் உய்யும் வகையென்னே (துணை)

ஐயோ! எனதினிய மதிவதன! யான் என்செய்வேன்? நாம் இருவரும் இதுகாறும் ஒருவரையொருவர் விடுத்து ஓர் கணமேனும் பிரிந்தறியோம். நாம் ஓர் இடத்தில் வளர்ந்தோம். ஓர் ஆசானிடத்திற் கலை கற்றோம். ஓர் பொருளும் அதன் நிழலும்போலப் பிரியாது விளையாடினோம். எவ்விஷயத்திலும் ஒரேவித மனதையுடையவரானோம். இத்தனை வருஷங்களாய் என்னுடனிருந்த அரிய தோழனாகிய உன்னைப் பிரிந்த பின் அக்கொடிய தனிமையை எவ்வாறு சகிப்பேன்.

மதிவதனன்—

(இராகம்-நாதநாமக்கிரியை)

இலங்கிழைச் சுந்தராங்கி யினியளே சிந்தைநொந்து
கலங்கிடிற் பயனுமின்று கற்றவர்க்கழகுமன்று
கலிங்கமா பதியில்வாழும் கண்ணிகரெந்தை நண்பன்
பலராமன் மனையில் நிற்பேன் பாவையே யுயிரே பேதாய்.

எனதுயிரனைய கண்மணி! ஏ பெண்மணி! விலையற்ற நன்மணி! சுந்தராங்கி! நீ இவ்வாறு வருந்துவதுனக் கழகோ! அதனாற் பயனென்ன? துன்பம் வந்துற்றபோது அறிவுடையோர் வருந்துவரேல் கற்றவர்க்கும் மற்றவர்க்கும் பேதம் யாதுளது! நமக்கு வந்துறும் பல இடுக்கண்களை யும் பொறையுடன் சுமத்தலே மேன்மைக் குணமன்றி அவற்றைப் பெரிதும் பாராட்டி வருந்துவது பேதைக்குண மன்றே. ஏ அரிய கிள்ளையே! நின் மனதை இவ்வாறு அவ விக்கவிடாது தேற்றிக்கொள்வாய். கலிங்கதேயத்திலுள்ள எனது தந்தையின் ஆப்தநண்பனான பலராமனென்பவனது வீட்டில் யான் வசிப்பேன். நினது தூதுவர் என்னை அங்கு காணலாம். அப்போதைக்கப்போது நிருபத்தின் வாயிலாய் நமது மனத்தைப் புலப்படுத்தியவாறு விமோசன காலத்தை எதிர்பார்த்திருப்பதே உசிதமானகாரியம்.

(சரசாங்கி திரும்பி வருதல்)

சரசாங்கி—

(இராகம்-கல்யாணி)

இன்னமும் வசனிக்கின்றீர் எங்கிநீர் கலங்குகின்றீர்
மன்னவன் காண்பானயிற் பன்னக மென்னச்சீறி
என்னையே வெறுப்பன் காண்பீர் விளம்பனமின்றிநீவிர்
மன்னவன் றன்னுமுன்னர் வசனித்துப்பிரிதல் நன்று.

பன்னகம்=பாம்பு; விளம்பனம்=தாமதம்.

ஆகா! இன்னமும் சம்பாஷித்து முடிக்கவில்லை போலும் ஐயோ? இப்பொழுது நமதரசன் இங்கு வந்து உங்களிருவரையுங் காண்பனேல் என்மீது நாகமெனச்சீறிக் கோபித்து என்னை வெறுத்துத் தண்டிப்பனன்றோ. ஆதலின், நீவிர் சுருங்க உரையாடி விரைவில் முடிப்பீர். யான் இன்னம் சற்று உலாவிவிட்டு வருகின்றேன். (தனக்குள்) ஐயோ! இவ்விருவரும் உரையாடுவதைக்காண என் வயி றெரிகின்றதே! இவள் எனதரிய சகோதரனுக்கு மனை யாட்டியாய் அவனுடனன்றோ இவ்வாறு வசனித்தற்குரிய வள். எனினும் இன்னமோர் நிமிஷம் இவர்கள் சம்பாஷிப் பதினுல் யாதொரு பொல்லாங்கும் நிகழாது. எனது நோக் கம் நிறைவேறற்கும் யாதோரிடையூறும் சம்பவியாது. இவ னேகிவிடுவனேல் பின்னர் இவளை நம்வயப்படுத்துவது அரியகாரிய மன்று.

(செல்லுதல்.)

மதிவதனன்.

(புரோவசமய மென்ற வர்ணமெட்டு.)

(இராகம்-கௌரிமனோகரி ஏகதாளம்)

பல்லவி

வாடுவதேனோ-பேடே நீ வருந்தி (வாடு)

அனுபல்லவி

நீடு துன்பமுறல்-நீக்குமோவிதியை
மூடரேயழுவர் பீடுடைய பேதாய்

சரணம்

அன்பரைப்பிரித்து ஆயுட்கால முற்றும்
துன்புறுத்தா னீசன் துணை வன் றீனர்கட்கு
பின்புகூடிநாமே பெருமகிழ்வு கொள்ளும்
நன்மையின் பொருட்டுத் தோன்றிய பேறன்றோ (வாடு)

ஏ சுந்தரி! எனதாருயிரே! கருணைக்கடலாகிய கடவுள் நம்மை சாஸ்வதமாய்ப் பிரித்து முற்றும் வருத்துவனென நினைக்கவேண்டாம். வருவதெல்லாம் நமது நன்மைக் கென்பதை மறந்தனைபோலும். இப்பொழுது நாம் பிரிந்து மனம் வருந்தி வாடுவதெதற்காகவென்பதை அறியாயோ? முதலில் நிழலின் விருத்தலைக்காட்டினும் வெயிலில் வாடி வதங்கி வருந்திய பின்னர் நிழலிற் செல்லின் அந்நிழல் முன்னினும் ஆயிரமடங்கு இனிமை யுடைத்தாய்த் தோன்றுதல்போல் நாம் பின்பு கூடி இப்பொழுதினும் அதிகரித்த பரமானந்த போக மனுபவித்தற்கன்றோ! கண்மணி!

(இராகம்-முகாரி)

அன்னமே யின்னமிந்த அவனியிற்பிரமனீந்த
பன்னெடு வருடமுற்றும் பிரிந்திட நினைப்போமேனும்
சொன்னமே கணமும் நீங்குந் துணிவினைப்பெறுதலுண்டோ
துன்னியவெறுப்பு வீங்குந்துயர் நனிமல்குமன்றோ

நமக்குப் பிரமனால் அளிக்கப்பட்ட ஆயுட்காலத்தில் இன்னம் எஞ்சியுள்ள ஆண்டுகள் முற்றிலும் நாம் முயன்றும் நாம் ஒருவரை யொருவர் விட்டுப் பிரிய மனமொவ்வாது. பிரிதற்கு மனமின்மை மேன் மேலும் அதிகரிக்குமன்றிக் குன்றாது. கண்ணே! யான் செல்கின்றேன், தயை புரிந்து விடை யீவாய். திகட்டாத இன்சுவையே!

சுந்தராங்கி—

(எப்புடு கிருபாகல்குனோ என்ற வர்ணமெட்டு)

(இராகம் முகாரி—தாளம் ஆதி)

பல்லவி

எத்தினம்யாம் சந்திப்பது இனியமதுகரனே (எத்)

சொன்னமே=சொர்ணமே; மல்கும்=பெருகும்.

அநுபல்லவி.

சித்தமிசை குடிகொண்டாய் சீலனேகலைநிறை
உத்தமாசகிப்பேனோ ஓர் கணம் யான்பிரிவேனோ (எத்)

சரணம்.

மன்னவன்றனதிள மனைவியின் மோகத்தால்
வன்னெஞ்ச னவனென வுன்னினேனில்லையந்தோ
என்னோ இத்தகைத்தீமை எதிலர் புரிவாரோ
அன்பனே ஏகென்றேவ என்மனமெங்ஙனமொவ்வும் (எத்)

ஆகா! என தாவியே! அரிய அன்பா! அரசன் தனது இளைய பத்தினியின் மோகவலையிற்பட்டுத் தனது மதியை இழந்து இவ்வாறு நம்மை இடுக்கணிற் புகுத்துவனென யான் ஒருபோதும் நினைத்தேனில்லை. ஐயோ! நின்னைப் பிரிய எவ்வாறு மனங்கொள்வேன். நீ இப்பொழுது நகரத்திற்கு வெளியில் சிலநிமிஷங்கள் உலாவிச்செல்வதற்கு விடை கேட்பவனைப்போல, நமது பிரிவை அவ்வளவு எளிதாய் மதித்தனைபோலும். இது நாம் திரும்ப ஒன்றுய்க்கூடுவோமென்னும் நம்பிக்கையற்ற பிரிவன்றோ. நண்பா! இதோ பார்த்தனையா? இவ்வைர மோதிரம் எனதன்னையால் ஈயப்பெற்றது. இதை எனது ஞாபகார்த்தமாய் வைத்துக் கொள்வாய். சுந்தராங்கி இறந்து நீ வேறோர் மங்கையை மணக்கும்வரை இதை யாவரிடத்தும் கொடுக்காதிருக்க வேண்டுகிறேன்.

மதிவதனன்—(மோதிரத்தை வாங்கித் தன் விரலிலணிந்தவாறு)

(இந்திரசபா—அங்குநா னிருந்தவனை என்ற வர்ணமெட்டு)

ஆகா நன்றே நீயுரைத்தா யரியவெந்தன் கண்மணியே
ஆவியே நின்றுணையை யன்றி ஐயோ பிறமாதைவேண்டேன்
மாதர்களின் நாயகமே-மாற்றிலாத மாமணியே
கோதையே யுனக்கு நிக-ரேதேதிவ் வுலகமதில் (ஆ)

மங்கையே நின்மோதிரத்தை மறப்பிலும் யானிழப்பதில்லை
நங்கையே நன்மரகதமே-நன்மைநிறை நவநிதியே (ஆ)

வேறோர் மங்கையா! ஐயோ! தெய்வமே! விலை மதிப்பற்ற மாணிக்கமான உன்னைக் கடவுள் எனக் களிப்பரேல் அஃதே எனது பெரும் பாக்கியமன்றோ. யான் பிறமாதை மணக்க நினைப்பதைவிட உயிர் துறப்பதையே ஏற்றுக்கொள்வேனென்பதை உறுதியாய்க்கொள்வாய் குயிலே! கண்ணினும் சிறந்த பெண்மணி! தேனினு மினியமானினி! மதுவினுஞ் சுவைமிக்க மாதே! இன்பப்பிழம்பே! எனதுயிரும் இம்மோதிரமும் ஒருங்கே எனது தேகத்தை விட்டு நீங்குமன்றி அதற்கு முன்னர் இவ்விரலினின்று அதை வேறுக்குவதில்லை. (தன் மோதிரத்தை விரலினின்று வாங்கி) சுந்தரி! எனது ஞாபகார்த்தமாய் இம்மோதிரத்தை அணிந்து கொள்வாய். (அவளது சுண்டுவிரலில் இதைப் புகுத்தியவாறு) இவ்வழகிய கைநியை, நட்பிற் கரிகுறியான இவ்விலங்காற் பிணிக்கின்றேன்.

சுந்தராங்கி.—(மனதிளகி) ஐயோ தெய்வமே! நாம் இனி எப்பொழுது சந்திக்கப் போகின்றோம்.

(பிரதாபசிம்மன் வருதல்)

மதிவதனன்.—ஆகா! அரசன் வந்துவிட்டனன்.

பிரதாபசிம்மன்.—(கோபத்துடன்)

(இராகம்–கேதாரம்.)

எதடா கயவாயின்ன மேகினுயில்லை தாழ்ந்த
பாதகப்பதரே நின்னைப் பார்த்தலுங் கொடியபாவ
மாதலினகல்வாயப்பால் அரைக்கணந் தரிப்பையாயின்
சாதலே திண்ணமன்றித் தப்புதலில்லை காண்பாய்.

அடே! மதிவதனா! இன்னம் நீ நகரைவிட்டுச் செல்

லாது அரண்மனைக்குள் தாமதிக்கத் துணிந்தனையா! ஆகா! கீழ்மகனே! உன்னைக் காண்பது எனது கண்களுக்கோர் நோயன்றோ. இனிப்போர் கணமும் இவ்வரண்மனையில் நின்று அதன் மேன்மையைக் களங்கப்படுத்துவையேல் உடனே நீ இறத்தலுறுதி. நில்லாது ஓடிப்போ! நல்ல உதிரத்தில் காலகோடி விஷம் பரவியவாறு நீ எனது மேம்பட்ட சந்ததியைக் கெடுக்கவந்த பாதகனன்றோ."

மதிவதனன்—சிறந்த மகிப! இவ்வேவளைமீது நீவிர்கொண்ட சினத்தைத் தணித்தருளுமின். யான் இப்பொழுதே கட்டளையின் வண்ணம் சென்று விடுகின்றேன். கடவுளின் அருளால் நீங்களும், உங்கள் தொடர்பினரான மற்றவரும் இங்கு இனிதிருங்கள்.

(மதிவதனன் சென்றுவிடுதல்)

பிரதாபசிம்மன்—

(இராகம்-காவேரி)

பேதையே சுந்தராங்கி பிடிவாதம் விடுத்தாயில்லை
தாதையின் மொழிக்கடங்காத் தகைவிலா மகளீருண்டோ
ஏதமார் நெறியிற்போந்தா யிடரினில் விடுத்தா யென்னை
மாதரி லுன்னைப்போன்ற மண்ணைய ரொருவருண்டோ.

ஏ சுந்தராங்கி! கட்டுக்கடங்காத அறிவிலி! நீ இன்னம் உனது பிடிவாதத்தை விடவில்லையோ! அன்னை, தந்தை, குரு, தெய்வம் முதலிய ஐங்குரவர்க்கும் சிறுவர் சிறுமியர் கீழ்ப்படிந்து ஒழுகவேண்டு மென்பதைப் புஸ்தகபாடத்தோடு மறந்துவிட்டனையோ! உனது அடாதகாரியத்தினுலுண்டான பெரும் வியாகூலத்தினுல் யான்காலத்திற்கு முன்பு முதியோனுய்த் தளர்ந்து மனம்நொந்து வருந்துகின்றேன்.

ஏதமார் = குற்றமான; மண்ணை = மூட்டாள்.

ஏ சுந்தராங்கி! உன்னைச் செல்வியென அழைப்பதற்கும் எனக்கு நாவெழவில்லையே. உனது அகம்பாவத்தினாலும், மடமையினாலும் ஈன்ற தாதையின் கட்டளையை உல்லங்கனம் செய்தனையன்றோ. ஆண்டிலும் அறிவிலும் முதிர்ச்சி பெற்ற யான் உனது நன்மைகளை ஆராய்ந்து இக்காரியம் தக்கதெனக்கூற, நீ யாவற்றையும் உணர்ந்தவளைப்போல ஜெயபாலனை மணக்க இஷ்டங்கொண்டாயன்றோ! என்ன உந்தன் துணிபு!

சுந்தராங்கி—

(நகுமோமு என்ற வர்ணமெட்டு)

(இராகம்-ஆபேரி தாளம்-ஆதி)

பல்லவி.

தந்தையே யிவ் விந்தையை யான் தரணியிற் கண்டறியேன் (த)

அனுபல்லவி.

அந்த மில்லான் ஜெயபாலன் அருகனோ எனையணுக
அந்தகன் கந்தனு யாவனோ அறியீரோ எந்தை நீர் முனியாதீர் (த)

சரணம்.

கலைவல்லான் விலையில்லான் நிலையுள்ளான் மதிவதனன்
மலைவானேல் அரிமாவும் தொலையாமல் சமமாமோ
மலையோடு, சிலையொன்றை, நிகரென்ன, வழியுளதோ
தலைவா எனைநீர் உலையா தருள்வீரே ஜெயபாலனை மணவேன் (த)

தந்தையே! யாதொரு யோக்கியதையு மற்ற ஜெயபாலனை மணக்க என்மனம் எவ்வாறு இயையும்? அவனை மதிவதனனிலும் சிறப்பித்துக்கூறல் யானையினும் பானையை விலை யுயர்ந்ததென மதித்தற்றன்றோ. மதிவதனன் ஆழ்ந்த கல்வி, சிறந்த நற்குணம், இனிய நல்லொழுக்கம், ஆண்சிங்கத்தை யொத்த பராக்கிரமம், தைரியம், மாரனை வென்ற அழகு, அன்பு, தயை முதலிய எண்ணிக்கையற்ற ரேமம்

பாடுகளை யுடையவனுயிருக்க, அவனை விடுத்து, ஓரியல்பு மற்ற வீணனான ஜெயபாலனை யான் எவ்வாறு மணப்பேன். யாவரேனும் குயிலின் தீங்குரலோசையை விடுத்துக் காகத்தின் இராகத்தை விரும்புவரோ! என் மனது அவனை ஒருபோதும் விரும்பாது.

பிரதாபசிம்மன்.—

(இராகம்-மோகனம்)

ஏதடி சுந்தராங்கி தாதையத் தரணியாளு
மேதகு வேந்தனென்ன மதித்தனை யில்லைபோலு
மாதுலன் மீது வேட்கை யடைந்தனை யெந்தன்சிம்ம
வாதன மிந்தத்தாழ்ந்த பேதையி னிருக்கையாமோ.

ஏ சுந்தராங்கி! நீ மாதர்க்கணிகலமான நாணம் அச்சம் முதலிய இன்றியமையாக் குணங்களை முற்றும் காற்றில் தூற்றி விட்டனை. மகளிர்க்குரிய வரம்பையுங்கடந்து வசனிக்க வாரம்பித்தனை. நிற்க, உனது தந்தை இவ்வுலகத்தைப் பாலிக்கும் மன்ன னென்பதையும் மறந்தனை. யாவரினும் மிக்க இழிந்தோனான ஓர் யாசகனை மணக்கவேண்டுமென்னும் அவாவினால் மதியிழந்து எனது சிம்மாதனத்தின் மீது கேவலம் தாழ்ந்தவோர் கீழ்மகனை அமர்த்த நினைத்தனையன்றோ!

சுந்தராங்கி.—

(காவடிச்சிந்து - வண்ணத்தினமாவை)

வையத்துயர்வுற்ற வையனே மனம்
வெளவிய சீர்பெற்ற மெய்யனே யவன்
மானவர்யாரிலும் தூய்யனே மிக
மனம் வாடியே யெனை நாடியே
சினமேவினீர் கனலே யென

ஆதுலன்=யாசகன்; வேட்கை=ஆசை.

வாஞ்சை யில்லாமுழு வெய்யனே யென்
மாறி னீரேயென னையனே

எங்குங்கிடையாத தீரனே யவன்
எத்தகையபெரும் வீரனே யணி
செப்பிடிலோவெழில் மாரனே யுயர்
சிம்மாதன மெம்மாதவம்
செய்தோயிவன் மெய்தாங்குதல்
செம்மலே போரினிற் சூரனே யவன்
ஜெயபாலனே வொரு சாரனே

அச்சிம்மாசனம் அவனை அரசனாகத் தாங்குமேல், அது முன் ஜென்மத்தி லியற்றிய பூஜாபலனன்றோ! அவனிருக்கையால் அது முன்னிலும் அதிகம் பிரகாசித்துத் தோன்றுமேயன்றி மழுங்கித் தோன்றாது.

பிரதாபசிம்மன்.—(கோபத்துடன்) அடி துஷ்டை வாயை மூடிக்கொள். போதும் உனது உபந்நியாசம்.

சுந்தராங்கி.—

அகவல்.

(இராகம் - ஆனந்தபைரவி)

மன்னவாகேண்மின் மதிவதனன்றனை
முன்னாள்முதலாய் என்னுடன் றுணைவனாய்
விடுத்தனிராதலின் விரும்பினேனவனை
வடுவுமதன்றி மற்றவர் குற்றமோ
புவியினிலுள்ள பூவையாளெவளும்
நவையறக் கொண்டிடுந்த கையுளாளாதலின்
சுந்தரனெந்தனைச் சொந்தமாய்க் கொண்டிடல்
முந்தைநாள் வினையினால் முடிவதாய்த் தெளிகுவீர்.

தந்தையே! யான் மதிவதனன்மீது வேட்கைகொண்டு அவனை மணக்க உறுதிகொண்டது உமது குற்றமேயன்றி

வடு=குற்றம்; பூவை=பெண்; நவையற=பழியின்றி.

வேறன்று. இளமைப் பருவமுதல் எங்க ளிருவரையும் ஓரிடத்தில் வளருமாறும், விளையாடுமாறும், கல்வி பயிலுமாறும் விடுத்தீர். அவன் இப் பூலோகத்திலுள்ள எவ்வளவு மேம்பட்ட மாதையும் மணத்தற்குரிய சிறப்பை யுடையான். அவனது அருமை பெருமைகளிற்கு முன்னர் எனது யோக்கியதை எம்மாத்திரம்! அவனுக்கு யான் சமமான மனைவி யென்பதற்கே யிடமிலது. அவன் எனக்குக் கணவனாகக் கிடைப்பது எனது முன்வினைப் பயனால் வந்த பாக்கியமே யன்றி வேறில்லை.

பிரதாபசிம்மன்—(கோபச்சிரிப்புடன்) இதென்ன ஆச்சரியம்! சுந்தராங்கி! உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ?

சுந்தராங்கி.—

(இராகம்–கானடா)

அத்தனே யுண்மையா யுன்மத்தமே கொண்டேனும்மால்
கத்தனேகாப்பனென்ன மெத்தவு முறுதிகொண்டே
னுத்தமமென்னுந் தோன்றற்சுதை யினுமெளியோனார்வப்
புத்திரியாயி னென்றன் றுணைவனைப் பிரிதலுண்டோ.

பிதா! நீவிர் புரிந்தவற்றால் யான் பைத்தியங்கொண்டதுண்மையே! கருணைக் கடலான கடவுள் என்னை அதினின்றும் நிவர்த்திப்பானென்னும் நம்பிக்கையைக் கொண்டிருக்கின்றேன். ஐயோ! யான் சிறந்த பதவியான அரசபுத்திரியாய்ப் பிறந்ததினும் ஓர் ஏழைக் குடியானவனது ஆசைச் செல்வியாயும், எனது தோழன் மதிவதனன் அடுத்த இல்லத்துக் குடியானவன் புதல்வனாயும் உதிக்காமற்போனோமே யென்று யான் மிக்க வருந்துகின்றேன். அவ்வாறு பிறந்

உன்மத்தம்=பைத்தியம்; கத்தன்=கடவுள்; தோன்றல்=அரசன்; சுதை=பெண்; ஆர்வம்—ஆசை.

திருப்பின் எங்களுக்கித்தகைய இடுக்கண்கள் ஒருபோதும் சம்பவித்திராவன்றே!

பிரதாபசிம்மன்—அறிவிலி! பேதை!

(சரசாங்கி வருதல்)

பிரதாபசிம்மன்—எனதினிய சரசாங்கி! இதுவரையில் எங்கிருந்தனை? இவரிருவரும் திரும்ப ஒன்றாய்ச் சேர்ந்திருக்கின்றார்களே! நீ எனது கட்டளையை நிறைவேற்றவில்லையோ! இனியும் தாமதியாது இவளை இக்ஷணமே அழைத்துப்போய்ச் சிறைச்சாலையில் அடைத்துவிடு.

சரசாங்கி—(மிகவும் தந்திரமாய்) பிரிய காந்தா! கோபத்தைத் தணித்தருளுங்கள்—எனதரிய சுந்தராங்கி! தாதையுடன் எதிர்த்து மறுமொழி கூறுவதழகன்று. சிறிது சாந்தத்தைக்கொள். நரேந்திரா! எங்களை இங்கு விடுத்து நீங்கள் தயைபுரிந்து அந்தப்புரத்திற்குச் செல்லுங்கள். அதிகமாய் கோபித்தலும் வருந்துதலும் உங்கள் தேகசௌக்கியத்திற்கு விரோதமானவை.

பிரதாபசிம்மன்—அல்ல அல்ல! இவள் இக்குற்றத்திற்குப் பிராயச்சித்தமாய்த் தனதாயுட்கால முற்றும் வருந்தி மனம் நொந்து தினமோர் துளியாய் இரத்தக்கண்ணீர் விடுத்துச் சிறைச்சாலையிலேயே இறத்தல் வேண்டும். ஆதலின் இவளை விரைவிலழைத்துச் செல். இவள் விஷயத்திற் சிறிதும் உன்மனதிரங்கக்கூடாது.

(அரசன் சென்றுவிடுதல்)

(புருஷோத்தமன் வருதல்)

சரசாங்கி—(இனிமையாய்) எனதரிய புதல்வி! சே! நீ இவ்வாறு மனந்தளர்தல் நினக்கழகாமோ?—விசனப்படா

தே! இதோ நினது சேவகன் வந்தனன்.—ஏ புருஷோத்தமா? என்ன விசேஷம்?

புருஷோ—தாயே! உங்கள் தமையனர் என்னுடைய எஜமானன் மதிவதனனை வழிமறித்து அவருடன் போர் புரிந்தனர்.

சரசாங்கி—ஆகா! போர் செய்தனரா? அதனால் யாதாயினுந் தீங்கு சம்பவித்ததோ?

புருஷோத்தமன்—இந்நகரை விடுத்தேகிய என் நாயகன் கோபமென்பதையே பெறவில்லையாதலின் அவர் தனது வாளை வைத்துக்கொண்டு விளையாடியதாய்ப் புலப்பட்டதேயன்றி உண்மைப்போர் புரியவில்லை. இல்லையேல் தீங்கு சம்பவித்திருத்தல் நிச்சயம். அதற்குள் அங்கு வந்திருந்த சிலர் இவரை விலக்கிவிட்டனர்.

சரசாங்கி—மெத்த சந்தோஷம்.

சுந்தராங்கி—சிற்றன்னை! உங்களது மூத்தோனும் எனது தந்தையைப் பின்பற்றினன்போலும். யாதொரு புகலிடமுமின்றி நகரைவிடுத்துச் செல்லும் துர்ப்பாக்கியனை மதிவதனனை வழிமறித்துப் போர்புரிய முயன்றனனே!—ஆகா! ஏ புருஷோத்தமா! நீ ஏன் உனது நாயகனை விடுத்து வந்துவிட்டனை?

புருஷோ—அவருடைய கட்டளையின்வாறே வந்தேன். அன்னை! அவருடன் யான் துறைமுகப்பட்டினம் வரையிற்கூடத் தொடர்தற்கு என்னை விடுத்தாரில்லை. இக்கடிதங்களை உடனே கொண்டுபோய் உங்களிடம் கொடுத்துவிட்டு உங்களது ஏவலின்வாறு புரியும்படி அனுப்பிவிட்டனர்.

சரசாங்கி—இவன் எப்பொழுதும் மிக்க அபிமானமும்,

நன்றியுமுள்ள சேவகன். இனியும் இவன் அவ்வாறே யொழுகுவனென்பதெனது உறுதி.

புருஷோ—மகாராணியாரே! என்னைப்பற்றி நீங்கள் இவ்வாறு நல்ல அபிப்பிராய மீந்ததற்கு யான் உங்களிடம் நன்றிபாராட்டற் குரியவன்.

சரசாங்கி—சுந்தராங்கி! நேரமாகின்றது. நாம் செல்வோம். (சென்றுவிடுதல்)

மூன்றுங் களம்

அரண்மனையின் பின்புறத்திலுள்ள மைதானம்.

ஜெயபாலனும், அவன் தோழர்கள் அனுமந்தன், குணசேகரன் என்போரும் சம்பாஷித்தல்.

ஜெயபாலன்—(அதட்டிய குரலில்) அடே அனுமந்தா! அடே குணசேகரா! நீங்கள் இதுவரையில் எங்கு சென்றிருந்தீர்கள்?

அனுமந்தன்—(பணிவுடன்) மகாப்பிரபுவே! உங்களைத் தேடிக்கொண்டு சென்றனம்.

ஜெயபாலன்—எங்கு தேடிச்சென்றீர்?

குணசேகரன்—பிரபுவே! நீங்கள் இல்லாத விடத்தில் தேடிச் சென்றோம்.

ஜெயபாலன்—(கோபத்துடன்) மூடர்காள்! நானில்லாதவிடத்தில் தேடுவதிற் பயனென்ன!

அனுமந்தன்—நீங்கள் இரத்தமொழுகும் தேகத்துடனிருப்பதை இப்பொழுது நாங்கள் காண்பதே அதன் பயன்.

குணசேகரன்—நீங்கள் அவ்விடத்திலில்லையென அறிந்தமையாற்றானிங்கு வந்தோம். மதிவதனனும் நீங்களும் போர்புரிதலைக் கண்டோம்.

ஜெயபாலன்—ஆகா ! நாங்கள் போர்புரிதலைக் கண்ட நீவிர் ஏன் உதவிக்கு வரவில்லை ?

அனுமந்தன்—(பணிவுடன்) மகாப்பிரபுவே ! பிறர் காரியங் களில் தலையிடுதல் குற்றமென நீவிர் பலதடவைகளில் எங்களுக்கு உபதேசித் திருக்கின்றீர்க ளல்லவோ ! நிற்க, நீங்கள் எக்காரியம் புரிந்தாலும் அதில் குறுக் கிடாது பார்த்துக் கொண்டிருக்கக் கட்டளை யிந்தீ ரன்றோ. அதற்கு விரோதமாய்ச் செய்தல் நாயகத் துரோகமென்பது எங்களுக்குத் தெரியாதோ ! எங் களைப் பரீக்ஷிக்கின்றீர்போலும்.

குணசேகரன்—பிரபுவே ! மதிவதனன் உங்களது பராக் கிரமத்திற்கு முன்னில்லானென்பது யாறியா விஷயம்! நாம் மூவரும் ஒன்றுகூடி அவனை வென்றோமென்பது உங்கள் சௌரியத்திற்கோர் பெருங் களங்கமன்றோ.

ஜெயபாலன்—ஆமாம் ! மெத்த சந்தோஷம்.

அனுமந்தன்—யாவரும் மதிவதனனை நிகரற்ற வீரனெனக் கூறுகின்றனர். அவன் கோபமென்பதே யில்லாத பேதையாயன்றோ இருக்கின்றனன். அவன் இவ்வாறு சென்றதைப்பற்றி யானும் சந்தோஷிக்கின்றேன். ஆகா ! மகாப்பிரபு ! நீங்கள் வீராவேசத்துடன் போர் செய்தமையின் மேலங்கி முழுவதும் கிழிந்து உடம்பு முற்றும் இரத்தம் வெள்ளமா யோடுகின்றது. மேலங் கியை நீக்கிவிடுவதே நன்று. அசுத்தமான இரத்தம் அப்போதைக்கப்போது தேகத்தை விட்டு விலகுவது உசிதம்.

ஜெயபாலன்—ஆம் ! நீ கூறியவாறே அங்கியை எடுத்து விடு கின்றேன். அவனை யான் அதிகமாய்க் காயப்படுத்தி விட்டேனே.

குணசேகரன்—வீராவேசத்துடன் சண்டைசெய்த உங்களுக்கே இத்தனை காயங்களிருக்கையில் கடைசிவரையில் மிக்கப் பொறுமையுடன் போர்புரிந்த மதிவதனனுக்கு உங்களிலும் அதிகம் காயமுண்டா யிருக்க வேண்டுமென்றே?

அனுமந்தன்—ஆமாம் அது மெய்! உங்களது மேலங்கியில் கத்திவெட்டுப் பல விடங்களைத் துளைத்திருப்பதால் உங்கள் காயங்கள் வெளிக்குத் தெரிகின்றன. மதிவதனனுடைய அங்கியில் ஓர்துளையும் இல்லை யாதலின் அவன் உடம்பிலுள்ள காயங்கள் வெளிக்குத்தெரியவில்லை. உங்களது சிறந்த பராக்கிரமத்தினால் அவன் அங்கி துளைக்கப்படாது அவன் தேகம் மாத்திரம் சலடைக் கண்ணுடிற்று. இது எத்தகையவிந்தை! உங்கள் புஜபலத்தை என்னெனக் கூறுவது.

ஜெயபாலன்—(சந்தோஷத்துடன்) ஆகா! அரிய தோழர்காள்! அந்த வஞ்சகன் என்னுடன் சமமாய் நிற்க முடியாது மிக்கத் துன்பமடைந்தனன்.

அனுமந்தன்—ஆமாம், உங்களை எதிர்த்து நிற்கமுடியாமல் தான் உங்கள் முகத்தை நோக்கிப் பாய்ந்தனன். உங்களிடத்தில் நயந்து வேண்டிக்கொள்ளுமாறு அப்படி நெருங்கிவந்தான் போலும்.

ஜெயபாலன்—ஆம். யான் அதற்கு இடங்கொடுத்தேனில்லை. அவனுக்கு முகங்கொடுத் திருப்பேனுயின் அவன் எனது பாதங்களில் விழுந்திருப்பன்,

குணசேகரன்—ஆம், ஆம். அதனாலேதான் நீங்கள் பின்புறத்தை அவனுக்கெதிரிற் காட்டினீர்கள்! அவ்வமயத்தில் அருகிலிருந்தோர் விலக்கி விட்டனர். இல்லையேல்—

ஜெயபாலன்—ஆகா! அவர்கள் நடுவில் தலையிடா திருப்பின் நன்று யிருந்திருக்கும்.

அனுமந்தன்—உயிர் போயிருக்கு மென்பதற்குச் சந்தேக மிலது. உங்கள் விசனங்க ளெல்லாம் முடிவடைந்திருக்கும்.

ஜெயபாலன்—இத்தகைய செயலற்ற கோழையையே சுந்தராங்கி மணக்க விரும்புகின்றன ளன்றி என்னிடம் வெறுப்பைப் புலப்படுத்து கின்றனளே! இதென்ன ஆச்சரியம்.

குணசேகரன்—மனிதர் இறக்குந் தருணத்திலும் அவருக்கு உயிரைத்தரும் சஞ்சீவிபோன்ற சிறந்த மருந்துகள் கெட்ட சுவையையும் துர்நாற்றத்தையு முடையனவாய்த் தோன்றுகின்றன வன்றோ. எது கெட்டதாய்த் தோன்றுகின்றதோ அதில் நன்மையுளது. இவள் உங்களிடத்தில் வெறுப்பைக் காட்டுவதால் உங்களிடத்திலேதான் மனதிற்குள் காதலைக் கொண்டிருக்க வேண்டும். உங்கள் மேம்பாடு, சௌரியம், அழகு, புத்தி நுட்பம் முதலியவற்றைப் பற்றி அவள் அறியாதவளன்று. மதிவதனனுக்கும் உங்களுக்கும் ஓர் விஷயத்திலும் உவமையே யில்லை. நிற்க, மகளிர் தமது மனதைச் சுலபத்தில் வெளியிடுவதில்லை. எத்தகைய அரிய விஷயத்தையும் செய்யலாம். மாதரின் மனதை ஆழங்காண்பது யாவராலும் ஏலாக்காரியம். மனதில் ஒருவனை நினைப்பர். வெளியில் அவனை வெறுப்பதாய்த் தோற்றுவித்துத் தூஷணம் புரிவர். ஆதலின் மகாப்பிரபு! அவள் உங்களை எவ்வாறு இகழினும் மனந்தளராது மேன் மேலும் நெருங்கி உங்களது ஆழ்ந்த மையலைப் புலப்படுத்துவீர்களாயின், அவள் தான்

செய்த கொடுமைகளைப் பற்றிக் கழிவிரக்கங்கொண்டு உங்கள் பொன்னடிகளில் விழ்ந்து வணங்குவதுடன் தன்னையும் உங்களுக்கு அர்ப்பணம் செய்வாள்.

ஜேயபாலன்—ஆமாம், குணசேகரா! உனது புத்திகூர்மையே கூர்மை! நீ கூறியதே உண்மை! அவளென்னை இகழினும், ஏளனம்புரியினும், அடிப்பினும், தாமரை மலர்போன்ற தனது பாதங்களைப் பிரயோகிப்பினும், யான் அவற்றைக் கவனியாது மேன் மேலும் எனது மோகத்தைப் புலப்படுத்துகின்றேன். இப்புண்களை காண்பளேல் என்னை மிக்க ஏளனம் புரிவள். ஆகா! அவள் இப் புண்களில்லாதிருப்பின் நன்றாயிருந்திருக்கும்.

அனுமந்தன்—இத்தனை பெரியபுண்களிருந்தும் நீவிர் இறக்காது அவற்றின் கொடுமையைப பொறுத்துக்கொண்டிருப்பதைக் கண்டு உங்கள் பராக்கிரமத்தை மிக்க வியப்பள். அவற்றின்மீது மருந்துமுதலியன பிரயோகப்படுத்தின் மாத்திரமே இகழுவள். ஆதலால் சிகிச்சையின்றி யிருப்பின் அவளது வியப்பிற்கு அளவிராது.

ஜேயபாலன்—(அன்புடன்) உங்களைப்போன்ற தோழரிருக்க எனக்கு யாது குறையுளது. எக்காரியமும் கைகூடுதலெளிதன்றோ. வாருங்கள் எனது அந்தப் புரத்திற்குச் சென்று உண்டு பருகிச் சிறிது களைப்பாறுவோம்.

(மூவரும் செல்லுதல்)

நான்காங் களம்

சுந்தராங்கியின் அந்தப்புரம்.

புருஷோத்தமனும், சுந்தராங்கியும் வசனித்தல்.

சுந்தராங்கி

(மஞ்சிதினமு நேடு)

(இராகம் ஆனந்தபைரவி—தாளம் திரிபுடை)

பல்லவி

சொந்தமெனவேயாடி சுகமாயிருந்தோமன்றோ (சொ)

அனுபல்லவி

எந்தை மொழியின்வாறு யினியனேயேகினும்
சிந்தை தனிலேநின்றாய் செயிரிலா மாணிக்கமே (சொ)

சரணம்

நின்னைப் பிரிந்த பின்னர் நிகரிலா நற்குணசீலா
துன்னும் பொருளனைத்தும் துதையிருளா யானதே
பன்னி யினது காதல் சென்னி மிசையதாக
மன்னன் துயரையீந்தான் மதிவதன ஆவியே (சொ)

(இராகம்—ஆனந்த பைரவி.)

புருஷோத்த மனேயுன்றன் பொருவிலாத் தலைவன் நீட்டும்
நிருபமேற் பாரின்றாயிற் கருணையா லொருவரீயு
மரிய பேருதவி தன்னை யலட்சியம் புரிந்தற்றாகுங்
கரைதொடு நெடியனுயிற் கலந்தொரு மறிவையன்றோ.

(வருத்தத்துடன்)—நன்றி மிக்க எனதரிய சேவகா! அடே! புருஷோத்தமா! ஐயோ! என்ன செய்வேன். மதிவதனன் சென்றதுமுதல் எங்கு நோக்கினும் மதியில்லா

பன்னி=மனைவி; சென்னி=தலை; துதை=நெருங்கிய.

பொருவு=சமானம்; நீட்டும்=எழுதும்; எற்பார்=பெற்றுக் கொள்வோர்; கரை=சமுத்திரக்கரை; நெடியன்=நீண்டவன்; கலம் =கப்பல்.

இரவென்ன இருளாய்த் தோன்றுகின்றதே. அவன் தூர தேசத்திற்குச் சென்றுவிட்டதாகவே என் மனது நம்பிக்கை கொள்ளமாட்டே னென்கின்றது. பூஞ்சோலையிற் காணலாமோ, கல்விக் கழகத்திற் காணலாமோ, வேறு பிறவிடத்திற் காணலாமோ வெனப் பலவகையான பேதமையான எண்ணங்கள் என்னை வதைக்கின்றன. அவன் சென்றுவிட்டபோதிலும் என் மனதில் அவனது வடிவமே சதா சார்வதா தோன்றி மறையாது நின்று வருத்துகின்றது. ஆகா! திருமால் திருவிக்ரமாவதார மெடுத்தபோது அவரது உருவம் மூவுலகத்தினை முற்றும் மூடியதுபோல, நீ கடற் றுறைமுகப்பட்டினம் வரையில் நீண்ட உருவத்தைப் பெறுவையேல் எவ்வளவு அனுகூலம்! ஏனெனில் மதிவதனன் எனக்குக் கடிதம் அனுப்புவனேல் அதைப் பெறுவதற்கு அங்கு ஒருவருமில்லாவிடின் பிறர் நமக்கு ஆபத்து வேளையிற் கருணையுடன் செய்யும் உதவியை வேண்டாமென அலட்சியம் புரிந்தது போலாமன்றோ? நீ அவ்வாறு உருவெடுப்பையேல் இங்கிருந்தவாறே ஒவ்வொரு மாக்கலத்தினும் கடிதமுளதோவென அறிவையன்றோ! ஆகா! இதென்ன மடமையான எண்ணம்! இவைகளெல்லா மிருக்கட்டும். அவன் உன்னிடம் கடைசியாய் எதைப்பற்றி உரையாடினன்

புருஷோத்தமன்— சுந்தராங்கி! சுந்தராங்கி யென்று பிதற்றிக்கொண்டே சென்றனர்.

சுந்தராங்கி—

(இராகம்-நாதநாமக்கிரியை)

சிறகுகளுடனே வேகப்பறவையாய்ப் பிறந்திட்டாலுந்
துறவிகள் க்கனமேகுங் குளிகையை யளித்திட்டாலு
மறுவிலா மனத்தின்காற்றின் விசையுடற் கிருந்திட்டாலுங்
குறுகிலோர் நொடியிலெந்த னுயிரினை யடைவேனன்றோ.

அடே புருஷோத்தமா! யான் என்னடா செய்யப் போகின்றேன்! அவன் மறைந்துவிட்டதைக் கேட்டும் அவன் இங்கிருப்பதாகவே நினைப்புண்டாகின்றதன்றி, அவன் இங்கில்லையென்பதையே என் மனது நம்பிக்கையாய்க் கொள்ள மாட்டேனென்கின்றதே! அவனது உருவம் எனதருகில் உட்கார்ந்திருப்பதாயும் என்னுடன்கூட நடந்து வருவதாயும் மனதிற்குத் தோன்றுகின்றதேயன்றி எனது கண்களுக்கு அவன் உருவம் புலப்படவில்லையே. யாதாயினும் காலடி முதலியவோசை கேட்குமேல் உடனே என்னுடம்பு திடுக்கிடு கின்றது. அவன்தான் வந்தனனோ வென்ன என் மனம் பேதைமைத்தனமாய் நினைக்கின்றது நாற்புறமும் கண் களைப் பலமாய் விழித்து நோக்கி நோக்கி எனது கண்களும் கழுத்தும் பொறுக்கலாற்றாது நோகின்றன. ஐயோ! மதி வதனன் என்னுடன் இனிமையாய் உரையாடியவைகளும், நாங்களிருவரும் புரிந்த விளையாடல்கள் யாவும், ஒன்றன் பின்னொன்றாய் மனதில் தோன்றினும் அவை கனவோ அன்றி உண்மையோ வெனும் சந்தேகமெழுகின்றது. அடே, புருஷோத்தமா! இனி அவனைக் காண்பேனா? ஆகா, யான் வேகமாய்ப் பறக்குமோர் பறவையாய் மாறுவேனாயில் உடனே அவனைத் தொடர்ந்து சென்றடைவேன். யாரா யினும் யோகிகள் தமது ககனக் குளிகையைக் கொடுப்பரே யாயினும், அல்லது மனத்தின் வேகமும், காற்றின் வேக மும் ஜடப் பொருளாகிய எனது உடம்பிற்கு உண்டாகுமா யின் ஓர் நொடியில் யான் அவனை அணுகிவிடுவேனன்றோ!

புருஷோத்தமன்—அன்னையினும் அன்புமிக்க அரசியே! வருந்தாதீர். இப்பூலோகத்தி னியல்பை நீவிர் அறி யீரோ? ஒவ்வொருவரும் மாறி மாறிச் சிலகாலம் துன்பப்படுதலும் சிலகாலம் இன்ப மனுபவித்தலும்

இயற்கையாயுளது. பிறப்பு முதல் இறப்புவரை ஓயாது துன்பத்தால் வருந்துவோருமிலர். அவ்வாறே ஆயுட் காலமுற்றும் இன்பமே அனுபவிப்போருமிலர். செல்வம் முதலிய சௌகரியங்களை ஏராளமாய்ப் பெற்றவர் புத்திரரில்லையென்றும், தேகவியாதிகளினாலும், திருடர், பொறாமையுடையோர் முதலியோரின் பயத்தினாலும், மனைவியாகூலத்தினாலும் பீதியினாலும் சஞ்சலப் பட்டவண்ண மிருக்கின்றனர். பொருளற்றவர் தினம் கூலியின்பொருட்டுத் தமது தேகத்தை வருத்திச் சாறுப் பிழிந்து கஷ்டப்படுகின்றனர். இவர் இரவிலே தனவந்தர்களுக்குள்ள கவலைகளேயின்றி மனத்திருப்தியுடன் பேரானந்தபோக மனுபவிக்கின்றனர். ஆதலின் ஒவ்வொருவருக்கும் ஓர்விதத்தி லின்பமுண்டாயின் மற்றோர்விதத்தி லிடுக்கணுண்டு. நீவிர் இப்பொழுது துன்பமடைவது இனியெய்தும் சுகத்திற்கு முன்னறிகுறியேயன்றி வேறிலது. உலகத்தில் ஒவ்வொருவருக்கும் தினந்தினஞ் சம்பவிக்கும் இவ்விஷயத்தைப் பற்றிக் கவலைப்படவேண்டாம் தாயே!

சுந்தராங்கி—அடே, நற்குணமுள்ள புருஷோத்தமா! உனது எஜமானன் எப்பொழுது கடிதம் எழுதுவதாய்க் கூறினர்.

புருஷோத்தமன்—இத் துறைமுகத்திற்கு வரும் அடுத்த கப்பலில் அனுப்புவதாய் உறுதி செப்பினர்.

சுந்தராங்கி—ஐயோ! கடைசியாய்ப் பிரிவதற்குமுன் விடை கூடப் பெறக்கூடாமற் போயிற்றே. ஆகா! எத்தனை விஷயங்களைப்பற்றி அவனிடம் வசனிக்க நினைத்தேன். அவ்வெண்ணம் முற்றும் அவமாயிற்றே. கலிங்கதேசத்திற்குச் சென்ற பின்னர் ஆங்குள்ள வஞ்சகர்களான

மங்கையரின் மோகவலையிற் படாது தன்னைப் பாது காத்துக்கொள்ளுமாறு கூற மிக்க ஆவல் கொண்டிருந் தேன். அதிலும் சிறந்த வேறோர் விஷயத்தையும் தெரி விக்க முடியாமற் போயிற்று. எங்கிருப்பினும் எத் தகைய துன்பம் வரினும், இன்பமே யனுபவிப்பினும் சதா சார்வதா கடவுளையும் அவரது பெருமைகளையும் மனனம் செய்யுமாறும் சொல்லாமற் போனேனே. ஆகா! என் செய்வேன்! மனதில் நினைத்தவற்றை வெளியிடு முன்னர் எனது தாதை திடீரெனத் தோன்றிக் கடுங்கோபத்தைப் புலப்படுத்தி வலிய சண்டமாருதமானது ஓர் பூஞ்சோலையி லிருக்கும் அரும்புகளை மலரவிடாது கீழேவீழ்த்தி விடுவதை யொப்ப என் மனதிலெழுந்தவை முடிவடையாவாறு புரிந்து மதிவதனனை அனுப்பி விட்டனர். என்ன செய் வேன்! புருஷோத்தமா!

(ஓர் தாதிவருதல்)

தாதி—அன்னே! சரசாங்கி மகாராணி உங்களது வரவை எதிர்பார்த்திருப்பதாய்த் தெரிவித்தனர்.

சுந்தராங்கி—ஆகா! அப்படியா!— அடே, புருஷோத் தமா! யான் முன்னர் கூறிய காரியங்களை முடிப் பாய்—நான் சரசாங்கி யிடத்திற்குச் சென்று வருகின் றேன்.

புருஷோத்தமன்—கட்டளைப்படியே செய்கின்றேன் அம்மா!

(புருஷோத்தமன் சென்று விடுதல்)

சுந்தராங்கி—அடி, தாதி! நாம் செல்லலாமா?

தாதி—தங்கள் சித்தம்.

சுந்தராங்கி—

(காவடிச்சிந்து—பூமிமெச்சிடு மண்ணுமலை)

(1) மாரன்வெட்கி டுமென் னுதனைப்போய்மனம் நாடுதே
மகிழ்வோடுதே காலம் நீடுதே யொரு
வஞ்சியான வென்னை
சஞ்சலமே வந்து—கூடுதே.

(2) ஆசையானபெரும் பாசத்தா லென்மனம் நோகுதே
கறங்காகுதே-யுயிர்போகுதே யொரு
கணமும் யானவனைக்
காணலாமோ வென்ன—வேகுதே

(3) தாதையானவர்கள் தீதுசெய்திடலும் விந்தையே
ஆகா தந்தையே-யிதுநிந்தையே யெந்த
னுயிரைப் போன்றவனைப்
போகச் செய்துதுன்ப மீந்தையே.

(இருவரும் செல்லுதல்.)

ஐந்தாங் களம்

கலிங்கதேசத்தில் பலராமன் மாளிகை.

பலராமன், அவனது நண்பன் சூரசேனன்,
குந்தலதேசத்தானொருவன் மற்று மிரு நண்பர்கள்
சம்பாஷணை புரிதல்.

சூரசேனன்—இதற்குமுன் யானவனை மாளவதேசத்திலேயே பார்த்திருக்கின்றேன். அவன் அப்பொழுது சர்வ சாதாரணனு யிருந்தனன். நகரத்தினரோ அவனிடத்திற் பல விசேஷகுணங்க ளிருப்பதாய் அவனைப் பிரமாதமாய்ப் புகழ்ந்தனர். யான் அவனிடத்தில் யாதோர் விசேஷத்தையும் கண்டேனில்லை. இப்பொழுதும் அவ்வாறே அவனைப் புகழ்ந்து பேசுகின்றன ராத

வின் அவனது தன்மையில் யாதொரு மாறுபாடு மிரா தென நினைக்கின்றேன்.

பலராமன்—நண்பா! நீ அவனைக்கண்டபோது அவன் இப்போதிருப்பதைப்போல அவ்வளவு ஆழ்ந்த கல்வி முதிர்ச்சி, நற்குணம், அழகு, முதலியவை நிரம்பப் பெற்றிருந்தானில்லை. இப்பொழுது அவனைக் காணு வையேல் அதன் உண்மை நன்று புலப்படும்.

குந்தலன்— அவனைச் சமீபத்தில் யான் குந்தல தேசத்திற் கண்டேன். அங்கும் பலர் சூரிய னொளியைப்பார்த்துக் கண்கள் மழுங்குவதுபோல இவனொளியைக் கண்டு திகைத்துப் பிரமித்தனர்.

சூரசேனன்—அரசனது புத்திரியாற் காதலிக்கப் படுகின்று னென்பதினாலேயே இவனிடத்திற் பல மேம்பாடுக ளிருக்கவேண்டுமென்பது ஜனங்களின் மூடநம்பிக்கை. அவள் எவ்விஷயத்திலும் மிக்கச் சிறப்பினையுடையவ ளாதலின் அவளது பிரகாசம் அவனிடத்தும் பிரதி பிம்பித்துத் தோன்றுகின்ற தென்பதே எனதுறுதி. நிற்க. அரசனது புத்திரியின்மீது அபிமான முள்ளோர் இவன் பிரிந்து போவதைப் பற்றி ஓலமிட் டழுகின் றனரன்றோ, அவர் இவனது குணவிசேஷங்களைப் பற் றிப் பிரமாதமாய்ப் புகழுதற்குக் கடமைப்பட்டவரே. ஏனெனில் அவ்வாறு புகழாவிடின் அவள் யாதோர் யோக்கியதையு மற்ற யாசகனை மணக்குமாறு வரித்துக் கொண்டதைப்பற்றி யாரேனும் அவளைத் தூஷணைபுரி வரேல், அது எங்கும் பரவி அவளுக்கு யோக்கியதைக் குறைவை யுண்டாக்குமன்றோ. அவள் செய்தது சரி, யான விஷயமென்பதை உறுதிப்படுத்துமாறே அவ ளது சாரார் இவ்வாறு கூறிக்கொண்டலைகின்றனர்.

அதிருக்கட்டும், பலராமா! அவன் உன்னோடு வசிக்குமாறு வருவதென்ன? அவனுக்கும் உனக்கும் எவ்வாறு நட்புண்டாயிற்று?

பலராமன்—அவன் தகப்பனும் யானும் ஓரிடத்தில் சேனைத் தலைவரா யிருந்தோம். அப்பொழுது அவன் எனதுயிரைப் பலதடவைகளிற் காப்பாற்றினன்.

(மதிவதனன் வருதல்.)

ஆகா! அவன் மாளவதேசத்தி லிருந்து அதோ வந்து விட்டனன் அவனிடத்தில் நீங்கள் யாவரும் மிக்க மரியாதையாய் நடந்து கொள்ளுங்கள். அவனது நற்குணங்கள் இன்னின்னவையென்று நான் விவரித்தல் அனுவசியம். நீங்கள் இனி அனுபோகத்திலேயே காண்பீர்..

மதிவதனன்—இது தான் எனது தங்கையின் நண்பனது மாளிகை. அவனும் வேறு சிலரும் அதோ இருக்கின்றனர்.

பலராமன்—(சந்தோஷத்துடன்) மதிவதனா வருவாய். இவர்கள் யாவரும் எனது நண்பர்கள். உன்னைக்காணமெத்த சந்தோஷமாயிற்று. நாம் நண்பராய் இருக்கநேர்ந்தது எனது பாக்கியமே.

மதிவதனன்—(உட்கார்ந்துகொண்டு) எனக்கும் மெத்த ஆனந்தமே.

குந்தலன்—(மதிவதனனை நோக்கி) ஐயா! நாமிருவரும் குந்தலதேசத்தி லோர் முறை சந்தித்தது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதோ?

மதிவதனன்—ஆம். நன்றாய் ஞாபகமிருக்கின்றது. அப்பொழுது நீர் புரிந்த உதவியையும் மறந்தேனில்லை. அந்நன்றியை இனி மறப்பவனுமன்று.

குந்தலன்—ஐயா! யான்செய்த அற்பக் காரியத்தை மிக்

கப் பெரிய உதவியாய்க் கூறுகின்றீர். எங்கள் தேசத் தானையும் உங்களையும் யான் கோபந்தணிப்பித்து இராஜியாக்கிவிட்ட விஷயம் என் மனதிற்குத் திருப்தியாயிருக்கின்றது. கேவலம் பிரயோஜனமற்ற அற்ப விஷயத்தின்பொருட்டு நீங்களிருவரும் அவ்வளவு கடுமையான பூசல்பிரிந்து உயிரிழக்கும் நிலைமைக்கு வந்தது மிகவும் பரிதாபகாமான விஷயமாயிருக்கின்றது.

மதிவதனன்—அப்பொழுது யான் மிகச் சிறுவன். பிறர் கூறுவதினால் நம்பிக்கைகொண்டு அவ்வாறு வாது புரிந்தேன். இப்பொழுதோ அவ்விஷயங்களை யான் அனுபோகத்திலேயே யறிகின்றமையின், யான் புரிந்த வாது சரியானதென்பதே யுறுதி.

குந்தலன்—நீவிர் வாதித்த விஷயம் உண்மையா யிருக்கலாம். எனினும், அதற்காக நீங்களிருவரும் வாளுங் கையுமாய்ப் போர்புரிய வாரம்பித்தீர்கள். அதனால் உங்களிருவருக்கேனும் அன்றி ஒருவருக்காயினும் உயிர் போயிருத்தல் சம்பவித்திருக்குமன்றோ.

சூரசேனன்—நீங்களிருவரும் சம்பாஷிக்கும் விஷயம் எதைப் பற்றி யென்பதை அறியக்கூடவில்லை. அதை எங்களுக்குத் தெரிவிக்கலாமோ ?

குந்தலன்—அது யாவருக்கும் தெரிந்தவிஷயமன்றி இரகசியமானதன்று. நேற்றிரவு நாம் ஒவ்வொருவரும் அவரவது தேசத்து மங்கையரைப்பற்றிப் புகழ்ந்து விசேஷித்துப் பேசியது போலவே இவர்களது வாதுமுண்டாயிற்று. அப்பொழுது இவர் தனது தேசத்தரசனது புத்திரியைப் பற்றிப் புகழ்ந்து பேசினர். குந்தல தேசத்திலுள்ள எத்தகைய மேம்பட்ட மகளிரினும் அவள் கட்டழகு, கற்பு, புத்திநுட்பம், பரி

சுத்தம், நிலைபெற்ற நற்குணம், பிறர்க்கிடந்தரா மனோ வுறுதி முதலியவற்றில் மிக்க விசேஷித்தவளென உறுதியாய்க் கூறினார். அதிலிருந்து பெருத்த வாத முண்டாயிற்று.

சூரசேனன்—(ஏளனமாய்) அத்தகைய மங்கை இவ்வுலகத் திலேயே யில்லையென்பது நிச்சயம். அதற்குப் பின் இவரே அதை அனுபோகத்தில் அறிந்திருப்பர்.

மதிவதனன்—இல்லை, இல்லை. அவள் இவ்வுலகத்தில் உயி ருடனிருப்பவளே. யான் முன்கொண்டிருந்த அபிப் பிராயம் உறுதியாயிற்றே யன்றி அதை மாற்றுதற்கு யாதொரு முகாந்திரமு முண்டாகவில்லை.

சூரசேனன்—அவள் எவ்வளவு மேம்பட்டவளென்று நீர் நினைப்பினும் எமது கலிங்கதேசத்து மாதருக்கு அவள் ஒருபோதும் ஈடாகமாட்டாள். உம்முடன் அவள் இளமைப்பருவந்தொட்டு சதா சார்வதாவிட்டுப் பிரி யாத்தோழியா யிருந்தமையின், அவள் உமக்கு விசேஷ மாய்த் தோன்றுகின்றனள். இத்தேசத்திய மங்கை யரை நீவிர் கண்டிருப்பீரேல் இவ்வாறு உறுதி கூற மாட்டீர்.

மதிவதனன்—"இல்லை யில்லை. அவள்மீது கொண்டகாதலி னற் கண்ணிழந்து யான் அவளை இவ்வாறு புகழ்ந்தே னில்லை. உண்மையில் அவளிடத்துள்ள சிறப்பினாலே யான் அவளை மேம்பட்டவளாய் மதிக்கின்றேன்.

சூரசேனன்—அவள் யாரைக்காட்டினும் மேம்பட்டவள்?

மதிவதனன்—இவ்வுலகத்திலுள்ள மங்கையர் அனைவரினும் மேம்பட்டவள்.

சூரசேனன்—அத்தகைய மங்கை பூமியிலேயே இருக்க

மாட்டாள். அல்லது நீவிர் கூறுவது அவளது உண்மை யோக்கியதைக்கு மிஞ்சியதா யிருக்கவேண்டும்.

மதிவதனன்—

(இராகம்—மோகனம்.)

சரியிலாமொழியே தந்தீர் தரணியை மகிழ்ந்த வேந்த
ரரிய நன்கொடையா யீவர் பெறலரும் நிதியுண்டாயின்
விரிந்த வவ்வுலகுதன்னை விலையினூற் கோடலாகு
மரிவையை யாகாதீச னருளினாளளித்தபேறும்.

ஐயா! நீர் கூறியது முற்றும் சரியில்லா விஷயம். உலகத்திய அரசர் ஒருவரியற்றும் அரிய செயல்களைக்கண்டு மனமகிழ்வ ரேல் இவ்வுலகத்தையே இனாமாக வீந்துவிடுவர். அன்றி ஒருவனிடத்தில் பெரிய நிதிக் குவியல் உண்டாகுமேல் இவ்வுலகத்தை விலைக்கும் வாங்கிவிடலாம். விலை மதிப்பற்ற இம்மங்கை அவ்வாறு கிடைக்கக் கூடியவளன்று. இது கட வுளின் இனிய கருணையின் பயனாய்க் கிடைத்த பாக்கியமே யன்றி வேறிலது.

சூரசேனன்—கடவுளால் அப்பாக்கியம் உமக்குக் கிடைத்து விட்டது போலும்?

மதிவதனன்—ஈசனது கருணை யிருப்பின் அவள் எனக்குக் கிடைப்பளென்ப துறுதியே.

சூரசேனன்—

(நந்தன் சரித்திரம்—பழன மருங்கணையும்)

(1) விந்தையே நீர் கூறுகின்றீ—ருயர்
விண்ணி லில்லையிது மண்ணிலில்லை

(2) உமதே யெனும் பெயரே—யவ
ளூரினிற் செய்வதை யாரறிவார்

கோடல்=கொள்ளுதல்; நிதி=திரவியம்; அரிவை=பெண்.

(3) மாலோ னிலக்குமியை—யென் றும்
மார்பினில் வைத்தது மையத்தினுல்

(4) அரனே வுயர் சங்கரியைப்—பாதி
யங்கத்தி லேற்றது சங்கையினுல்

(5) அயனோ கலைமகளை—நாவி
லயிர்த்துச் சுமந்ததை யாரறியார்

(6) இமையோர் நிலைமையிது—வாக
விந்நில மங்கைய ரென்னசெய்யார்

(7) பெடையோ ருறுதியில்லா—ரவர்
பேதைமையே யுருவாக வந்தார்

(8) எதிரே யிருப்பவர்பால்—மாத
ரிச்சை கொள்வார் தம்மைமெச்சிடிலே.

ஐயா! அவள் உமக்கே கிடைக்கலாம். பெயர் மாத்திரம் உமது மனையாட்டி யென்பதைப்பற்றி யாதொரு ஆக்ஷேபனையுமில்லை. பேதைமை யென்பது மாதர்க் கணிகல மென்பதை யறியீர்போலும். அவ்வாறே மகளிற் விஷயமும். மிக்கத் தந்திரியும் அழகனுமான ஒருவன் அவர்களிடத்தில் நெருங்கிச் சில நாட்கள் பழகுவனேல் எத்தகைய உறுதியான மங்கையர் மனதையும் மாற்றுதலரிதாமோ! ஆதலின் நீவிர் இவ்வணங்கைப் பற்றி இவ்வாறு கூறுவது சரியல்ல.

மதிவதனன்—அவளது மனதைக் கவரக்கூடிய அத்தகைய சிறப்பினன் உமது கலிங்க தேசத்திலேயே இலனென்பதுறுதி.

பலராமன்—நண்பர்காள்! இந்த விவாதத்தை இத்துடன் நிறுத்திவிடுங்கள். போதும்.

மாலோன்=விஷ்ணு; ஐயம்=சந்தேகம்; சங்கை=சந்தேகம். அயன்=பிர்மா. அயிர்த்து=சந்தேகித்து. இமையோர்=தேவர். பெடையோர்=பெண்கள்.

மதிவதனன்—விவாதம் புரியவேண்டுமென்னுமவா எனக்கில்லை. இவர் துடக்கத்திலிருந்தே ஆக்ஷேபித்தலால் யானும் வாதிக்க முயன்றேன்.

சூரசேனன்—ஓர் நாழிகை அவளுட னுரையாடுவேனேயாயின் யான் அம்மங்கையை வசீகரப்படுத்தி என்மீது காதல்கொள்ளுமாறு செய்து விடுவேன். அவளிடத்திற்குச் சென்று உரையாடக்கூடிய சந்தர்ப்பமுண்டாயின் யான் அவ்வாறு புரிவது நிச்சயம்.

மதிவதனன்—உம்மால் அக்காரியம் ஒருபோதும் முடியாது.

சூரசேனன்—அவளை மாத்திரமன்று, இன்னம் யாராயிருப்பினும் ஓர் நொடியில் வென்று விடுவேன். ஓர் இலக்ஷம் பவுன் விலைமதிப்புள்ள எனது ஆஸ்தி முழுவதையும் பந்தயம் வைக்கின்றேன். அதற்குச் சம்மதமாயின் இப்பொழுதே செல்கின்றேன்.

மதிவதனன்—அங்கு செல்வீரேல் உமது முரட்டுத் தைரியத்திற்குத் தக்கவாறு பிராயச்சித்தம் பெறுவீர். நீர் உமதரிய உயிருடன் திரும்பிக் கலிங்கதேசம் வருவதில்லை.

பலராமன்—நண்பர்காள்! இவ் விவாதத்தை தயவுசெய்து இத்துடன் நிறுத்தி விடுங்கள். திடீரெனத் தோன்றிய இவ்வாதம் திடீரென இல்லையாகட்டும். நீங்களிருவரும் நண்பரா யிருங்கள்.

மதிவதனன்—நமது நண்பர் கூறிக்கொள்வது வீண் புகழேயொழிய அவரால் இக்காரியத்தை நிறைவேற்ற ஒருபோதும் ஏலாது.

சூரசேனன்—என்னாலாகுமென்பதைத் திரும்பவும் உறுதியாய்க் கூறுகின்றேன். உமது கைவிரலிலுள்ள வைர

மோதிரத்தை மாத்திரம் யான் சென்று வரும்வரையில் இரவலாய்க் கொடுப்பீரேல் இக்காரியம் முடிந்ததே.

மதிவதனன்—ஆகா! மோதிரமா? யான் உயிருள்ளளவும் அதை யாரிடத்தும் கொடுக்கக் கூடாதெனும் உறுதியின் பேரில் அவளாற் கொடுக்கப்பட்ட தன்றோ! அதை மாத்திரம் கொடேன்.

சூரசேனன்—ஆகா! நண்பர்காள்! பார்த்தீர்களா, மோதிரத்தைக் கேட்டவுடன் இவர் மனதில் அச்சம் பிறந்தது. இதை யான் கொண்டு போவேனே யாயின் அவளை வென்று விடுவேனென நினைத்துப் பீதி கொண்டீர் போலும். அவள் உறுதியான மனதையுடையவளாயிருப்பளேல் இம்மோதிரத்தை என்னிடம் கொடுப்பதினால் என்ன தீது சம்பவிக்கப் போகின்றது? உமது அச்சத்தினின்றே அவளது உண்மைத் தன்மை நன்றாய் வெளியாய் விட்டது.

மதிவதனன்—யான் அதற்காக அஞ்சினேனில்லை. அவளுக்கு வாக்களித்ததை மீறவேண்டுமேயென நினைத்தே அவ்வாறு கூறினேன். எனினும் பாதகமில்லை. இம்மோதிரத்தை இதோ கொடுக்கின்றேன். நீர் அங்கு சென்று கூறியவாறு முடித்து வருதல் நிச்சயந்தானே.

சூரசேனன்—மெத்த சந்தோஷம். அதைக் கொடுப்பீர். யான் சென்று அவளுடன் உரையாடி அவளை என் வசப்படுத்திக் கொண்டதற்குப் போதுமான அடையாளமோ சான்றோ கொண்டு வருகின்றேன். இல்லையேல் எனது பொருள் முழுதும் உம்முடையதே. இம்மோதிரத்தையும் திருப்பிக்கொடுத்து விடுகின்றேன். அவளிடத்திற் சென்று வசனித்தற்கு மாத்திரம் ஓர் சிறிய கடிதம் நீர் எழுதிக் கொடுக்கவேண்டும்.

மதிவதனன்—அப்படியே யாகட்டும். இவைகளுக்கு யான் சம்மதிக்கின்றேன்.—இவ்விஷயத்தை நண்பர் யாவரும் நன்ருய் அறிந்திருங்கள்.—அவளை வென்றதாய் நீர் சான்று கொணருவீரேல் அதன் பின்னர் நீவிர் எனக்கு விரோதியன்று. அவளும் எனக்குரிய வளல்லள். தோற்று வருவீராயின் நீர் என்னோடு உமது வாளுடன் போர் புரியவேண்டும். இது சம்மதமா ?

சூரசேனன்—அவ்வாறே சம்மதிக்கின்றேன்.—நண்பர்காள்! இவ்விஷயத்தை நன்ருய் உணர்ந்திருங்கள்.—மோதிரத்தையும் கடிதத்தையும் தாரும்.

மதிவதனன்—இதோ தருகின்றேன்.

(மதிவதனன் ஓர் கடிதமெழுதி அதையும் மோதிரத்தையும் கொடுத்தல். பெற்றுக்கொண்ட சூரசேனன் செல்லுதல்)

ஆருங்களம்

சரசாங்கியின் அந்தப்புரம்.

சரசாங்கி, வாசுதேவன் என்னும் வைத்தியன், தாதிகள் முதலியோரிருத்தல்.

சரசாங்கி—அடி! தாதி மோகனு! புருஷோத்தமனிடஞ் சென்று சுந்தராங்கி யறியாவாறு அவனை இங்கழைத்து வா!

மோகனு—கட்டளையின் வண்ணம் செய்கின்றேன் மகாராணியாரே!

(தாதி சென்று விடுதல்)

சான்று = சாக்ஷி.

சரசாங்கி—(வைத்தியனை நோக்கி) மருத்துவர் தலைவனான வாசுதேவா! என் மீது நீ கொண்ட குறைவிலா அன்பின் பயனால் யான் உனது ஆழ்ந்த வித்தை முதிர்ச்சி முதலியவற்றில் அனேகமாய் அரைப்பாகம் கற்றுவிட்டேனன்றோ. விஷங்களின் தன்மைகளை யறிய விரும்பி அவற்றிற் சில கொணருமாறு கேட்டுக்கொண்ட வண்ணம் புரிந்தனையா ?

வாசுதேவன்—

(இராகம்-கல்யாணி.)

அன்னையே யரசியாரே யறிவினிற் சிறந்தமேதை
மன்னவனுயிரைப்போன்ற மனைவியா மம்மை நீவிர்
சொன்னசொற் கிரண்டு முண்டோ துணிவரோ பணியைமீற
வென்னினு மன்பாலொன்றை யியம்பிட விடையீவீரே.

அம்மா இப்பூமண்டலத்தைப் பாலிப்போனான வேந்தனது உயிரைப் போன்ற அவரது மகாராணியாரான உங்களது கட்டளைக்கு நான் மாறாய் நடத்தலுமுண்டோ! நீவிர் ஓர் காரியம் ஆகவேண்டு மென்னப் பணிப்பீராயின் அது முடிந்ததே. எனது குழந்தைப் பருவமுதல் இவ்வரண்மனையின் அபிமானத்தினாலும் அன்னத்தினாலும் யான் வளர்ந்தவனாதலின் முக்கியமான ஓர் விஷயத்தைத் தெரிவிக்கக் கடமைப் பட்டவனா யிருக்கின்றேன். அதைக் கூறுவதற்கு உத்திரவளிப்பீர்களாயின் தெரிவிக்கின்றேன்.

சரசாங்கி—என்ன தெரிவி.

வாசுதேவன் —

(இராகம்—சகானா.)

எல்லையில் தேயவேந்தற் கிணைசொலு மரசியாதல்
தொல்வினையனேக கோடித்தொகைகளின் பயனே யன்றோ
கொல்லலை நினைப்பீராயிற் கொடிய தீவினையே யஃது
புல்லவர் செயலேயாகும் புகுத்திடும் நரகந்தேற்றம்.

தேற்றம்=நிச்சயம்.

தாயே! விஷத்திற் சிறிது கொடுக்குமாறு நீவிற் கேட்பது என் மனதிற்குச் சந்தேகமா யிருக்கின்றது. இதை உண்போர் இறத்தல் நிச்சயமன்றோ. இப்பூமண்டலத்தை முற்றும் ஆளும் மன்னனுக்குச் சமமாகச் சொல்லத்தகுந்த அவனது மனைவி யாதல் முன் ஜன்மத்திற் செய்த அனேக கோடி நல்வினைகளின் பயனன்றோ. அத்தகைய மேம்பட்ட தானத்திலிருப்பவர், இவ்விஷபம் புரிய நினைத்தல் அழகோ? கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட எத்தகைய ஜீவனையும் வதைத்தல் கொடிய பாபமல்லவோ! அவ்வாறு புரிதல் மீளா நரகத்திற் கன்றோ ஆளாக்கும். எங்களைப்போன்ற வைத்தியரது கடன் வருந்தும் மாந்தரைப் பிணியினின்று நிவர்த்திப்பதன்றோ. அங்ஙன மிருக்க விஷத்தைக் கொடுத்துக் கொல்வித்தல் எங்கள் தொழிலாமோ? ஆதலின் இதற்கென்மனம் சம்மதிக்கவில்லை. விஷத்தை எதற்காகக் கேட்கின்றீர்கள்?

சரசாங்கி—

(இராகம்—ஆனந்த பைரவி.)

கற்றனேன் வருந்தி யாவும் மற்றவர் பொருட்டேயன்றோ
முற்றவும் பயிலாவித்தை முடியுமே விபத்தாய் தேற்றம்
சொற்றிடு விஷத்தையீந்து மாற்றிடு மருந்தின் றன்மை
கற்றிட நினைந்தேனன்றிச் செற்றிடல் கருதலுண்டோ!

ஆகா! வாசுதேவா? இதென்ன ஆச்சரியம்! உனது சந்தேகம் மிக்க வியப்பைத் தருகின்றது. மனிதர்நோயினுற்படுந் துன்பத்தைக்கண்டு மனம் சகியாது என்னாலென்றவரையில் சிலரின் அவஸ்தையையாயினும் விலக்கவேண்டுமென்னும் நல்ல உத்தேசத்துடன் உன்னிடம் அநேக மருந்துகளைக்கற்று அவற்றைப் பிரயோகித்துவந்ததை யறிந்

சொற்றிடு=சொன்ன; செற்றிடல்=சொல்லல்.

85572

திருந்தும் இத்தகையதீய காரியத்தை யான் செய்யக்கருதிய தாய் நீ நினைத்தது பெரிதும் என்மனதை வருத்துகின்றது. பிறரைக்கொல்வதினும் பாவத்தொழில் வேறுளதோ? அத்தகையோர்க்கு என்றும் மீளா ஆரிருள் நரகமன்றோகிடைக்கும். பிறர்காலிற் சிறிய முள்ளொன்று தைக்குமாயின் கண்ணீர் தானுய் ஓடவிடுந்தன்மையையுடைய எம்போலிய பேதைமைப் பெண்டிர் அக்கொடிய பாதகத்தைச் செய்யத் துணிவரோ? எந்த வித்தையிலும் முற்றும்கல்லாமை விபத்தாய் முடியுமல்லவா! யாவரேனும் விஷத்தினுல் தீண்டப்பட்டு என்னிடத்தில் வந்து அதை நீக்குமாறு வேண்டுவரேல், அதற்குப் பரிகாரம் செய்ய யான் அறியேனென்று கூறுதல் அழகாமோ? என்னை நம்பிவந்த அவர்களுக்குத் தாமதத்தினுல் விபத்தன்றோ சம்பவிக்கும். இதை உத்தேசித்து யான் விஷத்தைப்பெற்று அற்பப் பிராணிகளான நாய், பூனை, எலி, முதலியவற்றிற்கீந்து மாளச்செய்து மாற்றும் மருந்தைப் பிரயோகித்து அவைகளை உயிர்ப்பித்து அதன் தன்மையை நன்றாயுணரலாமென்றே விஷத்திற் சிறிது கொடுக்குமாறு வேண்டினேன். இக்கருத்தை நீயறியாதுபோனது மிக்க ஆச்சரியகரமே.

வாசுதேவன்—மன்னித்தருளுங்கள். இதோ இச்சிறு சிமிழில் ஓர்விதப் பாஷாணமிருக்கின்றது. அதை முதலிற் பிரயோகித் தறியுங்கள். அற்ப ஜந்துக்களுக்கீயினும் அவையடையும் நிலைமையைக் கண்ணுற்காண்பது மிக்கப் பரிதாபகரமாயிருக்குமாதலின் அச்சமயத்தில் நீங்கள் கடினமனதைக்கொள்ள வேண்டிவரும்.

(ஓர் சிமிழைக்கொடுத்தல்)

சரசாங்கி—மெத்த நல்லது. பின்னர் பலரினுயிரைப் பிழைப்பிக்கும் பெருத்த நன்மையை உத்தேசிக்க இக்காரிய

மோர் கடினமானதன்று. நீ திரும்பவும் நாளையதினம் இவ்விடம் வரவேண்டும்.

வாசுதேவன்—கட்டளையின்வாறு செய்கின்றேன். செல்ல விடையீயுங்கள். அரிசியே!

சரசாங்கி—செல்வாய், வாசுதேவா.

வாசுதேவன்—(தனக்குள் சொல்லிக்கொள்ளுதல்) இவள் கொடிய பாதகியென்பதை யானறியேனென இவள் நினைத்திருக்கின்றனள். இத்தகைய துர்மார்க்கியிடத்தில் பிறருயிரைக் கொல்லக்கூடிய விஷத்தை யான் கொடுப்பேனாயின் அப்பாதகத்திற்கு யானன்றோ இலக்காகவேண்டும். இப்பொழுது யான் கொடுத்த சிமிழில் விஷமிருப்பதாய் இவள் நினைத்துக்கொண்டிருக்கின்றனள். அதிலிருக்கும் மருந்து, உண்போரைப் பல நாழிகை நேரம்வரையில் உணர்ச்சியற்றுப்போமாறு புரிந்து இறந்தோரைப்போலாக்கி விடினும் அவர் பின்னர் மயக்கந்தெளிந்து முன்னினுந் திடசாலிகளாய் எழுந்திருப்பார். இவள் முதலில் நாய் பூனை முதலியவற்றிற்கீவள். பின்னர் மனிதருக்குப் பிரயோகிப்பள். மனிதர் சிலநாழிகை வரையில் உணர்வற்றுக் கிடப்பதினால் ஓர் கெடுதலுமில்லை. அவர் அவ்வாறு கிடத்தலைக் கண்டு, இறந்துவிட்டதாய் இத்துஷ்டை நினைத்து ஏமாறுவள். அவள் என்னை ஏமாற்றநினைத்தனள். யான் நரையினைத் தாங்கிய காலங்கண்ட ஜாம்புவந்தனென்பதை யறியாது இவளே மூட்டாளாயினள்.

(சென்று விடுதல்)

(தாதி வருதல்)

தாதி—அரசியாரே! கட்டளையின் வாறு புருஷோத்தமனை அழைத்து வந்திருக்கின்றேன்.

சரசாங்கி—உள்ளேவர விடுவாய் தாதி—(தனக்குள்) இவன் முகஸ்துதியால் வயிறு வளர்த்து வரும் தீயோனன்றோ! இவன் எனது எஜமானனை விசேஷித்துப் பேசுகின்றவன். இவன் எனது அண்ணனுக்கு விரோதமானவற்றைப் புரிகின்றனன். முதலில் இவன் மீது இவ் விஷத்தைப் பரிக்ஷித்துப் பார்க்கின்றேன்.

(புருஷோத்தமன் வருதல்)

அடே புருஷோத்தமா! வருவாய் இன்னமும் சுந்தராங்கி விசனத்திலிருக்கின்றனளோ?

புருஷோ—ஆம், தாயே! அவர் படுந்துயரை யானென்னென விரிப்பேன்! ஓயாது அழுது, கண்ணீர் விடுத்து மதிவதனனையே சிந்தனை புரிந்த வண்ண மிருக்கின்றனர்.

சரசாங்கி—

(இராகம்—தோடி.)

உயிருடல்போன்றநேய மொருவரை யொருவர் நீங்கின்
துயரினுற் சின்னுள்வாடித் தன்புறலியற்கையேனுஞ்
செயிரிலா நன்றிமிக்கச் சேவகா வருந்தில்யாது
பயனெனத்தேற்றில்நாரி பரிபவம் விடுப்பளன்றோ.

அடே நற்குணமுள்ள புருஷோத்தமா! உடலும் உயிருமென ஒருவரை யொருவர் பிரியாது அன்புடன் நேசிப்பவர் ஒருவரை யொருவர் விடுத்துப் பிரிவரேல் ஆரம்பத்தில் இவ்வாறு ஓயாத் துயரிலாழ்ந்து வருந்துவது உலக வியற்கையே. நாட்கள் செல்லச் செல்லவும், பிறர் அவர்க் குரைக்கும் ஆறுதல்களினுலும் அவரது விசனம் வரவரக் குறுகிக் கடைசியில் முற்றும் ஒழிந்துபோம். அதன் பின் சென்ற

செயிரிலா=குற்றமற்ற; பரிபவம்=விசனம்.

வர்க்குப் பதிலாய் வேறொருவரை உயிரென நேசித்தல் யாவரு மறிந்த விஷயம்.

(இராகம்—மோகனம்.)

ஆதலாலவள் பாலேகிப் பேதைமை யொழியுமாறே
யோதிநன் மாற்றஞ்சாலச் சுந்தரி மனதைமாற்றி
யாதரத்துடனே யென்றன் சோதரன்றனை விரும்புஞ்
சேதியைத் தருவையாயிற் செய்வதை மறப்பதுண்டோ.

ஆதலின் புருஷோத்தமா! நீ சென்று மதிவதனனை நினைப்பதினாற் பயனில்லையென உரைத்துப் புத்திப் புகட்டி அவளது பேதைமையை விலக்க முயல்வையேல், அவளது துயர் வாவர நீங்கிவிடுமென்பதுறுதி. ஆதலின், இவ்விஷயத்தில் முயன்று அவள் எனது மூத்தோனை மணக்க விரும்புகின்றாளெனும் மொழியைக் கொணர்வையேல் நீ செய்தவுதவியை யான் ஒருக்காலும் மறப்பேனல்லேன். உனக்கு என்ன கைம்மாறு செய்வேன், தெரியுமா?

நவின்றவக்கணமேயுன்னை நாதனைப்புரையச்செய்வ
லவனொரு வறியன்வீணன் புகழ்பெயர் நேயரில்லா
னவனியிற் பிறர்பாலேற்கு மாதுலப் பேதையின்பா
லெவன்நலம் பெறுவையென்று லவனிலு முயர்வையன்றோ.

அக்கணமே உன்னை உனது நாயகனைப் போலாக்குவேன். அவனுக்குச் செல்வம், பெயர், புகழ், முதலியன ஒன்று மிலது. அவனோர் ஏழை. அவனே பிறருதவியால் ஜீவிப்பவன். அவனை யடுத்திருப்பதினால் நீ யாது பயனைப் பெறக் கருதுகின்றனை? எனது மொழிக் கிசைவையேல்

ஆதரம்=அன்பு; சோதரன்=சகோதரன்

நவின்ற=சொன்ன; நாதனைப்புரைய=உன் எஜமானனைப் போல்; ஏற்கும்=யாசகம்வாங்கும்; ஆதுலன்=தரித்திரன்; எவன்=எப்படிப்பட்ட.

உன்னை அவனிலும் மேம்பட்ட நிலைமைக்குக் கொணருகின்றேன்.

(சரசாங்கி தன் கையிலிருந்த விஷச் சிமிழைத்
தவறிப் போடுபவள்போல பூமியில்
நழுவ விடுதல், அதை அவளுக்காக
புருஷோத்தமன் எடுத்தல்.)

அடே புருஷோத்தமா! நீ எடுத்த சிமிழிற்குள் இருப்பது யாதென்பதை யறிந்தனையா?

புருஷோ—தெரிவியுங்கள்! மகாராணியாரே!

சரசாங்கி—

(இராகம்—முகாரி.)

தலைவியின் மனதை மாற்றித்தருவையே லினியமாற்றம்
விலையிலாத்தனிகனுவை தலைவியை யிழப்பதில்லை
நிலைபெறத் தமையனுன்னை நேசனுய்த் தொடர்வனென்றன்
றலைவனுக்குரைப்பேனுன்னைத் தனதனுய்ச் செய்வேன்காண்
[பாய்

அடே நன்றி மிக்க புருஷோத்தமா! நீ எடுத்த சிமிழிற்குள்ளிருப்பது அமிர்தசஞ்சீவி என்னும் மருந்து. அதை யான் நெடியகாலம் பிரயாசைப்பட்டுக் கற்றுக் கொண்டு தயாரித்தேன். அது நமதரசனுயிரை நாலைந்து தடவைகளிற் காப்பாற்றியது. இனி யான் உனக்கு அளிக்க நினைக்கும் வெகுமதிக்கு முன்னறி குறியாய் இதை நீயே எடுத்துக் கொள்வாய். அதை என்னிடத்திற் கொடுக்க வேண்டாம். நீ சுந்தராங்கி விடத்திற்குச் சென்று அவள் மனதை மாற்றி இம்மணத்தினை முடிப்பையேல் உனது உதவியை ஒருபோதும் மறவேன். அப்படிச் செய்வதனுல் உனது எஜமாட்டியான சுந்தராங்கியை நீ இழப்பதில்லை.

தனதன் = குபேரன்

அவள் உனக்கு எப்பொழுதும் எஜமாட்டி தானே அவளுடன் எனது தமையன் ஜெயபாலனும் உன்னை விசேஷித்த அன்புடன் நேசிப்பன். யான் அரசனிடத்தில் உனது உதவியைப் பற்றியறிவித்து உன்னைக் குபேர சம்பத்துடையவனாக்குவேன். ஆதலின், யான் கூறியவற்றைச் சிந்தனை புரிந்து அவ்வாறே செய். உடனே அவளிடம் செல்.

புருஷோத்தமன்—அவ்வாறே செய்கின்றேன். மகாராணியாரே! (தனக்குள் சொல்லிக்கொள்ளுதல்) ஆகா! இவள் கூறுவது மிகவும் ஒழுங்கான விஷயம். எனது நாயகனுக்குத் துரோகம் புரிவதைக்காட்டினும் யான் எனது யிரையே போக்கிக் கொள்வேன். பின்னது தான் யான் இவளுக்குச் செய்யக்கூடிய உதவி.

(புருஷோத்தமன் சென்று விடுதல்.)

சரசாங்கி—(தனக்குள்) இவனோர் ஆழ்ந்த வஞ்சகன். இவனது மனோவுறுதியை மாற்றல் மிகக்கடினமான விஷயம். இவனிருத்தலே அவள் அடிக்கடி மதிவதனனை நினைப்பதற்குச் சாதனமாகின்றது. மதிவதனனது காரியம்கெடாது பாதுகாக்கும் முக்கியத்தோழன் இவன்தான். இவன் இறப்பனேல் அவள் யாதோர் துணையுமற்றவளாவள். அதன் பின்னர் எனதெண்ணம் கைகூடுதலெளிது. சிமிழிலிருக்கும் விஷத்தை யுண்ணுவதற்கு இவனே தக்கவன்.

(சென்று விடுதல்)

ஏழாங் களம்

அரண்மனையில் ஓர் அந்தப்புரம்.

சுந்தராங்கி விசனத்துடன் வருதல்.

சுந்தராங்கி—

நந்தன் சரித்திரம்

(மார்கழி மாதம் திருவாதிரைநாள்)

(1) மதிவதனுவுன்னைச் சதமெனவுன்னி
மகிழ்ந்தே னென்துரையே
நிதியைக் கண்ணாகக் கண்டாங்கே யிழந்தவோர்
நிரப்போனென்ன நின்றேன் யான் (மதி)

(2) அருகினி லிருப்பதாய்த் தெரிகின்றா யாயினும்
அகத்தால் நினைப்பதன்றி
உருவை முன்னாகக் காணுமலே யென்மனம்
உருகி யோய்ந்ததையோ (மதி)

(3) நோக்கி நோக்கி யென் நோக்குகள் நொந்திட
நைந்தே னழல் மெழுகாய்
நோயைக் கொண்டேன் மனமாழ்கி நின்றேனொரு
நொடியும் நெடிதாய்த் தோணுதே. (மதி)

(4) நினைத்தவை யாவும் நிகழ்ந்தவை யனைத்தும்
கனவாய்க் காணுதையோ
நின்னைக் கண்ணுறக்கண் டானந்தமெய்திட
நினைத்து நினைத்து நெகிழ்ந்தேன் (மதி)

(5) இனியனே யருகினில்—சிறியதோரோசை
எழுமே லுடல் நடுங்கி
எகியோன் சுந்தரன் வந்தனனோ வென்னச்
சிந்தித் தேமாந்து நின்றேன். (மதி)

ஐயோ, என் செய்வேன்! என் சிந்தையிற் குடிகொண்ட மதிவதனனை ஓயாது நினைத்து நினைத்து என் மனமும் மெய்யும் புண்ணானவே! எனது சகோ

நோக்கு=கண்.

தாரை இளம்பிராயத்தில் திருடிச்சென்றவர் என்னையும் பிறகு எடுத்துப்போயிருப்பரேல் யான் மிக்க மகிழ்வைக் கொண்டிருப்பேனே.

(விருத்தம் காம்போதி)

மன்னவன் மகளாய்த்தோன்றி மனம்நனி வருந்திவாடி
யின்னலை நுகர்தலின்றி யேழையாமொருவன்செல்வக்
கன்னியாய்ப்பிறத்தல்நன்று கருதியபெருதலுண்டா
மென்னுளுமின்னுவின்றி யின்பமேபெருகுமந்தோ.

மன்னவன் வயிற்றில் மகளாய்ப்பிறந்து வருந்துதலினும் மிக்கத் தாழ்ந்தோனுகிய ஓர் ஏழையின் ஆசைமகளா யுதித் திருப்பேனுயின் நன்றுயிருந்திருக்குமே. அவ்வாறு பிறந் தோர் தம்மனதால் உண்மையில் எதை விரும்புகின்றனரோ அதைப்பெறுவது நிச்சயம். அவ்வாறு பெறுவதினுல் அவர் அனுபவிக்கும் சுகத்திலோர்வித விசேஷித்த இன்பந் தோன்றுமன்றோ! ஆகா! அதோ வருபவன் யாவன்! மதிவதனனே! சே! அவனில்லை.

(புருஷோத்தமனும் சூரசேனனும் வருதல்)

புருஷோத்தமன்—தாயே! இவர் கலிங்க தேசத்திய ஓர் பிரபு. எனது எஜமானனது நண்பர். அங்கிருந்து கடிதங் கொணர்ந்திருக்கின்றனர்.

சூரசேனன்—அரசி? உனது முகம் மாறிவிட்டதே! சீலனை மதிவதனன் க்ஷேமமாயிருக்கின்றனன். இக்கடி தத்தை யனுப்பினன்.

(கடிதத்தைப் பெற்றுக்கொள்ளுதல்)

சுந்தராங்கி—அப்படியா! மெத்த சந்தோஷம். உங்கள் சிரமத்திற்கு யான் நன்றி பாராட்ட மிக்கக்கடமைப் பட்டவள். நீங்கள் இங்கு வந்தது பெரிதும் மகிழ் வைத் தருகின்றது.

சூரசேனன்—(தனக்குள்) ஆகாகா ! இவளது சுந்தரமே சுந்தரம். இப்பூமியில் இவளையொத்தவளையிலள். கோடிசூரியப் பிரகாசமென்ன எவ்வளவு ஜாஜ்வல்லியமாய்க் காந்தியைச் சொரிகின்றனள். இவள் மனதும் வெளித்தோற்றத்திற் கிணங்க, மிக்கச் சிறந்த அழகைக் கொண்டிருப்பின் இவளே விலைமதிப்பற்ற நிதிக் குவியல். இவளே அருந்ததி. இவளே இரதி. யான் பந்தயத்தில் தோற்று விடுவதிலும் சந்தேகமேயில்லை. எனினும் தைரியத்தை முற்றுங்கொண்டு துணிந்து முயற்சி புரிந்து பார்க்கின்றேன். இவ்வமயத்தில் துணிவை விட்டுவிடுவேனுயின் தோற்று ஓட்டம் பிடிக்க வேண்டியதாய் முடியும்.

சுந்தராங்கி—(அடியில் வருமாறு கடிதத்தை வாசித்தல்)

(இராகம்—தோடி)

ஆவியே சுந்தராங்கி யகமுறை யுருவே யுன்பால்
மேவுவோ னென்றன் நேயன் மேம்படு சிறப்பு வாய்ந்தோன்
பூவையே யவனுற் சால வுதவியைப் பெற்றேனீண்டே
யாவலனெ ன்னைப்போல வன்புடன் மதிப்பாய்பேணி

எனது உயிரனைய தோழி, சுந்தராங்கி! இக்கடிதத்தைக் கொணருபவர் இத்தேசத்தினேர் பிரபு. மிக்க மேம்பாடுடையவர். அவர் எனது ஆழ்ந்த நண்பர். எனக்குப் பல உதவிகள் புரிந்தவர். ஆதலின் உனது ஆப்த நண்பனுன என்னை நீ எவ்வாறு மதிப்பையோ அவ்வாறே இவரையும் அன்புடன் உபசரித்து இவருக்குத் தேவையானவற்றை யளிப்பாய்.

பிரிய நண்பன்.

மதிவதனன்.

அகம்=மனது; உறை=வசிக்கும்; மேவுவோன்=வருவோன்; பூவை=பெண்; ஆவலன்=சினேகன்.

சுந்தராங்கி—(சூரசேனனைப்பார்த்து) ஐயா! உங்கள் வரவு என்மனதிற்கு மிக்கப் பூரிப்பைத் தருகின்றது. என துயிர்த்தோழனாகிய மதிவதனனது நண்பர் எனக்கும் நேசரன்றோ. நீவிர் இங்கு இஷ்டம்போலத் தேவை யான சௌகரியங்களைச் செய்துகொள்ளுங்கள். என் னால் எத்தகைய உதவிகள் தேவையேனும் சந்துஷ்டி யாய்ப் புரியச் சித்தமாயிருக்கின்றேன்.

சூரசேனன்—அரசியே! உனது அன்பிற்கு யான் மிக்க நன்றியுள்ளவனா யிருக்கின்றேன். (அப்புறம் திரும்பிக் கொண்டு, சுந்தராங்கியின் காதிற்படும்படி) ஆகா! மனி தருக்கு புத்தி மாறாட்ட முண்டாய்விட்டதா? அவர்க ளது முகத்திலிருப்பவை கண்களா? அன்றிப் புண்கள் தாமோ? இது ஆகாயம், இது நிலம், இது நீர் என நன்றாய் அறியக்கூடிய கண்கள் ஆகாயத்தில் மிக்கக் கம்பீரமாய்ப் பிரகாசிக்கும் சூரியனுக்கும், கடற்கரை யில் எண்ணிக் கையற்றுக்கிடக்கும் கூழாங்கற்களுக்கு முள்ள வித்தியாசத்தை யுணராது போனதென்ன? (அப்புறம் திரும்பி) நண்பா!—புருஷோத்தமா! என் னுடன் கூட வந்திருப்பவர் இந்நகரத்திற்குப் புதியவர். தயவு செய்து அவர்களுக்குத் தேவையானவற்றைப் புரிவையேல் மெத்த சௌகரிய மாயிருக்கும்.

புருஷோத்தமன்—ஐயா! யானும் அதன் பொருட்டுச்செல்ல நினைத்தேன். அதற்குள் நீவிர் அதைத் தெரிவித்தீர். இதோ செல்கிறேன்.

(புருஷோத்தமன் சென்று விடுதல்)

சுந்தராங்கி—ஐயா! என்ன விசேஷம்! எதைக்கண்டு வியப் படைகின்றீர்?

சூரசேனன்—(அவள் சொல்வதைக் கவனிக்காதவன் போல) இல்லை, இல்லை, அது கண்களின் குற்றமன்று. பகுத்தறிவில்லாக் குரங்கு முதலிய விலங்குகள்கூடத் தமது கண்களால் மாதரிருவரை நோக்குமேல் விசேஷமாய்த் தோன்றும் மங்கையின் பக்கத்திலேயே பல்லிளித்துக் கொண்டு அன்புடன் நெருங்குமன்றி மற்றவளைக் கண்டு சீறித் தமது வெறுப்பைப் புலப்படுத்தும். அப்படியாயின் பிரிவினாலுண்டான ஆசையினால் இக்காரியம் சம்பவித்திருக்குமோ? ஆகா! அதுவு மன்று. இத்தகைய இன்பந்தரும் பரிசுத்த ஸ்வரூபியினிடத்தில் உண்டாகும் ஆசை, கேவலம் விரூபியான ஓர் மங்கையிடத்துண்டாமோ? அவளிடத்தில் வெறுப்பே யுண்டாகுமன்றி ஒருபோதும் விருப்புண்டாகாது.

சுந்தராங்கி—நீர் எதைப்பற்றிச் சொல்லுகின்றீரென்பதை அறிந்தேனில்லை. தயைபுரிந்து நன்றாய்த் தெரிவியுங்கள்.

சூரசேனன்—

(காவடிச்சிந்து—மூசுவண்டு)

(1) மாதர்பணி கோதையே யோர்மறுவிலாத மாமணியே
மாந்தரின் செயலை யென்ன—சொல்லுவே—னவர்
வாய்மையே யில்லாத முழுப்—புல்லரே—யுன்றன்
மாழைவீசிடு போது தாமரையோடி வாடிடு பீடுநாறிடு
வாமமுகம் கண்டோர் மனம்—கல்லேனும் பிற
மாதரின்வதனமதைப்—புல்லுமோ (மா)

(2) ஆசையான நேசனாலே மோசம்போவரோ மனிதர்
ஆவிநிகர் தோழியரை நீங்கியே—யவர்
யாரொடும் பெருமகிழ்வு—வீங்கியே—பல

வாய்மை=உண்மை; மாழை=அழகு; போது=புஷ்பம்; பீடு=பெருமை; நாறிடு=தோன்றிடும்; வாமம்=அழகு.

வாறுமேவியே நாணிலாமலேபேணி யேவர் பாணிகொள்ளுவர்
பாவையே புரிவர்பல—தீங்குமே—யதைக்
காணவன் பர்களினுயிர்—நீங்குமே. (மா)

மனிதரிற் சிலர் அவ்வாறு புரிகின்றனர். ஓர் விஷயத்தை எவ்வளவு அதிகமாய் அனுபவித்தாலும் அப்பொருளினிடத்து மேன்மேலும் பெருகுகின்ற ஆசையைக் கொண்டலேகின்றனர். அத்தகையோர் சவ்வாதையும் பூசிக்கொள்வர், சாணத்தையும் விரும்பி அணிவர்.

சுந்தராங்கி—ஐயா! எதைக்கண்டு இவ்வாறு மிக்க வியப்படைகின்றீர்? உமக்கு யாதாயினும் தேகத்தில் பிணியுண்டோ?

சூரசேனன்—சிறந்த அரசி! எனது சரீரம் சரியானநிலைமையிலே தானிருக்கின்றது!

சுந்தராங்கி—

(இராகம்—கல்யாணி)

கலிங்கமாபதியிலென்றன் கண்ணிகர் துணைவன் சாலச்
சலித்து மெய்யிளைத்து வாடிச் சார்வதா வருத்தினுனே
பலபல பகருகின்றீர் பதைக்குதேயெனது நெஞ்ச
மலேத்திடா தினியுமுண்மை யறைகுவீரறிய நண்பீர்

ஐயா! நண்பரே! நீவிர் ஏதேதோ பன்னிப் பன்னி வசனிக்கின்றீர். அதன் விவரத்தையான் அறியக் கூடவில்லை. என்ன விசேஷம்? மதிவதனன் கலிங்கதேசத்தில் சௌக்கியமா யிருக்கின்றனு? அன்றி அவனுக்கு யாதாயினும் பொல்லாங்கு சம்பவித்ததா? தயவு செய்து எனது மனக்கலக்கலையை மாற்றுவீர். அவனைப் பிரிந்ததனுல் ஏற்கனவே புண்ணுயிருக்கும் என் மனதிற் கோலிட்டது

பேணி=மிகவும் விரும்பி; பாவை=பெண்.

அலைத்திடல்=வருத்தல்; அறைகுவீர்=தெரிவிப்பீர்.

போவிருக்கின்றதே. தயைபுரிந்து இனியாயினும் தாமதமின்றி உண்மையைத் தெரிவிப்பீர்.

சூரசேனன்—சிறந்த அரசியே! மதிவதனன் இங்கிருந்து கலிங்க தேசம் வந்தபின் சுகமாகவே யிருக்கின்றனன். அவன் விசனித்திருந்ததை யான் ஒரு நாளும் கண்டதில்லை. ஓயாது குதூகலத்தைத் தரும் காரியங்களையே செய்து கொண்டு எப்பொழுதும் பெரும் சந்தோஷத்துடனே காலங்கழிக்கின்றனன். ஆகா! மங்கையர்க்கரசி! என்ன உனது தூய்மை என்ன உனது மாசிலாக் கற்பு! அழகிலும், நற்குணத்திலும், கல்வியிலும், கற்பிலும், அன்பிலும் உன்னைப்போன்ற மாதர் இவ்வுலகத்திலேயே இலரெனயான் துணிந்து கூறுவேன். ஆகா! முற்றும் பரிசுத்தமே உருவாய் வந்த உன்னைக் காண என்மனது வருந்திப் பதைபதைத்துப் பரிதபிக்கின்றதே!

சுந்தராங்கி—ஐயா! என்னைக்கண்டு நீவிர் இவ்வாறு மனதிரங்கித் துன்புறுவதின் முகாந்திரமென்ன? எனக்கு யாது தீமை சம்பவித்தது? அன்றி என்னிடத்தில் யாது குறைபாடிருக்கின்றது? நாம் எவ்விஷயத்திலும் அரை குறையாய் அறிந்து கொண்டு சந்தேகப்பட்டுக் கொண்டிருத்தல் பெருந்தீங்காய்முடியும். ஆதலின் யாதாயினுமோர் விஷயத்தில் சந்தேகமுண்டாகுமேல், அதை உடனே அற விசாரித்து உண்மையை உணர்வது நன்று. அதற்குப் பரிகாரம் செய்யக்கூடாவிட்டால் அது நமது குற்றமன்று. அது நிவர்த்திக்கக் கூடியதா யிருக்குமேல் காலத்தில் தெரிந்து கொள்வதினால் அதை எளிதில் விலக்கலாமன்றோ. ஆதலின் தயைபுரிந்து உனது மனத்திலிருப்பதைக் கூறுவீர்.

சூரசேனன்—

(கல்யாணி—ரூபகம்.)

பல்லவி

என்னென விரித்தோதுவே னேந்திழையாளே
என்மனமிக நோகுதே, (எ)

அனுபல்லவி

துன்னலராயினும் பின்னாலிருந்தவரை
தூற்றுதலழகன்று தோகையேயானதை. (எ)

சரணம்

மாலவன்மனைவியைப் போலப்போலியுமுன்றன்
சீலத்தைக் கண்டெந்தன் சிந்தைபொங்கியெழவே
சாலப்பலவுரைத்தேனெனு முண்மைநவிலேன்
சாலியையவதைப்போரைச் சகநாதன்செகுப்பனே. (எ)

(இரக்கத்துடன்) ஐயோ! சுந்தராங்கி! எவ்வாறு கூறுவேன், எனமன மெழவில்லையே. மகாலக்ஷமிபோன்று காணப்படும் உன்னை நோக்கவேயென்னை மறந்து என்மனது பொங்கியெழ நான் ஏதேதோ பற்பல சாற்றிவிட்டேன். எனினும் உண்மையைத் தெரிவிப்பது பிசகு. பிறரில்லா விடத்தில் அவரைப் பற்றித் தூற்றுவது தகாத காரியம். ஆகா! அருந்ததிபோன்ற உன்னை வஞ்சித்தோரை சிக்ஷிக்க கடவுளிருக்க அதை யானெதற்குத் தெரிவிக்கவேண்டும்? யான் சுருக்கமாய்த் தெரிவிக்கக் கூடிய தென்னவெனில் ஓர் தெய்வம் தனக்கு அருகமாய் நினைத்திருந்த வஸ்துவில் நாய்கள் வாய் வைத்ததுபோல காரியம் முடிந்தது. இதை விரிவாய்த்தெரிவிக்க எனக்கு இஷ்டமில்லை."

சுந்தராங்கி—"ஐயா! எனது உயிர்த் துணைவனை மதிவத

துன்னலர்=பகைவர்; மாலவன்=விஷ்ணு; நவிலல்=சொல்லல்; சாலி=அருந்ததி; வதைத்தல், செகுத்தல்=வதுத்தல்.

னைப் பிரிந்ததினாலுண்டான ஓர் விதக் கவலையி னாலேயே மனம் நொந்து வருந்திக் கிடக்குமென்னை ஓர் நாளும் நீங்காத புதியதோர் சஞ்சலத்திற்குள் ளாக்கினீர். எனக்கு ஏதோ துன்ப மிருப்பதாய்த் தெரிந்து கொண்டும் அதை இன்னதென அறிந்து கொள்ளா திருப்பதைப் போன்ற கொடிய மனோ வேதனை வேறிருக்கின்றதோ! ஒருவன் பாதிக் கிணைரைத் தாண்டி யுள்ளே விழுந்து மீளாவிபத்திற் காளானது போல, என்னை யாக்கிவிட்டீர். இது உமக்குத் தருமமன்று. இதனால் உமக்குப் பெரும்பாவம் சம்பவிக்கும். தயவுசெய்து எனது மனோ சஞ்சலத்தை விலக்குமா றும்மைப் பெரிதும் வேண்டுகின்றேன்.

சூரசேனன்—

(போவோம் வாரீர் சகிகாள் பூங்காவனந்தன்னைநாடி)

(1) கோதாய் மதிவதனன்சேதியை யெவ்வா றுரைப்பேன்
மாதொருவள் மையலினால் பேதித்திருக்கின்றனன்

(2) சூரியனை வென்றவுன்றன் ஜோதியினைக் கண்டவன்பின்
சேருவனோ நாறும்புகைத் தீபத்தினைத் தாபத்துடன்

(3) ஐயயோ யுந்தன்முகம் செய்யசந்தத் தாமரையாம்
மைதவழு கண்களெந்தன் மனதைக் கொள்ளை
[கொண்டனவே

(4) தூய்மையே யுருவாய்வந்ததோகை நின்னைக்கண்டபின்னர்
சேய்மைதனி லேகிடினும் தேய்வதபிமானமன்று.

ஐயோ! நீ இவ்வளவு தூரம் வருந்திக் கேட்கின்றனையே! அதை யான் எவ்வாறு தெரிவிப்பேன்! அதைக்

கோதாய்=பெண்ணே; தாபம்=வேட்கை; செய்ய=சிவந்த; சந்தம்=அழகு; தூய்மை=பரிசுத்தம்; சேய்மை=தூரம்; தேய்தல்=குறைதல்.

கேட்டபின் உன் மனம் சகிக்குமோ? இத்தகைய வஞ்சகர் முகத்தில் இனி விழிப்பதே யில்லை யென உறுதி செய்து கொள்வையே! ஆகா! என்ன உனது தேக காந்தி! உனது குணம் எத்தகைய இரமணீயம். உனது வடிவழகு எத்தகைய நேத்திரானந்தம். சந்திர பிம்பம்போல் குளிர்ச்சியையும், மனோல்லாசத்தையுந்தரும் உனது தாமரை முகத்தைக் கண்டோர் பிறமாதரை விரும்புவரோ! மதிவதனன் செய்த காரியம் எனக்கு வெட்கமாயிருக்கின்றது. சூரியனது ஒளியை யனுபவித்தோர் நாறும் புகை சூழ்ந்த இருண்ட சிறிய தீபத்தில் ஆசை கொண்டதுபோலச் செய்தனனே. பரத்தையர் கணத்துக்குக் கணம் ஆயிரம் பொய்யுரைப்பர். அவர் மனமோ பச்சோந்தியின் நிறத்தைப்போல க்ஷணத்திற்கோர் முறை மாறும். தினம் பலரை மகிழ்வித்து ஒவ்வொருவனிடத்தும் நீயே எனது உயிரென்றும் உன்னை யல்லாத மற்றப் புருடர் எனக்கு தகப்பன் சகோதரர் முதலியோருக்குச் சமமென்றும் இன்னை ஓர் கணம், காணுவிடில் விஷம் தின்பேனென்றும் ஆணையிட்டுக் கூறுவர். இத்தகைய மங்கையொருவள் உனக்கு விரோதியாய் வந்த விஷயமே என்மனதை வருத்திப் பாகாய் உருக்குகின்றது.

சுந்தராங்கி—(திகைத்து) ஆ! மதிவதனன் மாளவதேசத்தை மறந்து விட்டனன் போலும்.

சூரசேனன்—

(இராகம்—நாட்டைக்குறிஞ்சி)

கயல்விழி கண்ணீர் பெய்யக்கரைந்து நீ கலங்குகின்றாய்
கயவரின்செயலா மிஃதைக்கழறிட விரும்பாவென்னை
நயந்தனைநவிலு மாறுரைந்து நீ பலகால்வேண்டி
நயவனித்தேய மன்றித்தன்னையும் மறந்தான் முற்றும்.

கரைந்து = அழுது; கயவர் = கீழோர்; கழறிட = சொல்ல; நயந்தனை = விரும்பினை; நவில = சொல்ல; நயவன் = நேசன்.

ஐயோ! சுந்தராங்கி! உனதழகிய கண்களினின்று கண்ணீர் ததும்புகின்றதே! அழவேண்டாம், பெண் மணி! கீழோர் செய்பத்தகுந்த இவ்விஷயத்தை உன்னிட முரைக்க யான் இஷ்டப்படவேயில்லை. நீ என்னை வற்புறுத்திப் பலவாறு வேண்டியமையின் தெரிவிக்கும்படி நேர்ந்தது. மதிவதனன் இத்தேசத்தை மாத்திரமன்று தன்னையும் முற்றும் மறந்தனன்.

சுந்தராங்கி—ஆகா! எனது மதிவதனனும் இவ்வாறு செய்திருப்பனோ! அவனையே எனது நாயகனென வரித்து அவனே எனக்கு முற்றும் சதமென நினைத்திருந்தேன். ஆகா அவ்வெண்ணம் மண்ணில் மடிந்ததே. எனது இருதயம் இரண்டாய் வெடிக்கும்போலிருக்கின்றதே.

சூரசேனன்—

(காம்போதிவர்ணம்—நீகே-தகுரா நீர-ஜாக்ஷா)

(இராகம் காம்போதி—தாளம்-ஜம்பை)

நீ-யே-னுருகு-கின்றாய்-மானே

(1) தானிபத மபனி-தானிபத கமனி, தானிபத
ரிகனி-தானிபத-சபனி-தானிபத மபத (நீ)

(2) ஓதுவது-பகவத்-கீதைதனை-விரும்பி-நாடுவது
குடக்கள்-ளாகடப்-பவரைப் போலப்புரி
கின்றனன் (நீ)

(3) பேடு நினைப்—புனித—மாக விருக் கநயந்
தேகிப்பிற மகளைப் பேணியுனை நினையாப்
பேதைதனை நினைந்து (நீ)

(4) தீனனவ-னிலுயர்-யானேயுனை-யடைய
நீயுமருள்-புரியி-லாயுள்வரை-பிரிவ
தேதுயிது-சாதம். (நீ)

சாதம்=நிச்சயம்.

எனதரிய பெண்மணி! சுந்தராங்கி! ஆகா! உன் விஷயத்தில் மதிவதனன் புரிந்தது எவ்வாறிருக்கின்ற தெனில், "படிப்பது பகவத்கீதை குடிப்பது குடக்கள்" என்றவாறு பிறருக் குபதேசிப்பதொன்றும் தாம் செய்வ தொன்றுமாய் ஒழுகுகின்றவாறுளது. உன்மீது காற்றும் அடித்தல் கூடாதென விரும்பிச்சென்ற அவன் தான் மாத் திரம் நினைத்தவாறு வேசையுட னலைந்து திரிகின்றனனே. யானோ எல்லா அம்சத்திலும் அவனைக் காட்டிலும் மிக்க மேம்பட்டவன். உனது கரத்தைப்பற்றுதற்கு முற்றும் தகுந்தவன். உனதன்பும் ஆசையும் என் மீதிருக்குமாயின், யான் உன்னை விடுத்தோர் நொடியும் பிரிவதுண்டோ! இத் தகைய வஞ்சகத்தைக் கனவிலும் யான் நினையேனென்பது தேற்றம்.

சுந்தராங்கி—(கோபத்துடன்) ஆகா! அப்படியா! யாரடா, அங்கே! அடே புருஷோத்தமா!

சூரசேனன்—சுந்தராங்கி! கண்மணி! எனதருகில் வருவாய்! செந்தாமரை மலர்போன்ற மெல்லிய உனது கரத்தை யீந்து எனக்கு அபயஸ்த மளிப்பாய்.

சுந்தராங்கி—(கடுங்கோபத்துடன்)

(அரிச்சந்திரநாடகம்—போம் போம் இதுவுங்கனமா.)

(இராகம்-மோகனம்—தாளம்-ஆதி)

பல்லவி

சீச்சீ யெழுந்து நடடா-பெயரா விடிற்
சிறமிறு ம்சுத்தக் கசடா

அநுபல்லவி

எச்சினை மொழிந்தது மினியவனை யிகழ்ந்தது
மேனோ வெனவிருந்தேன் யானே யதையறிந்தேன் (சீ)

சரணம்

கோனவன் சுதையெனும் நினைவினை மறந்தாய்
மானெனுந் தேனெனும் மொழிபல வீந்தாய்
மானமதை விடுத்து மதியைத்துறந்து வந்து
ஈனனும் நீயெனை மணவென மொழிந்தாய் (ஜ)

(காதுகளிற் கையை வைத்துக்கொண்டு)

ஆகா! கா! கா! இதுகாறும் இவனது வார்த்தைகளைக்கேட்ட எனது செவிகளைச் தீயாற் சுடினும் தகும். அடே! படுபாவி! என்முன் நிற்காது உடனே அப்பாற் சென்றுவிடு. உனக்கும் கௌரதையென்பதற்கும் எவ்வளவு சம்பந்தமில்லாமலிருக்கின்றதோ அவ்வாறே சீலனான எனது மதிவதனனுக்கும் நீ கற்பிக்கும் தோஷத்திற்கும் சம்பந்தமிருக்கும். யானோர் சிறந்த அரசனது புத்திரியென்பதை முற்றும் மறந்து ஓர் வேசைக்கும் தாழ்ந்தவளாய் மதித்து என்னிடம் வந்து இவ்வாறு பிதற்றுகின்றனையா? அடே பதரே! உன்னையும் ஓர் துரும்பையும் சமமாகவன்றோ யான் மதிக்கின்றேன். உனது தேசத்திய அரசனது மகளிரை இவ்வாறுதான் சந்தையிற் காய்கறிகளைக் கொள்வதைப் போல மணத்திற்கு வேண்டுவீர் போலும். அடே! இதை இப்பொழுதே எனது தந்தைக்குத் தெரிவித்து துஷ்டனை உனது சிரத்தை வாங்கச் செய்கின்றேன், யாரடா அங்கே! சேவகர்காள்!

சூரசேனன்—

(இராகம்—எதுகுல காம்போதி)

அகவல்

மதிவதனப் பெயர்த் துதிபெறும் நண்பனே
நின்மதிப்பற்றபே—ரின்பமே யின்பமா
மரிய நின்றுணைவியி னகன்றிடா வுறுதிக்
குரியநற்றகை வினைக் கொண்டனை குறைவற

இருவருக் கிருவரே யிணைசொலத் தகியவர்
கசடிலா நற் குணம் கபடிலா நன்மையும்
வசையிலா மேன்மையு மிசைதரு மொழுக்கமு
மென்னெனப்புகலு வேனிவர் பெரும்பேற்றினை
வாடாத மகிழ்வுடன் நீடூழி வாழ்குவீ
ரன்னையே நிகரிலா வரசியே தயைபுரிந்
தென்னையே பொறையுடன் மன்னிப்பதுன் கடன்
மாறுத வன்புநின் மனதிலு ளதோவெனத்
தேறுவா னிவ்வாறு கூறினே னேகியான்
நிகழ்ந்ததை மொழிந்தவனை மகிழ்வுட னிறுத்தவே
னவனையிவ்வ வனியிலொப்ப வருமிக்கவரு
மெவரு மிலரென்பதே யென்மனத்துறுதிகாண்.

ஆகா! எனதுயிரனைய நண்பா! மதிவதனு! உனது பாக்கியமே பாக்கியம்! இவ்வரசியைப்பற்றி நீகொண்ட உறுதிக்குத் தக்கவாறே இவளும் உன்னை நன்குமதித்திருக்கின்றனள். முற்றும் நற்குணமே யுருவாய் வந்த நினக்குத் தகுந்த மனையாட்டியே இவள். உங்களிருவரையும் மணத்தற்கு நீங்களே ஒருவருக்கொருவர் தகுந்த யோக்கியதை யுடையவரன்றி இவ்வுலகத்தில் பிறரிலர். எனதன்னையே, சுந்தராங்கி! சிறந்த அரசியே! அவனிடத்தில் எப்பொழுதும் மாறுத வாஞ்சையை நீ கொண்டிருக்கின்றனையோ வென்பதைச் சோதிக்குமாறே யான் இவ்வாறு வசனித்தேன். என்மீது கொண்ட கோபத்தைத் தயைபுரிந்து க்ஷமித்தருளுவாய். யான் உடனே அவனிடத்திற்குச் சென்று நிகழ்ந்தவற்றை உரைத்து அவனை இன்னம் அதிகம் சிறப்பிக்கின்றேன். ஐயோ! அவனது பரிசுத்தமும் அவனுடன் உரையாடுவோரை வசீகரப்படுத்தும் நல்லொழுக்கமும் புகலற் பாலனவன்று. அந்நகரத்திலுள்ளோர் யாவரும் இவனைத் தமது உயிராய் மதித்து இவனையோர் கணமும் விடுத்துப் பிரிகின்றாரில்லை.

சுந்தராங்கி:—(கோபம் சிறிது தணிய) ஆகா, அப்படியா!

சூரசேனன்—யாவரினும் சிறந்த அரசி! மாசில்லாமணியே! மதிவதனன் எங்கள் மத்தியில் தெய்வ லோகத்தி லிருந்திறங்கிய வோர் தேவனென்ன வெகு சிறப்பாய் விளங்குகின்றனன். அவன் தெய்வாம்சமாய் உதித்தவ னுப்த் தோன்றுகின்றானே யன்றி மானிடனுய்க் காணப் பட வில்லை. அவனிடத்திலுள்ள ஆழ்ந்த அன்பின் தூண்டலினுல் யான் இவ்வாறு சோதனைசெய்து பார்த் தேன். கடவுள் மற்றவரைப் படைத்திருப்பதைப் போல வன்றி உன்னை ஓர் சிறிய மாசுமின்றிப் படைத் திருப்பதைக் கண்டு பேரானந்தங் கொண்டேன். தயை புரிந்து உனது கோபத்தை மாற்றி மன்னித்தருளுவாய்.

சுந்தராங்கி—(சந்தோஷத்துடன்) அப்படியா! மெத்தசந்தோ ஷம். இவ்வரண்மனையில் உமக்குத் தேவையானவற்றை யுதவத் தயாராயிருக்கின்றேன். இங்குள்ள பணிபுரி வோரனைவரையும் உமதிஷ்டத்தின் வாறு ஏவலாம்.

சூரசேனன்—மெத்த நன்று. யான் உன்னிடத்தில் சிறிய விஷயமொன்றிலோர் உதவி வேண்ட மறந்துவிட்டேன். விஷயம் சிறிதாயினும் அது மிக்க அவசியமானது. அதில் உனது துணைவனும் யானும், மற்றுஞ் சிலரும் சம்பந்தப் பட்டிருக்கின்றனம்.

சுந்தராங்கி—ஐயா! அத்தகைய விஷயம் யாது? தயைபுரிந்து தெரிவியும்.

சூரசேனன்—உனது பிரிய நண்பனும் நாங்கள் சிலரும் ஒன்று கூடிக் கலிங்கதேசத் தரசனுக்கு ஓர் சிறந்த போர்க்கவசம் செய்து காணிக்கையாகத்தர நினைத் திருக்கின்றனம். அதைக் குந்தல தேசத்திலிருக்கு மோர் சிறந்த கம்மியனுற் செய்வித்து அதை யோர்

பெரும் பெட்டியில் வைத்து வாங்கிக் கொணர்ந்திருக்கின்றேன். அது மிகவும் அபூர்வமாய்ச் செய்யப்பெற்று, சிறந்த வைரம் பச்சை முதலிய இரத்தினங்கள் ஏராளமாய்ப் பதிக்கப்பெற்றுப் பலகோடித் திரவியம் விலை மதிப்புள்ளதா யிருக்கின்றது. இந்நகரத்திற்கு யான் புதியவனாதலின் இவ்விரவில் நாங்களிறங்கியிருக்கும் விடுதியில் அதை வைத்திருக்க அஞ்சுகின்றேன். அதை இன்றிரவு மாத்திரம் தயை புரிந்து பாதுகாத்துத் திரும்பக் கொடுப்பையேல் பேருபகாரமாகும்.

சுந்தராங்கி—அதற்கு ஆக்ஷேபனை யென்ன! அவ்வாறே செய்கின்றேன். எனது துணைவன் அதிற் சம்மந்தப்பட்டிருக்கின்றமையால் அதை மெத்த ஜாக்கிரதையாய் எனது சயன அந்தப்புரத்திற்குள் வைத்துப் பாதுகாத்து உம்மிடம் ஒப்பி விக்கின்றேன்.

சூரசேனன்—அம்மா! அவ்வுதவி செய்தாற் போதும். அப்பெரும்பெட்டியை எனது ஆட்களின் மூலமாய் இன்றிரவு இங்கு அனுப்புகின்றேன். நாளைக் காலையில் யான் கலிங்கத்திற்குச் சென்று விடவேண்டும்.

சுந்தராங்கி—(அன்புடன்) நாளைக்கே போய்விட வேண்டுமோ வென்ன? இன்னம் இரண்டொரு நாட்களிருந்து விட்டுச் செல்ல லாகாதோ?

சூரசேனன்—நாளைக்கே போகவேண்டும். எனது பிரயாணம் நீடிக்குமாயின், யான் வாக்களித்ததற்குப் பழுதுண்டாம். குந்தலதேசத்தினின்று நின்னைக்காணும் அவாவினாலேயே இவ்வளவு தூரம் யான் வந்தேன்.

சுந்தராங்கி—உமது சிரமத்திற்கு மெத்த நன்றி பாராட்டுகின்றேன். எனினும் காலையிற் போகக்கூடாது.

சூரசேனன்—(இறைஞ்சி) அரசி! இல்லை யில்லை. யான் காலையிலேயே செல்லவேண்டும். இவ்வாறு யான் அவசரமாய்ச் செல்வதாய் நீ மனவருத்தம் கொள்ளக் கூடாது. இன்னம் இரண்டு நாட்களில் இக்காணிக் கையை அரசனுக் கீயவேண்டியதினம் நிச்சயிக்கப் பட்ட தாகையால் நான் காலையிற் புறப்பட்டாலன்றி குறித்த தினத்தில் யான் அவ்விடத்திலிருத்தலாகாது. ஆதலின் மதிவதனனுக்கு யாதாயினும் க்ஷேம சமாசார மெழுதுவதாயின் தயை செய்து இன்றிரவே எழுதி வைத்து விடுவாய்.

சுந்தராங்கி—அப்படியானால் எழுதிவைக்கின்றேன். உமது பெட்டியை நீர் கூறியவாறே இங்கு அனுப்பிடலாம். வெகு பத்திரமாய்க் காப்பாற்றி உமது வசம் ஒப்புவிக் கின்றேன்.

சூரசேனன்—மெத்த சந்தோஷம். சென்று வருகின்றேன், பெண்மணி.

(சூரசேனன் சென்று விடுதல்)

இரண்டாம் அங்கம்

முதற் களம்

மாளவதேசத்தரண்மனையிலோர் அறை.

ஜெயபாலனும் அவன் தோழர்கள் அனுமந்தன், குலசேகரன் என்போரும் சம்பாஷித்தல்.

ஜெயபாலன்—தோழர்காள்! என்ன எனது அதிர்ஷ்டம் இன்று தற்செயலாய் யான் கோரிய ஜாகிகள் என்னிடத்தில் வந்தமையின் நூறுபவுன் பந்தயம் ஜெயித்தேன். அருகிலிருந்த சூதாடிப் பயலொருவன் என்னை ஏமாற்றி அப் பணத்தை எடுத்துக்கொண்டனன்.

அனுமந்தன்—அவனுக்கு ஒன்றும் கிடைக்கவில்லையா?

குணசேகரன்—நூறுபவுன் கிடைத்த தன்றோ. அது போதாதோ?

அனுமந்தன்—இல்லை யில்லை. நமது எஜமானன் அவனது கன்னங்களில் ஒன்றுங் கொடுக்க வில்லையோ வென்றேன்.

ஜெயபாலன்—ஆமாம். கொடுக்க முயன்றேன். அதற்குள் அவன் எனக்கே சில கொடுத்து விட்டனன். உடனே கோபித்துக்கொண்டு எழுந்து வந்துவிட்டேன்.

குணசேகரன்—அப்படியாயின் இன்றைக்கு உங்களுக்குப் பெருத்த இலாபம் கிடைத்தது, மெத்த சந்தோஷம்.

ஜெயபாலன்—பெருத்த அதிர்ஷ்டமே. யான் சூதாட ஆரம்பித்த இத்தனை வருஷங்களாய் தினந்தினம் எத்தனையோ ஆயிரம் பவுன்களைக் கொடுத்தறிவேனே

யன்றி வாங்கியறியேன். இன்றைக்குத்தான் நூறு பவுன் ஜெயித்தேன். ஜெயித்தேனென்றபெயர் கிடைத்தாற் போதுமானதாதலினால் பவுன்களை வேறொருவன் கொண்டு போனதினால் விசனமில்லை.

குணசேகரன்—ஆமாம், மகாப் பிரபு! இக்கலிகாலத்தில் நீங்களே கர்னமகாராஜனென இச்சூத மகாசபையார் சொல்லி யுங்களைப் பலவாறு புகழுகின்றனர். இதுவரையில் தினப் பெருத்த பொருளை யீந்து வந்தது போலவே இனியும் கடைசி வரையில் கொடுத்து வருவதே தங்கள் உதாரத்திற் கழகு யாவரும் யுங்களை எப்பொழுதும் அவ்வாறே புகழ்வர். நீங்கள் ஏழைகளுக் கிவ்வாறீந்து உதவாவிடில், நூற்றுக் கணக்கான சூதர்களும், அவர்களை நம்பிக் கள்ளு சாராயம் முதலிய கடைகளை இரவு முழுதுந் திறந்து வைத்த வண்ணங் காத்திருக்கும் ஏழைகளுக்கும் யார் கொடுத்துக் காப்பாற்றப் போகின்றனர். உங்களது ஈகையே ஈகை. அதை நிறுத்த ஒருபோதும் மனங் கொள்ளாதீர், மகாப் பிரபு!

ஜெயபாலன்—(சந்தோஷத்துடன்) அப்படியா! என்னைப் புகழுகின்றார்களா? மெத்த திருப்தி. யான் அங்கு செல்லாவிடின் பகலில் எனக்குப் பொழுது எவ்வாறு கழியும். மிக்கக் கஷ்டமாயன்றோ முடியும்.

குணசேகரன்—சூதாடுதற்குப் பகற் பொழுது போதாமல் இரவிற்கூட கடன்வாங்கி விடுகின்றீர்கள் அதிருக்கட்டும். இன்றைக்கு வேண்டிய பணத்திற்கு என்ன செய்யப்போகின்றீர்கள்.

ஜெயபாலன்—(விசனத்துடன்) ஆகா! தோழர்காள்! அதே எனக்குப் பெருத்த விசனமா யிருக்கின்றது. யான்

இதுவரையில் எனது உடன் பிறந்தவளான சரசாங்கியின் பெட்டிகளிலிருந்த நகைகளை வாரிவாரிக் கொணர்ந்து சூதாடிக் கொண்டிருந்தேன். அதனால் இதுவரையில் அனேகம் பெட்டிகள் காலியாய் விட்டன. இதையறிந்த மகாராணி அவற்றை இப்பொழுது தனது அந்தப் புரத்தில் வைத்துப் பூட்டி விட்டனள். இன்றைக்குப் பணத்திற்கு யாதொருவழியுமின்றித் தத்தளிக்கின்றேன். நண்பர்காள்! என்செய்வேன்?

அனுமந்தன்—அப்படியாயின் இன்றைக்குச் சூதர் மகா சபைக்குப் போகாமலிருக்க நேருமோ?

குணசேகரன்—உங்கள் பிராணகாந்தையான சுந்தராங்கியின் அந்தப் புரத்திற் பலவகைப் பெட்டிகள் கிடக்கின்றனவே. அவற்றிலொன்றை எடுத்துவந்து விடுங்கள், மகாப் பிரபு!

ஜெயபாலன்—ஆமாம். குணசேகரா! நீ கூறியது சமயோசிதமான தந்திரம். உனது புத்தி கூர்மையை என்னெனப் புகழுவேன். இன்று அவ்வாறே செய்கின்றேன்.

அனுமந்தன்—மகாப் பிரபு! சுந்தராங்கியின் அந்தப்புரத்திற்கு யரோ ஒருவன் புதிதாய் வந்திருக்கின்றனனே அதை அறிவீர்களா?

ஜெயபாலன்—ஆகா! அவன் யாவன்? எனக்குத்தெரியாதே!

குணசேகரன்—அவன் கலிங்க தேசத்தானும், மதிவதனனது நண்பனென்று யாவரும் நினைக்கின்றனர்.

ஜெயபாலன்—மதிவனன் ஓர் தூர்த்தன். இவனும் அவனுக்குத் தோழனு யிருப்பன். அவன் வந்ததைப்பற்றி யார் உங்களுக்குத் தெரிவித்தது?

குணசேகரன்—உங்கள் சேவகரிலொருவனே புகன்றனன்.

ஜேயபாலன்—அப்படியா! மெத்த நன்று. நான்சென்று அவனைப்பார்ப்பது எனது கௌரவத்திற்குக் குறைவாகுமோ?

குணசேகரன்—உங்களிடத்தில் அகௌரதையிருந்தாலன்றோ அதை விடுத்து இனி நீங்கள் கௌரதையைச் சம்பாதிக்கவேண்டும். ஆதலின் உங்களுக்குக் கௌரதையே தேவையில்லை, சென்று பார்க்கலாம்.

ஜேயபாலன்—அவனைப் பார்ப்பவனைப் போலச் சென்று அவளது நகைப் பெட்டிகளிலொன்றை எடுத்துக் கொண்டு வந்து விடுகின்றேன். நீங்கள் இவ்விடத்தில் இருங்கள்.

(ஜெயபாலன் சென்று விடுதல்)

குணசேகரன்—ஆகா! பேயினும் மிக்க வலியினையும், நரியினும் அதிகமான கபட தந்திரங்களையுங் கொண்ட இவனது தங்கைக்கு முன்னர் இவர்களின் தாய் இத்தகைய மகிஷத்தைப் புதல்வனைப் பெற்றது பெரும் விந்தையே! அவளோ தனது சிறந்த சாமர்த்தியத்தினால் மற்ற யாவரையும் தனக்குக் கீழ் அடக்கி யாளுகின்றனள். இவன் எட்டும் இரண்டும் பத்தென்பதையறியாத மூடர் சிரோமணியாய்ப் பிரகாசிக்கின்றனன். ஐயோ! தெய்வாம்சத்துடனுதித்த சுந்தராங்கி! உனது கதியும் இப்படியாயிற்றே! தனது இளம் மனையாட்டியின் மையலி லாழ்ந்த பேதையான அரசனால் உனக்கு எத்தகைய துன்பம் சம்பவித்தது! உனது மனதைக் கவர்ந்த சீலனாகிய மதிவதனனது பாததூளிக்கும் ஒப்பில்லாத இவனை மணக்க நீ மனங் கொள்ளா திருப்பது தெய்வ கடாக்ஷமே. கடவுள் கடைசிவரையில் இவ்வாறே உன் மனதை உறுதிப்

படுத்தி உனது அன்பினையும் இப்பெரும் இராஜ்ஜியத்தையும் உனக்களிப்பாராக!

(தோழரும் சென்று விடுதல்)

இரண்டாங் களம்

சுந்தராங்கியின் சயனவறை—ஓர் புறத்தில்
சூரசேனனுல் அனுப்பப்பட்ட பெட்டி
வைக்கப்பட்டிருத்தல்.) சுந்தராங்கி
தனது சப்ரமஞ்சத்தில் சாய்ந்து
கொண்டிருத்தல்.

சுந்தராங்கி—

(மாத்தாட பாராதேனை)
(இராகம் கமாஸ்—தாளம் ரூபம்)

என்றுநான் காண்பேனினி-என் காந்தனே.

(1) சென்றமுதலா வுன்னைச் சிந்திப்பதன்றி யொன்றும்
செய்தறியேன் பேதையையோ மனம்பதைத்தேன் (எ)

(2) நீரில்லாப் பயிரானேன் நிலவில்லா விரவானேன்
நிகரில்லா நேசனே-நீங்காதோ வென் துயர். (எ)

யாரங்கே! அடி பத்மாவதி!

பத்மாவதி—அம்மா! இதோ வந்தேன்.

சுந்தராங்கி—இப்பொழுது நேரமென்ன?

பத்மாவதி—அனேகமாய் நடு நிசியாயிற்று.

சுந்தராங்கி—நான் இந்த மூன்று மணி நேரங்களாய் இப்புஸ்தகத்தைப் படித்துக் கொண்டிருப்பதினுல், கண்கள் நோக வாரம்பிக்கின்றன. கண்ணிமைகள் தாமே மூடிக்கொள்ள வாரம்பிக்கின்றன. யான் சயனித்துக் கொள்ளுகின்றேன். இப்புஸ்தகத்தில் யான் படித்து

நிறுத்திய விடத்திற்கோர் அடையாளம் வைப்பாய். ஓர் விளக்கைத் தவிர மற்றவற்றை அவித்து விட்டு நீயும் சயனித்துக்கொள். விடியற்காலை 5 மணிக்கு விழித்துக் கொள்ளவையேல் தயவு செய்து என்னை எழுப்புவாய்.

பத்மாவதி—உத்திரவின் வாறே செய்கின்றேன், அம்மா.

(பத்மாவதி ஏவப்பட்டவாறு புரிந்து விட்டு
ஓர் புறத்தில் நித்திரை செய்தல்.)

சுந்தராங்கி:—(சப்ரமஞ்சத்தில் சயனித்துக் கொள்ளுமுன்
கடவுளைத் தியானித்தல்.)

(காம்போதி)

" இன்னமுது கனிபாகு கற்கண்டு சீனி தே
னென ருசித்திட வலிய வந்
தின்பங் கொடுத்த நினையெந் நேரநின் னன்ப
ரிடையறு துருகி நாடி
யுன்னிய கருத்தவிழ வுரைகுழறி யுடலெங்கு
மோய்ந் தயர்ந்த வசமாகி
யுணர்வரிய பேரின்ப வனுபூதி யுணர்விலே
யுணர்வார்க ளுள்ளபடி காண்
கன்னிகை யொருத்தி சிற்றின்பம் வேம்பென்னினுங்
கைக் கொள்வள் பக்குவத்திற்
கணவ னருள்பெறின் முனே சொன்னவா றென்னெனக்
கருதி நகையாவ ளதுபோற்
சொன்னபடி கேட்குமிப் பேதைக்கு நின்கருணை
தோற்றிற் சுகாரம்ப மாஞ்
சித்தநிர்க் குணமான பரதெய்வமே பாஞ்
சோதியே சுக வாரியே.

(சுந்தராங்கி படுத்துக்கொண்டு நித்திரை செய்தல்)

கொஞ்ச நேரத்திற்குப் பின் பெட்டிக்குள்ளிருந்த சூரசேனன் அதைத் திறந்துகொண்டு வெளியே வருதல்.

சூரசேனன்:—(பிரமித்து) "ஆகா! என்ன! இவளது காந்தி! ஆகா! என்ன இவளது கட்டழகு! இவள் இப்பூலோகத்து மனிதருக்கே அருகளாகாள். இவளைக் கடவுளே பணியக் கூடிய அழகைக் கொண்டிருக்கின்றனள். இன்னம் சிறிது நெருங்கி உற்று நோக்குவேன். ஐயோ! என்ன எழில்!!

(இராகம்—கானடா)

எங்ஙனமுரைப் பேனிந்த மங்கையின் வடிவந்தன்னை
பங்கயமலரோ செய்யபவழமோ மருப்போ மாழைத்
தங்கமோ யினிமையா வுந்தங்கிடு கனியோதேனோ
பங்கமி லமுதோபாகோ பரமனும் பணியும் பாவை

ஆகா! என்ன காந்தி! இப்பொழுதே மலர்ந்த குமுதமோ! வேரின் அமுதமோ! இவள் சப்ர மஞ்சத்தில் இயற்கையிலேயே எவ்வளவு உல்லாசமாய்ச் சயனித்திருக்கின்றனள். இவை யாவும் பிறவிச்சிறப்பே யன்றி ஒருவர் இவ்வாறு நடித்தல் முற்றும் ஏலாக்காரியம். ஆகா! இணையற்ற மணியோ! இவளை எனது கரத்தால் தொடுவேனேயாகில் எனது ஜென்மம் சாபல்யமாகிவிடும். இவளன்றோ மங்கை! மற்றமகளிர் இவளுக்கு முன்னர் ஒளிமழுங்கி முற்றும் ஆடவராய்த் தோன்றுவரன்றி பெண்களாய்த் தோன்றார். ஆகா! இவள் மூச்சுவிடும் காற்றினாலன்றோ இவ்வந்தப்புரம் முழுதும் கமகமென வாசம் கமழுகின்றது. இவ்விளக்கினொளியினும் இவளது தேகக்காந்தி அதிகமாய்ப் பிரகாசிக்கின்றதே!

பங்கயம்=தாமரை; செய்ய=சிவந்த; மருப்பு=தந்தம்; மாழை=அழகிய; பங்கம்=குற்றம்.

(காவடிச்சிந்து—என்னடி நான்பெற்ற மங்கை.)

இங்கித வூர்வசிமாதோ ரதிமாதோ பிர்மன்சூதோ மிகு
கொங்கிதழ் பங்கயப்—போதோ—யிவ
ளிடையிற்றிட நடைதெற்றிட தொடையற்பல மிடைபட்டன
வந்திழை யாளிவள்- தேனே—கவி
னேந்திய நாண்மிகு—மானே.

பூரணசந்திர னென்ன முகம் மின்ன ஜடைப்பின்ன-லொடு
கோதையும் நாகமாய்த்துன்ன—அது
குளிர்மாமதி தனைமேவியே வளைகேதுவி னுருவேயெனக்
கோதையின் சுந்தர—வதனம்—தோன்றக்
கண்டிட விஞ்சுதே—விதனம்.

ஆகா ! இவள் முகம் பூர்ணசந்திர பிம்பமோ ! சந்திர கிரகணம் பூமியிலேது? இவள் தலைமயிரும் அதினின்று விசாலமாய்ப்பின்னி விடப்பட்டிருக்கும் பின்னலும் படத்தை விரித்துக்கொண்டு கேது இச்சந்திரனை விழுங்குவதுபோலத் தோன்றுகின்றதே ! சே ! இதென்ன பேதைமை ! யான் இவ்வாறு பிரமித்து நிற்பேனுயின் இவளது அழகை முற்றுங் கண்டனுபவிக்க ஓர் யுகமும் போதாது. ஆதலின் யான் வந்த காரியத்தைக் கவனிக்கின்றேன். இவளது சயன அறையிலுள்ள பொருட்கள் இன்னின்ன வென்பதை எழுதிக் கொள்ளுகின்றேன். இன்ன படங்கள் மாட்டப்பட்டிருக்கின்றன வென்றும், இன்ன விடத்தில் பலகணிகள், நிலைக் கண்ணாடிகள், சப்பிரமஞ்சம், முதலியன இருக்கின்றன வென்றும், அவள் சயனித்திருக்கப் பெற்ற தளிமம் எவ்வாறிருக்கின்ற தென்பதையும், எவ்வாறு அலங்கரிக்கப் பெற்றிருக்கின்ற தென்பதையும், இவற்றைப் போன்ற மற்ற விவரங்களையும் தெரிந்து கொள்ளுகின்றேன். அடிக்கடி மாறக்கூடிய இவ்வகையும் பொருட்களை ஆயிரக்கணக்கில் அறிந்து சொல்வதிலும் அவள் உடம்பில் இரகசியமான

இடங்களில், இயற்கையில் யாதாயினும் அடையாளங்கள், அல்லது மச்சம் முதலிய ஒன்றிருத்தலைக் காணினும் அது போதுமான சாட்சியாம். ஏ! நித்திராதேவியே! இவ் வமயத்தில் என் பக்கத்திலிருந்து உதவி புரிவாய். யான் அவளை யணுகி உற்று நோக்கிவிட்டுச் செல்லும் வரை நீ அவளை நன்ருய்ப் பற்றிக்கொள்வாய். ஆகா! இவள் கைவிரலி லிருக்கும் இம் மோதிரத்தையும் எடுத்துக் கொள்ளுகின் றேன். விழித்துக் கொண்டால் என் செய்வது? கை தலை யணையின் மீது தனியாய்க் கிடக்கின்றது. கையில் படாமல் மோதிரத்தை மெதுவாய் இழுத்துப் பார்க்கின்றேன். இலே சில் நழுவி விடுமாயின் எடுத்துக் கொள்ளுகின்றேன். ஆகா! தொடுவதற்குள் வந்து விட்டதே! இதுவும் எனது பாக்கியந் தான். இதைக் காட்டுவேனுயின் இவளது பிராண காந்த ஞன மதிவதனனுக்குப் பைத்தியம் பிடித்தற்குத் தடை யென்ன? ஆகா! இவளது மார்பில் ஓர் சிறிய மச்சமிருக் கின்றதே! இம் மச்சத்தின் அழகே அழகு!! தீயோரும் நல்லோர்க் கிடையிலிருப்பரேல் நன்கு பொலிவரென் பதை இப்பொழுதே யான் பிரத்தியக்ஷமாய் அறிந்தேன். இவ்வடையாளம் ஒன்றே போதும். இதை அவனிடத்தில் உரைப்பேனுயின் யான் இவளது கற்பைக் களங்கப்படுத்தி விட்டதாகவே உறுதியாய் நிச்சயிப்பன். இதை நான் எழு திக் கொள்வானேன்? இது என்றும் அழியாவாறு என் மனதிற் பதிந்து விட்டது. இவள் நெடியநேரம் இப் புஸ்த கத்தைப் படித்துக்கொண்டிருந்தாள் போலும். ஆகா! இது நளன் சரிதமன்ருே? அன்னம் வஸ்திரத்தை யபகரித்துச் சென்ற விடமாய்த் தோன்றுகின்றது.—போதும், போதும். எனக்குத் தேவையானதற்கு அதிகமாய்ச் சாக்ஷிகள் சம்பா தித்து விட்டேன். நேரமாகின்றது. யான் பெட்டிக்குட்

சென்று மூடிக்கொள்ளும் விசையை அழுத்துகின்றேன். ஐயோ! பயம் என்னை எவ்வாறு நடுக்குவிக்கின்றது! இலக்ஷ்மி போன்ற இப் புண்ணியவதியின் சுவர்க்கத்தையொத்த இனிய அந்தப்புரத்தி லிருப்பினும் நகரவேதனை இப் பெட்டிக்குள்ளே தானிருக்கின்றது. உள்ளே செல்லுகின்றேன்.

(பெட்டிக்குள் சென்று திரும்ப மறைந்து கொள்ளுதல்)

மூன்றுங்களம்

சுந்தராங்கி சயன அறை—
அந்தப்புர வாசலிலுள்ளதோர் மண்டபம்.
ஜெயபாலன், அனுமந்தன், குணசேகரன்
மூவரின் சம்பாஷணை.

அனுமந்தன்—நேற்றிரவு சூதர் மகாசபையில் என்ன விசேஷம்? உங்களுக்கு இலாபமா நஷ்டமா?

குணசேகரன்—நமது எஜமானனது வாடிய வதனத்தை நோக்க பணம் இலாபமில்லை யென்று தோற்றுகிறது. எனினும், உண்மையை யானறிந்தேனில்லை. நான் யூகித்துச்சொன்னது குறைவாய்க் கூறியதாய் ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஏனெனில் அதற்குமேலும் யாதாயினும் நடந்திருக்கலாம், அதை நமது எஜமானனே தெரிவிக்க வேண்டும்.

ஜெயபாலன்—ஐயோ! நண்பர்காள்! அதை என்னெனத் தெரிவிப்பேன். நேற்றைய தினம் சுந்தராங்கியின் அந்தப் புரத்திலுள்ள நகைப் பெட்டியை எடுக்க எவ்வாறு முயன்றும் சரிப்படாது போயிற்று. அப்படுபாவி பத்மாவதி நாயைப்போல அவளுடைய அந்தப்புரத்தை

விடுவித்தகுலா திருந்தனள். அதனுல் ஒன்றும் எடுக்க முடியாமற் போயிற்று. யாரிடத்திலாயினும் கடன் வாங்கிச் சூதாட நினைத்து அவ்விடத்திற்குச் சென் றேன். என் கையில் பொருள் இல்லை என்று உணர்ந்த நமது நண்பர் என்னைச் சேர்த்துக்கொள்ள வில்லை. ஆட்டத்தின் ஸ்வாரஸ்யத்தைக் கவனித்துக்கொண்டே என்னையும் மறந்து அவ்விடத்தில் நெடிய நேரம் இரு ந்து விட்டேன். பிறகு யாவரும் சென்றனர். நான் அதன் மேல் அரண்மனைக்கு வர நினைத்தேன். சேவ கர் அரண்மனை வாயிற் கதவைத் திறவாராதலின், அங்கு செல்ல முடியவில்லை. ஒரு வீட்டுத் திண்ணையில் மஞ்சம் முதலியவை ஒன்று மின்றிச் சயனித்திருந் தேன். இரவு முழுதும் நித்திரையே கிடையாது.

குணசேகரன்—மகாப்பிரபு! இன்று காலையில் யான் ஓர் விசேஷம் கேள்விப்பட்டேன்.

ஜெயபாலன்—(முகம் மாறி) என்ன விசேஷம்?

குணசேகரன்—விசேஷம் ஒன்று மில்லை. லோந்து சுற்றி வரும் பாராக்காரர்களால் இதைப்பற்றிக் கேள்விப் பட்டேன்.

ஜெயபாலன்—(முற்றும் முகம் மாறிக் கோபத்துடன்) அப் போக்கிரிகள் சொல்லுவது சுத்தப்பொய்.

குணசேகரன்—யான் தெரிவிப்பதற்குள் அது இன்னதென் பதை எப்படி அறிந்தீர்கள்?

ஜெயபாலன்—(தடுமாறிய குரலுடன்) இல்லை, யில்லை. அவர் கள் போக்கிரிகளா யிருக்கலா மென்ன நினைத்தேன். ஆதலின் அவர்கள் சொன்னது பொய்யா யிருக்க வேண்டு மென்பது எனது எண்ணம். எனினும் அதை

இன்னதென அறியேன். அவர்கள் என்ன சொன்னார்கள்?

குணசேகரன்—அவர்கள் லோந்து சுற்றிவரும்போது, ஒரு வீட்டுத் திண்ணை மூலையில் யாரோ ஒரு திருடன் மறைந்து கொண்டிருந்ததாயும் அவனையவர் பிடித்து யாரெனவினவ அவன் ஒன்றும் பதிற்சொல்லவில்லையாம். அவர்கள் உடனே சந்தேகித்துத் தமது குட்டைத் தடிகளினால் அவனை நன்றாய் மொத்தி டாணாவிற்கு இழுத்துக்கொண்டு போனபின் அங்கிருந்த வெளிச்சத்தினாற் பார்க்க அவன் எங்கள் எஜமானராய் மாறிவிட்டனனாம். அந்த அயோக்கியப் பேதைகள் பொய்சொல்லி யிருக்கலாமெனவுந் தோன்றுகின்றது.

ஜெயபாலன்—(வெட்கித் தலைகுனிந்து) ஆமாம். அவர்கள் என்னை அதிகமாய் அடிக்கவில்லை. என்னைப் பிடித்துக் கொண்டவுடன் யான் இன்னானெனத் தெரிவித்தேன். உடனே என்னை விட்டு விட்டுப் போயினர்.

குணசேகரன்—நீங்கள் நித்திரைசெய்ய இடமில்லாதுவருந்துகின்றீர்களென நினைத்து அவர்கள் உங்களை அதன்பின்னர் டாணாவிலாவது சயனித்துக் கொள்ளுமாறு அழைத்துப் போயிருக்கலாம்.

ஜெயபாலன்—ஆமாம்! குணசேகரா! டாணாவிலிருந்தோர் பாய் தலையணை முதலியவற்றைக் கொடுத்தனர். விடியற்காலையில் எழுந்து யாருமறியாவாறு எனது அந்தப்புரத்திற்கு வந்து சயனித்துக் கொண்டேன். உடனே பொழுது விடிந்து விட்டது.—இந்த அறிவில்லாத பேதை சுந்தராங்கியை யான் மணக்க விரும்புவதின் காரணமென்ன அறிந்தீரா? தினமும் சூதாடுதற்குத் தேவையான பொருளையும் நகைகளையும் அவளிடத்தி

விருந்து பெறலாமெனும் நோக்கத்துடனேதான். அதன் பொருட்டுத்தான் யான் இவ்வளவு பாடுபடுகின்றேன். அதிகாலையில் அவளுடைய அந்தப்புரத்தின் வாயிலில் வந்து இனிய வாத்தியங்களுடன் சங்கீதம் பாடி அவளைத் துயில் நீக்கின் அவள் மனதிரங்குமெனக் கேள்விப்பட்டு அவ்வாறு செய்துவருகின்றேன். அதனாலேதான் எனது படுக்கையை விட்டுவர மனமற்றவனாயிருந்தும் அதிகாலையில் எழுந்து வந்தேன்.

அனுமந்தன்—ஆகா! இப்பொழுது அனேகமாய் விடிந்துவிட்டதே, மகாப்பிரபு! சுந்தராங்கி இன்னம் எழுந்திராதிருப்பளோ வென்ன!

ஜெயபாலன்—ஏன் இன்னமிப் பாடகர்கள் வரவில்லை?

(ஓர்புறத்திலிருந்து பாடகர்கள் வாத்தியங்களுடன் வருதல்.)

பாடகர்—மகாப்பிரபு! நாங்கள் காலையிலிருந்து நெடிய நேரமாய் உங்கள் வரவை எதிர்பார்த்தவண்ணம் இங்கேயே இருக்கின்றோம்.

ஜெயபாலன்—மெத்த சந்தோஷம். எங்கே! ஆரம்பம் செய்யுங்கள், பார்க்கலாம். வாத்தியத்தினைத்தடவும் சாமர்த்தியத்தினாலும், வாய்ப்பாட்டின் இனிமையினாலும், அவள் மனதைக் கவரவேண்டும்.

பாடகர்—(பாடுதல்)

(இராகம்-பிலஹரி)

ஆதவ னுதித்தன னலைகடல் விலகின
னட ரிருளகன்றது சுடரொளி விரிந்தது
போதுகள் நகைத்தன மதுவினை யுகுத்தன
பொதுளிய பரிமளந் தூவின மாருதம்,

ஆதவன்=சூரியன்; போதுகள்=புஷ்பங்கள்; உகுத்தன=சொரிந்தன; பொதுளிய=நெருங்கிய.

கீதமெழுந்தது யாழ்முழவோ டிமிழ்
கின்னர முதலிய சொரிந்தனவமுதம்
ஓதிம மாடின வொலித்தன குயிலினம்
சுந்தரத் தெரிவையே துயிலெழல் புரிவாய்.

ஜெயபாலன்—பேஷ்! பேஷ்! பலே! இப்பாடலால் அவள் மனதிளகுமேல், அப்பொழுதுதான் இது இனிமை யுடையதென்று நினைப்பேன். இல்லையேல் உமது வாத் தியங்களின் தந்தி முதலியவற்றை அறுத்து ஆற்றிற் போடுவேன். உங்கள் குரலையும் கழுதைக் குரலாய் மதிப்பேன். செல்லலாம்.

(ஜெயபாலனைத்தவிர மற்றவர் யாவரும் சென்று விடுதல்)

ஜெயபாலன்— (தனக்குள்) இவள் விழித்துக்கொண்டிருப் பாளாயின் யான் அவளுடன் உரையாடுகின்றேன். இல்லையேல் அவள் சுகமாய் நித்திரை செய்யட்டும். நான் எழுப்புவதில்லை—அடி! பத்மாவதி! அடி! பத் மாவதி! (கதவைத் தட்டுதல்) இவளிடத்தில் அநேகம் தாதியரிருக்கின்றனர். ஒருவளாயினும் கதவைத் திறந்தாளில்லையே! அவர்களில் ஒருவளை யாதாயினும் இலஞ்சம் கொடுத்தாயினும் என் வசப்படுத்திக் கொள்ளலாமென நினைக்கின்றேன். பணம் எக்காரி யத்தையும் முடிக்குமன்றோ. அதனலாகாத காரிய முண்டோ! இத்தாதியரி லொருவளை எனக்குப் பதி லாய் வக்கீலாய் நியமித்து விடுகின்றேன். ஏனெனில் எனது விவாதத்தையானே நன்றாயறிந்தேனில்லை. அடி பத்மாவதி!

யாழ்=வீணை; முழவு=மத்தளம்; இமிழ்=இனிமை; ஓதிமம்= அன்னம்.

(திரும்பக் கதவிடித்தல்)

பத்மாவதி—யாரங்கே ?

ஜேயபாலன்—நான் தான்.

பத்மாவதி—'நான்' என்ற அந்த அகங்காரப் பேய் இன்ன தெனப் புலப்படவில்லை.

ஜேயபாலன்—அடி பத்மாவதி! என்னை யறிந்தாய் இல்லையா ? உயர்ந்த அந்தஸ்துடைய என்னை இவ்வாறு நீ தடை செய்து அவமானமாய் மொழிகின்றனையா ! உடனே கதவைத்திற.

பத்மாவதி—'என்னை' என்னும் மொழி ஓர் ஆணையும் சுட்டும், பெண்ணையும் குறிக்கும், அலியையும் சுட்டும், மிருகங்கள் சம்பாஷிக்குமாயின் ஓர் விலங்கையும் குறிக்கும். அவ்வார்த்தை இங்கு யாரைக் குறிக்கின்றதென் பதே எனது சந்தேகம். நீர் உயர்ந்த அந்தஸ்துடைய வராயிருப்பின், தாழ்ந்த அந்தஸ்திலிருக்கும் என் னிடத்தில் என்ன காரிய மிருக்கின்றது ? போகலாம்.

ஜேயபாலன்—(கெஞ்சியவாறு) அடி பத்மாவதி ! யான் உனது நாயகியின் பிரிய காந்தனல்லவா! என்னை யறிய வில்லையா.

பத்மாவதி—நீபெரும் புளுகனென்ப தொன்றையே யறிந்தே னன்றி உண்மையில் பாவனென்பதை யான் அறியக் கூடவில்லை.

ஜேயபாலன்—ஆகா! புளுகனா!

பத்மாவதி—எனது அரசி சுந்தராங்கிக்கு இன்னம் கலியாண மாக வில்லை. அங்ஙன மிருக்க, அவளுக்கு நாயக னேது ? நிற்க, அவளாற் கணவனென வரிக்கப்பட்ட

வரும், இந்நகரத்திற்கு நெடிய தூரத்திலிருக்கின்றனர். ஆதலின் நீ சொல்லுவது முற்றும்பொய்.

ஜெயபாலன்—அடி பத்மாவதி! ஏன் வீண் விவாதம் புரிகின்றனை? யான் ஜெயபால னன்றோ? அடி உனக்கு வேண்டிய பொருள் இனுமளிக்கின்றேன், தயைசெய்து எனக்குத் தேவையானதைச் செய்வாய்.

பத்மாவதி—ஆகா அப்படியா! நீங்களா! உங்களுக்கு என்ன தேவை?

ஜெயபாலன்—உனது நாயகியே தேவை.

பத்மாவதி—எனது நாயகிக்கு நீங்கள் தேவையில்லையே. அதற்கென்ன செய்யலாம்?

ஜெயபாலன்—(கோபத்துடன்) அடி, நிர்மூடி! என்ன என்னுடன் பரிகாசம் புரிகின்றனை? (அதட்டிய குரலில்) கதவைத்திறக்கின்றனையா? இல்லையா?

(சப்தத்தைக் கேட்ட சுந்தராங்கி கதவண்டைவருதல்)

சுந்தராங்கி—யாரடி அது, கதவைத்திறந்துவிடு.

(பத்மாவதி கதவைத்திறத்தல்)

ஜெயபாலன்—எனதுயிரை யொத்த வந்திழாய்! ஏ சுந்தராங்கி! இன்னம் உன் மனதிளக வில்லையா! யான் எவ்வாறு கெஞ்சியும் உனக்கு என் மீதிரக்க முண்டாக வில்லையோ! உன்மனதென்ன கல்லோ! ஆகா! உனது முகம் சந்திர பிம்பமென்ன மிக்க குளிர்ச்சியையும் அன்பையும் புலப்படுத்துகின்ற தாயினும் உன் மனது மாத்திரம் சிறிதும் ஈரமற்றுக் கொடியதாயிருத்தல் எத்தகைய விந்தை! என்னை மணப்பையேல் நாமிருவரும் இரதியும் மன்மதனு மென்னக் சாலங்கழிக்கலாமே. உனது கனிவாயால் ஓர் இனியமொழி யுரைப்பையேற் போதுமடி, கட்டழகி.

சுந்தராங்கி—ஆகா! ஜெயபாலா! இன்னமும் இப்பைத்தியத்தை விட்டனை யில்லைபோலும்! ஐயோ! இவ்வாறு பெண்களின்மேல் மோகத்தைக் கொண்டு அலைபவர் பெருந்துர்த்தரன்ருே. இதென்ன விந்தை! உன்னைப் போல எவரேனும் மானத்தை விடுத்துக் காமாதுரராய் அலைவரோ! என்னை மணக்கலாமென்று மனப்பால் குடித்துக்கொண்டு அதன் பொருட்டு மேன்மேலும் முயலுகிறதினுல் உனக்குத் துன்பமும் சிரமமுமின்றி வேறொரு பிரதி பலனும் கிடைக்காது. உன்னை மணப்பதற்குச் சிறிதும் எனக்கு மனமில்லை.

ஜெயபாலன்—உனக்கு எவ்வாறு மனமில்லா திருப்பினும் யான் உன்னையே மணக்க விருப்பங்கொண்டுளேனென்பது சத்தியம். நீ எப்படியாயினும் என்மீது பிரியத்தை உண்டாக்கிக் கொள்ளவேண்டும்.

சுந்தராங்கி—நீ என்மீது காதல் கொண்டிருப்பதாய்ச் சாதாரணமாய்ச் சொன்ன போதிலும் அதையான் முற்றும் உண்மை யென நம்பக்கூடியவள். அதைப் பிரமாண பூர்வமாய் நீ உறுதியாய்க் கூறுவதினுல் யாதொரு வித்தியாசமுமில்லை. நீ இவ்வாறு உறுதி புகன்றதின் முடிவும் யான் உன்னை முற்றும் மதிக்கவில்லை யென்பதே நீ அறிந்து கொள்ளவேண்டியதே யன்றி வேறிலது.

ஜெயபாலன்—நீ இவ்வாறு கூறுவது சரியன்று.

சுந்தராங்கி—நான் பதில் மொழியாதிருப்பின் உனது விருப்பத்திற் கிணங்கி விட்டதாய் நினைப்பாயென வெண்ணி விடையீந்தேன். ஜெயபாலா! என்னை அனுவசியமாய் வருத்தி உபத்திரவிப்பதிற் பயனில்லை. தயைபுரிந்து எனது நினைவை முற்றும் விட்டுவிடுமாறு வேண்டுகின்

றேன். இல்லையேல், நீ என்னிடத்தில் எவ்வளவு அன்பையும் மரியாதையையும் புலப்படுத்தினும் அதற்குப் பதிலாய் உன்னை முற்றும் அவமானமே செய்வேன். உன்னைப்போன்ற கற்றவர்கள் தமது மனத்தைத் தம் வசப்படுத்த வேண்டாமோ!

ஜெயபாலன்—ஆகா! உன்னை விடுவித்துச் செல்லவா? இவ்வாறு பைத்தியத்தில் உன்னை விடுத்துச் செல்லுதல் எனக்குப் பெரும் பாவமன்றோ உன்னை விடுத்துப் போகேன்.

சுந்தராங்கி—ஆனல் மூடர்கள் பைத்தியக்காரராகார்.

ஜெயபாலன்—அப்படியானுல் என்னை மூடனென்கின்றனையோ?

சுந்தராங்கி—யான் பைத்தியங் கொண்டவளாதலின் உன்னை மூடனென்றே மதித்தேன். இன்னம் சில நிமிஷங்கள் செல்லுமாயின் எனக்குப் பைத்தியமில்லையென்பதை நீயே யறிவாய். நீ இவ்வாறு தாறுமாறுய்ப் பிதற்றுவையாயின் யான் இனி எனது பெண்தன்மையை மறக்க நேருமோவென நினைத்து விசனிக்கின்றேன். உன்னிடத்தில் எனக்கு முற்றும் வெறுப்பேயன்றி விருப்பமேயிலது. இதை யானே தெரிவித்துக் கொள்வதினும் எனது நடவடிக்கைகளிலிருந்து நீயே அறிந்து கொண்டிருக்க வேண்டியதன்றோ.

ஜெயபாலன்—நீ இவ்வாறு கூறுவது உனது தந்தையின் கட்டளைக்கு முற்றுங் கீழ்ப்படியாக் குற்றமாகின்றது. கேவலம் தாழ்ந்தவனொருவனை மணப்பதாய் வரித்து விட்டனை யென்று அதையே பாராட்டிப் பேசுகின்றனை. அவனோர் பரமதரித்திரன். அவன் அரண்மனையிலுள்ளோர் உண்டு மிஞ்சிய எச்சிலைத் தின்று

வயிறு வளர்ந்து உயர்ந்தவனன்றே. அவனை மணக்க நினைத்து பலிக்குமோ? நீயும் கேவலமோர் ஏழையா யிருந்தால் அது உறுதிதான். இத்தேசமாளும் அரசனே உத்திரவளித்திருக்க, இவ்வேற்பாடு இன்னம் நிற்கின்றதாமோ! ஐயோ! கேவலம் அடிமையினும் கீழ்ப்பட்ட யாசகனை மணப்பதினால் இவ்விராஜாங்கத்தின் கௌரதைக்கு எவ்வளவு ஈனம் வந்து சம்பவிக்கும்.

சுந்தராங்கி—

(இராகம்-கானடா)

கசடனே பதரேசூதக் கள்வனே மடையா தூர்த்தா
வசையிலாவெனதுதோழனச் சுவமலம்பித்தேய்த்து
விசித்திடவருகனேநீ வெள்ளியமதியைக்கொண்டாய்
விசையினிலிவிடம்நீங்கி யேகலேயுரியதாகும்.

அடே! துன்மார்க்கா! நீ எவனாயிருந்தாலென்ன எனது மதிவதனனுடைய பாததூளிக்கும் ஒப்பாவையோ! அடீ புருஷோத்தமா!

(புருஷோத்தமன் வருதல்.)

நல்ல சமயத்தில் வந்தனை! எனது சயன அறைக்கு விரைந்தோடி அங்கிருக்கும் தாதியை அழைத்து எனது மோதிரமொன்று மஞ்சத்திற் கிடக்கும். அதைத்தேடிப் பார்த்துக் கொண்டுவா. அது நழுவி விழுந்து விட்டது போலிருக்கிறது. அதற்குப் பதிலாய் இவ்வுலகமே கிடைப்பினும் யான் பின்னதை வேண்டேன். அது மதிவதனனாற் கொடுக்கப்பட்ட மோதிரம். காலையிலெழுந்தபோது அதை விரலிற் கண்டதாக நினைப்பில்லை. நேற்றிரவு அதைக் கண்டது நிச்சயமாய் ஞாபகமிருக்கின்றது.

வசை=குற்றம்; அச்சுவம்=குதிரை; விசித்திட=கட்ட; வெள்ளியமதி=அற்ப புத்தி.

புருஷோத்தமன்—அது காணாமற் போயிராது. மஞ்சத்தின் மீது நழுவி விழுந்து கிடக்கலாம்.

சுந்தராங்கி—நானும் அப்படியே நினைக்கின்றேன். சென்று பார்த்துவா.

(புருஷோத்தமன் சென்று விடுதல்)

ஜெயபாலன்—(கோபத்துடன்) ஆகா! என்னை அவனுடைய பாததூளியாகவா மதித்தனை! அப்படியா!

(காவடிச்சிந்து—ஆறுமுகவடிவேலவனே என்ற வர்ணமெட்டு)

ஆகா நீ யென்றனை வாயில்வந்தவிதம்
ஏளனம் செய்தாயன்றோ—முற்றும்
நாணமில்லாமலே—பேதையின் மீதிலே
விருப்பினைக்கொண்டாய்—நன்றோ.

சுந்தராங்கி—

பேதையர் யாரையும்-மீறிய பேயனே
பித்தம்பிடித்ததோடா—இனி
பேசிடிலே யவமானமடைகுவாய்
நிச்சயமாய் மூடா.

ஜெயபாலன்—

கேவலமான வோர் கீழ்மகன்
மீதினிலாசை நீ கொண்டாயே—அது
யாரும் நகைத்திடுங் காரியமல்லவோ
யென்னை மணப்பாயே.

சுந்தராங்கி:—

மேதைமதிவதன னெழில் பாதத்தின்
தூளிக்கிணையோ நீ—இனி
வீணிலுரையாடிப்பன்னிப்
பிதற்றாது-ஏகிடுவாயே நீ.

ஜெயபாலன்—(துடிதுடித்து) ஆகா! என்னை நீ இவ்வாறு தூஷிக்கத் துணிந்தனையா! அவனது பாததூளியா!

சுந்தராங்கி—(அழுத்தமாய்), ஆமாம். யான் அவ்வாறுசொன்ன துண்மையே. நீ செய்வதை உடனேபோய்ச் செய்து கொள்ளலாம்.

ஜெயபாலன்—இதை உனது தந்தையிடத்தில் தெரிவிக்கின்றேன்.

சுந்தராங்கி—உனது தங்கையிடத்திலுந் தெரிவிக்கலாம். அவள்மிக்க நற்குணமுடையாள். ஆதலின் அவள் என்மீது முற்றும் விரோதமான எண்ணங்களைக் கொள்வதிற் றடையில்லை. என்மீது நீ எவ்வளவு அதிகமாய் அதிருப்தி யடையக் கூடுமோ அவ்வளவு அடையலாம்.

(சுந்தராங்கி தனது அந்தப்புரத்திற்குள் சென்று விடுதல்)

ஜெயபாலன்—ஆகா! அவனது பாத தூளிபா! நல்லது! இதற்குத் தக்கபடி செய்விக்கின்றேன்.

(ஜெயபாலன் செல்லுதல்)

நான்காங் களம்

கலிங்கதேசம்—பலராமன் மாளிகை.

(பலராமனும்—மதிவதனனும் சம்பாஷித்தல்)

மதிவதனன்—நீவிர் அதைப்பற்றிச் சிறிதும் சந்தேகிக்க வேண்டியதில்லை. அவளுடைய மனோவுறுதிக்கு ஒருபோதும் குறை வுண்டாகாதென்பது நிச்சயம். ஆகா! அவள் என்மீது கொண்ட பிரியம் அரசனுக்குமாத்திரமிருக்குமாயின் எனது பாக்கியத்தை என்னெனச் சொல்வேன்!

பலராமன்—அரசனை உன் வசப்படுத்த என்ன செய்யலாமென உத்தேசிக்கின்றனை?

மதிவதனன்—ஒன்றும் செய்ய நினைக்கவில்லை. யான் பொறுமையுடன் இத்துன்ப காலத்தைக் கழித்து நற்காலத்தை எதிர் நோக்கி யிருக்கவேண்டியதே யன்றி வேறிலது.

பலராமன்—இக்கலிங்க தேசத்தரசன் அதிவீரனைப்பற்றி உனதரசன் கேள்விப்பட்டிருப்பான். பராக்கிரமபாகு மிக்க சாமர்த்திய முடையான். தனது காரியத்தை நன்ருய் நிறைவேற்றுவான். உனதரசன் கொடுக்கவேண்டிய கப்பங்களை இன்னமும் பாக்கியாய் வைத்துக் கொள்ளானென நினைக்கின்றேன். ஏனெனில் இக் கலிங்கதேசத்தின் சேனைகளுடைய பராக்கிரமத்தை அவனறியாதவனன்று. இவர்களாலடைந்தபுண்ணையும், விசனத்தையும் இன்னம் அவன் மறந்திரானெனத் தோன்றுகின்றது.

மதிவதனன்—யான் அவ்வாறு நினைக்கவில்லை. இருவர் சேனைகளின் சங்கியை, பலாபலம், தாரதம்மியம், முதலியவற்றைப் பற்றிய விவரங்களை யானறியேனுயினும், இதனுல் பெரும் போரே உண்டாகுமென நினைக்கின்றேன். நடுவழியில் நிறுத்தப்பட்டிருக்கும் கலிங்க தேசத்துச் சேனைகள் மாளவ தேசத்திற்குச் சென்றுவிட்டதாய் நீவிர் விரைவிற் கேள்விப்படுவீர். மாளவ தேசத்தினர், இக்கலிங்கத்தைப் பற்றிச் சிறிதும் அஞ்சுவதாய்த் தோன்றவில்லையாதலின் ஓர் சிறிய காசும் இவர் பெறுவதில்லை. மாளவதேசத்திய சேனைகள் இப்பொழுது மிக்கத் தைரியத்தையுடையனவையாயும் நன்ருய்த் தேர்ச்சி பெற்றனவையாயு மிருக்கின்றன. அவருடைய சௌரியம் விரைவில் வெளியாகும்.

(சூரசேனன் வருதல்)

பலராமன்—அதோ! சூரசேனன் வந்தனன்!

மதிவதனன்—ஆகா! காற்றினைவாகனமாய்க் கொண்டு வந்தீர்போலும்! எவ்வளவு விரைவில் திரும்பி வந்துவிட்டீர்.

பலராமன்—நண்பா! சூரசேனா! வருவாய்.

மதிவதனன்—அவ்விடத்திற் கிடைத்த சுருக்கமான மறுமொழி உம்மை இவ்வளவு துரிதத்தில் திரும்பிவந்துவிடுமாறு புரிந்ததுபோலும்!

சூரசேனன்—ஆகா! உமது பிரிய சுந்தரியைப் போன்ற கட்டழகியை யான் இது வரையிற் கண்டதேயில்லை!

மதிவதனன்—அவள் யாவரினும் சிறந்த அழகியாயினும் என்னைத் தவிர மற்றவருக்கு முற்றும் வஞ்சகியாயிருப்பளென்பதுறுதி.

சூரசேனன்—இதோ! உமக்கோர் கடிதங் கொடுத்தனள்.

மதிவதனன்—(கடிதத்தை வாங்கியவண்ணம்) இதில் எழுதப்பட்டிருப்பது நல்ல சங்கதி தானே?

சூரசேனன்—அப்படித் தானிருக்கவேண்டும்.

பலராமன்—நீ அங்கிருந்தபோது பராக்கிரமபாகு அவ்விடம் வந்து விட்டனனா?

சூரசேனன்—அவன் வரப்போவதாய்ச் சொல்லிக்கொண்டனர். நான் அங்கிருந்த வரையில் வரவில்லை.

மதிவதனன்—(கடிதத்தைப் படித்துவிட்டு) எல்லாம் நல்ல சமாசாரமே—நண்ப! நிகழ்ந்த விருத்தாந்தம் என்ன? அவள் உம்மிடத்தில் எவ்வாறு நடந்து கொண்டனள்? அவள்தனது இயற்கை ஒளியுடன் பிரகாசிக்கின்ற

னளா! அல்லது உம்மைக்கண்டு அவ்வொளி மழுங்கிற்று?

சூரசேனன்—ஆகா! யான் தோற்றிருப்பேனுயின் எனது ஆஸ்தி முழுதையு மன்றோ இழக்க நேர்ந்திருக்கும். ஐயோ! இன்னமோர் நாள் மாளவதேசத்திலிராது வந்து விட்டதைப்பற்றி மனம் சஞ்சலப்படுகின்றது! நண்பரே! உமது மோதிரத்தை யான் ஜெயித்து விட்டேன்.

மதிவதனன்—(ஆத்திரத்துடன்) அப்பெண்மணியை நீ வெல்வது ஒருபோதும் பலியாக் காரியம்.

சூரசேனன்—இல்லவே யில்லை. அவள் வெகுசுலபத்தில் என் வலையிற் பட்டனள்.

மதிவதனன்—கீழே விழுந்தவன் தனது வெட்கத்தை மறைத்தற்காகச் சிரிப்பதைப்போல நீர் தோற்று வந்ததைப் பரிகாசமாய்த் தெரிவிக்கின்றீர் போலும். நீர் எவ்வாறு நட்பாய்ப் பேசினும், இனி நாம் நண்பரான்றென்பதை நீர் அறியவேண்டியதன்றோ.

சூரசேனன்—நற்குணமுள்ள நண்பரே! நாம் முதலில் வற்பாடு செய்து கொண்டதற் கிணங்க நாம் இனி நட்பாயிருத்தலே வேண்டுமன்றி வேறிலது, நான் அவளை வென்று வராவிடிலன்றோ நாம் போரைப்பற்றிப் பேசவேண்டும். நான் அவளது கற்பையும் உமது மோதிரத்தையும் வென்று விட்டதாக இன்னொரு முறை உறுதியாகத் தெரிவிக்கின்றேன். அவளுடைய இஷ்டத்தின் பேரிலும், உமது சம்மதியின் பேரிலும் இவ்விஷபம் நிகழ்ந்தமையின் யான் உங்களிருவருக்கும் எப்படித் தீமை புரிந்தவனாவேன்?

மதிவதனன்—நீர் சொல்வது சரிதான், யான் முதலிற் கூறி

யதை மறந்தேனில்லை. அவளை நீவிர் உமது வசப்படுத்தியதாய் ஏதாவது அடையாளங்கள் கொணர்ந்திருப்பீராயின், எனது மோதிரமும் சிநேகமும் உமக்குச் சொந்தமே. இல்லையாயின், நீர் அவளுடைய கற்பைப் பற்றி இகழ்ச்சியாய்க் கூறியதற்கு உம்மைச் சும்மா விடேன்.

சூரசேனன்—நான் தெரிவிக்கும் அடையாளங்கள், என் வார்த்தைகளை அனேகமாய் உண்மைப் படுத்தும். எனது பிரமாணத்தால் மேலும் அதை உறுதிப்படுத்தத் தயாரா யிருக்கின்றேன். எனினும் நீர் இவ்வடையாளங்களைக் கேட்ட பின்னர் என் பிரமாணத்தையே வேண்ட மாட்டீர்.

மதிவதனன்—எங்கே! தெரிவியும்! பார்க்கலாம்.

சூரசேனன்—முதலில் அவளுடைய சயன அறையைப்பற்றித் தெரிவிக்கின்றேன். அவளது சப்பிர மஞ்சம் தங்கத்திலும் தந்தத்திலும் இயற்றப்பட்டு இடை யிடையே வைரம் பஞ்சை முதலிய சிறந்த கற்களா லிழைக்கப் பெற்றிருக்கின்றது. அவ்வேவார் மஞ்சத்தின் விலைக்கும், வேலைத் திறத்திற்கும் இவ்வுலகம் முற்றும் பொருமானமாவதில்லை.

மதிவதனன்—இது உண்மையே யாயினும், இதை அறிவது வெகு எளிது. இதை இவ்விடத்தி லிருந்தவாறே என் மூலமாயோ அன்றிப் பிறர் வாயிலாயோ தெரிந்து கொண்டிருக்கலாமே. இதற்காக நீர் அவ்வளவுதூரம் சென்றிருக்க வேண்டியதில்லையே.

சூரசேனன்—இன்னமுந் தெரிவிக்கின்றேன். அப்பொழுதாவது உண்மையாய்த் தோன்றுமென நினைக்கின்றேன்.

மதிவதனன்—எங்கே பார்க்கலாம்.

சூரசேனன்—அவளுடைய மஞ்சத்திற்குத் தென்புறத்தில் ஓர் பலகணி இருக்கின்றது. அதன் வேலைத்திறனை என்னெனச்சொல்வேன்! அது மனிதனது கைகளாலும் அறிவினுலும் இயற்றப்பெற்றதே யன்று. இயற்கையாய்க் கடவுளால் நிர்மாணம் செய்யப்பட்டதென்றே தோன்றுகின்றது. சிறுசிறு நவரத்தினக் கற்களிற் செதுக்கப்பட்ட அழகிய பதுமைகள் அதிலிழைக்கப் பெற்றிருக்கின்றன. ஆகா! அவைகளை இன்னோர் முறைகாண எனக்குப் பெரும் அவா தோன்றுகின்றது.

மதிவதனன்—இது யாவராலும் மிக்கப்புகழ்ந்து கூறப்படுதலால், இஃதும் பிறர்சொல்லித் தெரிந்து கொள்ளக் கூடியதே.

சூரசேனன்—அவளது மஞ்சத்திற்கு மேல் தங்கத்தினுற் செய்யப்பட்ட நான்கு கந்தருவப்படிவங்கள் சாய்ந்த வண்ணம் புஷ்பமாரி பெய்வது போலிருக்கின்றன.

மதிவதனன்—நீர் கூறிய இவைகளெல்லாம் அவளுடைய கற்பிற்கு யாதொரு ஹானியையும் சுட்டவில்லை. அவளுடைய சயன அறையிலிருப்பவைகளைச் சரியாய்த் தெரிவித்தீர். இவைகள் யாவும் உமது சிறந்த ஞாபக சக்தியைப் புலப்படுத்துகின்றனவே யொழிய பந்தயத்தை வெல்லவில்லை.

சூரசேனன்—(சுந்தராங்கியின் மோதிரத்தைக்காட்டிய வண்ணம்) நண்பரே! இம்மோதிரத்தைப்பாரும். இப்பொழுது உமது முகம் வாட்டமடைவது நிச்சயம். நீர் முன்னர் கொடுத்த மோதிரத்தையும், இதையும் ஒன்றாய்ச்சேர்த்து மணம் புரிவிக்கின்றேன். இவை இரண்டும் இனி எனக்கு ரியனவே.

மதிவதனன்—(திகைத்து) எங்கே! எங்கே! அதை இன்னோர் முறை பார்க்கின்றேன். இது என்னாலீயப்பட்டதைப்போலிருக்கின்றதே.

சூரசேனன்—அது உம்மால் சுந்தராங்கியிடத்திற்கொடுக்கப்பட்டதே. நீர் அவ்வளவு தூரம் ஒப்புக்கொண்டதே போதும். அவள் இதைத்தனது சுண்டுவிரலினின்று கழட்டி எவ்வளவு குளிர்ந்த இனிய வதனத்துடனீந்தனள், அவள் அவ்வாறு இன்னும் கொடுப்பதுபோலவே எனது கண்களுக்கு முன்னர் தோன்றுகின்றனள். அவளீந்த நிலைமையாகிய அவ்வழகிய தோற்றம் இவ்வாபரணத்தின் விலையை எவ்வளவு உயர்த்தியது. அதைத்தான் இதற்குமுன் விலைமதிப்பற்றதாக மதித்ததாயும் இப்பொழுது அவ்வாறு நினைக்கவில்லையென்றும் புகன்ற வண்ணமிதைச் சுந்தராங்கி கொடுத்தனள்.

மதிவதனன்—அதை என்னிடத்திற் கொடுக்குமாறு கழட்டியனுப்பியிருக்கலாம்.

சூரசேனன்—அவள் உமக்கெழுதியிருக்கின்ற கடிதத்தில் அவ்வாறு யாதாயினும் தெரிவித்திருக்கின்றனளோ?

மதிவதனன்—(முகம் மாறி) இல்லை யில்லை. அவ்வாறு எழுதவில்லை. இம்மோதிரத்தை நீரே எடுத்துக்கொள்ளும். எனக்கு இனி அது தேவையில்லது. இம்மோதிரம் கண்குத்தி நாகத்தைப்போல அதைக்காணுமென்னைக் கொல்கின்றது.

(இராகம்-மோகனம்.)

அழகினிற் கற்பேயின்று டலத்திலுண்மையின்று
விழைவுடன் விரும்பல் வேறோர்விடன் வாவிரைவிலேகும்

மழைவிழிமடவோர் முற்றும் வஞ்சகருறுதியற்ரு
ரிழுதையேயறியவொண்ணு நீலியேயறிந்தேனுன்னே.

ஆகா! அழகு எவ்விடத்தில் அதிகமாயிருக்கின்றதோ அங்கு கற்பும், அதிகப் பாசாங்கு எவ்விடத்திலுளதோ அங்கு உண்மையும், வேறு ஆடவரிருக்குமிடத்தில் சிறுமியர் தமது காதலரிடத்திற்கொண்ட ஆழ்ந்த அன்பும் இராதுபோலும். மகளிர் எத்தகைய உறுதி புகன்ருலும் அணவயாவும் வேஷமேயன்றி வேறன்று. ஆகா! சுந்தராங்கி! நீ பிறராலறியக்கூடாத ஆழ்ந்த மனதைக்கொண்ட நீலியாயன்ரே முடிந்தனை!

பலராமன்—என தரிய நண்பா! மதிவதனு! ஆத்திரப்பட்டு இதற்குள் ஏன் மனங்கலங்க விடுகின்றனை? உனது மோதிரத்தைத் திரும்ப வாங்கிக்கொள். இதற்குள் சூரசேனன் ஜெயித்து விட்டதாகுமோ? அவள் இம்மோதிரத்தை எங்கேயாயினும் மறதியாய்ப்போட்டிருக்கலாம். அல்லது அவளுடைய தாதியரில் ஒருத்தியைத் தனத்தின் மூலமாய் வசப்படுத்தி யிருப்பின், அவள் இதைத் திருடிக்கொணர்ந்து கொடுத்திருக்கலாம்.

மதிவதனன்—உண்மைதான். அவ்வாறே நடந்திருப்பதாய்த் தான் எனக்குத் தோன்றுகின்றது.—இம் மோதிரத்தைக் கொடுத்துவிடும். இது போதாது. இது களவாடப்பட்டதா யிருக்கலாம்.

சூரசேனன்—தெய்வத்தின் மீது பிரமாணமாய்த் தெரிவிக்கின்றேன். இதை அவளிடத்திருந்தே வாங்கினேன்.

மதிவதனன்—(பதைபதைத்து) ஆகா! கடவுள்மீது ஆணையிட்டுத் தெரிவிக்கின்றனரே. அப்படியாயின் உண்மை

இழுதை=பேய்.

யாய்த்தானிருக்க வேண்டும். நீரே மோதிரத்தை வைத்துக்கொள்ளும். அவள் அதை ஒரு போதும் இழப்பவளன்று. அவளது தாதியர் அவளிடத்தில் முற்றும் அபிமானம் அன்பு முதலியவற்றைக் கொண்டவர். ஒருபோதும் பொய்யுரையார். அவளை உயிரென மதிப்பவர். வேறோர் தேசத்திலிருந்து வந்த அன்னிய னொருவனது மொழியின் பேரில் அவர் ஒருபோதும் திருடுவதற்கிணங்கா ரென்பது நிச்சயம். இவர் அவளை வென்றது உண்மையே :— இம்மோதிரங்களை நீரே எடுத்துக்கொள்ளும். அவள் வேசையென்னும் அரிய மேன்மையை மிக்கப் பிரயாசைப்பட்டுத் தேடிக் கொண்டனள். பாழும் நரகங்கள் எனக்கு உனக்கென இவளைப்பாகித்துக் கொள்ளட்டும்.

பலராமன்—மதிவதனா! சற்று பொறுமையைக் கொள்வாய். இதையே உறுதியான சாக்ஷியாய்க் கொள்வதற் கிடமில்லை. இது யாவும் சூதாயிருக்கலாம், நீ மனந் தளராதே.

மதிவதனன்—(உறுதியாய்) இல்லை யில்லை. இவரிருவர்க்கும் ஆழ்ந்த நட் புண்டானது நிச்சயமே.

சூரசேனன்—இன்னும் இவ்விஷயத்தில் திருப்தியடைய நினைப்பீராயின் மேலும் தெரிவிக்கின்றேன். அவளது அழகிய மார்பின் வலப்புறத்தில் ஓர் சிறிய மச்சமிருக்கின்றது. அது யாதாயினும் அழுக்கோ அல்லது மச்சந்தானோவென யான் முதலிற் சந்தேகித்து அதைத் தீண்டிப் பார்த்தேன். மச்சமென்றே உறுதி கொண்டேன். ஆகாகா! அக்காட்சி எனது கண்களுக் கெதிரில் நிற்கின்றது. நீங்களிருவரும் பால்யம்முதல் ஒன்றாய்

வளர்ந்தோராயிற்றே, அம்மச்சத்தை நீரும் பார்த்திருக்கலாம்.

மதிவதனன்—ஆகா! இது ஒன்றே போதும். இது பொய்யென்று இவ்வுலகத்தினர் யாவரும் சாக்ஷி சொல்வரேனும் பின்னதை யார் நம்புவார்.

சூரசேனன்—இன்னம் தெரிவிக்கட்டுமா?

மதிவதனன்—போதும் போதும். இதுவே போதும், மேல் நடந்தவற்றை யொன்றையும் விவரிக்கவேண்டாம்.

சூரசேனன்—இவை உண்மையெனப் பிரமாணம் தேவையானாலும் செய்யத் தயாரா யிருக்கின்றேன்.

மதிவதனன்—தேவையில்லை. நீர் இவ்வாறு செய்யவில்லையென இனிப் பிரமாணம் செய்தாலும் யான் அதை நம்பேன். உம்மைக் கொல்வது முறுதி.

சூரசேனன்—யான் செய்ததை எதற்காக இல்லையென மறுக்கப் போகின்றேன்?

மதிவதனன்—(பொங்கி எழும் கோபத்துடன்) ஆகா!

(இராகம்—நாதநாமக்கிரியை)

உலகினில லகிலாதகொலைபகை களவுகாமங்
கலகமோடிடும்பை நோயுங்கழறிடு மவத்தமோசஞ்
சலனமும் வறுமையாசையவமானம் பருகல்பாவம்
நிலைத்திடல் தெரிவையாலில்லையேற்றுறக்க மீதே.

யான் இப்பொழுது அங்கிருப்பேனாயின் அவளைத் துண்டு துண்டாய்க் கிழித்தெறிவேன். எனினும் யான் இப்

அலகிலாத=எண்ணிக்கையற்ற; தெரிவை=பெண்; துறக்கம் =சுவர்க்கம்

பொழுதே அங்கு சென்று அவளுடைய தந்தைக்கு எதிரிலேயே அவளைக் கண்டதுண்டமாய் வெட்டியெறிகின்றேன்.

(மதிவதனன் விரைவில் தனது அறைக்குட் செல்லுதல்)

பலராமன்—அடடா! மதிவதனன் அடக்க முடியாக் கோபத்தினைக் கொண்டு செல்லுகின்றனனே. ஐயோ, இதனால் என்ன தீங்கு விளையுமோ தெரியவில்லையே! தனக்கே யாதாயினும் பொல்லாங்கிழைத்துக் கொள்வன். நாமும் தொடர்ந்து சென்று அவனுடைய கோபத்தை மாற்றுவோம்.

சூரசேனன்—அப்படியே செய்யலாம்.

(இருவரும் பின்னுற் செல்லுதல்)

மூன்றும் அங்கம்

முதற் களம்

மாளவதேசத்தரசனது கோலுமண்டபம்.

பிரதாபசிம்மன், சரசாங்கி, ஜெயபாலன், மந்திரி முதலியோரும் மற்றவரு மிருத்தல்.

அரசன்—

இராகம்-கல்யாணி.

தரணியில் மகிபனுகிச் சகமெலா மடக்கியாள
லரிதினுமரிதே யஃதுகடவுளிற்கடுத்த தானம்
பெரிய விந்நிலைமை யிந்தப்பேதையின் பாலதாதல்
பரமனதருளேயன்றிப் பகர்தலுக் கேதுவென்னே.

ஏ! மந்திரி! இந்நகர விஷயங்களைச் சரியாய்ப் பார்த்து வருகின்றனையா?

மந்திரி—ஆம்! அரசே! யாவற்றையும் ஒழுங்காய்ப் பார்த்து வருகின்றேன்.

அரசன்—

இராகம்—மோகனம். தாளம்-ஆதி.

(கபாகரி-சரிகாரிசா-சரீசதசா-கபதரி.)

பல்லவி.

மந்திரியென்—சங்கைகளை—வந்துநீக்குவாய்
மகிழ்வுற

சரணங்கள்.

(1) அந்தணர் முதலாவோர்—தந்துறைவழுவாமல்
அவரவர் நிற்கின்றுரா அறைகுவாய் தெரியவே (ம)

(2) எந்தனதாளுகையில்—நகர்செழித்து வளர்ந்தே
யெத்தகைத் துன்பமின்றி யிருக்கின்றதாவுரை (ம)

மந்திரி—வேந்தே! நமது நாட்டில் நற்காரியங்கள் யாதொரு குறைவுமின்றி நடந்தேறி வருகின்றன. தீயவை யாவும் சூரியனைக்கண்ட இருளைப்போல விலகி, இருந்தவிடந் தெரியாமல் ஒடுங்கிக் கிடக்கின்றனன். அரசே! நமது தேசத்திய அந்தணரின் மேன்மையை என்னென விரிப்பேன்!

(இராகம்-தோடி)

துதிகொண்ட மறையோர்கள் நதிசென்று திரிகாலந்
துகள் செல்ல முழுகி யெழுவார்
துதைகின்ற வினை தீர மனநைந்து ஜெபஹோம
முதலுற்ற கருமம் புரிவார்
விதியொப்ப விதிகாச முடிவற்ற பலவேத
மிணையற்ற பதினெண் கதையா
மெனுமிக்க வொளிர்ஞானம் விகசிக்கும் வழியான
விவைமுற்றும் படனம் புரிவா
ருதயன்ற னொருபாதை விலகிட்டு மிவர்நீதி
முறைதப்பி வழுவ லுளதோ
முடியற்று விழுமேனு மொழிதப்பி யொழுகார்க
ளொழிவின்றிக் கடவுள் தெளிவா
ரதிதிக்கு மனதோடு துதிசெய்து முணவீவ
ரழிவற்ற பதவி யடைவார்
தலைவன்றன் நிலைபேறு மழைபெய்தல் செழிதேய
மவரின்றி யணுவு மிலவாம்.

சிறந்த அண்ணலே! நமது தேசத் தந்தணரைப் போல எத்தேசத்திலுமே கிடையார். இவர் எத்தகைய சிலர். அவரில்லையாயின் இப்புவியே நிலைத்தலரிது.

மறையோர்=பிராமணர்; துகள்=குற்றம்; துதைகின்ற= நெருங்கிய; விதியொப்ப=சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டவாறு; விகசிக்கும்=புஷ்பிக்கும்; உதயன்=சூரியன்; முடி=சிரசு, தலைவன்=அரசன்.

அரசன்— ஆகா! அப்படியா! மெத்த சந்தோஷம்.

விகடகவி—இராஜாதிராஜனே ஓர் சிறிய விண்ணப்பம்.

அரசன்—என்னடா ஆரம்பிக்கப் போகின்றனை?

விகடகவி—மகாப்பிரபுவே! நமது தேசத்திய சில பிராமணரின் தன்மையை யான் தெரிவிக்கின்றேன் செவி சாற்றி யருளுங்கள்.

(இராகம்—ஆனந்தபைரவி.)

கலிகால மறையோர்க ளதிகாலை சென்றிடுவர்
காபி டீ விற்குமிடமே
கவலாது பலநீசர் கழுவாத வெச்சில்தனிற்
காதலோ டுண்டு மகிழ்வார்
தலைபோடி மேலங்கி கீழங்கி கொண்டிடுவர்
ஆங்கிலே யர்கள் போல்வார்
சதாகாலம் லெமனேடு முயர்சோடா நெட்டிடுவர்
சார் மிஸ்ட ரென்று சொல்வார்
சிலைமீதும் செம்பிலும் தெய்வமிலை யென்றிடுவர்
வேதமோ டாம்லை யென்பார்
சேவகா நிலைமையைத் தலைமையாயேற்பரே
கேவலம் பல்வி ளிப்பார்
அலகிலாப் புளுகோ டழுக்கா று சுயநன்மை
மோசமுங் கோளு முடையார்
பலபாஷை கலவாது மொழியார்கள் கலிகால
வாரியோ ரென்ன விந்தை.

அரசன்—சே! மூடா! நமது தேசத்து அந்தணர் ஒருபோதும் அவ்வாறு செய்யார். அவர் இவ்வாறு நீசராய் மாறுவரேல் நமது தேசம் க்ஷீணித்து க்ஷாமத்திற் கன்றோ இருப்பிடமாய் நாசமடையும். அவர் மற்ற

காதலோடு=ஆசையோடு; சிலை=கல்; அலகிலா=எண்ணிக்கையில்லாத; அழுக்காறு=பொறாமை.

ஜாதியாரிலும் அதிகோசர புத்தியை யுடையோரா யிதுவரையிலிருந்து வந்ததாகத் தெரிகின்றதே அதன் காரணமென்ன! அவர்களது ஆசார சீலத்தினலும் மனேதகத் தூய்மையினலும் ஆழ்ந்த வித்தையினலு மன்றோ. அவர்கள் முற்கூறியவாறு, தமது தன்மைக்கு விரோதமாய் ஒழுகி மலினமடைவரேல், இத்தகைய பல சிறப்புகள் வெகு துரிதத்திலில்லையா மன்றோ. ஆதலின் அவர் ஒருபோதும் அவ்வாறு செய்யாரென் பது தேற்றம். சே! நீ இனி இவ்வாறு இவரைப் பற்றிப் புறணி கூறப்போகின்றனே. ஜாக்கிரதை.

(ஓர் சேவகன் வருதல்)

சேவகன்—மகாராஜனே! கலிங்கதேசத்திலிருந்து வந்த பராக்கிரமபாகு சபைக்குவர ஏவலை எதிர்பார்க்கின்றனன்.

அரசன்—வரவிடு.

(சேவகன் செல்லப் பராக்கிரமபாகு வருதல்)

பராக்கிரமபாகு—அண்ணலே வந்தனம்.

அரசன்—மெத்த சந்தோஷம். உனது தேசத்தரசன் அதிவீரன் சௌக்கியமாயிருக்கின்றனு?

பராக்கிரமபாகு—யாவரும் சுகமே.

அரசன்—நீ வந்த விசேஷமென்ன? அதிவீரன் நமக்கு யாது சமாசாரமனுப்பினன்?

பாாக்கிரமபாகு—சிறந்த மன்னனே! மன்னித்தருளுவீர். அதிவீரனது தந்தையின் பராக்கிரமத்தையும் வீரதீரச் செயல்களையும் எவ்விடத்திலும் அறியாதாரிலர். அவர் இறந்தும் இவ்விஷயம் இன்னம் புகழ்ந்து கூறப்படு கின்றதல்லவோ? உங்களதுதாதை அவருடன் சண்டை

செய்து, மிக்க சௌரியத்துடன் போர்புரிய, அதைக் கண்டு வியப்படைந்த அதிவீரனது பிதா இவரோடு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர். ஒவ்வொரு வருஷமும், தலைமுறை தலைமுறையாய் இத்தேசத்தரசர் கலிங்க தேசத்திற்கு ஓர் லக்ஷம் பொன் கப்பம் கட்டி வருவதென்றும் இனி எமதரசர் இத்தேசத்தின் மேற் சண்டைக்கு வருவதில்லையென்றும் ஏற்பாடு செய்து கொண்டனர். அவ்வாறே உங்களது தாதையின் கடைசிக்காலம் வரையில் திறைசெலுத்திவந்தனர். நீங்கள் அரசியலை ஏற்றுக்கொண்டது முதல் அவ்வாறு நடவாமல் நின்றுவிட்டதன்றோ.

சரசாங்கி—இனி எப்பொழுதும் அவ்வாறே பணம் செலுத்தப்படாமல் நின்றுவிடுமேல், இதுவும் வழக்கமாய்ப் பழமையாய் விடுகின்றது. பணம் பெறவில்லையேயெனும் உங்களுடைய கவலையும் நீங்கிவிடுகின்றது. ஆதலின் இவ்வாறே இனியும் நடந்து வரட்டுமே.

ஜேயபாலன்—இந்நகரம் இந்த அதிவீரனைப்போல எத்தனையோ மகா அதிவீரரைக் கண்டிருக்கும். மாளவ தேசத்திற்கும் உங்களுக்கும் யாது சம்மந்த மிருக்கின்றது? இது பிரத்தியேகமான இராஜ்ஜியம். எக்காரியத்திற்காயினும் யாம் உங்களது உதவியைத்தேடுகின்றோமா ஒன்றுமில்லை. ஆதலின் நாங்கள் ஓர் செல்லாத காசும் கப்பமாகக் கொடோம்.

சரசாங்கி—நீ குறிக்கும் உடன்படிக்கையைப் பற்றி நாங்கள் நன்குயறிவோம். அப்பொழுது நிகழ்ந்த வற்றையும் கேள்வியுற்றிருக்கின்றனம். அதிவீரனது தகப்பன் இங்கு வந்து பிரமாதமாய்ப் போர்செய்து தனது வெற்றிக்கொடியை நாட்டி இத்தேசத்து வேந்தனைஜெயித்தா

னில்லை. அவன் இலக்ஷக்கணக்கான சேனைகளுடன் இத்தேசத்திற்கு வந்தது மாத்திரம் உண்மை. அச் சேனைவீரர்கள் இத்தேசத்து வீரர்களுக்கு முன்னில்லாது தோற்று விழுந்திறந்தனர். அதைக்கண்ட எமதரசன் மிருந்தோராகிய எளிய அச்சேனை வீரர்களிடத்துப் பச்சாதாபங்கொண்டு இவ்வாறு பணமாவது கொடுத்துவிடுவதாய்ப் புகன்று உங்கள் சேனைகளைத் திருப்பி யனுப்பிக் காப்பாற்றினராம். அதிவீரன் இதையோர் பெரும் வெற்றியாய் மதித்தனன் போலும்?

ஜேயபாலன்—இல்லை யில்லை. நாங்கள் இனிக் கப்பமே கொடோம். இத்தேசம் முன்னிருந்ததைக் காட்டிலும் இப்பொழுது மிக்கப் பலசாலிகளை யுடைத்தாயிருக்கின்றது. நிற்க, அதிவீரன் அவனுடைய தந்தையாகான். தாதையினுடைய சௌரியத்தை மாத்திரம் பெறுமல் அவனைப்போலப் பணத்தாசையை மாத்திரம் கொண்டால் காரியம் எவ்வாறு பலிக்கும்?

அரசன்—குழந்தாய்! உனது தங்கை முற்றும் தெரிவிக்கட்டும்.

ஜேயபாலன்—உங்களுடைய அதிவீரனையும் அவனது தந்தையையும் ஓர் நொடியில் மேற்கொள்ளக் கூடிய பலவீரர் இத்தேசத்தி லிருக்கின்றனர். இதனுல் யானென்னைத் தற்புகழ்ச்சி செய்து கொண்டதாய் நினைக்கக் கூடாது. எனினும் அவ்வீரர்களில் யானும் ஒருவனே. ஏன் கப்பம்? எதற்காக யாம் கப்பம் செலுத்துவது? அதிவீரன் இத்தேசத்திற் பிரகாசிக்கும் சூரியனை ஓர் துப்பட்டியால் மறைப்பதற்கோ அல்லது சந்திரனைத் தனது சட்டைப் பையில் வைத்துக் கொள்வதற்கோ சாமர்த்திய முடையவனு யிருப்ப

னேல், எங்களுக்கு வெளிச்ச மில்லாமற் போமோ வென அஞ்சி நாங்கள் அவனுக்குக் கப்பம் கட்டவேண் டியதே. அப்படி யில்லாம லிருக்கையில் நாங்கள் ஒரு போதும் கொடோம். நீர் தயவுசெய்பலாம்.

அரசன்—அதிவீரனது தந்தைக்கு இக்கப்பம் கட்டிய தற்கு முந்தி இத்தேசத்தார் யாதொரு கப்பமும் கட் டியதில்லே. என்னுடைய பிதா ஏதோ தயா விஷய மாய்க் கொடுத்துவந்ததை நீங்கள் ஒரு பெரிய ஜெயத் தின் பலனுய் நினைத்து அதனல் உங்களிடத்தில் ஏதோ விசேஷித்த பலமிருப்பதாய் எண்ணி எங்களே அடக்கி யாள முயலுகின்றீர். தயா விஷயமாய்ச் செலுத்தி வந்ததை ஏதோ கேவலமாய் மதித்துவிட்டீர்கள். நாங் களும் உங்களேப்போன்ற பலசாலிகளென்றே எங்களே மதிக்கின்றோம். எனது தந்தைக்கு இத்தகைய களங்க முண்டாக்கியதை நான் ஒருபோதும் ஒப்புக் கொள் ளேன்.

பராக்கிரமபாகு—அரசனே! எனக்குப் பெரிதும் விசன மாயிருக்கின்றது. உங்களுக்கு எத்தனே சேவகர்க ளிருக்கிறார்களோ, அதிவீரனுக்கு அத்தனே சிற்றரசர் களிருந்து அடி தொழுகின்றார்கள். இத்தகைய இராஜாதி ராஜனுக்கு நீங்கள் பகைவராக வேண்டும். கப்பங் கொடுக்கச் சம்மதியாவிடின் போரும் கலகமும் நேருமெனத் தெரிவிக்குமாறு அவன் எனக்குக் கட் டளே யளித்தனன். அவனுக்கு விலக்கமுடியாத கோப மும் வீராவேசமும் உண்டாவதிற் சந்தேகமிலது. அவன் பணித்ததை யறிவித்தேன். பிறகு உங்கள் சித்தம், யான் திரும்பிச்செல்ல விடையீயுங்கள். என்

விஷயத்தில் நீங்கள் அன்பு பாராட்டியதற்கு யான் மிக்க நன்றி செலுத்துகின்றேன்.

அரசன்—மெத்த நல்லது. அதிவீரன் எங்களிடமிருந்து கப்பம் பெறுவதற்கு யோக்கியதை யுடையவனெனத் தோற்றுவிப்பனேல், நாங்கள் அவனைக் கௌரவப் படுத்துவதிற் சந்தேகமில்லை.

பராக்கிரமபாகு—கூடிய சீக்கிரத்தில் அது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

ஜெயபாலன்—நமது அரசர் யாவற்றையும் நன்ருய்த் தெரிவித்தனர். உனக்கு இஷ்டமாயின் சிநேக பாவமாய் இன்னம் இரண்டொரு நாள் இங்கு மகிழ்வுடனிருந்து செல்லலாம். எங்களுக்கும் அது இன்பந்தரும். அதன் பிறகு நீங்கள் வேறுவித சம்பந்தத்துடன் எங்களிடம் வருவீராயினும் இரு தேசத்தாரும் சமர்க்களத்திற் சந்திக்கலாம். அதில் எங்களை வென்று துரத்திவிடுவீர்களாயின் எல்லாம் உங்களுடையதே. அன்றி நீங்கள் விழுவீர்களாயின் அதுவும் நன்றே. எங்கள் தேசத்திய காகம், பருந்து, நாய், நரி முதலியவற்றிற்கு உங்களாற் பெரும் விருந்து கிடைக்கும். அத்துடன் நம்முடைய வழக்கும் முடிவு பெற்றுவிடும்.

பராக்கிரமபாகு—முற்றும் சரியான விஷயமே! செல்லுகின்றேன். நகரை விட்டுப் புறப்படுகையில் திரும்பவந்து விடை பெற்றுக் கொள்ளுகின்றேன்.

(சென்று விடுதல்)

இரண்டாங் களம்

அரண்மனையில் சுந்தராங்கியின் அந்தபுரத்தின் வாசலில் புருஷோத்தமன் விசனத்துடன் நிற்றல்.

புருஷோத்தமன்—(தனக்குள் ஆச்சரியத்துடனும் துக்கத் துடனும்) அடடா? விபசாரமா! ஐயோ! இவ்வாறு எழுத எவ்விதம் துணிந்தீர்! எந்தத் துஷ்டன் இவள் மீது இவ்வாறு தோஷம் கற்பித்தன னென்பதை ஏன் எழுதாது விடுத்தீர்? ஆகா! பிறர் சொல்வது முற் றும் உண்மையென எளிதில் நம்பக்கூடிய உமது செவி களில் இத்தகைய கொடிய விஷத்தைப் புகட்டினவன் எந்தப் பாதகன்?

(இராகம்-முகாரி)

அவனியின் முழுது மிந்த வரசியைப் புரைவோருண்டோ
தவப்பயன் முழுதுங்கூடி நவையிலாப் புனிதமேயா
மிவளுரு வெனவே தோன்றியிருப்பதை யறிந்து முற்றும்
பவமொழி விடுத்தீர் மேலும் பற்பல புதுமை சொற்றீர்.

வேசையா? ஒருபோது மிலது. பரிசுத்தமே உரு வெடுத்ததென வந்த மங்கையன்றோ! இங்கு நெடிய கால மாயிருந்து இதை நன்றாயறிந்த நீவிர் இந்தப் புறணியை எவ் வாறு நம்பினீர்! ஆகாகா! இவளது பரிசுத்தத்திற்காக இவளை இவ்வாறு தண்டித்தீர் போலும். ஐயோ, இவள் கற்பே வடிவாயன்றோ விருக்கின்றனள். இவளை மகா லக்ஷ்மி என்று சொல்லத் தடையென்ன! ஐயோ, எனதரிய தலைவ! காலத்திற்கேற்ற மதியென்பதைப்போல், இப் பொழுது உமது நிலைமையும் செல்வமும் எவ்வளவு தாழ்ந் திருக்கின்றனவோ, அவ்வாறே உமது புத்தியும் மழுங்கி விட்டதோ? இவளைக் கொல்வதா! ஆகா!

பவம் = பாவம்

(இராகம்—தோடி.)

தலைவனென் பணியைநீக்கித் தரித்திரனுக் கிட்டாலு
மலகிலாத்துயரை யீந்தே யலக்கணிற் புகுத்திட்டாலுந்
தொலையவென் னுடலைவெட்டித் துண்டுகள் செய்திட்டாலுங்
கலைமகளனையவென்றன் றலைவியைத் தொலைத்தல் செய்யேன்.

சுந்தராங்கியை எனதுயிரினும் அதிகமாகவன்றோ மதித்திருக்கின்றேன். இம் மதிவதனனே யன்றி என்னைப் படைத்த கடவுளே நேரில் வந்து தேட்களும், பாம்புகளும், நெருப்புத்தணல்களும் நிறைந்த நரகத்தை எனக்கு முன் காட்டி அதற்குள் என்னைத் தள்ளி விடுவதாய்ப் பயமுறுத்தினும் யான் இவளைக் கொல்ல மனங்கொள்வேனோ! ஒருபோது மில்லை. ஆகா! அவளே மாளவ தேசத்தைவிட்டும் புறப்பட்டு வருவாளாம். நடு வழியில் யான் அவளைக் கொன்றுவிட வேண்டுமாம். இல்லை யாயின், யான் அவரிடத்தில் உண்மையாக நடந்து கொள்வதாய்ப் பிரமாணம் புரிந்திருப்பதற்கும் எனது அபிமானத்திற்கும் தவறுகுமாம். ஆகா! என்ன விந்தை! எனது அபியானத்தை அறிவதற்கு நல்ல காரியத்தைச் செய்ய ஏவினீர்! விஷப் பரிக்ஷை நன்று யிருக்கின்றது! உமது சேவகத்தை யான் இழந்து பிழைத்தற்கு வேறு மார்க்கமின்றி யான் தரித்திரனுய் யாசகம் வாங்க நேரினும், எனக்கு இதனுல் பல துன்பங்கள் சம்பவிப்பதாயினும், எனது உடம்பையே அணுவணுவாய் வெட்டிக் குறைத்துச் சித்திரவதை புரிந்தாலும் யான் பத்மாசனையை நிகர்த்த பரிசுத்த வடிவான சுந்தராங்கியின் சிரத்தின் உரோமத்திலிள்ளதோர் தூசிக்கும் தீங்கு செய்ய நினைப்பேனே? ஒருபோது மில்லை. இக்கொடிய கருத்தைக் கொண்ட இக்கடிதத்தைத் தீக்கிரையாக்க என் மனது நினைக்கின்றது. ஆகா! அதோ எனதன்னை வருகின்றனள்!

சுந்தராங்கி—

(சுந்தராங்கி வருதல்)

(திருப்புகழ்)

(1) கண்ணுறக் காதலனைக் காண்பதினி மேலெவணோ
புண்ணாகப் போனவெந்தன் மேனியொடு பாழ்மனமும்
பெண்ணாக யானுதித்த பேறெனது தீயவினைப்-பயனாகும்

(2) தள்ளாடுதே யுடலந்தாளவினி மேலுளதோ
விள்ளாத வாஞ்சையுடன் வேதனெம்மையேன் படைத்தே
யெள்ளேனு மாசைநிறை வேறலிலதாகச் சதி-செய்தானே.

(3) எங்கேகினாயோவென்ன வேங்குதெந்த னேழை நெஞ்சம்
தங்காதென் னாவியினித் தாவியுன்னை யானணுகல்
எங்காகுமோ தவறிற் போகுமிடமே தெனக்குப்-புகலேனோ.

ஐயோ! ஒவ்வொருகணமும் ஒவ்வொரு யுகமாய்த் தோன்றுகின்றதே. என்னாயுட்காலம் எவ்விதம் கழியப் போகின்றது.

ஆகா! புருஷோத்தமன் ஏன் விசனமுட னிருக்கின்றனன்!—அடே! புருஷோத்தமா! என்ன விசேஷம்? உன்னுடைய வதனம் வாட்ட முற்றிருக்கக் காரணமென்ன?

புருஷோத்தமன்—அரசி! எனது எஜமானனிடத்தி லிருந்தோர் கடிதம் வந்திருக்கின்றது.

சுந்தராங்கி—யார்? உனது எஜமானனா! எனது எஜமானனன்றோ!

(கடிதம்)

(இராகம்-ஆனந்தபைரவி.)

அனைத்தினுமரிய வென்றனாவியே சுந்தராங்கி
நினையொரு முறையேகாண நினைத்தனேன் கலிங்கம் விட்டேன்

துறைமுகமிருக்கு மூர்க்குத் துன்னுவையாயிற் காண்பாய்
குறைவிலா விருப்பைக் கொண்டேன் கூறிய பிழைத் தேநல்லேன்.

எனதரிய சுந்தராங்கி! நினது தந்தை என்மீது கொண்ட பெருங்கோபமும் அவர் என் விஷயத்திற் புரிந்த அநியாயமும் என்னை வருத்துவதினும், உன்னைப் பலநாட்களாய்க் காணுதிருத்தல், அதிகமாய்த் துன்புறுத்தி வதைக்கின்றது. யான் துறைமுகப்பட்டினத்தி லிருக்கின்றேன். என்மீதில் நீ கொண்ட அன்பு உன்னை எவ்வாறு தூண்டுகின்றதோ அவ்வாறு புரிவாய். உன்மீது யான் கொண்ட வேட்கை மேன்மேலும் அதிகரிக்கின்றதன்றிக் குறைந்ததில்லை. உனக்குச் சகல சுகமுமுண்டாவதாக.

இங்ஙனம் அன்பன்,
மதிவதனன்.

(விரைந்து)

ஆகா! இறகுகளைக் கொண்ட ஓர் குதிரை எனக்குக் கிடைக்கு மாயின் யான் உடனே பறந்து சென்று அவ்விடத்திலிருப்பேன்! புருஷோத்தமா, இக்கடிதத்திலெழுதப்பட்டிருப்பதைக் கேட்டனையா? எனது பிராணகாந்தன் மதிவதனன் துறைமுகப்பட்டினத்திற்கு வந்திருக்கின்றனன். இதைப்படித்துப்பார். என்னைப்போல நீயும் உனது எஜமானனைக்காண ஆவல் கொண்டிருப்பாய். பெரும்பாக்கியத்தைச் செய்த இத்துறைமுகம் இவ்விடத்திலிருந்து எவ்வளவு தூரத்தி லிருக்கின்ற தென்பதை விரைவில் தெரிவிப்பாய். நாம் ஒருவருக்கும் தெரியாமல் அரண்மனையிலிருந்து எவ்வாறு வெளிப்பட்டுச் செல்வது? நாம் அங்கு சென்றுவிட்டுத் திரும்பி வரும் வரையில் நாம் இங்கில்லாதிருந்ததற்கு யாது முகாந்திரம் தெரிவிப்பது? முதலில் ஒருவரும் அறியாவாறு நாம் எப்படிப் புறப்பட்டுச் செல்வதென்பதைக் கூறு

வாய்! புருஷோத்தமா! நாம் ஓர் மணியில் எத்தனை காத தூரம் செல்லலாம்?

புருஷோத்தமன்—அம்மா! காலையிலிருந்து மாலைக்குள் இரண்டு காதம் செல்வதே உங்களுக்கு மிக்க சிரமத்தைத் தரும்.

சுந்தராங்கி—புருஷோத்தமா! யான் பத்மாவதி யிடம் சென்று, கேட்போர்க்கு வெளியில் வருவதற்கு முடியாமற் சிறிது உடம்பு அசௌக்கியமா யிருப்பதால் உள்ளே சயனித்துக் கொண்டிருப்பதாய்த் தெரிவிக்குமாறு ஏற்பாடு செய்கின்றேன். நீ சென்று எனக்குச் சவாரிக்குத் தகுந்ததோர் உடைதயாரித்துக் கொண்டு வருவாய். அது சாதாரணமான நிலைமையிலிருக்கும் ஸ்திரீயின் உடைபோ லிருக்கட்டும், விரைவிற் சென்று வா.

புருஷோத்தமன்—எனதரிய அன்னை! இவ்விஷயத்தைச் செய்வதற்கு முன்னர் சிறிது நன்றாய் ஆலோசனை புரிந்து அதற்குமேற் செய்யுங்கள்.

சுந்தராங்கி—புருஷோத்தமா! இதில் யான் ஆலோசனை செய்வதற்கு யாது சந்தேக மிருக்கின்றது. எனது உயிர் நிலையையொத்த மதிவதனனது உருவம் எனது கண்ணிற்கு முன்னர் நிற்கின்றது. என் மனம் மற்றெதையும் நினைக்கவில்லை. உடனே சென்று அவனைக் காணுமல் இனியோர் கணமும் யான்பொறேன். துறைமுகப்பட்டினத்திற்குச் செல்லும் வழியில் என்மனது செல்லுகின்றதன்றி வேறு எத்தகைய மார்க்கத்திலும் செல்ல மாட்டாது. ஆதலின் வேறொன்றும் புகலாமற் செல்வாய்.

(புருஷோத்தமன் செல்லுதல்

மூன்றாங் களம்

மலையடர்ந்த பயங்கரமானதோர் ஆரண்யத்தின் மத்தியிலுள்ள குகை.

நரசிம்ம வீரன், சந்திரன் சுந்தரன் மூவரின் சம்பாஷணை.

நரசிம்ம வீரன்—எனதரிய பாலகர்காள்! இன்று காலைப் பொழுது எவ்வளவு இனியதாயிருக்கின்றது! மிக்கச் சிறிய இக்குகையின் தாழ்ந்த வாசலினிடத்து நன்றாய்க் குனிந்து வெளியே செல்லுங்கள். இக்குறிய வாயில் நமக்கு எத்தகைய நன்மை புரிகின்றது! காலையி லெழுந்தவுடன் கடவுளுக்கு முன்னர் எவ்வாறு குனிந்து வழிபாடு செய்யவேண்டு மென்பதைக் கற் றுக்கொடுப்பதோடு ஒவ்வோர் நாளும் நாம் எழுந்திருந் தவுடன் கடவுளிடத்தில் நாம் செலுத்த வேண்டிய இக்கடமையை நினைப்பூட்டுகின்ற தல்லவோ! வேந்தர் களின் அந்தப்புரத்தின் வாயில் மிக்க உயர்ந்த பெரும் இராக்ஷசன் கூடத்தனது முடியை எடுக்காமலும் குனி யாமலும் செல்லக் கூடிய அவ்வளவு உயரமுள்ளதாயி ருப்பதால் அது இக்கடனை ஒருபோதும் நினைப் பூட்டா தன்றோ. நாம் இக்குகையிலிருப்பினும் நமக்கு மன்ன ரும் நிகராவரோ செல்வக்குழந்தைகாள்! கடவுளை ஸ்தோத்திரம் செய்யுங்கள்.

சுந்தரன், சந்திரன்—அவ்வாறே செய்கின்றோம், பிதா!

(இராகம்-பாதி சாவேரி பாதி எதுகுல காம்போதி)

பொய்யினேன் புலையினேன் கொலையினே னின்னருள்
புலப்பட வறிந்து நிலையாப்
புன்மையேன் கல்லாத தன்மையேனன்மை போற்
பொருளலாப் பொருளை நாடும்
வெய்யனேன் வெகுளியேன் வெறியனேன் சிறியனேன்

விணையினே னென்றென்னை நீ
விட்டுவிட நினைவையேற்றட்டழி வதல்லாது
வேறுகதி யேது புகலாய்
துய்யனே மெய்யனே யுயிரினுக் குயிரான
துணைவனே யிணையொன் றிலாத்
துரியனே துரியமுங்காணு வதீதனே
சுருதிமுடி மீதிருந்த
வையனேயப்பனே யெனுமறி ஞாறிவை விட்
டகலாத கருணை வடிவே
யண்ட பகிரண்டமுமடங்க வொரு நிறைவாகி
யானந்தமான பரமே.

நரசிம்ம வீரன்—ஆகா! கண்மணிகாள்! எத்தகைய கவலைக ளிருப்பினும் துக்கம் நம்மை எவ்வாறு வருத்தினும் கட வுளைத் தோத்திரஞ் செய்த மாத்திரமே அவைகள் யாவும் தீயின்முற் பஞ்சென நீங்கி மனதில் ஓர்விதச் சந்துஷ்டியும், நம்பிக்கையும், ஊக்கமும் உண்டாகின் றன வல்லவா! கடவுளது நாமமே பெரும் மருந்து. அதுவே அமிர்தபானம். பாலகர்காள்! நாம் வேட்டை யாடச் செல்வதற்கு நேரமாகின்றது. போவோம் வாருங்கள். நீங்கள் மிக்க பாலியர்களாதலின் உங்க ளுடையகால்கள் இச்சிறிய குன்றிலேறுவதினால்நோகா. நீங்கள் அங்கு சென்று மிருகங்களைக் கலைத்துவிட்டு வேட்டையாடுங்கள். நான் இக்கீழ்த் தரையிலுள்ள ஆரண்யத்தில் வேட்டையாடுகின்றேன். அக்குன்றின் மீது நீங்கள் ஏறுவீர்களாயின், யான் உங்களுடைய கண்களிற்கோர் சிறிய பாகத்தினைப் போலப் புலப்படு வேன். அவ்வாறே ஒருவர் மேலான நிலைமைக்குச் செல்ல அவர் கண்ணிற்கு மற்றையோர் மிக்க அற்ப ராய்த் தோன்றுவர். அதன்மேலும் செல்லுவரேல், பிறர் இவரின் கண்ணிற்கே புலப்படமாட்டார். இக்

குன்றின் மீது செல்லின் அரசரது சபைகளில் நடந்து வரும் அக்கிரமச் செயல்கள் அரசரின் பக்ஷபாதமான காரியங்கள், முதலியவற்றைப்பற்றி யான் தெரிவித்திருக்கும் கதைகள், உங்கள் ஞாபகத்திற்கு வரும். அரசரிடத்திற் சேவகம் புரிதலு மோர் தொழிலாமோ! அவர்கள் பெறுவ தொன்று, புரிவதொன்றல்லவோ! நாம் இங்கிருத்தலைப் போன்ற பரமானந்த மெதிலுமில்லை யென்பது நிச்சயம். இங்கு எதைக்காணினும் அதனால் மனதிற்குத் திருப்தியும் ஆனந்தமுந் தெய்வ பக்தியு முண்டாகின்றன. ஓர் மரப் பொந்திற்குள் ஒருவருங் காணுவாறிருக்கும் வண்டினைக் காட்டினும் ஆகாயத்திற் பறக்கும் கழுகிற்கே விபத்ததிகம். நமக்கு இராஜனது தயவினால் ஏற்றமு மில்லை. அவனுடைய கோபத்தினால் தலைகீழாய்ப் பாதாளத்தில் விழும் விபத்துமில்லை. அவனுடைய சமுகத்தை எதிர் நோக்கிப் பணிந்து கேவலமாய் வணங்கி யிருத்தலான ஈனமுமில்லை. இங்கு நமக்கு நாமே பெரும் அரசர். எனினும், பிறதேசத்து வேந்தரால் நாம் புடையுண்பதுங் கப்பங்கட்டுதலு மில்லை.

சுந்தரன்—

(இராகம்-மோகனம்.)

அத்தனே குடம்பை நீங்காப் பறவையின்பார்ப்பை யொத்தே
மெத்தகை யுணர்வு மற்றோம் பேதைமைக் கிருக்கையானே
மொத்த னஞ்சிறைபுக் கோரைத்தன் பழுந்துயருங் கொள்வி
ருத்தருக்குரித்தே யாகுஞ்சுக மெனச் சாதந் தோன்றும்.

எனதரிய பிதா! நீவிர் கூறுபவை யாவும் உமது அனுபோகப் பயன்களே யன்றி வேறில்லை யென்பதுண்மை.

குடம்பை=கூடு; பார்ப்பு=குஞ்சு.

நாங்கள் கூட்டை விட்டகலாததும், இறகு முளைக்கப் பெறு ததுமான எளிய பறவைக் குஞ்சுகளைப்போல விருக்கின் றோம். இவ்வரண்யத்திற்கு அப்புறம் எவ்வாறிருக்கின்ற தென்பதைக் கண்டறியாதவர்கள். சாந்தமாய்க் காலங் கழித்தல் நல்லதாயின், நமது நிலைமை உசிதமானதே. இத ற்கு முன்னர் பல துன்பங்களையும் துயரத்தையும் அனுப வித்தவரும், வயது முதிர்ச்சி பெற்றவருமான உமக்கு இந் நிலைமையேபேரானந்தமுடைத்தாயிருக்கலாம். எங்களுக்கோ இது அக்ஞானம் முற்றும் நிறைந்த அறையா யிருக்கின்றது. இவ்விடத்தில் நாம் செய்யுங் காரியம் படுக்கையின்மீது பூப் பிரதக்ஷிணம் செய்வதை யொத்ததே. வறையறுக்கப் பெற்ற ஓரெல்லைக்கு அப்பாற் செல்லற்குச் செயலற்ற கைதிகளின் சிறைச்சாலையைப் போலல்லவோ இவ்விட மிருக்கின்றது.

சந்திரன்—

(இராகம்-கானடா)

தாதையே முதுமை தன்னிலறைவதற் கொன்றுங் கல்லாப்
பேதையாய் விலங்கை யொத்துப் பிறந்தவாறிருக்கின்றேமால்
தீதிலாவுயிரைக் கொன்றுதின் பதுந்துயின்று நாளும்
போதினைக்கழிப்பதன்றிப் புரிவது பிறிது முண்டோ.

எனதரிய பிதா! நாங்கள் உம்மைப்போல வயது முதிர்ந்தோராய் ஆனபின் எதைப்பற்றி உரையாடுவோம்! நாங்கள் ஒன்று மறியாப் பேதையராய்ப் பிறந்த நிலைமை யிலேயே யிருக்கின்றேமே! எங்களுடைய இப்போதைய நிலைமைக்கும் மிருகங்களின் நிலைமைக்கும் யாதொரு பேதமு மில்லை. வேட்டையாடுவதிலும், இறை தேடுவதிலும், புலி, ஓனாய், நரி, முதலியவற்றின் கொடிய தொழிலையே நாமும் பின்பற்றி வருகின்றேம். எது நமக்கு முன்னால் ஓடுகின்

றதோ அதைத்துரத்துவதே நமது பராக்கிரமச் செயல். மனிதராற் பிடிக்கப்பட்டுக் கூண்டுகளில் அடைபட்ட பறவைகள் அதையே இன்பமுடையதாய் நினைத்துப்பாடிக் களிப்படைதலைப்போல இச்சிறைச்சாலையை நாம் பெரும் ஸ்ரீமோக்ஷலோகமென மதித்து நம்மினும் சுயேச்சையா யிருப்பவர் இவ்வுலகத்தி லெவரு மிலரென நினைத்துப் பூரிப்படைகின்றோம்.

நரசிம்ம வீரன்—(சந்தோஷத்துடன்) ஆகா! குழந்தைகாள்! நீங்கள் எவ்வளவு அழகாய்ச் சம்பாஷிக்கின்றீர்கள். புல்லாங்குழலும், வீணையும், தேனும், கற்கண்டும், தேவாமிர்தமும், மாதுரியமானவை யென்போர் மடையரே. சிறுவர்களின் மழலைச் சொல்லைக் கேட்பதினும் இவை இனியவையாமோ! குழந்தைகளை யீன்று இவ்வுண்மையை அறிந்தோர் அவ்வாறு ஒருபோதும் தெரிவியார். பாலகர்காள்! நீங்கள் உலகத்தின் விஷயங்களை நேரிற் கண்டனுபவிக்கா விடினும் நீங்கள் அங்கு சென்று சிலகால மிருப்பீராயின் நீங்களும் எனதபிப்பிராயத்தையே கொள்வீர். அரண்மனைகளில் நடந்தேறிவரும் அக்கிரமங்களை என்னெனப் புகலுவேன்! கண்மணிகாள்! அது வாளின் நுனியிலிருந்து விளையாடுவதை யொத்தது. அங்கிருந்து உத்தியோகம் புரிவது மெத்தக்கடினம். அதைவிட்டு விடுவதும் துன்பம். அவ்விடத்திற் பெரும்பதவி யடைபவன் பாதாளத்தில் விழுந்து துன்புறுவது நிச்சயம். கீழே விழாவிடினும் அந்நிலைமை நெடிது நிலைப்பது துர்லப மாதலின் எப்பொழுது விபத்துச் சம்பவிக்குமோ வென நினைத்துச் சார்வதா சஞ்சலப் படுவது அவ்வாறு விபத்தை யனுபவித்தலினும் கொடிய

தன்றோ. போரின் விஷயமோ கூறலே அனுவசியம், புகழையும் கௌரவத்தையும் உத்தேசித்து நமது உயிரையும் மதியாது பல அவஸ்தைகளுக் கிலக்கா கின்றோ மாயினும் நமக்கு ஏற்கனவேயுள்ள புகழும் கீர்த்தியும் அழிந்துபோய் அவமானமும் தூஷணமும் வந்து சம்பவிக்கின்றன. ஒவ்வோர் சமயங்களில் நமது வீரச் செயல்களுக்கு, நன்றியற்ற தீமையே கைம்மாறாய்க் கிடைக்கின்றது. இவையனைத்திலும் கொடியது யாதெனில் நமது மேலோர் நம்மை அனுவசியமாய்த் தூஷிப்பதை நாம் முணுமுணுக்காமலும் அது அக்கிரம மென்று சொல்லாமலும் சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ளவேண்டும். தனயர்காள்! இவைகளின் உண்மையை எனது அனுபோகத்திலிருந்தே நீங்கள் தெரிந்து கொள்ளலாம். எனது தேகம் முழுதிலும் கலிங்க தேசத்தாரின் வாள் வெட்டிய தழும்புகள் நிறைந்திருத்தலை நீங்கள் இதோ பாருங்கள். சிறு வயதில் யான் மிக்கக் கீர்த்தி பெற்றிருந்தேன். மாளவ தேசத் தரசனாகிய பிரதாப சிம்மன் என்னை மிக்க அன்போடு பாராட்டி வந்தனன். யாதாயினும் போர் சம்பவிக்குமாயின், என்னையே முதலில் அழைப்பான். யான் பல போர்களில் மிக்கப்பராக்கிரமத்தைப் புலப்படுத்திப் பெரும்புகழ் பெற்றிருந்தேன். அப்பொழுது யான் எவ்வாறிருந்தே னெனில், ஒவ்வோர் கிளையும் பழச்சுமையைத் தாங்கலாற்றாது வளைந்திருக்கப்பெற்றதோர் பெரும் மரத்தை யொத்திருந்தேன். மரத்தின் கிளைகளை ஓர் இரவில் புயற்காற்றோ அல்லது திருடர்களோ உலுக்கிப் பழங்களையும் இலைகளையும் கீழே வீழ்த்தி மொட்டையாக்கி விடு

வதைப்போல, என்னைத் தழுவிய பெருத்தபுகழும் எனது இயற்கைச் சிறப்பும் மண்ணோடு மண்ணாய் ஓர் நொடியில் மறைந்தது. அதன் பின்னர் யான் ஓர் மொட்டை மரம் வெயிலாற் காய்ந்தும், மழையால் நனைந்தும், காற்றால் மோதப்பட்டும், வருந்துவதைப் போலப் பல துன்பங்களுக்கு ஆளாகினேன்.

சுந்தரன்—(விசனத்துடன்) ஆம். உண்மையில் அது நிச்சய மற்ற வாழ்வுதான்.

நரசிம்மவீரன்—இவ்வாறு நிகழ்தற்கு யான் செய்த பிழைதா னென்ன? ஒன்றுமே யில்லை. எனது விரோதிகளான இரண்டு பாதகர் பிரதாப சிம்மனிடத்திற் சென்று யான் உண்மையிற் கலிங்க தேசத்தாரோடு நட்பா யிருப்பதாயும் மாளவதேசத்தாரைத் தொலைத்துவிட இரகசியமாய் எண்ணங் கொண்டிருப்பதாயும் பிரமாண மாய்த் தெரிவித்தனர். அப்பொய்ச் சத்தியத்தின் முன் னர் எனது யோக்கியதாபக்ஷம் முழுதும் மழுங்கிப் பிரயோசனப் படாமற் போயிற்று. இதைக் கேட்ட அரசன் உடனே என்னை நகரைவிட்டுத் துரத்தி விட்ட னன். இவ்விருபது வருஷங்களாய் இக்குகையும் இதைச் சுற்றிய கானகமுமே எனது இராஜ்ஜியமாய் நினைத்துக் கொண்டு நான் காலங் கழித்து வருகின் றேன். இங்கு யான் யாதொரு தவறுமின்றிச் சுயேச் சையாய்க் காலங்கழித்து வருகின்றேன். எனது முந் தியநாட்களில் கடவுளை நினைப்பதற்கே அவகாசத்தைக் கண்டேனில்லை. என்னுடைய அரசனது நினைவும், போரின் ஞாபகமுமே, என் மனத்தை விட்டகலாப் பெருந் தெய்வங்களா யிருந்தன. இப்பொழுதோ அப் பாவங்களை நிவர்த்திக்கும் மார்க்கந் தேடப் போதிய

காலம் கிடைக்கின்றது. இப்பொழுது யான் கடவுளை நினையாத நேரமேது?—பாலகர்காள்! இவ்வாறு நாம் உரையாடி. உமது அரியகாலத்தை வீண்செய்வது நாம் செல்ல நினைத்தகாரியத்திற்கு கெடுதலானது. விரைவில் மலைக்குச் செல்லுங்கள். நம்மில் யாவன், ஓர் மானை அடித்து முதலிற் கொண்டு வருகின்றானோ அவனே இன்றைய விருந்திற்குத் தலைவன். அவன் சும்மா விருக்க மற்ற இருவரும் அதைச் சமைத்துப் பரிமாற வேண்டும். நானும் சுற்றிக்கொண்டு வந்து மலையடி வாரத்தில் உங்களைச் சந்திக்கின்றேன்.

சுந்தரன் சந்திரன்—

(நந்தன் சரித்திரம்—பழன மருங்கணையும்)

(1) தந்தையேயாம் செல்லுகின்றோம்-வேட்டம்
தந்திடுவீர் விடைசந்தோஷமா யங்கு

(இருவரும் போதல்)

(2) ஓடுதேயொரு புலியே யதை
யூடுருவ விட்டோ-மோர் சரமே-யங்கு

(3) பாயுதே யொருகலைமான் ஆகா!
பாதி வழியினில் தாண்டியதே புதர்

(4) துள்ளுதே முயலினமு மெந்தை
யெள்ளளவு மதைத்தின் பானன்று-கொல்லோம்

(5) பேர்த்தன மரங்களையும் பல
பேருருவங் கொண்டமுள்ளம் பன்றியினம்

(6) தூங்கினபல மதயானைகள்
ஜோடிப் பிடியுடனே பிணங்கியெங்கும்

(7) மாசுணம் பெரும் பாம்போலெங்கும்
வாயைக் குகையெனவே திறந்த சீறி

பிடி=பெண்யானை; மாசுணம்=மலைப்பாம்பு.

(8) பேரிடியெனப் பல சிங்கங்கள்
பிளிறியெழுப்பின பேரரவமினி

(9) ஏறுவோம் மலைச்சிகரம் அங்கு
எத்தகைய மிருகங்களுள கூடி

(இருவரும் மறைதல்)

நரசிம்ம வீரன்—(தனக்குள்) ஆகா பிறவிக் குணத்தை மறைத்து வைப்பது எவ்வளவு கடினம். இச்சிறுவர் தாம் அரசபுதல்வரென்பதைச் சந்தேகியாமலே யிருக்கின்றனர். பிரதாப சிம்மனும் இவர்கள் இங்கு உயிருடனிருப்பதாய்க் கனவிலும் நினைக்கின்றானன்று. இவர்கள் என்னையே தந்தையென வெண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆகா! இவர்கள் இக்குகையில் தாழ்ந்து செல்லுமாறு கேவலமாய் வளர்க்கப் பெற்றிருந்தும் அவர்களுடைய எண்ணங்களோ அரண்மனையின் உச்சியை எட்டுகின்றன. அவர்கள் அற்பவஸ்துவையும், அரசபுதல்வரின் கண்ணியத்திற் குரியவாறு மதிக்கின்றனர். பிரதாப சிம்மனது மூத்த புத்திரனும் அவனுக்குப்பின் அரசனுதற்குரியனுமான இச்சுந்தரன் என்ன செய்கின்றனன்! ஆகா! இக்குகையில் இவர்களை உட்கார வைத்துக்கொண்டு, இவ்வாறு பகைவரைக் கீழே தள்ளி அவர்கழுத்தில் இவ்வாறு எனது காலையூன்றினேனென்று யான் கூறும் பொழுது இச்சுந்தரந்தனது முகம் வியர்க்க உதடுதுடிக்க கைகால்களை முறுக்கிக் கொள்ளுகின்றதோடு ஓர்வித வீராவேசத்தையும் கொள்கின்றனன். சிறியவனோ மூத்தவனிலும் அதிகத் தீவிர புத்தியையும் பராக்கிரமத்தையும் உடையவனாக விருக்கின்றனன். அவன், யான் விவரிக்கும் காட்சிகளை நேரிற் காண்பவன் போல, அப்பொழுது செய்ய வேண்

டிய பல சூசனைகளை வெகுவிரைவில் தெரிவித்து விடுகின்றனன். ஆகா! பிரதாபசிம்மா! என்னுடைய நிலங்களைப் பிடுங்கிக்கொண்டு என்னை அநியாயமாய் நீ நகரைவிட்டு விலக்கியதற்குப் பதிலாய் உனது நகரையாளுதற்கு யாதொரு சந்ததியுமில்லாது போமாறு, மூன்று வயதும், இரண்டு வயதுமாயிருந்த இவ்விருவரையும் யாரு மறியாவாறு கொணர்ந்து விட்டேன். இவர்களை இதுகாறும் தனது குழந்தைகளைப்போல வளர்த்து வந்த எனது மனைவியும் இறந்து விட்டனள். ஆகா! யான் இவ்வாறே காலங்கழிக்க வேண்டியது தான்.—அதோ இவர்கள் மிருகங்களைக் கலைத்துவிடுகின்றனர். யானும் செல்லுகின்றேன்.

(சென்றுவிடுதல்)

நான்காங் களம்

துறைமுகப்பட்டினத்திற் கருகிலுள்ள கானகம்
புருஷோத்தமனும் சுந்தராங்கியும் வருதல்.

சுந்தராங்கி—

(சகானு — ஆதிதாளம்.)

பல்லவி

கண்ணிகர்மதிவதனன் - கடிதங்கிடைத்தமுதல்
புண்ணாய்ப்போனதென் மனதே. (க)

அநுபல்லவி

புண்ணியம்செய்துறைமுகம் - இன்னமெங்கிருக்கின்றதோ
போகப் போகப் தொலையாது - பாழுமிவ்வழிநீளுதே (க)

சரணம்

துரையவனுறைபதி - தன்னுமெனவேயெண்ணி
விரைவிலடையும்பெரு - வேட்கையிறகாய்க்கொண்டு

உறைதல் = இருத்தல்; பதி = ஊர்; வேட்கை = ஆசை.

துரகமதைவருத்தித் தொலை தூரம்வந்தனம்
புருஷோத்தமனேயின்னம் புரியிருப்பிடமெங்கே. (க)

ஏ! புருஷோத்தமா! நாம் நீண்ட தூரம் குதிரைகளில் வந்தோம். சில நாழிகைக்கு முன்னர் யான் வினவியபோது நீ அத்துறைமுகப்பட்டினம் மிக்க சமீபத்திலிருப்பதாய்க் கூறினையே! ஐயோ! என் மனமும் தேகமும் படும்பாட்டை என்னெனத் தெரிவிப்பேன்! அடே, புருஷோத்தமா! மதிவதனன் எங்கிருக்கின்றனன்? தயவுசெய்து தெரிவிப்பாயடா? என்ன நீயுங்கூட என்னை இவ்வாறு வருத்த ஆரம்பித்து விட்டனை?

(இராகம்—மோகனம்)

என்னமோவிந்தையாக விருக்குதேயுன்றன்பார்வை
யின்னலச்சுமந்தோன்போல நெட்டுயிர்ப்பதனைக்கொண்டா
யென்முகமிரங்கிநோக்கி விழித்தனை நிகழ்ந்த தீதை
யென்னெனவுரைப்பாய் முற்றுமிடரினைத்தோற்றுவித்தாய்.

அடே! புருஷோத்தமா! என்ன என்னை நீ ஓர் மாதிரியாய்ப்பார்த்து விழிக்கின்றனையே? மிக்க மனோசஞ்சலத்தையும் இரக்கத்தையும் புலப்படுத்துகின்றனை! என்ன விபரீதம் சம்பவித்தது? ஐயோ! ஏன் இவ்வாறு நடுநடுங்கித் திகைக்கின்றனை? உன்னை இவ்வாறு காணயானும் புத்திமாருட்டங்கொள்ளும் நிலைமையை யடைந்தேன். உனது தேகம் அசௌக்கியமா யிருக்கின்றதா?

புருஷோத்தமன்

(இராகம்—காம்போதி.)

அன்னையேநிகழ்ந்தவற்றை யறைவதற்குள்ளங்கொள்ளே
னென்னையுமாசனெந்த னெஜமானனுடனேயேக
முன்னரேபணித்தானுயினுங் கட்கிவ்விடருண்டாமோ
வென்னெனவுரைப்பேனிந்த நிருபமதோதுவீரே.

துரகம்=குதிரை; புரி=ஊர்; இன்னல்=துன்பம்; அறைதல்=சொல்லுதல்; உள்ளம்=மனம்; பணித்தல்=உத்தரவுசெய்தல்.

சிறந்ததாயே! சொல்வதற்கு எனது நாவெழவில்லையே! என் செய்வேன்? ஐயோ! என்னையும் மதிவதனனோடு அரசன் நகரைவிட்டுத் துரத்தியிருப்பனேல், யான் இத்தகைய சஞ்சலத்தைக் கொள்வதற்கும், உங்கள் மனதிற்கும் உடம்பிற்கும் இவ்வளவு துன்பத்தைக் கொடுப்பதற்கும் ஏதுவுண்டாயிராது. இதோ இக்கடிதத்தைப் படித்து உண்மையைத் தெரிந்துகொள்ளுங்கள்.

(கடிதத்தை வாங்கிக்கொள்ளுதல்)

சுந்தராங்கி—(திகைத்து) கடிதமா? இதுயாருடைய கடிதம்? மதிவதனனது எழுத்தன்றோ? என்ன விசேஷம்?

சுந்தராங்கி (படித்தல்)

கடிதம்.

(அகவல் - இராகம் - முகாரி)

புகழ் பெறும் சேவகா புருஷோத்தமா நின்
றலை விதன்கற்பாம் விலையிலா மணிதனை
யொருவினள் பிறனையே மருவினள் வேசையா
யென்பதை யுறுதியாய் நன்கறிந் தென்மனம்
செந்நீர் விடுத்துச் செயிர்த்துத் துடிக்குதே
சந்தேக மில்லைநற் சான்றுகள் பலவுள
பழிவாங்க வென்மனம் பதைத்துப் பறக்குதே
நன்மையு முண்மையும் நற்குணம் பெற்றனை
நயந்தன புரிவையேல் நவையிலானுவை நீ
துறைமுகப் பட்டினந் தன்னுவள் நடுவினிற்
கோதை நின்றலைவியைக் கொல்வதே நின்கடன்
கொன்றதற்கோர் பெருங்குறி யையுங் காட்டுவாய்
தவறிடின் வேசையின் தரகனே யாவதோ
டவளினும் வஞ்சகப் பாதகனுவை நீ.

ஒருவி = நீங்கி; செந்நீர் = இரத்தம்; செயிர்த்து = கோபத்துடன்; சான்று = சாட்சி; நயந்தன = வேண்டுகின்றவற்றை; நவை = குற்றம்.

எனதரிய புருஷோத்தமா! உனது தலைவி தனது ஆபரண மாகிய கற்பைத்துறந்து பிறனொருவனை விரும்பித் தீண்டி னள். யான் தெரிவிப்பது சந்தேகத்தினாலும் யூகத்தினாலு மன்று. நிச்சயமான உருசுவினாலேயே எனது ஆராத்துயர மும் அடங்காக் கோபமும் உண்டாயின. இத்தகைய பாத கத்தினைச் செய்ததற்குப் பழிக்குப் பழிவாங்க வேண்டுமென என் மனம்பதைக்கின்றது. நான் அத்தேசத்திற்கு வரக் கூடாதாதலின், எனதரிய புருஷோத்தமா! நீயும், அவ ளுடைய தீய செயலுக்கு இயையாதவனா யிருப்பையேல் இக்காரியத்தை எனக்காக நீயே செய்ய வேண்டும். அவ ளுக்கு மோர் கடிதம் இத்துடன் அனுப்பி யிருக்கின்றேன். அதைப் படித்த வுடன் அவள் துறைமுகப்பட்டினத்திற்குப் புறப்பட்டு வருவாள். வரும் வழியில் உனக்குத் தேவையான அவகாசம் கிடைக்கும். அவளைக் கொன்று, நீ அவ்வாறு செய்தா யென்பதற்கோர் அடையாளம் அனுப்புவாய். இவ் வாறு செய்வதற்கு அஞ்சிப் பின்வாங்குவை யாயின் நீ இவ் விஷயத்தில் அவளுக்குத் தாகு சென்றவனாவதோடு அவ ளைக் காட்டிலும் அதிகங் கொடிய பாதகம் புரிந்தவனாவை.

இங்ஙனம்,

மதிவதனன்

ஆகா! மதிவதனனா? விபசாரமா!! (சுந்தராங்கி மூர்ச் சித்து கீழேவிழுதல்)

புருஷோத்தமன்—

(பொன்னார் மேனியனே)

(தேசிகதோடி-தாளம்-ரூபகம்.)

ஐயோ விக்கடித மிவள் மார்பைத் துளைத்துயிரை
மெய்யே யுண்டதாகா யினியுய்யும் வகையிலதென்

மெய்யே=உண்மையில்.

கையில் வாளெடுத்து கழுத்தெற்ற லெதன் பொருட்டோ
ஐயோ வென்ன செய்வேனகம் நையுதே வெய்துறலால்.

ஆகா! இக்கடிதமே இவள் கழுத்தை யறுத்து உயிரைக் குடித்து விட்டதே! இனியான் எனது வாளை எடுத்து இவளைக் கொல்லலுந் தேவையோ! ஐயோ!

சுந்தராங்கி—

(இராகம்-மோகனம்)

அவனையென் கணவனாக வரித்த நாள் முதலாயானிவ்
வவனியிலவனுக்காக வதிகின்றேன் சென்ற பின்னர்
கவனத்தி லவனைக்கொண்டேன் கனவிலு மறந்தேனில்லை
கவலையால் வருந்தி நொந்தேனவமான பொழுது யாவும்.

ஆகா! யான் விபசாரியா? அவன் நகரை விட்டுச் சென்ற பின்னர் ஓர் கணமேனும் விணாக்காமல் இரவு பகலாய் அவனை நினைத்த வண்ணம் எனது மஞ்சத்தின் மீது வாடி வதங்கிக்கிடப்பது விபசாரமோ? அன்றி இரவில் நெடு நேரம் அவனது நினைவினால் துயிலற்று அழுதவண்ணம் புரண்டு புரண்டு வருந்திக் கிடப்பது வேசைத் தொழிலோ? நித்திரையி லடிக்கடி அவனுடனிருப்பதாய்க் கனவு கண்டு திடுக்கிட் டெழுந்து "மதிவதனா" "மதிவதனா" வெனப் பிதற்றித் துடிதுடித்து வியர்ப்பது கற்பிற்குத் தவறோ.

புருஷோத்தமன்—ஐயோ! பாவம்.

சுந்தராங்கி—(விசனத்துடன்) அடே புருஷோத்தமா! எனது விபசாரச் செயல்களை நீ யாயினும் நன்றாய் அறிவாயன்றோ!—ஆகா! சூரசேனன் என்னிடத்தில் வந்து மதிவதனனது புத்தியின் மாறுபாட்டைத் தெரிவித்தனன். அப்பொழுது யான் சூரசேனனை யோர்

எற்றல்=வெட்டுதல்; வெய்துறல்=துன்பப்படுதல்.

வதிதல்=இருத்தல்

கொடிய வஞ்சகனென மதித்தேன். இப்பொழுதே அவன் தெரிவித்தது முற்றும் உண்மையென மதிக்கின்றேன். கலிங்கதேசத்தில் எவளோ ஓர் வேசைமகள் இவன் மனதை இவ்வாறு மாற்றிவிட்டனளோ? யான் அவனுடன் எனது இளமையிலிருந்துபிரியாது பழகினவளாதலின், யான் அவன் மனதிற்கு இனிமையுடையவளாய்த் தோன்றவில்லையா! ஆகா! புருஷரது உறுதியில் நம்பிக்கை வைக்கும் மகளிர் மிக்க மடையரே! பெண்கள் இவ்வாறு நம்பி மோசம் போவதினாலே தான் அவர்களுக்குப் பேதையரென்ற பெயர் கிடைத்தது போலும். ஆடவரை நம்புவோர் என்னைப் போலத் தேம்பித் திகைத்துத் தடுமாறுவர். மதிவதனா! திருடுந் தொழிலையுடையார் பிறரை நம்பாரென்பதற் கிணங்க நீ அங்கு புரியும் செயல்கள் என்னையும் சந்தேகிக்குமாறு செய்தனவோ!

(இராகம்—முகாரி)

நன்றிகூர் சேவகா நின்னாயகன் பணித்தவாறு
கொன்றிடல் வேண்டுகின்றேன் கொடுத்தனேன் யானேவாளைப்
பின்னிடலுண்மைக் கேச்சு பேதையேன் பணிவைமுற்று
மன்னவன் செவியிலேற்றி யகற்றுவா யெனதுமாசை.

அடே! நற்குணம் நிறைந்த புருஷோத்தமா! அருகில் வா! நினது எஜமானன் கூறியவாறு செய்து உண்மைக்குப் பழுதின்றி நடந்துகொள். மதிவதனனை நீ காணும் போது, என் சிரத்தை வெட்டுவதற்காக யான் எவ்வளவு சந்தோஷமாய்க் குனிந்து கொடுத்தேனென்பதைத் தெரிவித்து எனது கற்பின் உறுதியை அறிவிப்பாய். இதோ

கூர்தல்=நிறைதல்; பணிவை=கீழ்ப்படியும் குணத்தை; மாசை =களங்கம்.

வாளையானை உறுவித்தருகின்றேன். எடுத்துக்கொள். அவன் விஷயத்தில் என் மனோவாக்கு காயங்களினால் யான் ஓர் பிழையும் புரிந்தறியேன். ஏ தெய்வமே! இதுவே உனது திருவுள்ளம்போலும். அவ்வாறேயாகட்டும், புருஷோத்தமா! இதோ எனது ஹிருதயத்தைக்குத்தி யிரண்டாய்க் கிழித்து விடு. ஏனடா தயங்குகின்றனை? நினது எஜமானன், இந்த ஹிருதயத்திற்குள் இருக்கின்றானேயென அஞ்சுகின்றை யோ? நீ அதை இரண்டாய்க் கிழித்தாலும் அவன் அதை விட்டு அப்புறம் அகலான்! அடே! இனி தாமதியாமல் அவன் ஏவியவாறு செய்து விடு. இதோ குனிந்துகொண் டேன். அடே! ஏன் கலங்குகின்றனை! போர்முதலியவற்றில் சுத்த வீரத்தன்மையைக் காட்டும் நீ என்விஷயத்தில் ஏன் முற்றும் கோழைபாயினை. உன் வாளின் முனையும் மழு ங்கி விட்டது போலும்.

புருஷோத்தமன்—(கண்ணீர் சோரவாளைவாங்கி யப்பால் எறிந்து விடல்)

சுந்தராங்கி—புருஷோத்தமா! ஏன் வாளை எறிந்தனை? நீ என்னை அவசியம் வெட்டிவிடவேண்டும், நீ அவ்வாறு செய்யத் தவறுவையேல் நீ உனது எஜமானனது சேவகனன்று. தற்கொலை செய்துகொள்வது பெரும் பாவமென்றும் அவ்வாறு புரிந்துகொள்பவர் நரகத் திற்குச் செல்லவேண்டுமென்றும் சாஸ்திரங்கள் தெரி விக்கின்றதாதலின் என்னை யானே மாய்த்துக்கொள்ள அஞ்சுகின்றேன். யானே அவ்வாறு செய்ய உன்னை விரும்பியும் நீ யேன் தயங்கி நிற்கின்றனை? உடனே வெட்டிவிட்டு மதிவதனனுக்கு அடையாளம் அனுப்பி விடு.—மதிவதனா! நீயே சாஸ்வதமென நினைத்து யான் எனது தந்தையான அரசன் முதலியோரை

வெறுத்து அவரை மீளாத்துயரத்திற் புகுத்தினேன். என்னை மணக்க விரும்பினோரான எத்தனையோ அரச குமாரரை உன் பொருட்டு அவமதித்தேன். இவ்வாறு எவளும் புரிவது அரிதென்பதை நீ யான் இறந்தபின்னரே அறிவாய்! நீ இப்பொழுது எவளுடைய மோகத்தில் ஆழ்ந்திருக்கின்றனையோ அவளே வெகு துரிதத்தில் எனது அருமை பெருமைகள் நன்றாய் உன்மனதிற்கு விளங்குமாறு செய்வள்.—அடே! புருஷோத்தமா! உனது எஜமானனது உத்தரவை நிறைவேற்றுதற்கு ஏன் யோசனை செய்கின்றனை!

புருஷோத்தமன்— (மிக்க விசனத்துடன்) எனதரிய தாயே! இப்பாதகத்தைப் புரிய என் மனம் எவ்வாறு சம்மதிக்கும்? இக்கடிதங் கிடைத்த நாளாய் நான் நித்திரை செய்தேனில்லை.

சுந்தராங்கி—ஏன்? உடனே என்னை வெட்டிவிட்டுத் திரும்பிச் சென்று கவலையற்று நித்திரை செய்யத் தடையென்ன?

புருஷோத்தமன்—அம்மா! எனது கண்கள் நித்திரையின்றி வெளியிற் பிதுங்கி வந்து விட்டாலும் யான் இக்காரியம் புரியேன், இது உறுதி.

சுந்தராங்கி—ஆகா! புருஷோத்தமா! இதென்ன விந்தையாயிருக்கின்றது! எனதுயிரை வாங்குவதற்கு மனமில்லாதவன் இக்காரியத்தைச் செய்ய ஏற்றுக்கொண்டதென்ன? மதிவதனனிடத்திற் கென்னை அழைத்துக் கொண்டு போவதாய்ப் பாசாங்கு புரிந்து இவ்வளவு தூரம் அழைத்து வந்ததென்ன? என் மனதிலும் பெரும் ஆவலை யுண்டாக்கி என்னை வதைத்தனை. அரண்மனையில் யான் இல்லாதிருப்பதினால் அங்கு

பெருங்குழப்ப முண்டாவதிற்றடையில்லை. அரசன் என்மீது அடங்காக் கோபத்தைக் கொள்வன். சரசாங்கி முதலியோர் ஏளனம் புரிந்து நகைப்பார். இவ்வளவிற்கும் இடங்கொடுத்து என்னை இங்கு கொணர்வதும், பூசாரிக்கு முன்னால் ஆட்டை நிறுத்தி வைப்பது போல என்னை நிற்கவைப்பதும், கொலை செய்யாமல் விடுவதற்கா? ஆகா! புருஷோத்தமா!

புருஷோத்தமன்—அன்னை! எனது கருத்தை தெரிவிக்கின்றேன். உங்களுக்கு வந்துள்ள இவ்விடரை எவ்வாறு நீக்குகின்ற தென்பதைப்பற்றி யோசனை புரிந்த பின்னர் இவ்விஷயத்தை உங்களிடத்தில் தெரிவிக்க நினைத்தேன். தயவுசெய்து யான் சொல்வதைச் செவி கொள்ளுங்கள்.

சுந்தராங்கி—அடே! நீ யாது செப்பப் போகின்றனை? வேசையெனும் வார்த்தையை எனது செவிகள் கேட்டுவிட்டன. அதனால் என் மனதிலுண்டான புண் ஒருபோதும் ஆறாது. இனி இவ்வுலகில் எனக்கு யாது இன்ப மிருக்கின்றது? ஆகையால் நீ எதைத்தெரிவிப்பினும் என்ன பிரயோஜனம்? எனினும் தெரிவி, பார்க்கலாம்.

புருஷோத்தமன்—அன்னை! இனி நீவிர் திருப்பி அரண்மனைக்குப் போக இஷ்டப்படமாட்டீர்களென நினைக்கின்றேன்.

சுந்தராங்கி—கொலை செய்யப்படும் பொருட்டு கொணரப் பெற்ற யான் இனி அரண்மனைக்குஞ் செல்வதில்லை. வேறெங்கும் போவதில்லை.

புருஷோத்தமன்—தாயே! சிறிது பொறுமையைக் கொள்ளுங்கள். நீங்கள் எனது எஜமானன் மீது இவ்வளவு

விரைவில் வெறுப்பைக்கொள்வது ஆடாது. அவர் தீய வழியிற் செல்பவரன்று. மிக்க மனேவுறுதியை யுடையவர். பிறமாதரை ஈன்ற தாயென மதிப்பவர். யாரோ ஓர் பாதகனது மொழியினாலும் தந்திரச் சூழ்ச்சியினாலும் இக்காரியம் நிகழ்ந்திருக்கின்றது. தவறான எண்ணங்களைக் கொள்வோரைச் சமயம் நோக்கி நாம் சரிப்படுத்தி அவர் திருப்தி அடையுமாறு புரிவதே உசிதமன்றி, அவர் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் புத்திமான்களுக் கழகன்று. இது தர்மத்திற்கும் விரோதமாகாது.

சுந்தராங்கி—ஆகா! எந்தப்பாதகன் இவ்வாறு செய்தனனோ?

புருஷோத்தமன்—வேறு யாதாயினுமோர் சிறிய ஜெந்துவைக்கொன்று அதன் இரத்தத்தை ஓர் துணியில் நனைத்து எனது எஜமானனுக்கு அனுப்பி உங்களை யான் கொன்றுவிட்டதாகத் தெரிவித்து விடுகின்றேன். அரண்மனையில் நீங்கள் இல்லையென்று யாவரும் சொல்லிக் கொள்வதும் அவர் காதிற் கேட்குமாயின், அது யான் கொன்றதை உண்மைப்படுத்தும்.

சுந்தராங்கி—புருஷோத்தமா! இவ்வாறுசெய்த பின்னர் யான் எங்கிருப்பது ?. அப்படி அங்கிருந்து செய்வதுயாது ? எனது பிராணகாந்தன் சம்பந்தப்பட்ட வரையில் யான் இறந்து விட்ட பின்னர், இவ்வுலகில் இனியான் எதற்காக விருக்கின்றது ?

புருஷோத்தமன்—நீங்கள் இனி அரண்மனைக்குச் செல்ல நினைப்பீர்களாயின்,—

சுந்தராங்கி—இனி அரண்மனையுமில்லை, தந்தையுமில்லை.

புருஷோத்தமன்—அரண்மனைக்குச் செல்லாவிடின் இம்மாளவ தேசத்திலேயே நீங்களிருத்தலிற் பயனில்லை.

சுந்தராங்கி—வேறு எங்கு செல்வது?

புருஷோத்தமன்—கலிங்கதேசத்திலிருந்து வந்த சேனாதிபதியான பராக்கிரமபாகு திரும்பி நாளையதினம் துறைமுகப்பட்டினத்திற்கு வரப்போகின்றனன். நீங்கள் சில காலத்திற்கு மிக்கத் துணிவைத் தோற்றுவித்து ஒழுகமனது கொள்வீர்களாயின் நீங்கள் மதிவதனனுக் கருகில் வசிக்கலாம். அவரை அடிக்கடி பார்க்காவிடினும் அவரது செயல்கள் யாவும் உங்கள் செவிகட்கு எட்டியவாறிருக்கும்.

சுந்தராங்கி—ஆகா! அப்படியா! எனது நாணத்திற்குச் சிறிது பழுதுவரினும், கற்புக்கு அழிவில்லாதிருக்குமாயின் அத்தகைய விஷயத்தைச் செய்வதற்கு ஆக்ஷேபணையில்லை. உனது கருத்தை நன்றாய்த் தெரிவிப்பாய், புருஷோத்தமா!

புருஷோத்தமன்—யான் சொல்வதைக் கவனியுங்கள். முதலில் நீங்கள் பெண்ணென்பதை மறந்துவிட வேண்டும். நீங்கள் இதுகாறும் பிறரை அதிகாரஞ் செய்ததன்றிப் பிறரது ஏவலைப் பெற்றோரன்று. இனி அதிகாரத்தை விடுத்துக் கீழ்ப்படிதலை உங்களுக்குரியதாய்க் கொள்ள வேண்டும். மாதர்க்கணிகலமாகிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, என்னும் குணங்களை மறைத்துத் துணிவையும் துடுக்கையும், பிறருக்குச் சரேலென விடையளிக்கும் குணத்தையும், பிறரிடத்தில் அஞ்சாதிருத்தலையும் தோற்றுவிக்க வேண்டும். உங்களது மெல்லிய அழகிய மேனியை வெயில் முதலியவற்றிற்குத் தோற்றுவித்தல், முரட்டுத்தொழில் புரிதல், முதலியவற்றைச் செய்ய விருப்பங்கொள்ள வேண்டும். ஐயோ!

இவற்றைச் செய்யச்சொல்வதற்கு என் மனது சிறிது மிடந்தரவில்லையே.

சுந்தராங்கி—நீ தெரிவிப்பதை அறிந்தேன். யான் இப்பொழுதே ஆடவரின் தைரியத்தைப் பெற்றேன். மேல் நடக்கவேண்டியவற்றை விரைவில் தெரிவிப்பாய்.

புருஷோத்தமன்—நீங்கள் ஓர் புருஷனுடையைத் தரித்துக்கொண்டு என்னைப்போல மாறவேண்டும். இதை முன்னரே யான் யோசனை செய்து இதோ உங்களுக்குத் தகுந்த ஆணுடைகளைக் கொணர்ந் திருக்கின்றேன். இவற்றை அணிந்துகொண்டு பராக்கிரமபாகுவிடத்திற்குச்சென்று அவனுக்குப் பணி புரிவதாய்ச் செப்புங்கள். அவன் மிக்க நாணயமும் நற்குணமும், பரிசுத்தமு முடையவன். சங்கீதப்பிரியன். பாடுவதில் உங்களுக்கு மிக்கத் திறனுண்டென அறிவிப்பீர்களாயின் அவன் உங்களை உடனே ஏற்றுக்கொள்வான். யான் உங்களுக்குத் தேவையான பொருளை அப்போதைக்கப்போது அனுப்புகின்றேன். நீங்கள் ஒன்றிற்கும் கவலைப்படவேண்டாம், அம்மா.

சுந்தராங்கி—புருஷோத்தமா! நீ ஒருவன் இல்லையாயின் எனக்கு இவ்வுலகில் யாதொரு ஆறுதலுமில்லை. நீ சொல்லியவாறே செய்கின்றேன். உடைகளெங்கே?

புருஷோத்தமன்—(கொடுத்தல்) இதோ எடுத்துக்கொள்ளுங்கள். எனதரிய தாயே! யான் இனி அதிகம் இங்கு தாமதித்தால் உங்களை நானே அழைத்து வந்ததாகச் சந்தேகிப்பார்கள். ஆதலின் யான் உடனே திரும்பிச்சென்று விடவேண்டும். இந்தச் சிமிழையும் எடுத்துக்கொள்ளுங்கள். இதற்குள்ளிருக்கும் மருந்து உயிரைக்காப்பாற்றும் அமிர்த சஞ்சீவி. கப்பலிற் செல்

லும்போதும் வேறு சமயத்திலும் நீவிர் மனக்கவலை யாலும் பிறகாரணங்களாலும் தேக அசௌக்கியத் தைக் கொள்வீர்களாயின் இதிற் சிறிது உட்கொள்வீ ரேல் உடனே சௌக்கியமடைவீர். இப்பாதையிற் சிறிது செல்லுவீர்களாயின் எதிரில் துறைமுகப் பட்டினமிருக்கின்றது. தயவு செய்து செல்லுங்கள். யான் விரைவிற் போகின்றேன்.

சுந்தராங்கி—மெத்த சந்தோஷம் நீ சென்றுவிடு. யானும் இதோ துறைமுகப்பட்டினம் போகின்றேன்.

(இருவரும் பிரிந்து செல்லுதல்)

ஐந்தாங் களம்

மாளவதேசத் தரசனது கொலு மண்டபம்.

பிரதாபசிம்மன், சரசாங்கி, ஜேயபாலன், பராக்கிரமபாகு முதலியோரும், மற்றவரு மிருத்தல்.

பராக்கிரம பாகு—

(இராகம்—தோடி)

வேந்தனே கலிங்கதேயம் விரைவினில் மீளவெந்த
னேந்தலு மேவுகின்றான் விடைதரிலுடனேயாங்கு
போந்து மதெண்ணம் யாவும் புகலுவேனினிமேல்யாமும்
சாந்தமாய்ச் சந்தியாது சமரினிலெதிர்த்தல் திண்ணம்.

சிறந்த அண்ணலே! எனதரசன் உடனே திரும்பி வருமாறு எனக்குக் கட்டளையனுப்பி யிருக்கின்றனன். யான் செல்ல விடையளித் தருளுமின்? இனி நாம் விரோதி களாய்ப் போரினிற் சந்திக்க வேண்டுமே யென்பதைப் பற் றியே விசனிக்கின்றேன்.

எந்தல்=அரசன்; போந்து=போய்; சமர்=போர்; திண்ணம்= உறுதி.

பிரதாபசிம்மன்—பராக்கிரம பாகு! எனது நகரத்தினர், யான் உங்கள் அரசனுக்குக் கப்பங் கொடுத்துக் கீழ்ப்படி தலைப் பொறுக்கார். யான் அவர்களிஷ்டத்திற்கு விரோதமாய் நடப்பேனாயின் யான் அவர்களுக்கு அரச னாயிருக்கத் தகுந்தவனாவேனோ!

பராக்கிரமபாகு—மெத்த நன்று! யான் இப்பொழுது புறப் பட்டுத் துறைமுகபட்டினத்திற்குச் செல்ல உத்தேசிக் கின்றேன், கடைசியாய் விடைபெறுமாறு வந்தேன்.

பிரதாபசிம்மன்—மெத்த நல்லது! சென்றுவா.

(பராக்கிரமபாகு சென்று விடுதல்)

சரசாங்கி—இவன் பெரும் விசனத்துடன் செல்கின்றனன், எனினும் யாம் அவனை அவ்வாறு அனுப்பியது நமக்கு மிக்கப் பெருமையே.

ஜெயபாலன்—இந்நகரத்திலுள்ள வீரர்கள் யாவரும் இவ் வாறு இவனைத் திருப்பி விடுவதையே கோரினர்.

பிரதாபசிம்மன்—பராக்கிரமபாகு இங்கு நடந்தவற்றைப்பற்றி ஏற்கனவே தனதரசனுக்கு எழுதிவிட்டனன். ஆத லின் நாம் இனி தாமதியாது நமது சேனைகளைத் தயாரித்தல் இன்றியமையாத முதற்காரியம். அவர் களது சேனைகள் நடுவழியில் தங்கியிருப்பதாய்த் தெரி கின்றது. இனி அவைகள் இங்கு விரைவில் வந்து விடுமாதலின் யாம் போருக்கு ஆயத்தமாயிருத்தல் வேண்டும்.

சரசாங்கி—ஆமாம்? இவ்விஷயம் மிக்க சிரத்தையுடன் கவனித்தற்பாலதே. யாம் மிக்கத்துரிதமாய்ப் பெருஞ் சேனையைத் திரட்டவேண்டும்.

பிரதாபசிம்மன்—இது இவ்வாறு சம்பவிக்குமென்பதை

முன்னுடியேயறிந்து நமதுவீரர்கள் முன்னெச்சரிக்கையாயிருக்கின்றனர். அதைப்பற்றி நமக்கதிகம் கவலைதேவையிலது; எனதினிய சரசாங்கி! சுந்தராங்கி எங்கே? அவள் ஏன் இன்று இவ்விடத்திற்கு வந்தாளில்லை. அவள் நம்மீது பெரும் க்ஷாத்திரத்தைக் கொண்டவளாய் வரவர நமக்குச் செலுத்தவேண்டிய மரியாதையையும் முற்றும் மறந்தனள்போலும். நாமும் இதைக்கவனியாது விட்டுவிடுதல் தவறு. அவளை என் முன்னர் விரைவில் வரவழை.

(ஓர் சேவகன் செல்லுதல்)

சரசாங்கி—பிராணகாந்தா! மதிவதனன் சென்றமுதல் அவள் அதிகமாய் எங்கும் வராமல் தனது அந்தப்புரத்திலேயே விசனித்திருக்கின்றனள். நாட்களே இதை நிவர்த்திக்க வேண்டும். நீங்கள் தயைபுரிந்து அவளிடத்திற் கடுமையான மொழிகளை வசனிக்கவேண்டாம். அவள் மிக்க மெல்லிய தன்மையையுடையாள். சொற்கள் அவள் மனதில் கூரிய அம்புகளாய்ப் பாய்ந்து அவளை மாய்த்து விடும்.

(சேவகன் திரும்பி வருதல்.)

பிரதாபசிம்மன்—அவள் எங்கேயடா? வரவில்லையா? அவளது துணிவையும் அகம்பாவத்தையும் எவ்வாறு தண்டிப்பது.

சேவகன்—அரசே! உங்கள் புதல்வியின் அந்தப்புரத்தின் வாயிற் கதவு சாத்தப் பெற்றிருக்கின்றது. யான் எவ்விதம் உரக்கக்கூவினும் ஒருவரும் விடையீந்தாரில்லை.

சரசாங்கி—பிரபு! யான் கடைசியாய் அவளைப் பார்த்தபோது அவள் தேக சௌக்கியமின்றி யிருப்பதாயும் தான் வேந்தனிடத்திற்குத் தினந்தினம் வந்து

மரியாதை செலுத்துவதற்கு வரமுடியாதிருப்பதைத் தெரிவிக்குமாறும் வேண்டினள். அதை யான் உங்களிடத்தில் தெரிவிக்க மறந்துவிட்டேன். மன்னித்தருளுவீர், பிராணகாந்தா !

பிரதாபசிம்மன்—ஆகா ! கதவு சாத்தப்பட்டிருக்கின்றதா ! யானே செல்கின்றேன்.

(அரசன் எழுந்துசெல்லுதல்)

சரசாங்கி—எனதரிய சகோதரா ! நீயும் மன்னவருடன் செல்வாய்.

ஜெயபாலன்—அவளுடைய சேவகன் புருஷோத்தமனையும் இவ்விரண்டு நாட்களாய்க் காணேம்.

(ஜெயபாலனும் செல்லுதல்)

சரசாங்கி—(தனக்குள்) ஆகா புருஷோத்தமா ! மதிவதனன் விஷயத்தில் உனக்கிவ்வளவு அபிமானமா ! ஒருக்கால் யான் கொடுத்த விஷத்தை யுண்டிருப்பனோ ! அதனுலேதான் இவன் காணப்படவில்லையென நினைக்கின்றேன். அவள் எங்கே சென்றிருப்பள் ? அவள் தனது பேரவா சிறகாய் முளைக்கப்பெற்று மதிவதனனிடத்திற்குப் பறந்து சென்றனளோ ? அல்லது விண்ணுலகமே சென்று விட்டனளோ ? இரண்டும் எனக்கு ஒன்றே ! அவள் தொலைவாளாயின் மாளவதேசத்தின் அரசியல் எனக்கும் ஜெயபாலனுக்கும் சித்திப்பது நிச்சயம்—ஜெயபாலா என்ன விசேஷம் ?

(ஜெயபாலன் வருதல்)

ஜெயபாலன்—அவள் எங்கேயா ஓடிப்போய் விட்டனள். இதையறிந்த அரசன் சிங்கமெனக் கர்ச்சிக்கின்றனர். நீயே உள்ளே சென்று அவனைச் சாந்தம் செய்ய வேண்டும்.

சரசாங்கி—மெத்த நன்று, செல்கின்றேன்.

(சரசாங்கி சென்று விடுதல்)

ஜெயபாலன்—(தனக்குள்) சுந்தராங்கியின்மீது எனக்கு காதலும் வெறுப்பு முண்டாகின்றன. மங்கையர் யாவரிலும் மிக்க அழகு, நற்குணம், நல்லொழுக்கம், கல்வி, புத்தி நுட்பம் முதலியவற்றை யுடையவளா யிருத்தலின் அவளை விரும்புகின்றேன். இத்தகைய சிறப்பினளான பெண்மணியே கேவலமோர் ஏழையான யாசகனை கணவனுகத் தேர்ந்தெடுத்துக்கொண்டு என்னை இகழ்ந்து தூஷித்தது அவளுடைய பகுத்தறிவிற்கோர் பெருங் குறைவு. இஃதே யவளிடத்தில் வெறுப்புண்டாவதற்குக் காரணம். அதோ புருஷோத்தமன் வருகின்றனன்!

(புருஷோத்தமன் வருதல்)

யாரடா அவன்? அடே! புருஷோத்தமா! என்னமூட்டை கட்டுகின்றனையோ? ஓய் தரகரே! இங்கு வாரும். (அதட்டிய குரலில்) அடே துஷ்டா! உடனே தெரிவிக்கின்றாயா? இல்லாவிடின் உன்னை மகாகனம் பொருந்திய கழுகரசனது விருந்திற் கனுப்பி விடட்டுமா?

புருஷோத்தமன்—என்ன விசேஷம்! எனதரிய பிரபுவே!

ஜெயபாலன்—சுந்தராங்கி எங்கே சென்றன ளென்பதைத் தெரிவிக்கின்றனையா? இல்லையா? இல்லையாயின் உன்னை இன்னோர்முறைவினுவேன். உனது ஹிருதயத்திலுள்ள இவ்விரகசியத்தை நீ வெளியிடாவிடின், அதைப் பிளந்துயானே அறிந்துக்கொள்வேன். அவள் அந்தக் கீழ்மகன் மதிவதன னிடத்திற்குச் சென்று விட்டனளோ?

புருஷோத்தமன்—அப்படியா! அரசியை என்று முதற்கண்டீரில்லை? மதிவதனன் கலிங்கதேசத்திலன்றே இருக்கின்றனன்! இவள் அவனுடனிருத்தல் எவ்வாறு கூடும்?

ஜெயபாலன்—அடே! எனதருகில்வா. யானுன்னை நன்றுயறிவேன். நீ தெரிவிக்கின்றனையா? இல்லையா?

புருஷோத்தமன்—ஓ! மகாகனம் பொருந்திய பிரபுவே!

ஜெயபாலன்—ஓ மகாகனம் பொருந்திய தரகரரே! உனது எஜமானி எங்கிருக்கின்றன ளென்பதை மாத்திரம் தெரிவித்து விடு, இல்லையேல் இதோ உன்னை எனது வாளுக்கிரையாக்குவேன்.

புருஷோத்தமன்—(ஓர் கடிதத்தை நீட்டி) இதோ! இக்கடிதத்தைப் பாருங்கள், இதிலுள்ள சங்கதியைத் தவிர வேறொன்றையும் அறியேன்.

ஜெயபாலன்—எங்கே! அதைப்பார்க்கலாம். அவள் இவ்வண்டத்திற் கப்பாலிருப்பினும் யான் தொடாது விடுவேனு?

(ஜெயபாலன் கடிதத்தைப் படித்தல்)

புருஷோத்தமன்—(தனக்குள்) சுந்தராங்கியைக் கொன்று விட்டதாக இன்று மதிவதனனுக்கு எழுதிவிட்டேன், இவன் அவளைத்தேடிச் செல்வனேல் மதிவதனன் கையாலிறத்தல் நிச்சயம். போகட்டும்.

ஜெயபாலன்—ஆகா! அப்படியா! இக்கடிதம் உண்மையானது தானு?

புருஷோத்தமன்—அப்படியே மதிக்கின்றேன்.

ஜெயபாலன்—இது மதிவதனனது கையெழுத்தே. அதை யான் நன்றுயறிவேன். அடே புருஷோத்தமா! இனி

உனது வஞ்சகத்தை விடுத்து என்னிடத்தில் உண்மையாய் நடந்துகொள். எனது ஏவல்களை நீ மிக்க ஊக்கத்துடன் புரியவேண்டும். எத்தகைய காரியமேயாயினும் பின்வாங்காது செய்வையேல், நீ யோக்கியனுவாய், உனக்குத் தேவையான பொருளுதவி செய்கின்றேன். உனக்கு உயர்ந்த உத்தியோக முண்டாவதற்கும் சிபார்சு செய்கின்றேன்.

புருஷோத்தமன்—மகா ப்ரபுவே! மெத்தநன்று, அவ்வாறே செய்கின்றேன்.

ஜெயபாலன்—(சந்தோஷத்துடன்) இதோ இப்பணப்பையை எடுத்துக்கொள். நான் இவர்களைத் துறைமுகப் பட்டினத்தில் சந்தித்து அவள் கண்ணிற்கெதிரில் மதிவதனனைக் கொன்று எனது சௌரியத்தை அவளுக்குக் காண்பிக்கின்றேன். என்னை அவனது பாததூளிக்கன்றோ ஒப்பிட்டனள். அவளை எனது காலால் உதைத்து அரண்மனைக்குத் திருப்பித்தள்ளிக் கொண்டு வருகின்றேன். நான் இப்பொழுதே துறைமுகப் பட்டினம் செல்லவேண்டும். நான் புரிவதை நீ மௌனத்துடன் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியது.

(ஜெயபாலன் சென்று விடுதல்)

புருஷோத்தமன்—(தனக்குள்) ஓகோ! என்னை வஞ்சகனுயும் பொய்யனுயும் ஆக்க நினைக்கின்றையோ? அது ஒரு போதும் பலியாது, நீ துறைமுகப் பட்டினஞ் செல்வையாயின் துன்பமே சம்பவிக்குமன்றி உனதெண்ணம் ஒரு போதும் நிறைவேருது.

(இவனும் பின்னுற் செல்லுதல்)

ஆறாங் களம்

ஓர் ஆரண்யம்—சுந்தராங்கி ஆண்வேஷந் தரித்து வருதல்.

சுந்தராங்கி—(சோர்ந்து வருந்தி)

(பண்–மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப் பாதமே மனம்பாவித்தேன்)

(இராகம் தேசிகதோடி–தாளம் ரூபகம்)

(1) என்ன செய்குவேனெங்கு செல்லுவேனெங்கிருக்குதோ [வந்நகர்
எகிடும் நெறிதவறினே னிருளிவ் வாணியம் புக்கனேன்.

(2) துன்னலாமென வெண்ணியே மனந்துயரினுல் [மிகவாடுதே
தோன்று மிவ்வன மெங்கு முற்றுமோ தோகையேன் [மனமாழ்கினேன்.

(3) எங்கு நோக்கினு மெண்ணிலாய் பலதுஷ்டமிருக [மேகுதே
எங்குதே மனமோங்கும் பீதியாலெங்கு சென்று [மறைகுவேன்.

(4) இவ்விருதின முண்டிடாமையாலெந்தன் மெய் மிகச் [சோருதே
ஈசனே இனியுன்னருளின்றியுய்த்லு முளதாகுமோ.

ஆகா! எனது வழிதப்பி இவ்விருண்ட கானகத்திற்குள் இரண்டு நாட்களாய் அலைந்து திரிகின்றேன். இதைவிட்டு வெளியிற் செல்லும் வழியைக் காணேனே. ஐயோ! எங்கு நோக்கினும் யானை, புலி, கரடி, நரி, பன்றி முதலிய துஷ்ட விலங்குகள் கும்பல் கும்பலாய் நிற்கின்றனவே. அவைகளைக் காணக் குலை நடுக்க முண்டாகின்றது. ஆங்காங்கு மரங்களில் மறைந்து அவைகளின், கண்ணிற்படாமற் செல்லுகின்றேன். இவ்விரண்டு தினங்களாய் உணவு முத

விய அருந்தாமையால் எனது கால்கள் சோர்ந்து தள்ளாடு கின்றன. கண்களோ இருளுகின்றன. ஐயோ! அத்துறை முகப்பட்டினம் எங்கிருக்கின்றதோ அறியக் கூடவில்லையே. ஆகா! எனது பிராணகாந்தனைக் காணவேணுமென்னும் மனோ உறுதியில்லையாயின், யான் உடனே கீழேவிழுந்து இறத்தல் நிச்சயம். அந்த உறுதியால், தள்ளாடும் இவ் வுடம்பை இழுத்துக் கொண்டலைகின்றேன். இதோ ஓர் சிறிய பாதை செல்கின்றது அதைத் தொடர்ந்து செல் கின்றேன்.

(இராகம்—எதுகுல காம்போதி)

இவ்விருதினமும் புல்லிலென்னருமுடலை வீழ்த்தி
யொவ்வொரு கணமு மஞ்சியுறங் கிடாப்பொழுதைப் போக்கி
யெவ்விட மலைந்து வாடியேயினுமிதனை நீங்கு
மவ்வழியறிந்தேனில்லை யமலனை தருளோ யிஃதே.

ஐயோ! கற்களின் மீதும் முட்களின்மீதும் நடந்து கால்கள் முற்றும் கொப்புளித்து அக்கொப்புளங்கள் உடைந்து நெருப்பாய் எரிகின்றனவே. ஆகா! தாகத்தினல் நாவறண்டு தேகம் முழுதும் வேகின்றதே. இனி ஓர் நிமிஷ மும், உணவு முதலிய கொள்ளாது இவ்வுயிர் நிற்காது போ லிருக்கின்றதே. இதோ ஓர் குகைதோன்றுகின்றது. அதில் யாவராயினும் மனிதரிருக்கின்றனரோ? அல்லது சிங்கம் முதலிய விலங்குகள் வசிக்கின்றனவோ? அல்லது நாகரீக மற்ற காட்டு மனிதரிருப்பரோ? யான் சந்தடி செய்யாது அப்பாற் சென்று விடுதலே நன்று. அதிலிருப்பவர் யாவ ரெனக் கூப்பிட மிக்க அச்சமாயிருக்கின்றது. எனினும், எனது கடும்பசி தாகங்கள் என்னுடைய பயத்தை விலக்க ஓர் விதத் துணிவை தருகின்றன. வாசலில் நின்றவண்ணமே

உறங்கல்=தூங்கல்; அமலன்=கடவுள்.

கூவுகின்றேன். யாரங்கே? இக் குகைக்குள்ளிருப்பவன் யாவன்? ஐயோ எவ்வளவு தடவைகள் உரக்கக்கூவியும் விடையில்லையே. யான் உள்ளே செல்கின்றேன். எனது வாளையுருவிக் கரத்திற்பிடித்துச் செல்லின் எத்தகைய விரோதியும் என்னை எதிர்க்க அஞ்சுவன்.

(உள்ளே செல்லுதல்)

இது மிக்க இருளடர்ந்ததாயிருக்கின்றதே! உட்புறத்தில் வெளிச்சந்தோன்றுகின்றது. ஆகா! மலையிலிருக்குமோர் பிளவினாலுண்டான வெளிச்சமன்றோ! மனிதரின் படுக்கைகளிருக்கின்றனவே! வேட்டைக்குத் தேவையான ஆயுதங்கள் ஓர் புறத்திலிருக்கின்றன. மற்றோர் புறத்தில் உடைகள் சில காணப்படுகின்றன. இதோ இம்மூலையில் அடுப்பு முதலியவைவிருக்கின்றன. இது மனிதர் வசிக்குமிடமென்பதற்குச் சந்தேகமில்லை. ஒருவரும் புலப்படவில்லையே. இவர் கள்வராயிருப்பரோ! அன்றி வேடர், குறவர் முதலிய வனசரர்கள் இவ்விடத்தில் தங்குகின்றனரோ! இதோ கொஞ்சம் ஆகாரமும் நீரும் வைக்கப்பட்டிருக்கின்றன. இதன் சொந்தக்காரரிலரே! என்செய்வேன், எனதுயிர் போகின்றதே. ஆபத்திற்குப் பாபமில்லை யெனப் பெரியோர் கூறுகின்றனராதலின் இவ்வுணவிற் சிறிதெடுத்துக்கொள்வது திருட்டாகாது. சொந்தக்காரர் வரின், உண்மையைத் தெரிவித்து மன்னிக்குமாறு வேண்டிக்கொள்கின்றேன்.

(ஆகாரத்திற் சிறிதெடுத்துப் புசித்துக்கொண்டிருத்தல்)

(நரசிம்மவீரன், சுந்தரன், சந்திரன் மூவரும் வருதல்)

நரசிம்மவீரன்—சுந்தரா! உனது சாமர்த்தியமே சாமர்த்தியம்! வேட்டையாடுவதில் உனக்கு ஈடாவோர் ஒருவருமோ இலர். இன்றுஇம்மானை நீயே கொன்றமையின்

நீயே இன்றைய விருந்திற்குத் தலைவன். யானும் சந்திரனும் நமக்குத் தேவையான உணவைத் தயாரிக்க கடமைப்பட்டவரானோம். வாருங்கள், நமது குகைக்குச் சென்று விரைவிலுண்டு களிப்படைவோம். மிக்க உழைத்து வேலை செய்வோர்க்குப் புளித்த கூழும் அமிர்தமாய்த் தோன்றும். அவர் மேடுபள்ளங்களைக் கொண்ட கூரிய கற்பாறையிலும் குறட்டை விட்டுக் கொண்டு நித்திரை செய்வர்.

சுந்தரன்—இன்று யான் முற்றும் சோர்வடைந்தேன், பிதா!

சந்திரன்—தேகப் பிரயாசையால் எனது சரீரம் மிக்க மெலிவடைந் திருப்பினும், எனது பசியின் வலி மாத்திரம் அதிகரித்துவிட்டது.

சுந்தரன்—எனதரிய சகோதரா! பழைய உணவிற் சிறிது மிஞ்சியிருக்கின்றது: புதிய ஆகாரம் தயாராவதற்குள் அதை நாமிருவரும் உண்போம்.

(முன்னடி சென்ற நரசிம்ம வீரன் ஆச்சரியத்துடன் திரும்பிவந்து)

நரசிம்மவீரன்—நில்லுங்கள் நில்லுங்கள். உள்ளே வர வேண்டாம். இது பூதமோ? அன்றிப் பேயோ? நமது ஆகாரத்தைப் புசித்துக் கொண்டிருக்கின்றதே.

சுந்தரன்—தந்தை! என்ன விசேஷம்?

நரசிம்மவீரன்—ஆகாகா! கந்தருவனே! இதோ பாருங்கள். ஓர் சிறுவனைப் போலத் தோன்றுகின்றது.

(சுந்தராங்கி இவர்களைக்கண்டு நடுங்கிய வண்ணம் எழுந்து வருதல்)

சுந்தராங்கி—

(இராகம்-மோகனம்)

நற்குணமுடைய நண்பீர் நவைபெறுங்கள் வனல்லேன்
பொற்குவையெனினுந் தீண்டேன் புகுமுனங் கூவியும்மை
யெற்கவே முயன்றேன் சால விளைத்தனேன் பசியால்வாடி
புற்கையின் விலையையேற்பீர் புரிந்ததைப் பொறுத்தல் செய்வீர்.

நற்குணமுள்ள ஐயன்மீர்! என்னைத் துன்புறுத்தாதீர்! யான் இவ்விரண்டு நாட்களாய் அன்னம் நீர் முதலியவின்றிச் சோர்ந்து வந்தேன். இக்குகையில் யாரேனும் இருப்பின் சில உணவை விலைக்காயினும் அன்றி இனமாகவாயினும் பெற்று உண்ண நினைத்து வெளியில் நின்று கூவி அழைத்தேன். யாதொரு மறுமொழியும் பெறாமையால் உட்சென்றேன். யான் திருடனல்லேன். நீங்கள் பொன்னைக் குவியலாய் வைத்திருப்பினும் களவாடியிரேன். இதோ தருகின்றேன் யான் எடுத்துக்கொண்ட உணவின் கிரயம். தயை புரிந்து இதை ஏற்றுக்கொள்ளுங்கள். யான் செல்லுமுன் நீங்கள் யாரும் இங்கு வராதிருப்பின் இப்பணத்தை இங்கு வைத்துவிட்டு உங்களை மனதாறத் துதித்து வாழ்த்திக் கொண்டு சென்றிருப்பேன்.

நரசிம்மவீரன்—கிரயமா?

சுந்தரன்—பொன்னும் வெள்ளியும் எங்களுக் கெதற்கு? அவற்றையே தெய்வமாகக் கொண்டாடும் உலோபியருக் கன்றோ அவற்றிற் பெரும் ஆசை.

சுந்தராங்கி—ஐயோ! நீங்கள் என்மீது கோபிக்கிறதைப்

நவை = தூஷணம்; எற்க எற்க = யாசகமாய்க் கொள்ள; எற்பீர் = பெற்றுக்கொள்வீர்; புற்கை = ஆகாரம்.

போலத் தோன்றுகின்றதே. இக் குற்றத்தின் பொருட்டு என்னை நீவிர் கொன்று விட்டாலும் சம்மதமே. இக்குற்றத்தையான் செய்யாதிருப்பின் யான் இறந்திருப்பேன். நீங்கள் இங்கிருந்திருப்பீர்களாயின் நீங்கள் என்மீது இரக்கங் கொண்டிருப்பீரென்பது நிச்சயம்.

நரசிம்மவீரன்—நீ எங்கு செல்கின்றவன்?

சுந்தராங்கி—துறைமுகப் பட்டினத்திற்குக் கலிங்கதேசத்திலிருந்து வரும் எனது நண்பனொருவனைக்காண வந்து வழிதப்பி இரண்டு நாட்களாய் ஆகாரம் நித்திரை முதலிய வின்றி இங்கு அலைகின்றேன். களைப்பாற் சாகும் நிலைமையை யடைந்தேனாதலின் இக்குற்றத்தைப் புரிந்தேன், மன்னிப்பீர்.

நரசிம்மவீரன்—உனது பெயர் யாது?

சுந்தராங்கி—என் பெயர் கோவிந்தன்.

நரசிம்மவீரன்—(அன்புடன்) அப்பா! கோவிந்தா! எங்களைக் கேவலம் காட்டு மானிதரென மதித்தனைபோலும். நாங்கள் வசிக்குமிடத்தின் தன்மையிலிருந்தே எங்களுடைய குணத்தின் தன்மையை மதிக்காதே. நீ செய்ததில் எங்களுக்குச் சிறிதுங்கோபமில்லை. உன்னைக் கண்டதினால் மிக்க சந்தோஷமே. மாலைநேரமாய் விட்டது. இப்பொழுது நீ எங்கு செல்லப்போகின்றனை? இன்றிரவு இங்கிருந்து இன்னம் அதிக விசேஷமான உணவருந்தி இனிது நித்திரைசெய்து நாளைக்குச் செல்லலாம்.—எனது செல்வர்காள்! இவனை அன்புடன் உபசரியுங்கள்.

சுந்தரன்—

(இராகம்-தேசிகதோடி.)

நண்பனேகோவிந்தா நின்னளிர் முகங்காண்வென்றன்
கண்புரிதவந்தானென்னே கனிந்ததென்மனதுமன்பால்
வண்ணமேயுருவாய்வந்தாய் மங்கையாயிருப்பையாயின்
திண்ணமாயானேயுன்னைத் திருமணமுடிப்பேனன்றே.

நண்பா! கோவிந்தா! யான் பிறந்தமுதல் இதுவரை யில் உன்னைப் போன்றவரைக் கண்டதேயில்லை! உன்னை நோக்க எனக்குண்டாகும் ஆனந்தத்திற் களவே யில்லை. ஆகா! என்ன உனது முகக்காந்தி! நீ ஓர் பெண்ணாயிருந் திருப்பையேல், உன்னை யானே நிச்சயமாய் மணப் பேன். நீ ஒன்றுக்கும் கவலைப்படாது எங்களுடன் மகிழ் வுடனிருந்து உனக்குத் தேவையானபோது செல்வாய்.

சந்திரன்—

(இராகம்-ஆனந்தபைரவி)

உடன்பிறந்தொன்றாய்க் கூடியுரைந்திடுசோதரர்பின்
நெடியநாட்பிரிந்துபின்னர் நேர்ந்ததைப்போன்றுசங்கை
முடிவிலாமோகங்கொள்ள முன்னிடுமுன்னைவாரிக்
கடிதினிற்றழுவவீங்கு காதலையடைந்தேனுண்மை.

கோவிந்தா! ஏதோ நீண்டகாலம் ஒன்றாய்க் கூடியிரு ந்து பிரிந்த சகோதரர் பிறகு சந்திப்பதையொப்ப, உன் னைக்காண என்மனதில் ஓர்வித வாஞ்சை சுரக்கின்றது. நீ எங்களைச் சகோதரரெனப் பாவித்து, இவ்விடத்திலேயே இருக்கவேண்டும். உன்னை ஓர் கணமும் விடுத்துப் பிரிய என் மனம் சகிக்காது!

சுந்தராங்கி—(முகம் மாறி தனக்குள்) ஆகா! இவர்கள் எவ் வளவு அழகுடையவராயும் முற்றும் இனியராயும்

நளிர்=குளிர்; வண்ணம்=அழகு.

இருக்கின்றனர். சகோதரராம். ஐயோ! எனது சகோதரரிருவரு மிருப்பரேல் அவரும் இவ்வாறே இருப்பர். ஆகா! அப்பொழுது எனக்கு இவ்வளவு விசன மிருக்குமோ!

நரசிம்மவீரன்—கோவிந்தன் ஏதோ சஞ்சலப்படுகின்றனன் போலத் தோன்றுகின்றது.

சுந்தரன்—அடே! சகோதரா! என்ன விசேஷம்? ஏன் வருந்துகின்றனை?

சந்திரன்—உனது விசனத்தைத் தெரிவிப்பாய். அதனால் எனக்கு எத்தகைய துன்பமும் விபத்தும் சம்பவிப்பினும் பாதகமில்லை. அதை ஓர் நொடியில் பரிகரிக்கின்றேன்.

சுந்தராங்கி—எனதரிய நண்பர்காள்! விசேஷம் ஒன்றுமில்லை. உங்களைக்காண என் மனது பெரும் மகிழ்ச்சியைக் கொண்டது. இத்தகைய சகோதரர் எனக்கிருவரிருப்பின் யாதொரு குறையுமிராதென நினைத்தேன். உங்களைக்கண்டபின் என் மனோபாதை முற்றும் இருந்த விடந்தெரியாது மறைந்தது.

நரசிம்மவீரன்—அப்படியா, மெத்த நன்று. யாவரும் உள்ளே செல்வோம் வாருங்கள். காலை முதல் ஒன்றும் உண்ணாமையால் இப்பொழுது அதிகம் சம்பாஷணை புரிவது கடினமாய்த் தோன்றுகின்றது. நாம் சமைத்து உண்டபின், உனது வரலாறுகளை நன்றாயறிவோம்.

சுந்தரன்—கோவிந்தா! எனதருகில் வா.

சந்திரன்—எனதரிய கோவிந்தா! எனது கரத்தைக் கோர்த்துக்கொள்.

(நால்வரும் குகைக்குட் செல்லுதல்

நான்காம் அங்கம்

முதற் களம்

நரசிம்மவீரனுடைய குகைக்கருகிலுள்ள ஆரண்யம்.

ஜேயபாலன் வருதல்

ஜேயபாலன்—இவ்விடத்திலே தான் சுந்தராங்கியும் மதிவதனனும் சந்திப்பார்களெனப் புருஷோத்தமன் தெரிவித்தனன். பெண் புத்தி பேதைமையே! அவர்களது விருப்பத்திற்கும் வெறுப்பிற்கும் காரணமே யிராது. அவர்களுக் கிஷ்டமானுல் ஓர் தரித்திரனையும் விரும்புவர். அரசனையும் வெறுப்பார். அவர்களுக்கு க்ஷணச் சித்தம், க்ஷணப்பித்தம். மதிவதனனிலும் யான் எல்லா அம்சங்களிலும் மேம்பாடுடைய னென்பதை யறியாதாரிலர். இவளொருவளே யிதை யுணராத அறிவிலி. யான் அழகில் அவனுக்குத் தோற்றவனன்று. வித்தை, புத்தி, குணம் முதலியவற்றிலும் அப்படியே, தீரவீரச் செயல்களிலோ அவன் எனக்கு நிகராகான். பிறப்பில் யான் அரசவம்சம். அவனோர் தரித்திரன். போர்புரிவதிலோ யான் ஒப்பற்றவன். செல்வத்திலோ, யானே அரசனுக்கடுத்தவன். செல்வாக்கிலோ என்னுடைய தங்கை அரசியா யிருக்கையில் எனக்கு யாது குறைவிருக்கின்றது. இவ்வள வெல்லாமிருக்க, இப்பேதை என்னை வெறுத்து இம்மதிவதனனைக் கணவனாய்க்கொள்ள விரும்பி ஒரே பிடிவாதமா யலைகின்றனள். இத்தகைய மனிதரது மடமையை என்னசொல்வேன்! அடே மதிவதனு! உனது தோள்களின் மீது

வளர்ந்து கொண்டிருக்கும் உனது சிரத்தை இன்ன மோர் நாழிகைக்குள் இல்லை யாக்குகின்றேன் பார். சுந்தராங்கியைப் பலவந்தமாய் அரண்மனைக்குத் திருப்பி இழுத்துச் செல்லுகின்றேன். இவ்வாறு சுந்தராங்கியை இகழ்ச்சியாய் நடாத்தியதற்கு அரசன் என்மீது சிறிது கோபங்கொள்ளலாம். அவனை எனது தங்கை ஓர் கணத்தில் திரும்பித் தன் வசப்படுத்தி விடுவள். எனது குதிரையை இம்மரத்தில் பத்திரமாய்க் கட்டி விடுகின்றேன். எனதரிய வாளே! உறையினின்று வெளியில் வருவாய்! உனக்கு நல்ல ஆகாரம் கிடைக்கப்போகின்றது. அதிர்ஷ்ட வசமாய் இவர்கள் என்னிடத்தில் அகப்பட்டுக் கொள்ளவேண்டும். இவ்விடம்தான் அது. புருஷோத்தமன் என்னிடத்திற் பொய் சொல்ல அவனுக்கு அவ்வளவு துணிவேது!

(ஜெயபாலன் வனத்திற்குட் செல்லுதல்)

இரண்டாங் களம்

நரசிம்மவீரனுடைய குகையின் வாசல்

நரசிம்மவீரன், சுந்தரன், சந்திரன், கோவிந்தன் நால்வரும் வெளியில் வருதல்.

நரசிம்மவீரன்—கோவிந்தா! உனது தேகம் சிறிது அசௌக்கியமாயிருத்தலின் நீ இக்குகைக்குள்ளே இரு. நாங்கள் விரைவிற் சென்று வேட்டையாடி விட்டு வருகின்றோம்.

சந்திரன்—(அன்புடன்) பிரியசகோதரா! கோவிந்தா! நீ இங்கே பத்திரமாய் இரு. நாங்கள் வெகு சீக்கிரத்தில் ஓடிவந்து விடுகின்றோம். நாம் சகோதரரன்றோ!

சுந்தராங்கி—ஆமாம். அவ்வாறே ஒரு மனிதன் மற்றொரு மனிதனைப் பாவித்தல்வேண்டும். இன்றைக்கு எனது உடம்பு மிக்க அசௌக்கியமாயிருக்கின்றது.

சுந்தரன்.—யான் கோவிந்தனுடனிருக்கின்றேன். நீங்களிருவரும் சென்று வேட்டையாடி வாருங்கள் பிதா!

கோவிந்தன்—அவ்வளவு அதிகமாக அசௌக்கியமாயில்லை. வெளியிற்செல்லமுடியா திருப்பதன்றி வேறு விசேஷமில்லை. தினந்தினம் நடக்கும் வழக்கத்திற்கு விரோதம் வேண்டாம். நீங்கள் மூவருமே வேட்டைக்குச் சென்று வாருங்கள்.

சுந்தரன்—கோவிந்தா! உன் விஷயத்தில் என்னை அறியாமலே பெரும் வாஞ்சையும் அன்பும் தோன்றுகின்றன. யான் எனது தந்தையை எவ்வாறு காதலிக்கின்றேனோ அவ்வாறே உன்னையும் விரும்புகின்றேன்.

நரசிம்மவீரன்—என்ன! எப்படி? எப்படி?

சந்திரன்—தந்தையே! இவ்வாறு சொல்வதற்காக நீர் என்மீது கோபங் கொள்ளினும் சரியே. நானும் சுந்தரன் தெரிவித்தவாறு நினைக்கின்றேன். இவன்மீது யானும் பெரும் வேட்கையைக் கொள்கின்றேன். காரணமின்னதெனப் புலப்படவில்லை. காதலுக்குக் காரணமேயில்லையென நீரே பலதடவைகளில் புகன்றிருக்கின்றீரன்றோ. வாசலில் எமன்வந்து நின்றுகொண்டு யாருடைய உயிரைக் கொண்டுபோவதெனக் கேட்பானேல், கோவிந்தனை விடுத்து எனது தந்தையின் ஆவியையே கொண்டு போமாறு வேண்டுவேன்.

நரசிம்மவீரன்—ஆகா! என்ன உங்களது மேன்மைக்குணம்? (தனக்குள்) இயற்கைப்பெருமையே பெருமை! உயர்குடிபிறப்பின் குணம் மாறுமோ! கோழைகளுக்குக்

கோழைகளே பிறக்கின்றனர். கேவலம் தாழ்ந்தோருக்கு அற்பகுணமுடையோருதிக்கின்றனர். இவ்வுலகத்தில் சிறப்புமிருக்கின்றது. தாழ்வுமிருக்கின்றது. யான் உண்மையில் இவர்களுடைய தந்தையில்லையல்லவா? எனினும், இவனை இவர் இவ்வாறு விரும்பக் காரணமென்னமோ தெரியவில்லை—பாலகர்காள்! வேட்டைக்குச் செல்ல நாழிகையாய் விட்டது போவோம் வாருங்கள்.

சுந்தரன் சந்திரன்—(அன்பாய்) கோவிந்தா! போய்விட்டு விரைவில் வந்துவிடுகின்றோம். பத்திரமாய் இரு.

கோவிந்தன்—அப்படியே யாகட்டும். செல்லுங்கள். (தனக்குள்) ஆகா! இவர்கள் எவ்வளவு வாஞ்சையைப் புலப்படுத்துகின்றனர். நமது அரண்மனையிலுள்ளோர் எவ்வளவு புரட்டராயும் புளுகராயுமிருக்கின்றனர். பெரிய தேசங்களிலுள்ளவரே நாகரீகமுள்ளவரென்றும் காடுகளிலும் வனங்களிலும் வசிப்பவர் நாகரீகமற்ற முரடரென்றும் அவர் தெரிவித்தனரே! இச்சிறுவர் அம்மொழியைப் பொய்யாக்கிவிட்டனரே! ஆகா! என்ன இவர்களுடைய அன்பு!—ஐயோ, என் மனோவேதனையால் தேகம் முற்றும் அசௌக்கியமா யிருக்கின்றது. இவர்கள் சென்றவுடன் புருஷோத்தமனுற் கொடுக்கப் பெற்ற அமிர்த சஞ்சீவியிற் சிறிது உட்கொள்ளுகின்றேன்.

நரசிம்மவீரன்—(அன்பாய்) அப்பா, கோவிந்தா! நாங்கள் போய்வருகின்றோம். உள்ளே சென்று சிறிது சயனித்துக்கொள்.

சந்திரன்—நாங்கள் அதிக நேரம் வெளியில் இராமல் துரிதத்தில் வந்து விடுகின்றோம்.

நரசிம்மவீரன்—கோவிந்தா! இன்றைக்கு நீயே சமையல் செய்யும் மனையாட்டியாக வேண்டுமாதலால் உள்ளே சென்று சிரமபரிகாரஞ் செய்துகொள்.

கோவிந்தன்—சௌக்கியமோ, அசௌக்கியமோ, உங்களுக்கு உபசாரணை புரிய யான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(கோவிந்தன் குகைக்குள் சென்று விடுதல், மற்றையோர் வனத்திற்குள் நுழைதல்.)

நரசிம்மவீரன்—குழந்தைகாள்! இவன் எவ்வளவு தாழ்ந்த நிலைமைக்குரியவனாய்த் தன்னைத் தோற்றுவிப்பினும், இவனது குணத்தினாலும், கண்ணிய புத்தியினாலும் இவன் உயர் குலத்திலுதித்தவனாய்க் காணப்படுகின்றனன்.

சந்திரன்—ஆகா! இவன் பாடுவது எவ்வளவு மாதுரியமாயிருக்கின்றது. குயிலும் இவனுடைய குரலிற்கு வெட்கும்.

நரசிம்மவீரன்—அடிக்கடி இவன் தன்னை மறந்து ஏதோ சிந்தனையிலாழ்கின்றனன். உடனே நெடுமூச்சுவிடுகின்றனன். நாம் அவனைக் கவனிப்பதாய் அறிந்தால், உடனே அதை ஓர் அழகிய புன்சிரிப்பால் மாற்றுகின்றனன். அவன் புன்சிரிப்பு எவ்வளவு இரமணீயமாய்த் தோன்றி மனதைக் கவருகின்றது.

சுந்தரன்—ஆம், பிதா! அதை யானும் பல தடவைகளிற் கவனித்தேன். துக்கமும் பொறுமையும் வேரூன்றி இவனை வருத்துகின்றன.

(ஜெயபாலன் வருதல்)

சந்திரன்—ஆகா! அதோ ஒருவன் நிற்கின்றனனே. அவன் யாவன்?

ஜெயபாலன்—(தனக்குள்) இந்த நாடோடிகளை இன்னமும் கண்டேனில்லையே! அந்த வஞ்சகன் புருஷோத்தமன் மோசம் புரிந்தனனே! ஆகா! மிக்கக்களைப்படைந்தேன்.

நரசிம்மவீரன்—பாலகர்காள்! நாடோடிகளாம், இவன் நம்மையன்றோ இவ்வாறு குறிக்கின்றனன். இவன் யாவனென யான் அறிவேன். இவனைப் பல வருஷங்களுக்கு முன்னர்யான் பார்த்திருக்கின்றேனுபினும் இவன் தான் பிரதாபசிம்மவரசனது மைத்துனன் ஜெயபாலனென்பதுறுதியே. நம்மை நகரைவிட்டுத் துரத்திவிட்ட அரசன் இன்னம் யாதாயினும் துன்புறுத்த நினைத்து இவனை அனுப்பினனே. நம்மைப் பிடித்தற்கு யாராயினும் இன்னும் பலர் இவனுடன் வந்து நாற்புறத்திலும் ஒளிந்துகொண்டிருந்தாலுமிருப்பார்.

சுந்தரன்—இவன் ஒருவனே இருப்பதால், யான் இங்கிருக்கின்றேன். நீங்களிருவரும் சென்று நாற்புறத்திலும் சுற்றிப்பார்த்து யாராயினும் மறைவிலிருக்கின்றனரோவென அறிந்து வாருங்கள். இவனை யான் ஒருவனே பார்த்துக்கொள்கின்றேன்.

(நரசிம்ம வீரனும் சந்திரனும் சென்று விடுதல்.)

ஜெயபாலன்—ஆகா! நீங்கள் ஏன் ஓடுகின்றீர்கள்? என்னைக் கண்டு பயந்து அவ்வாறு செய்கின்றீர் போலும். இம்மலையில் வாழும் வனசரரோ? அடே! மடையா! இங்கு நிற்பவன் யாரடா நீ! அடே சயவா!

சுந்தரன்—அடே! யான் உன்னைப்போன்ற தாழ்ந்தவனை இதுவரையில் கண்டு உரையாடியதே யில்லை. இனி காணப்போவது மில்லை.

ஜெயபாலன்—

(இராகம்-கானடா)

கள்வனே சட்டமென்னுங் கட்டினில் நில்லாத் தூர்த்தா
யெள்கினை யென்னைச்சாலப் பேதையே பலரைமாய்த்துக்
கொள்ளை கொள்கிராத மூர்க்கா வொல்லையி லென்றன் பாதங்
கொள்வை யேற்சிர மேற்றுழ்ந்துன்னுறைபதி மீள்வதுண்டு.

அடே! வழியிற் செல்வோரை வதைத்துக் கொள்ளை கொள்ளும் கிராதனே! என்னை இவ்வாறு அவமதிப்பாய்ப் பேசுகின்றனையா? ஆகா! என்னை யாவனென அறிந்தாயில்லை போலும். நீ உடனே என் காலில் வீழ்ந்து தலை வணங்குவையாயிற் பிழைத்து உனது இருப்பிடத்திற்குச் செல்வதுண்டு. இல்லையேற் பிழைப்பதில்லை.

சுந்தரன்— அடே மடையா! யான் உன்னைப் பணிய வேண்டுமா? எதற்காகப் பணிவதடா? யானும் உன்னைப் போல இரண்டு கரங்களையும் திடமனதையும் உடையோனு யிருக்கின்றேன். எனினும் உனது வார்த்தைகள் மாத்திரம் மிக்கப் பெரியவை யாயிருக்கின்றது உண்மையே. உனக்கு வாயே ஆயுதமன்றி வேறு ஆயுதமில்லை போலும்.

ஜெயபாலன்—அடே! ஏதேது மிக்க மிஞ்சிய மொழிகளைக் கூறுகின்றனை? எனது பெயரைத் தெரிவிப்பேனாயின் நீ உடனே நடுக்கங் கொண்டு எனது கால்களில் விழுவாய்.

சுந்தரன்—யாவரையும் நடுக்குவிக்கக் கூடிய அத்தகைய பயங்கரமான பெயர் யாதடா?

ஜெயபாலன்—ஜெயபாலனடா, மூர்க்கா!

யெள்கினை=எளனம் செய்தனை. ஒல்லையில்=விரைவில். உறைபதி=இருப்பிடம்.

சுந்தரன்—ஜெயபாலன் மூர்க்கனு? ஆகா! உண்மையே. அப்பெயர் என்னை நடுக்குவிக்க வில்லையே. அது ஓர் கொடிய தலைநோய், ஜுரம், பேய், பிசாசு அல்லது கரடி, புலி, சிங்கம், பாம்பு, தேள், முதலியவற்றில் யாதா மொன்ருயிருப்பின் ஒருக்கால் சிறிது அஞ்சி யிருப்பேன்.

ஜெயபாலன்—யான் யாருக்கு மூத்தோன் என்பதை அறி வையேல் நீ இன்னம் அதிகமாய்ப் பயந்து திகிலடை வாய்.

சுந்தரன்—தம்பிக்கு மூத்தவனே?

ஜெயபாலன்—மகாராணி சரசாங்கிக்கு மூத்தவனடா மூடா!

சுந்தரன்—அது சுத்தபொய்! அத்தகைய மேன்மையை வகிக்கக்கூடிய யோக்கியதை உன்னிடத்திற் சிறிதும் இல்லையே!

ஜெயபாலன்—(அதட்டி) அடே! என்ன உனக்கு என் னிடத்தில் கொஞ்சங்கூட அச்சமில்லை போலிருக் கின்றது?

சுந்தரன்—என்னினும் மேம்பட்டவரிடத்தும் நற்குண நல் லுணர்வு முதலியவற்றையுடையோரிடத்தும் எனக்கு அச்சமேயன்றி மடையர்களைக் கண்டால் எனக்குச் சிரிப்பேயுண்டாகின்றது.

ஜெயபாலன்—(கோபத்துடன்) ஆகா, அப்படியா! இதோ இவ்வாளால் உன்னை வெட்டுகின்றேன் பார். உன்னைக் கொன்றபின், இப்பொழுது ஓடிமறைந்த இருவரையுந் துடர்ந்து சென்று கொன்று, உங்கள் மூவருடைய சிரங் களையும் இந்நகரத்தின் கழுமரத்திற் கட்டித்தொங்க விடுகின்றேன்.

(இருவரும் சண்டைசெய்துகொண்டு செல்லுதல்—
வேறோர்புறத்தில் நரசிம்ம வீரனும் சந்திரனும்வருதல்)

நரசிம்மவீரன்—வேறு எவரையும் இங்கு காணோமே.

சந்திரன்—அவன் ஜெயபாலனல்லவெனத்தோன்றுகின்றது. நீவிர் அவனை ஜெயபாலனெனத் தவறாய் நினைத்தீரென்பது நிச்சயம்.

நரசிம்மவீரன்—அவனை யான் கண்டு பல வருஷங்களாகின்றன. எனினும் அவனுடைய தோற்றத்தில் யாதொரு மாறுபாட்டையுங் கண்டேனில்லை. வந்தவன் அவனேயென்பதிற் சந்தேகமேயில்லை.

சந்திரன்—நமது சுந்தரனைத் தனியாய் விடுத்துவந்தோமே. விரைவில் அவனிடத்திற்குப் போவோம். ஜெயபாலன் மிக்கக்கொடிய பாதகனெனத் தெரிவிக்கின்றீரே. சுந்தரன் இவனை எளிதில் விடானென நினைக்கின்றேன்.

நரசிம்மவீரன்—அதோ சுந்தரன் வருகின்றனன்.

(சுந்தரன் ஜெயபாலனது சிரத்தை வெட்டிக்கையிலேந்திக்கொண்டு வருதல்).

சுந்தரன்—பிதா! இந்த ஜெயபாலனைப் போன்ற மடையனை யான் இதுவரையிற் கண்டதேயில்லை. ஒன்று மற்றபாண்டத்திற் கோசையதிக மென்பதை இவன் உண்மையாக்கினன். இவனுடைய சிரத்தின் மூளையை இந்திரனது வச்சிராயுதத்தாலும் சிதைத்தல் முடியாது. ஏனெனில், இவனிடத்தில் மூளையே கிடையாது. ஆகா! யான் இவனை இவ்வாறு செய்யாதிருப்பேனாயின், எனது தலையை இவன் இவ்வாறு துணித்திருப்பன்.

நரசிம்ம வீரன்—(பதைபதைத்து) ஆகா சுந்தரா! என்ன காரியம் செய்தனை!

சுந்தரன்—ஜெயபாலனுடைய சிரசை வெட்டினேன். அவன் தன்னை அரசியின் தமையனெனப் புகன்றுகொண்டனன். அவன் நம்மைக் கள்வரென்றும், கொலைஞரென்றும், கிராதரென்றும், இழிந்தோரென்றும் இகழ்ந்ததோடு நமது சிரங்களை அறுத்துக் கழுமரத்தில் தொங்கவிடுவதயாய்ச் சபதங் கூறினன்.

நரசிம்மவீரன்--(பயந்து) ஐயோ! நமக்குப் பெரும் விபத்து வந்து விட்டதே.

சுந்தரன்—சிறந்த தந்தையே! நாம் எதற்காக அஞ்சவேண்டும்? அவன் நம்மைக் கொல்வதாய்ச் சபதங் கூறினனே. நமது உயிரை விட நாம் இழக்கக் கூடிய பொருள் என்ன இருக்கின்றது பிதா? தேசத்தின் சட்டங்கள் நம்மைக் கட்டுப் படுத்துவதுமில்லை. நம்மைக் காப்பதுமில்லை. நாம் பிறரை நினைத்தவாறு நடத்தலாம். நம்மையும் பிறர் தமது வல்லமையின்வாறு உபத்திரவிக்கலாம். அப்படியிருக்க, இந்தத் தூர்த்தன் வாயில் வந்தவாறு நம்மைப் பயமுறுத்துவதை எதற்காக நாம் பொறுக்கவேண்டும்? அவனிடத்தில் நமக்கென்ன அச்ச மிருக்கின்றது?—நீங்கள் சென்று பார்த்தீர்களே இன்னம் யாரையாயினும் சமீபத்திற் கண்டீர்களோ?

நரசிம்ம வீரன்—ஒருவரையுங் காணேம். எனினும், பல சேவகராயினும் இவனுடன் கூடவந்திருப்பரென்பது உறுதியே. இவன் சலன மனதுடையவனே யாயினும் இவன் தனியாய் இவ்வளவு தூரம் வருபவனல்லன். அரண்மனையிலுள்ளவரும் இவ்வாறு இவனை தனிமையில் விடார். இச்சேவகர் இங்கு வந்து இவனது முடிவை அறிந்து சென்று அரசனிடத்தில் நிகழ்ந்த

வற்றைத் தெரிவித்தல் நிச்சயம். இக்குகையில் வசிப்போரான நாமே இவ்வாறு புரிந்தோமென்று உடனே எளிதில் அறிவர். இதனால் நமக்கும் பெரும் பொல்லாங்கே சம்பவிக்கப் போகின்றது.

சந்திரன்—வருவது வந்தே தீரும். நமது தலையிற் கடவுள் எவ்வாறு எழுதியிருக்கின்றனனோ அவ்வாறு நடப்பதை நாம் தடுத்தல் கூடுமோ? இதைப் பற்றி வருந்துவானேன் பிதா! நமது சுந்தரன் சரியான காரியமே செய்தனன்.

நரசிம்மவீரன்—கோவிந்தனுடைய தேக அசௌக்கியத்தைக் காண, இன்று வேட்டையாட வெளியிற் செல்வதற்கு எனக்கு மனமேயில்லாதிருந்தது....

சுந்தரன்—இவன் தனது கத்தியை ஓங்கிக் கொண்டு என் கழுத்தை வெட்ட வந்தபோது, அவன் வாளையே பிடுங்கி அதனாலேயே அவனது சிரத்தைக் கொய்தேன். இச்சிரத்தை இப்பாறைக் கருகில் ஓடும் ஆற்றில் எறிந்து விடுகின்றேன். அச்சிரம் கடலிற்குச் சென்று தான் அரசியின் அண்ணன் ஜெயபாலனென அங்குள்ள மச்சங்களிடத்தில் தெரிவித்துக் கொள்ளட்டும்.

(சுந்தரன் ஆற்றை நோக்கிச் செல்லுதல்.)

நரசிம்மவீரன்—நமது சுந்தரன் இவ்வாறு புரிந்தது வீரச் செயலேயாயினும், இப்படி நடக்காமலிருப்பின் என் மனதிற்குச் சந்துஷ்டியாயிருக்கும். அரசன் இதற்குப் பழிக்குப்பழிவாங்குவது நிச்சயம்.

சந்திரன்—ஐயோ! இதை யான் செய்யாது போனேனே யென விசனிக்கின்றேன். யான் ஜெயபாலனைக்கொன்றிருப்பின், இப்பழி என்னை மாத்திரந்தொடருமன்றோ? ஆகா! சுந்தரா! உன்னைச் சகோதர வாஞ்சையுடன்

யான் விரும்பினும் இப்பெருமையை எனக்கேயாது நீயே அடைந்த விஷயத்தைப்பற்றி உன்மீது பெரும் பொருமை கொள்கின்றேன். அரசன் யாது துன்பஞ் செய்யினும் செய்யட்டும். நமது பராக்கிரமத்தையும் காட்டுவோம்.

நரசிம்மவீரன்—சரி, நடந்து விட்டது. இன்று நாம் வேட்டையாடியது போதும். இனியும் பயனில்லாத காரியத்தில் தலையிட்டு விபத்தை விலைக்கு வாங்காது குகைக்குத் திரும்பிச்செல்வோம். சந்திரா! நீ முன்னடி சென்று, கோவிந்தனைச் சேர்த்துக்கொண்டு, இருவருமாய்ச் சமையல் செய்யுங்கள். சுந்தரன் விரைவில் வந்து விடுவான். அவனை அழைத்துக்கொண்டு யான் வருகின்றேன்.

சந்திரன்—அவ்வாறே செல்கின்றேன். கோவிந்தனிடத்திலேயே என் மனம் முற்று மிருக்கின்றது.

(சந்திரன் சென்று விடுதல்)

நரசிம்மவீரன்—(தனக்குள்)

(இராகம்—தோடி)

எத்தகையியற்கை மேன்மை பிறங்கின யிவர்கள் மாட்டே
இத்தலமகிபன் மைந்தரென்பது மெளிதுகாணல்
கொத்தினி லிலங்கு பூவின் கொங்கிதழ சையாவண்ணந்
தத்திடு மினியதென்றற் றன்மையார் சாந்தமாயின்

உயர்குலத்தி லுதித்தோரென்பது எவ்வளவு நன்றாய் இவர்களிடத்தில் விளங்குகின்றது. இயற்கை மேன்மையின் சிறப்பே சிறப்பு. இவர்கள் சாந்தமாயிருப்பின் எவ்வாறிருக்கின்றனர்? ஓர் மெல்லிய புஷ்பத்தின் சிறிய இதழையும் அசைக்காது தவழ்ந்துலாவும் மந்தமாருதத்தைப்போல

அத்தகைய இனிமையுடையோராயும் சாந்த குணமுடையோராயு மிருக்கின்றனர். ஆனல்.

(இராகம்—கானடா)

சத்துவந் தோற்றுவிக்குந் தருண மதெழுமேல் நீண்ட
வத்திரக்குவட்டைப் பேர்க்குஞ் சண்டமாருதமேபோல்வா
ரித்தல மடைந்த பின்னரெவரையுங் காணுரேனு
மித்தகையினிய நீர்மை யெவ்வித மறிந்தாரந்தோ

இவருக்கு யாவரேனும் கோபமூட்டுவரேல் அப்பொழுது இராஜவம்சத்திற்குறிய பராக்கிரமம் இவர்களிடத்தில் எவ்வளவு நன்ருய்ப் பிரகாசிக்கின்றது ! அப்பொழுது ஆகாயத்தை யளாவியதோர் பெருத்த பருவதத்தின் சிகரத்தையும் பெயர்த்துப் பாதாளத்தில் வீழ்த்தும் வலியுடன் மோதும் சண்டமாருதத்தைப் போலாகின்றனர். இது பெரும் விந்தையாயிருக்கின்றது ! இவர்கள் சிறுவயது முதல் அரசியல் இவ்வாறுளதென அறியாரேனும் அரசனது குணங்கள் தாமாய் இவர்களிடத்தில் ஜொலிக்கின்றன. கௌரதை, மரியாதை, மானம், தீரம், முதலியவை எவராலும் கற்பிக்கப்படாமல், இவர்களிடத்தில் தழைத்தோங்குகின்றன. ஜெயபாலன் எதற்காக இங்குவந்தனனெனப் புலப்படவில்லையே! இது எதற்கு முன்னறி குறியோ தெரிந்திலதே இவன் இறந்ததினல் எத்தகைய பொல்லாங்கு வந்து சம்பவிக்குமோ அறிந்தேனில்லை.

(சுந்தரன் வருதல்.)

சுந்தரன்—பிதா ! சந்திரனெங்கே சென்றனன் ? ஜெயபாலனது சிரத்தை ஆற்றின் மூலமாய்க் கடலிற்கு யாத்திரை யனுப்பிவிட்டேன்.

(அருகில் அழுகைக்குரல் உண்டாதல்)

அத்திரம்=மலை; குவடு=சிகரம்.

நரசிம்மவீரன்—இதென்ன எங்கிருந்து அழுகைக்குரல் உண்டாகின்றது? நமது குகைக்கருகிலிருந்தல்லவோ கேட்கின்றது.

சுந்தரன்—சந்திரன் குகையிலிருக்கின்றானே?

நரசிம்மவீரன்:—ஆம்! இப்பொழுதே இவ்விடமிருந்து சென்றனன். என்ன விபரீதமோ தெரிந்திலதே. நாம் விரைவில் குகைக்குட் செல்வோம்.

(குகைக்குட் செல்லுதல்)

(கோவிந்தன் இறந்து கிடத்தல்: சந்திரன் அருகிலிருந்தவாறு விசனித்தழுதல்)

சந்திரன்—

(இராகம்-முகாரி)

இறந்தயோ யினிய நண்பா வெங்களைத் துயரிலாழ்த்தித்
துறந்தயோ புவியை முற்றுஞ் சோதரனெனவே கொண்டே
னுறங்கிலை விழியாவாறே யுன்றனைப் போல மிக்கச்
சிறப்பினைக் கொண்டோரிந்தச் செகமதிற் கண்டேனில்லை.

ஐயோ! கோவிந்தா! இனிய நண்பா! அடே, நீ மாண்டனையோ! எழுந்திருக்காவாறு ஓரே தூக்கங்கொண்டனையோ! யான் இதுவரையில் உன்னைப் போன்ற உத்தமனைக் கண்டதே யில்லை. ஐயோ! எங்களைத் துக்கக் கடலிலாழ்த்தி நீ இவ்வுலகத்தைத் துறந்தது என்ன ஆச்சரியம்!

நரசிம்மவீரன்—(திகைத்து) ஆகா! சந்திரா! இதென்ன விபரீதம்? கோவிந்தனுக்கு யாது துன்பம் சம்பவித்தது?

சுந்தரன்—சந்திரா! இவன் ஏன் இவ்வாறு மூர்ச்சித்துக் கிடக்கின்றனன்? ஐயோ! இவன் தனது தேகம் சிறிதே அசௌக்கியமா யிருப்பதாய்த் தெரிவித்தானே?

சந்திரன்—

(இராகம்-நாதநாமக்கிரியை)

தந்தையே யரியவென்றன் சுந்தரவன்பா கேளீர்
விந்தையை யென்ன சொல்வேன் வேகுதே யெந்தனுள்ள
மந்தமே யுருவாய் வந்தோன் மாண்டனனேதுவின்றிச்
சொந்தமாய் நினைத்த வெம்மைத்துயரினில் விடுத்தான் பாவி.

ஐயோ! பிதா! அடே பிரிய சகோதரா, சுந்தரா! அவன் மூர்ச்சை யடைந்திருக்கவில்லை. இறந்துவிட்டதாய்க் காணப் படுகின்றனன். ஐயோ! நாமென்ன செய்யப் போகின்றோம்! நீங்கள் நன்றாய் உற்றுப்பாருங்கள்.

நரசிம்மவீரன்—(கோவிந்தனைத் தீண்டிப் பார்த்து விசனத் துடன்)

(இராகம்-வராளி)

ஐயயோ கோவிந்தா நீயதிகமாய் வருந்து மெம்மை
நையவே விடுத்தாய் மீளா நகரினை யடைந்தாயப்பா
வுய்யுமாறுளதோ யாமுமுயிரினைச் சுமப்பதெங்கோ
வையமே பொய்யே தேகம் மறைந்ததே நீரெழுத்தாய்.

அடே கோவிந்தா! நீ எதற்காக இங்கு வந்தாயடா? ஏற்கனவே பலதுயரங்களால் மனம்வருந்திக்கிடக்குமெம்மை மேலும் அதிகத்துக்கத்தி லாழ்த்தி விட்டுச் செல்வதற்காக இங்கு வந்து உனது இனியவதனத்தைக் காட்டிவிட்டு இறந்தனையோ! ஆகா! என்ன உலகம்! இந்நிமிஷத்தி லிருப்பவர் அடுத்த க்ஷணத்தி லிருப்பாரென்பதற் கேது வற்றிருக்கின்றதே. ஆகாகா! என்ன உனது நற்குணம்! உனது மழலை மொழி எத்தகைய கர்ணாமிருதம்! உன்னுடைய எழிலே எழில்! நீ உயிருட னிருக்கக் கிழவனாகிய யான் இறக்கக் கூடாதா?

சுந்தரன்—

(இராகம்—எதுகுலகாம்போதி)

போனையோ யினிய நண்பா புவியதின்பற்றை நீக்கித்
தானமாம் நகரைவிட்டுத் தனிமையிலலைந்து வாடிக்
கானகமதிலே யுன்றனுவியை விடவே வந்தாய்
தேனென மொழிவதெங்கோ மோனமாய்க் கிடந்தலென்னே!

அடேட, கோவிந்தா! ஐயோ, எங்கடா சென்றுவிட்டனை! உனது சொந்த நகரை விடுத்துக் கானகங்களிலலைந்து பல துன்பங்களையும் அனுபவித்து முடிவில் உயிரைவிடுக்குமாறு இங்கு வந்தனையோ? நீ எங்கள் கண்களிற்படுவதற்கு முன்னமே இறந்து போயிருக்கக்கூடாதா? அடே! உனது மதுரமான மொழிகள் எங்கடா ஒடுங்கிவிட்டன? ஏ! கண்மணி, இனி நாங்கள் என்னசெய்யப் போகின்றோமடா?

நரசிம்மவீரன்—

(இராகம்—காம்போதி)

குழவிகாளடி வயிற்றிற் கொள்ளியை வைத்தே சென்று
னழுவதிற் பயனேயின்று மடரிருள் சூழாமுன்ன
ரழகன துடலைத் தாங்கியகன்று நாமப்பாற் சென்றே
யெழிலுடை யிவனையோர்பா லிருத்தியே மறைப்போம்
[வம்மின்.

எனதரிய பாலர்காள்! இச்சுந்தரன் நமதடிவயிற்றில் தீயை மூட்டிவிட்டுச் சென்றுவிட்டனன். இனி இவனை நாம் ஒருபோதும் காண்பதேயில்லை. நாம் ஓயாது அழுவதினால் யாதொரு பயனுமில்லை. இருள் அதிகரிக்கு முன்னர் இவனை இச்குகையை விட்டு, வெளியில் தாங்கிச்சென்று, மலைக்கருகிலுள்ளதோர் பள்ளத்தில் அடக்கஞ்செய்வோம் வாருங்கள்.

மோனம்=மௌனம்.

சுந்தரன் சந்திரன்—(விசனத்துடன்) அப்படியே செய்வோம் பிதா

(சவத்தை வெளியிற்கொணர்ந்து பள்ளத்தில் மிக்க விசனத்துடன் கிடத்தி அதன்மேல் புஷ்பக்கொத்துகளைப் போட்டு மூடுதல்)

(இராகம்-தன்யாசி)

சோதர னெனவே யுன்னையுன்னியே மகிழ்வைக் கொண்டோஞ்
சோதனை செய்தானீசன் சுந்தரனுன்னைக் கொன்றான்
வேதனை பொறுத்தற் பாற்றோ வேகுதே பதறிநெஞ்சம்
வேதனின் முயற்சியாவும் வீணென முடிந்த தந்தோ.

நரசி.—(துக்கத்துடன்) குழந்தைகாள்! நாம் ஓயாது அழுது கொண்டிருப்பதினால் யாதொரு பயனுமில்லை. மிக்க நற்குணமுடைய கோவிந்தனை நாம் இனி உயிருடன் காணப் போவதில்லை ஈசன் நம்மை எவ்வாறு சோதிக்கச் சித்தங் கொள்ளினும் அதை நாம் அனுபவிக்க வேண்டியதே. இப்பொழுது இரவு வந்து இருளடர்ந்து விட்டது. நாம் குகைக்குச் செல்வோம் வாருங்கள்.

சுந்தரன் சந்திரன்—(விசனத்துடன்) ஐயோ! இவனை விடுத்து வர மனம் சகிக்க வில்லையே, பிதா !

(மூவரும் விசனத்துடன் செல்லுதல்)

(மறுநாட் காலையில் சுந்தராங்கி விழித்துக் கொண்டு எழுந்திருத்தல்)

சுந்தராங்கி—(திகைத்துத் தனக்குள்) ஆகா இதென்ன ஆச்சரியம்! யான் இப்பொழுது எங்கிருக்கிறேன்? நண்பரின்

வேதன்=பிரமன்.

குகையிலன்றோ இருந்தேன். வேட்டைக்குச் சென்றோர் திரும்பி வந்தனரோ! இது குகையாய்த் தோன்றவில்லையே! யான் இப்பள்ளத்திற்கு எவ்வாறு வந்தேன்! இச்செடி கொடிகளை என் மீது போட்டு மூடியவர்கள் யாவர்? புருஷோத்தமன் கொடுத்த அமிர்த சஞ்சீவியை உட்கொண்டவுடன் என் உயிர் போவதாய்த் தோன்றியது. அவனும் மதிவதனனுடன் சேர்ந்துகொண்டு வஞ்சகம் புரிந்தானோ! விஷத்தையன்றோ அமிர்த சஞ்சீவி யென்று கொடுத்து விட்டனன். குகை எங்கே? நண்பர்கள் எங்கு சென்றனர்? யான் இங்கு வந்த காரண மென்ன? இது கனவோ அன்றி விழிப்புத் தானோ? ஆகா! இதென்ன பெரும் சப்தமுண்டாகிறதே! என் தேகம் நடுங்குகின்றதே? இது பெருங்கடலின் ஆரவாரமாய்த்தோன்றுகின்றதே! சிறிது அப்பாற் சென்று நோக்குவேன்.

(சுந்தராங்கி சிறிதுநடந்து அப்பாற் செல்லுதல். அங்கு கலிங்க தேசத்துச் சேனைகள் வருதலைக்காணுதல்)

சுந்தராங்கி—(தனக்குள்) ஆகா! இப்பொழுதே உண்மை புலப்படுகின்றது. பராக்கிரமபாகு சேனைகளுடன் இங்கு வருவதாய்ப் புருஷோத்தமன் தெரிவித்தனனன்றோ. இவை அச்சேனைகளே. இது எனக்கு நன்மையான காரியமாய்த் தோன்றுகின்றது. யான் இவ்வாறு அலைந்து திரிவதிற் பயனில்லை. பராக்கிரமபாகு விடத்திற்குச் சென்று வேலைக்கமர்கின்றேன். அதன் பின்னர் வருவது வரட்டும்.

(சென்று விடுதல்)

மூன்றாங் களம்.

அரண்மனையின் அரசனது அந்தப்புரம்

அரசன், மந்திரி, புருஷோத்தமன், சேவகர், முதலியோர் சம்பாஷித்தல்.

பிரதாபசிம்மன்—சேவகா? மறுபடியோர் முறை சென்று இப்பொழுது சரசாங்கியின் தேகஸ்திதி எப்படியிருக்கின்றதென்பதை அறிந்துவா. தனது தமையனைக் காணாத வியாகுலத்தினால் இவளது தேகத்தின் நிலைமை இவ்வளவு கேவலஸ்திதிக்கு வருமென யான் நினைக்கவேயில்லை. கடும் ஜுரத்தினால் புத்திமாறுட்டமடைந்து பிதற்றுவதாயும் அவள் பிழைப்பது அரிதென்றும் வைத்தியன் தெரிவித்தனன். எனது உயிரை நிகர்த்த சரசாங்கியை ஓர்கணமும் யான் எவ்வாறு பிரிந்திருப்பேன்? எனது காதற்புதல்வி சுந்தராங்கி சென்ற விடத்தையே அறிந்தேனில்லை. எனது மகாராணியோ பிழைக்கும் நம்பிக்கை யில்லாமற் கிடக்கின்றனள். பெரும்போர் சம்பவிக்கப் போகின்ற தருணத்திலேதானா இத்துன்பங்கள் சம்பவிக்கவேண்டும். இப்போருக்கு இன்றியமையாத வீரனான ஜெயபாலனும் எங்கேயோ போய்விட்டனன். இவைகள் யாவும் என்னை மிக்க வருத்துகின்றனவே! என் செய்வேன்? இவைகள் ஆறாத்துயரை உண்டாக்கி விட்டனவே. (அதட்டிய குரலில்) அடே புருஷோத்தமா! சுந்தராங்கி சென்ற விடத்தை நீ நன்றாய் அறிந்திருந்தும் ஒன்றுந்தெரியாதெனப் பாசாங்கு புரிகின்றனை. நீ இப்பொழுது உண்மையைக் கூறுகின்றனையா! இல்லையாயின் உன்னுடைய நகக்கண்களில் கூரிய ஊசிகளைச் சொருக உத்திரவளிக்கட்டுமா?

புருஷோத்தமன்—(பணிவுடன் காலில் விழுந்து) நரேந்திரா! எனதுயிரே உங்களது அடைக்கலம். உங்கள் சித்தத்தின்வாறு என்னை நீங்கள் எவ்விதம் வேண்டுமாயினும் நடத்தத்தடை யென்ன! உங்கள் செல்வி எங்கு சென்றனளென்றும், எதற்காகச் சென்றனளென்றும், எப்பொழுது திரும்பிவருவளென்றும் யான்சிறிதும் அறிந்தேனில்லை. யான் உங்களிடத்தில் முற்றும் உண்மையான அடிமையன்றோ. ஒருபோதும் பொய்யுரைப்பே னெனச் சந்தேகிக்காதிருக்க வேண்டுகின்றேன். வேந்தே!

மந்திரி—மகாப் பிரபுவே! சுந்தராங்கி காணுமற் போன தினம் இவனை இவ்வூரிலேயே யான் கண்டேன். ஆதலின், இவன் உண்மையையே தெரிவிக்கின்றன னென்பதுநிச்சயம். இவன்மெத்தயோக்கியன். ஜெயபாலனைப் பற்றிநாம் ஏன் கவலைப்படவேண்டும்? அவர் சுந்தராங்கியைத் தேடிச் சென்றிருக்கின்றனர். வெகு விரைவில் வந்து விடுவதுறுதி. அதைப்பற்றி நாம் கவலைப்படல் தேவையில்து.

பிரதாபசிம்மன்—எனக்குப் புருஷோத்தமன் மீது இன்னும் சந்தேகமே. எனினும்,இன்னுஞ் சிறிது பொறுத்துப் பார்க்கின்றேன்,

மந்திரி—கலிங்கதேசத்திலிருந்து பெருத்த சேனைகள்வந்து துறைமுகப்பட்டினத்தில் இறங்கிவிட்டனவாம்.காலாள் முதலிய படைகளைத்தவிர நூற்றுக் கணக்கான சிறந்த வீரர்கள் வந்திருக்கின்றனராம்.

பிரதாபசிம்மன்—ஐயோ! இப்பொழுது எனது அரசியும், ஜெயபாலனும், எனக்கு உதவி புரியா நிலைமையிலிருக்கின்றனரே! ஆகா! அவர்களில்லாமற் செய்வது

இன்னதென்பதே தெரியாது என்மனம் குழம்புகின்றதே.

மந்திரி—அண்ணலே! நீவிர் எதற்காக வருந்தவேண்டும்? நாம் ஏற்கனவே இதற்குத் தேவையான சேனைகளுடன் ஆயத்தமாயிருக்கின்றோம். நமது சேனைகள் கலிங்கத்துச் சேனைகளைக்காட்டினும் அதிகரித்த சேனைகளுக்கும் போதுமானவை. இப்பொழுது யாம் செய்யவேண்டியது வேறொன்றுமில்லை. சண்டைக்கு ஆவலுடனிருக்கும் நமது சேனைகளை ஏவவேண்டியதே பாக்கி.

பிரதாபசிம்மன்—அப்படியா? மெத்த சந்தோஷம். இனி யாம் அஞ்சவேண்டியதில்லை. யாம் விரைவிற் சென்று இதற்காக வேண்டியவற்றைச் செய்வோம்.

(அரசனும் மந்திரியும் சென்றுவிடுதல்.)

புருஷோத்தமன்—(தனக்குள்) சுந்தராங்கியைக் கொன்றுவிட்டதாக மதிவதனனுக்கு யான் எழுதியதற்கு யாதொரு பதிலையும் பெற்றேனில்லை. அடிக்கடி க்ஷேம சமாசாரத்தைத் தெரிவிப்பதாய் வாக்களித்த அரசியும் இதுவரையில் அவ்வாறு செய்யவில்லை. ஜெயபாலனுக்கு யாது சம்பவித்ததென்பதுந் தெரியவில்லை. இவற்றை நினைக்க நினைக்க என்மனது பெருங்குழப்பத்தை யடைகின்றது. யான் அவர்கள் விஷயத்தில் உண்மையாயிருத்தலின், அரசனிடத்தில் உண்மையை ஒளிக்க நேர்ந்தது. யாவற்றிற்கும் கடவுளே வழிவிடவேண்டும். இப்பொழுது நடக்கப்போகும் சமரில் யான்மிக்க வீரத்துடன் போர்செய்து, எனது தேசாபிமானத்தைக் காட்டி அரசனைக் களிப்பிக்கின்றேன்.

"ஒன்றைநினைக்கினது வொழுந்திட்டொன்றாகு
மன்றியதுவரினும் வந்தெய்து—மொன்றை
நினையாமுன் வந்தெய்தினுமெய்து
மெனையாளு மீசன்செயல்."

என்றபடி அடுத்த நிமிஷத்தில் நமக்குச் சம்பவிக்கப் போவதை யாரறிவார்? இவர்கள் விஷயம் எவ்வாறாய் முடியுமோ பார்க்கலாம்.

(செல்லுதல்)

நான்காங் களம்

துறைமுகப்பட்டினத்திற்கடுத்த ஆரண்யம்.

நரசிம்மவீரன், சுந்தரன், சந்திரன் மூவரும் தமது குகைக்கு முன்னர் சம்பாஷித்தல்.

நரசிம்மவீரன்—குழந்தைகாள்! தேசத்தின் சேனைகள் கடலெனப் பேரொலி செய்த வண்ணம் எங்கும் சூழ்ந்து கொண்டு நெருங்குகின்றன. இன்னம் சிறிது யாம் இங்கு இருப்போமாயின் அவர்கள் இங்கும் வந்து அடர்வர். விரைவில் நாம் எங்காயினும் ஓடிப்போவோம் வாருங்கள்.

சந்திரன்—

(இராகம்-தேசிகதோடி)

யாதொரு பயனுமின்றி யரிய நம்முயிரைத்தாங்கிப்
போதினைக்கழித்தல்யாது புகழினையுடைத்தாமந்தோ
தாதையேசெயலொன்றின்றித் தகவிலாதொளிந்துவாழற்
கோதலாற்பெருமையாமோ வோதுவீரறியவெந்தை.

எமதரிய தந்தையே! யாதொரு அரிய செயலுமின்றி

தாதை=தந்தை; தகவு=பெருமை; கோது=குற்றம்

வீணில் இவ்வுயிரைப் பத்திரப்படுத்தி வைப்பதில் யாது பய னுளது? நாம் எதற்காக ஓடி யொளிப்பது?

சுந்தரன்—

(இராகம்—ஸகாஞ)

வருபவர்க்கஞ்சியோடி யரியயிவ்வுயிரைநன்று
புரத்தலின்கருத்துயாதோ புகலிடமினியுமுண்டோ
மருவலராகும்பேதை மாளவரெனவேயெம்மைக்
கருதுவர்பிணிப்பர்மாய்த்துக் கழுகினுக்குணவாயீவர்

சிறந்த தாதை! நாம் ஓடியொளித்தாலும் இவ்வுயிரைக் காப்பாற்றி யாது பெரும்பயனை யடையப்போகின்றோம்? பெருங்கடல் பொங்கி வருவதைப் போல எவ்விடத்திலுஞ் சூழ்ந்து வருமிவர் கண்களிற் படாமல் நாம் எங்கொளிப்பப் போகின்றோம். இவர் நம்மைப் பிடித்துக் கொண்டு பகை வரான மாளவ தேசத்தாரைச் சேர்ந்த யாவரோ கள்வரென நம்மை மதித்துக் கொல்வர். இவ்வளவு சிரமத்துடன் காப்பாற்றப்பட்ட நமது சரீரங்கள் பறவைகளுக்கும் வில்ங்கு கட்கும் இனிய விருந்தாயன்றோ முடியும்.

நரசிம்ம வீரன்—

(இராகம்—ஆனந்த பைரவி)

அரியவென் புதல்வீர் வம்மினருகினிலுளதா மோங்கும்
பருவத மிசையாம் போந்து பகைவரை விலகி நன்று
கரைதலே யுரியதாகுங் காவலன் படையிற் சேரல்
பெரியதா மிடரையீயும் பேதைகாள் சாதற்றிண்ணம்

எனதரிய குழந்தைகாள்! வாருங்கள் நாம் இம்மலை மீதேறி ஒளிந்து கொள்வோம். யாம் நமதரசனது சேனை களிற் சேர்தலிற் பயனில்லை. அவ்வாறு புரிதலுந் துன்பந்

புரத்தல்=பாதுகாத்தல்; மருவலர்=விரோதிகள்.
கரைதல்=மறைதல்; காவலன்=அரசன்.

தரும். ஜெயபாலன் இவ்விடத்தில் இறந்ததை அரசன் அதி சீக்கிரத்தில் அறிவன். யாம் புதியவராய்ச் சேனைக ளிற் சேர்வோமாயின் நம்மை யாரென வினவுவர். யாம் நம திருப்பிடத்தை வெளியிட நேரும். ஜெயபாலனை நாமே கொன்றவரென உடனே சந்தேகித்து நம்மைப் பிணித்துச் சித்திரவதை செய்து கொல்வர். கண்மணிகாள்! யான் தெரி விப்பதைப் பற்றி நன்ருய் யோசனை செய்யுங்கள்.

சுந்தரன்—தாதை! அவ்வாறு சம்பவிக்குமெனத் தோன்ற வில்லை. இவ்வமயத்தில் நீவிர் இவ்வாறு தெரிவிப் பது உமது மேன்மைக்கழகுமன்று. அது எங்களுக்கு மனச் சம்மதியாயுமில்லை.

சந்திரன்—ஆகா! தந்தையே! கலிங்கதேயத்தினர் கடலெ னத்தோன்றி யுத்த பேரிகை முழக்கிக் கொண்டிருக் கையில், நமது தேசத்தவர், மிகவும் கேவலமான தோற் றத்தைக் கொண்ட நம்மை அவ்வளவு உற்றுக் கவனிக் கவும், நாம் எங்கிருந்து வந்தோமென அறியவும் மனமுடையவராக எருபோதமிரார். இதைப்பற்றி நீவிர் சிறிதும் கவலைப் படற்கேறவையிலது.

நரசிம்மவீரன்—செல்வர்காள்! அச்சேனையில் என்னை அறிந் தோர் பலரிருக்கின்றனர். அனேக ஆண்டுகளுக்கு முன்னர் யான் ஜெயபாலனைக் கண்டிருந்தும் இப் பொழுது அவனுடைய அடையாளத்தைக் கண்டு பிடிக்கவில்லையா? அவ்வாறே பிறரும் என்னை அறிந்து விடுவர். நிற்க, நமது அரசன் நன்றியற்றவனன்ருே. அவனுக்கு நாம் இவ்வுதவி செய்வதற்கு அவன் பாத் திரனன்று. நீங்கள் அவன் மீது அன்பு கொள்வதற்கு அவன் உங்கள் விஷயத்தில்யாது நன்மை புரிந்தனன்? நீங்கள் இவ்வாறு நாகரீகமற்றவராயும் முரடராயும்

வளர்தல் அவனலன்ளே? நீங்கள் நகரத்திலேயே இருப்பின் மற்றவரைப்போல எத்தகைய சிறந்த நலன்களையும் இன்பங்களையும் பெறுவீர்கள்? இவ்வளவு தீமையை உங்களுக்குப் புரிந்த அரசனுக்கு நீங்கள் உதவி செய்ய நினைத்தலே தகாது.

சுந்தரன்—நாம் இவ்வாறு ஜீவித்திருத்தலை விடச் சாதலே நன்று பிதா! எங்கள் இருவரையும் அறியக்கூடியவர் சேனைகளில் ஒருவருமிலர். நீவிர் அவ்விடம் விட்டு வந்து நெடிய காலமாய்க் காட்டின் உணவு மாறுபாட்டினலும் உரோமம் அதிகம் வளர்ந்திருப்பதினலும், வயதின் முதிர்ச்சியினலும், உமது உருவம் வேறுபட்டிருப்பது நிச்சயம். அவர்களும் உம்மை முற்றும் மறந்திருப்பர். ஆதலின், நாம் அங்கு செல்வோம் பிதா!

சந்திரன்—நான் சமருக்குச்செல்லாது இனி ஓர்கணமும் இங்குதரியேன். நாம் போரென்பது எவ்வாறிருக்குமென்பதையே அறியாது பெரும்பேதையராய் வளர்கின்ளேம். ஒருவன் மற்றவனை வெல்வது எவ்வாறிருக்குமென்பதை யுணர்ந்தோமில்லை. செயலற்ற அற்பப் பிராணிகளான மான்களும், ஆடுகளும், அடிபட்டு வீழ்வதையன்றி வேறு எத்தகைய வீரச்செயலை யாம் கண்டுளோம் பிதா! ஆறறிவுடையோராய்ப் பிறந்து இவ்வாறு விலங்குகளைப் போலிருப்பது எனக்கு மிகவும் வெட்கமாயிருக்கின்றது.

சுந்தரன்—அரிய தந்தை! தயவு செய்து விடை தருவீரேல், நாங்கள் சென்று மிக்க எச்சரிக்கையுடன் சண்டை செய்து திரும்புகின்ளேம். இல்லையாயின் நாம் இங்கு கலிங்க தேசத்தாரின் வாளுக்கிரையாவதே உறுதி.

சந்திரன்—ஆம், பிதா! தயைபுரிந்து விடையளியுங்கள்.

நரசிம்மவீரன்—எனதரிய செல்வர்காள்! இளமைப் பருவத்தைக்கொண்ட நீங்களே உங்களது உயிரை ஓர் துரும்பாய் மதிக்கையில் உடைந்த பாண்டமாகிய தளர்ந்து பயனற்ற எனது சரீரத்தைக் காப்பாற்ற யான் கவலைப் படுவானேன். ஆயினும், ஓர் விஷயம் உங்களுக்குத் தெரிவிக்கின்றேன். நீங்கள் இப்போரில் இறப்பீர்களாயின், யானும் அவ்விடத்திலேயே மறிப்பது உறுதி. அதற்குச் சம்மதமாயின் செல்லுங்கள்.

இருவரும்—அவ்வாறு சம்பவியாதிருக்க முயலுகின்றோம், பிதா!

நரசிம்மவீரன்—அப்படியாயின் வாருங்கள் செல்வோம். (தனக்குள்) ஆகா! பலவருஷங்கள் ஆய்விட்டதன்றோ. அரசனது உதிரமல்லவா! இவர் இனி இங்கு நிற்பரோ? ஒருபோதுமில்லை, செல்லட்டும்.

(மூவரும் செல்லுதல்)

ஐந்தாம் அங்கம்

முதற் களம்

போர்க்களத்தில் ஓர் புறத்தில் மதிவதனன்
இரத்தத்தில் நனைத்த ஓர் கைக்குட்டையை
வைத்துக்கொண்டு தனியாய்
விசனத்துடன் நிற்றல்.

மதிவதனன்—

(திருப்புகழ்—வங்கார ராகம்-செஞ்சுருட்டி)

(1) மின்னாரில் தீயவரை மீறினை நின் றாழுமுள்ளம்
பைந்நாகமோ கொடிய பாதகியுன் சூதை யெவர்
முன்னாக வேயறிவர் மோசமிகு வேசையரில்--முதலானாய்

(2) பெண்டீரிற் பேதைநினைப் போல்பவர்க ளேதெனவே
கொண்டேனென் பாழ்நினைவு மோடியெவ ணேகியதோ
சண்டாளி யாயினை யிச்சாகச மெங்கேகற்றனை—மடமானே

ஏ சுந்தராங்கி! நீ இவ்வாறு புரிவாயென யான் கனவிலும் நினைத்தேனில்லை! யான் உன்னுடனிருந்த வரையில், என்னையன்றிப் பிறனைக் கண்ணெடுத்துப் பாரேனென்றும் மற்றவனிடத்தில் உன் மனது ஒருபோதுங் காதலைக் கொள்ளாதென்றும் உறுதி கூறினையே! கேவலம் இழிந்தவனான சூரசேனனிடத்தில் உனக்கு எவ்விதம் விருப்பமுண்டாயிற்றோ அறியக்கூடவில்லையே. ஒருவர் மீது மற்றொருவர் கொண்ட ஆழ்ந்த அன்பு தேய்தல் எளிய காரியமன்று. பிறந்தது முதல் இதுவரையில் பிரியாது இரண்டுடலுமோருயிருமாயிருந்த நமது வேரூன்றிய காதல் இவ்வளவு சீக்கிரம் அழிந்தது விந்தையினும் விந்தையல்லவோ?

ஐயோ! ஏ, பேதாய்! உன்னை மறந்துவிட வேணு மென்று யான் எவ்வாறு முயன்றும் பலியாமல், உன் உருவ மும் நினைவும் என்மனதில் முன்னிலும் அதிக உறுதியாய் வேரூன்றுகின்றனவே. ஓர் க்ஷண நேரமாயினும் உன்னை யன்றி வேறு யாதாயினுமொன்றை நினைக்க யான் எவ்வளவு பிரயத்தினப்பட்டும் சற்றும் பலிக்கவில்லையே! ஆகா! பாசி நீரை மறைப்பதைப்போல முற்றும் உன் மயமாய் வந்து மூடுகின்றதே. ஏ பாதகி! நீ இருந்தும் என்னை வருத் தினை! இறந்தும் வாதனைப்படுத்துகின்றனையே! ஆகா! என்ன செய்வேன்?

(இராகம்—முகாரி)

மனதினைக் கொள்ளைகொண்ட மங்கையே சுந்தராங்கி
யினியுயிர் வாழே னுன்ற னிழிசெயல் பொருதுகொன்றேன்
வனிதையே கலிங்கரோடும்வந்துளே னெனினுமுன்றன்
முனைவரைப் பொருதுமாய்வேன் முரணிடேன் நமரை
[யென்றும்.

ஏ சுந்தராங்கி! நீ என் விஷயத்திற்செய்த பிழையின் பொருட்டு உன்னைக் கொல்வித்தேனாயினும் உனது தேசத் தாருக்கு விரோதமாய்ச் சமர்புரிவேனென நினைக்காதே. யான் ஓர் எளிய மாளவதேசத்துப் போர்வீரனைப்போல உடைகளைத் தரித்துக் கொண்டு, கலிங்க தேசத்தாரை எதி ர்த்துச் சண்டை செய்து உன் பொருட்டு எனது உயிரை இப்போர்க் களத்திலேயே விட்டு விடுகின்றேன். யான் தாழ்ந்த உடைக்குள் ளிருப்பினும், சேனைத்தலைவனது மக னென்பதைச் சிறிது தோற்றுவிக்கின்றேன்.

(சென்று விடுதல்)

முனைவர்=பகைவர்; மாய்வேன்=இறப்பேன்; நமரை=நமது தேசத்தாருடன்.

இரண்டாங்களம்.

கலிங்க தேசத்தாரும், மாளவதேசத்தாரும் பொருதல். முன்னவர் பக்கத்தில் பராக்கிரமாகு, சூரசேனன், முதலியோரும் பின்னவர் முகத்தில் ஓர் எளிய போர்வீரனைப்போல வேஷந் தரித்த மதிவதனனும் சண்டை செய்தல்: மதிவதனன் சூரசேனனை ஜெயித்துக் கீழே தள்ளிவிட்டு அப்பாலேகுதல்.

சூரசேனன்—(தனக்குள் விசனத்துடன்) ஐயோ! என்னுடைய மனச்சாட்சியே என்னைக்குத்திக் கொல்லுகின்றதே! கற்பிற் சிறந்த சுந்தராங்கியை வஞ்சகியாக்கிய தோஷமே என்னை இத்தகைய அவமானத்திற்குட்படுத்தியது போலும். அவள் இத்தேசத்தரசியல்லவோ. அவளுக்குப் பாதகம் புரிந்தமையின் இந்நகரத்திலடி வைத்த உடனே எனது சௌரியம் முழுதும் எங்கேயோ ஓடி மறைந்து கொண்டதே! இல்லையாயின், யான் இவ்வெளிய போர்வீரனுக்குத் தோற்றலுமுண்டோ! யான் பலபோர்களில் வெற்றி பெற்றுப் புகழடைந்திருந்தும் இவ்விடத்திற் கேவலமோர் எளியவனால் வீழ்த்தப் பட்டது பெரிதும் விந்தையே!

(மற்றோர்புறத்தில் மாளவதேசத்தார் தோற்றோடுதல். பிரதாப சிம்மவரசனைக் கலிங்கதேசத்தார் பிடித்துக் கட்டிக் கொண்டு செல்லுதல். அச்சமயத்தில் நரசிம்மவீரன், சுந்தரன், சந்திரன் மூவரும் அரசனை மீட்க வருதல்.)

சுந்தரன்—ஆகா! ஓடாதீர், ஓடாதீர்! நில்லுங்கள். மாளவதேசத்தின் பெருமையை அழிக்கவந்த கோழைகாள்! நில்லுங்கள் நமது அரசனை எதிரிகள் பிடித்துச் செல்ல, நீங்கள் வீட்டிற்கு ஓடி உங்கள் மனைவியரிடத்

தில் உங்கள் சௌரியத்தைத் தெரிவித்துக் கொள்ள ஓடுகின்றீர்களோ?

(இவ்வமயத்தில் மதிவதனனும் மற்ற மாளவரும் இவருடன் ஒன்ருய்க் கூடிப்போர் செய்து பிரதாபசிம்மனை மீட்டல். மற்ரோர் புறத்தில் சூரசேனன், பராக்கிரமபாகு, கோவிந்தன் மூவரும் வருதல்.)

பராக்கிரமபாகு—அடே கோவிந்தா! நீ இனி இங்கு தாமதிக்க வேண்டாம். இப்போர்க்களத்தை விட்டோடித் தப்பிப்பிழைப்பாய். இனி ஓர்கணமும் இங்கு நிற்பையேல் நமது பகைவர் உன்னைக் கொன்றுவிடுவர்.

சூரசேனன்—மாளவர் திரும்பவும் பல வீரர்களுடன் தோன்றிப் போர்செய்கின்றனராம். அவர்கள் அரசனைக்கூட விடுவித்து விட்டனராம். ஆகா! இதென்ன விந்தை!

பராக்கிரமபாகு—திடீரென நமது அதிர்ஷ்டம் மாறியது பெரிதும் ஆச்சரியத்தை விளைவிக்கின்றது! நாம் விரைவில் ஓடிப்போய் இன்னம் சேனைகளைச் சேர்த்துக் கொண்டு வருவோம்.

(சென்றுவிடுதல்)

மூன்ருங் களம்

போர்க்களத்தில் வேரோர் பாகம் மதிவதனனும் வேரோர் மாளவதேசத்தானும் சம்பாஷித்தல்.

மாளவதேசத்தான்—நீ எங்கிருந்து வருகின்ருயப்பா? ஓடுவோரிலிருந்து வருகின்ருயா? அல்லது தைரியமாய் நின்று நமது அரசனை மீட்டவரிலொருவனே?

மதிவதனன்—நான் நின்றவரிலொருவனே. நீ ஓடியவரிலொருவனே?

மாள.—ஆமாம்.

மதிவதனன்—நீ அவ்வாறு ஓடியது உன்மீது குற்றமன்று. மாளவதேசத்தார் யாவற்றையும் இழந்து முற்றுந் தோற்றனர். அச்சமயத்தில் கடவுளே அவருக்காகத் தோன்றி வெற்றியை யளித்தனரன்றி வேறிலது. மாளவதேசத்துச் சேனைகளில் யாவரும் முறியடிபட்டு ஓடுவோரும், இறந்தோரும், பாதி உயிர்போய் விழுவோருமாயிருக்க, அரசன் ஓர் சிறிய சந்தில் நுழைந்து தப்பி ஓடினன். கலிங்கதேசத்தார் மிக்க தைரியத்தைக் கொண்டு யாவரையும் வீழ்த்தி அரசனைச் சந்திற்குள் பிடித்துக் கொண்டனர்.

மாள.—அந்தச் சந்து எவ்விடத்திலிருக்கின்றது?

மதிவதனன்—போர்க்களத்திற் கருகில் தென்புறமாய் இருக்கின்றதன்றோ, அஃதே. இக்குறுகிய சந்தில் அரசனைப் பிடித்துச்செல்கையில், ஓர் முதிய போர்வீரனும் இரண்டு சிறுவரும் திடீரெனத்தோன்றி அரசனை விடுவித்தனர். ஆகா! அச்சிறுவரின் சுந்தரத்தை என்னெனச்சொல்வேன்! அவர்கள் ஓடுவோரைப்பார்த்து ஏளனம் செய்து, நிற்கச்சொல்லி ஊக்கி, தாமே பொருது பகைவரை வென்றனர். அவர்களுடைய மேன்மைத்தோற்றமே தோற்றம். இலக்ஷக்கணக்கில் ஓடும் மாளவரின் மானத்தை இம்மூவரே காத்தனர்.

மாள.—இது மிக்க ஆச்சரியமாயிருக்கின்றதே! சிறிய சந்தில் ஓர் கிழவனும் இரண்டு சிறுவரும் பகைவரை வென்றாராம். ஆகா! விந்தை, விந்தை!

மதிவ.—(ஏளனமாய்) நாம் அதைப்பற்றி ஆச்சரியப்பட வேண்டியதே யன்றி வேறிலது. நம்மால் ஒன்றுங் கையால் ஆகவில்லை.

மாள.—ஏதப்பா! ஏளனம் புரிகின்றனே?

மதிவ.—இல்லையில்லை. யார் பயந்து ஓடுகின்றானோ அவனுக்கு யானும் நண்பனே.

மாள.—இல்லையில்லை. நீ ஏளனம்புரிகின்றனே. யான்சென்று அரசனைப் பார்க்கின்றேன்.

(மாளவன் போய்விடுதல்)

மதிவ.—(தனக்குள்) இவன் அரசனைப் பார்க்கப் போகின்றானும். இவன் பெரிய போர்வீரனும். இது மிக்க கண்ணியமா யிருக்கின்றது. போர்க்களத்தில் இருந்துகொண்டே விசேஷம் என்னவென்று இவன் என்னைக் கேழ்க்கின்றான். ஐயோ, இப்போரில் எத்தனை பேர் மாண்டனர்! யான் இச்சமரில் எனது உயிரை விட்டுவிட வேண்டுமென்னும் எண்ணத்துடன் வலிய வீரர்களுடன் முரணியுத்தம் புரிகின்றேன். அப்பாழும் யமன் என்னிடம் வரமாட்டே னென்கின்றனனே! அப்படுபாவி, மிக்கத் துன்புற்று வருந்துவோரை விடுத்துப் பற்பல சுகங்களை யனுபவிக்கும் நிலைமையிலிருப்பவரைப் பிடித்துச் செல்கின்றனனே. எனது பிராணனை விட யான் இன்னமும் முயன்று பார்க்கின்றேன். இனியான் சண்டை செய்வதிற் பயனில்லை. வேறோர் தந்திரம் புரிந்து பார்க்கின்றேன். மாளவதேசத்தானைப் போலின்றி இப்பொழுது யானோர் கலிங்கதேசத்துப் போர்வீரனைப்போல் உடைகளை யணிந்துகொண்டு மாளவதேசத்தினன் எவனாயினு மோர்பேதை காணப்படுவானாயின் அவனிடம் அகப்பட்டுக்கொள்கின்றேன். கலிங்க தேசத்தார் இதுவரையில் இலக்ஷக்கணக்கான மாளவதேசத்தினரைக் கொன்றுவிட்டன ராதலின், மாளவர் இப்பொழுது அதன் பொருட்டுப் பழிக்குப்

பழி வாங்குவது நிச்சயம். எப்படியாவது சுந்தராங்கியின் பொருட்டாய் இறக்கவேண்டுமென்றே யான் இங்கு வந்தேனுதலின், யாரிடத்திலாயினும் அகப்பட்டுக்கொண்டு சாதலே உறுதி. செல்கின்றேன்.

(செல்லுதல்)

(மாளவதேசத்து வீரர் சிலர் வருதல்)

ஒருவன்—இவ்விருத்தனும் அவனுடைய மக்களிருவரும் தெய்வங்களென்றே நினைக்கின்றேன். நண்பர்காள்! பராக்கிரமபாகுவும் பிடிபட்டனனுமே!

மற்றொருவன்—இவர்கள் மூவரைத்தவிர மற்றொரு மாளவதேசத்துப் போர்வீரனும் அப்பொழுது கூட இருந்தனனும். அவனுலேயே நமக்கு ஜெயமுண்டாயிற்றும்.

(மதிவதனன் திரும்பி வருதல்)

வேறொருவன்—அப்படித்தான் சொல்லிக் கொள்ளுகின்றனர். எனினும் அம்மூவரில் ஒருவனும் காணப்படவில்லையாம். (மதிவதனனைப் பார்த்து) அடே! யாரடா அங்கு செல்பவன்? நில்லு நில்லு.

மதிவ.—ஐயா! யானோர் கலிங்கதேசத்தான். திரும்பச் சண்டை செய்வதற்குச் சமயம் பார்த்துக்கொண்டு நிற்கின்றேன்.

மாள.—விடாதீர்! அவனைப் பிடித்துக் கொள்ளுங்கள். இவனோர்கலிங்கத்து நாய். இவர்களில் ஒருவனுந் தமதூருக்குத் திரும்பிச் செல்லக்கூடாது. இவன் மிகவும் பராக்கிரமசாலியைப்போலவுந்தான் ஏதோ பெருத்த காரியங்களைச் செய்து விட்டவனைப் போலவுந் தன்னைப் பிரமாதமாய்ப் பாராட்டிக் கொள்ளுகின்றனன்.

இவனைப் பிடியுங்கள். நமது அரசனிடத்தில் இவனைக் கொண்டுபோய் விடுவோம்.

(இவர்கள் மதிவதனனைப் பிடித்துக்கட்டிப் பிரதாபசிம்மன், நரசிம்மவீரன், சுந்தரன், சந்திரன், புருஷோத்தமன் முதலியோரிருந்த விடத்திற்குக் கொண்டுபோதல். அரசன் மதிவதனனைச் சிறைச்சாலையில் அடைக்க உத்திரவளித்தல்: வீரர் அவ்வாறே செய்தல்.)

நான்காங்களம்.

சிறைச்சாலை. (மதிவதனனும் காவலனு மிருத்தல்)

காவலன்—அடே கலிங்கதேசத்தானே! எங்கள் அரசனை வெல்லவெளிதெனநினைத்து நீவிர் மனைவி மக்களை விடுத்து உயிரை ஓர் திரணமாய் நினைத்து வந்தீர்களே. என்ன உங்களுடைய பேதைமை! இனி நீ உனது மனைவி முதலியோரைக் காண்பதேது? அடே நிர் மூடா! முதலிற் பேதமையால் துணிவுகொண்டு வந்து விட்டு இப்பொழுது வருந்துவதில் யாது பயனுளது? ஆய்ந்தோய்ந்து பாராக் கருமம் துயரைத் தருமென் பதை அறிந்தாயில்லையோ?

மதிவதனன்—நண்பா! சிறைச்சாலை முதலிய விடங்களி லிருக்கும் காவலர் யாவரும் முரடராயும் இரக்கமற்ற வராயும் இருத்தலே இயற்கை. நீ எனது விசனத் தைக் கண்டு மனதிளகினவனாக உரையாடுதலைக் காண, என் மனதிற் சிறிது ஆறுதலுண்டாகின்றது. என தரிய நண்பா! உண்மையைத் தெரிவிக்கின்றேன் கேள். இப்பூலோகத்தி லுதிக்கும் எண்ணரிய பிறவிகளில் மானிடப்பிறவியே அரிதினும் அரிதென யாவருந்

தெரிவிக்கின்றனரே, அது பெரும் பொய். மற்றப் பிறவிகளுக்கு தேகாவஸ்தையோடு நிற்க, இம்மானிடற்கே, சரீர பாதையோடு ஓயாக்கவலையும் சதா வருத்தும் மனோபாதையும்கூடச் சேருகின்றன. எத்தகைய பரமானந்த போகமனுப்விப்பவரும் சாஸ்வதமாய் நிலை நிற்கின்றாரோ? நிற்க, அவரும் பல கவலைகளால் ஓயாது சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். மனிதர் சரீரத்தின் உண்மை யோக்கியதையை நீ அறிவையோ? தெரிவிக்கின்றேன், கேட்பாய்.

(இராகம்—எதுகுல காம்போதி.)

“ காதளவோடிய கலசப் பாதகக்
கண்ணியர் மருங்கிற் புண்ணுடனுடுங்
காதலுங் கருத்து மல்லா னின்னிருதாட்
பங்கயஞ்சூடப் பாக்கியஞ்செய்யாச்
சங்கடங்கூர்ந்த தமியேன்பாங்கிருந்
தங்கோடிங்கோ டலமருங்கள்வர்
ஐவர்கலகமிட்டலலைக்குங் கானகஞ்
சலமலப்பேழை யிருவினைப்பெட்டகம்
வாதபித்தங்கோழை குடிபுகுஞ்சீறூர்
ஊத்தைப்புன்றோ லுதிரக்கட்டளை
நாற்றப்பாண்ட நான்முழத்தொன்பது
பீற்றத்துண்டம் பேய்ச்சுரைத்தோட்டம்
அடலைப்பெரிய சுடலைத்திடருள்
ஆசைக்கயிற்றி லாடும்பம்பரம்
ஓயாநோய்க்கிட மோடு மரக்கலம்
மாயாவிகார மரணப்பஞ்சரஞ்
சோற்றுத்துருத்தி தூற்றும்பத்தங்
காற்றிற்பறக்குங் கானப்பட்டம்
விதிவழித்தருமன் வெட்டுங்கட்டை
சதுர்முகப்பாணன் றைக்குஞ்சட்டை

ஈமலிக்கனலி விடுசிலவிருந்து
காமக்கனலிற் கருகுஞ்சருகு
கிருமிகிண்டுங் கிழங்கஞ்சருமி
பவக்கொழுந்தேறுங் கவைக்கொழுகொம்பு
மணமாய்நடக்கும் வடிவின்முடிவிற்
பிணமாய்க்கிடக்கும் பிண்டம்பிணமேல்
ஊரிற்கிடக்க வொட்டாவுபாதி
காலெதிர்குவித்த பூளைகாலைக்
கதிரெதிர்ப்பட்ட கடும்பனிக்கூட்டம்
அந்தரத்தியங்கு மிந்திரசாபம்
அதிருமேகத்துருவி னருநிழல்
நீறிற்குமிழி நீர்மேலெழுத்து
கண்டுயில்கனவிற் கண்டகாட்சி
அதனினும்பொல்லா மாயக்களங்கம்
அமையுமமையும் பிரானேயமையும்
இமையவல்லி வாழியென்றேத்த
ஆனந்தத்தாண்டவங் காட்டி
ஆண்டுகொண்டருள்கை நின்னருளினுக்கழகே,"

அடே! நண்பா! இத்தகைய கேவலமான சரீரத்தை மனிதர் கிடைத்தற் கரிய வஸ்து வெனக்கூறுகின்றனர். இதற்குப் பாத்தியதை யுடையார் எவரெவரென்பதை அறிவையோ?

(இராகம்—காம்போதி.)

"நாயினுக்கிரையோ நரியினுக்கிரையோ நகுநடைக்குழிவிழிப் [பிறழ்பற்
பேயினுக்கிரையோ கழுகினுக்கிரையோ பெரிதுநாறிய [புழுக்குரம்பை
ஈயினுக்கிரையோ யாதினுக்கிரையோ யான் சுமந்துழன்றிடப் [பணித்தாய்
தாயினுக்கழகோ குழவியைவருத்தல் சாற்றிடா யிளசைவான [வனே"

நமது தேகத்திற்கு இத்தனை பங்காளிகளிருக்கின்றனர். நான் மனைவி மக்களை அநியாயமாகவிட்டு ஆவியைத் துறக்க வந்ததாகக் கூறினையே! அவர்கள் உண்மைத்தன்மையை உள்ளவாறு அறிந்தாயில்லைபோலும்

(இராகம்—கானடா)

"தந்தைதாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ் சந்தையிற் [கூட்டமிதிலோ
சந்தேகமில்லைமணி, மாடமாளிகைமேடை சதுரங்க சேனை [யுடனே
வந்தோர்வாழ்வுமோரிந்திர சாலக்கோலம்வஞ்சனைபொருமை [லோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமலபாண்டமோ வாஞ்சனையி [லாதகனவே
யெந்தநாளுஞ் சரியெனத்தேர்ந்து தேர்ந்துமே யிரவுபகலில்லா [விடத்
தேகமாய் நின்றநின்னருள்வெள்ள மீதிலேயானென்பதறவு [மூழ்கிச்
சிந்தைதான்றெளியாது சுழலும்வகை யென்கொலோதேடரிய சத்தாகியென்
சித்தமிசைகுடிகொண்ட வறிவானதெய்வமே தேசோம [யானந்தமே."

நண்பா! உலகத்தின் வாழ்வு இத்தன்மைத்து. எண்ணரிய இத்துன்பங்களை விலக்கும் விஷயத்தில் நமக்கு உதவி புரியும் நண்பன் யாவனென்புதை அறிந்தனையோ? மரணம் என்னும் நண்பனே நம்மை அவற்றினின்றும் விடுவிப்பவன். இறந்தபின் நம்மை எத்தகைய துன்பமும் வருத்துமோ? ஒருபோதுமில்லை.

காவலன்—நீ சொல்வன யாவும் சரியே. இத்தகைய அநித்திய சரீரத்தைக் கொண்ட உங்களுக்கு கலிங்க

தேசம் போதாமல் மாளவதேசமும் எப்படித் தேவை யாயிற்றோ தெரியவில்லையே. ஒன்றும் பலியாமையால் வேதாந்தத்தின் உதவியைப் பற்றினுப் போலும்.

மதிவதனன்—அடே நண்பா! யான் இத்தேசத்தை ஜயிக்கு மெண்ணத்துடன் வந்தவனன்று. எப்படி யாயினும் இப்போரில் உயிர் துறக்க வேண்டுமென்றே வந்தேன். என்னைச் சிறையிலிட்டனரே! எனது எண்ணம் நிறை வேறாமல் போமோவென என் மனம் வருந்துகின்றது.

காவலன்—ஐயோ! உன்னைக் காணின், மிகப் பலதுன் பங்களை அனுபவித்தவன் போலத் தோன்றுகின்றது. இல்லையாயின் உனக்கு இத்தகைய விரக்தி எங்கிருந் துண்டாம். உன் விஷயத்தின் அரசன் என்ன உத்திர வளிக்கின்றானோ தெரிய வில்லை. இப்பொழுது இரவு நெடிய நேரமாகின்றது. சயனித்துக்கொண்டு துயிலு வாய், யானும் சிறிது களைப்பாறுகின்றேன்.

(சேவகன் செல்லுதல்)

மதிவதனன்—ஏ கருணாநிதி! ஏ தீன தயாளு! ஏ ஆபத் பாந்தவா! ஏ சர்வேஸ்வரா! ஏ சகல வியாபி! ஏ சர்வக்ஞா! என்னப்பனே! உன்னையன்றி யெனக்கு யாது துணையுளதப்பா! ஐயோ! இனியும் வருத்தி ஞல் இவ்வேழை எவ்வாறு சகிப்பேன். பூர்வ ஜென் மத்தில் யான் எத்தகைய கொடிய பாதகஞ் செய்தே ஞே தெரியவில்லையே. உலகத்தில் சர்வ சாதாரண மானவர்களும் அன்னை தந்தை முதலியோரை யுடைத் தாம் பாக்கியத்தைப் பெறுகின்றனர். எனது தந்தையோ யான் அன்னை வயிற்றி லிருக்கும்பொழுதே இறந்து விட்டனர். யான் இக்கர்ம பூமியில் தோன்றிய வுடனே எனது அன்னையும் மறித்தனளாம். திக்கற்ற

அனுதை யானேன். அதன் பின்னர், உயிரும் உடலு மென விருந்த சுந்தராங்கியை விடுத்துப் பிரிந்து இந் நகரைவிட்டேக நேர்ந்தது. கற்புக்கிருக்கையாயிருந்த எனதரிய சுந்தராங்கி என்னை வஞ்சித்ததனால் இறந்த னள். இவையனைத்தையும் சகிக்கலாற்ருது உயிரை விடத் துணிந்து இப்போரிற்கு வந்தேன். இங்கும் எனது எண்ணம் பலியாது சிறைச்சாலையில் அடை பட்டிருக்க நேர்ந்ததே! ஆகா! என் செய்வேன்?— இப்பொழுது இரவு இரண்டு மணியிருக்கலாம். சிறிது நித்திரை செய்கின்றேன்.

(மதிவதனன் நித்திரை செய்தல்)

(மறுநாட் காலையில் அரசனாலனுப்பப்பட்ட சேவகரிருவர் வந்து மதிவதனனை எழுப்புதல்)

சேவகர்—அடே! கலிங்க தேசத்தானே! உன்னைத்தூக்கிற் போட உத்திரவாய் விட்டது. புறப்படத் தயார் தானே?

மதிவதனன்—(சந்தோஷத்துடன்) ஆகா! அதற்குத்தடை யென்ன? இறத்தற்கு அநேக நாட்களாய் விரும்பி விரும்பி என்மனது பக்குவமடைந்திருக்கின்றது.

சேவகர்—ஆமாம். இது உலகவியற்கையே. இறந்தால் நன் றெனத் தெரிவிப்பதேயன்றி அத்தருணத்தில், ஐயோ! இவ்வரிய உலகையும் அதன் விசேஷங்களையும் இன்பங் களையும் விட்டுப்போய் விடுகின்றோமே யென ஒவ்வொ ருவரும் மனம் நொந்து வருந்துவர்.

மதிவதனன்—இல்லை, இல்லை. நீங்கள் யாவரும் இவ்வுல கில் உயிருடனிருப்பதை எவ்வளவு அதிகமாய் விரும்பு

கின்றீர்களோ அதைக்காட்டினும் அதிகமாய் யான் இறத்தலை விரும்புகின்றேன்.

(சேவகர் மதிவதனனுக்கு விலங்கிட்டு அழைத்துக் கொண்டு செல்லுதல்)

சேவகர்—தூங்குகின்றவனுக்குப் பல்லின் வலி எப்படித் தெரியும்? கழுமரத்தில் மனிதர் தூக்கப்படுதலை நீ காணாதவன்போல் தோன்றுகிறது. இப்பொழுது நாம் எங்கு செல்கின்றோம் தெரியுமோ? தூக்கப்படும் இடத்திற்குப் போகின்றோம். உனக்குக் கண்கள் கூட இல்லையோ?

மதிவதனன்—யான் இவற்றை யனைத்தையும் நன்றாயறிந்தவனே. அங்கு சென்ற பின்னும் யான் அஞ்சி வருந்துவேனென நினைக்கவேண்டாம்.

சேவகர்—ஆகா! இதென்ன பைத்தியம்! தூக்கிலிடக் கொண்டு போகையிலும் அதைப் பற்றிச் சிறிதும் விசனிபாததை உன்னிடத்திலேதான் நாங்கள் கண்டோம். அதோ தூக்குமர மிருக்கின்றதை பார்த்தனையா?

மதிவதனன்—ஆம் பார்த்தேன். இம் மரத்தைப்போன்ற ஆப்த நண்பன் வேறு யாவனிருக்கின்றனன். எனது மனக்கவலைகளை மாற்றக்கூடிய வைத்தியன் இப்பூமியிலேயேயில்லை. இம்மரமே பெருத்த உபகாரி.

(சேவகர் மதிவதனனைத் தூக்கிலிட ஆரம்பித்தல்.)

சேவகர்—அடே! இன்னம் ஓர்நொடியில் உனது பிராணன் போய்விடும். உனக்கு யாதாயினும் தேவையாயின் தெரிவித்துக் கொள்.

மதிவதனன்—நண்பர்காள்! எனக்கு வேறொன்றுந்தேவை

யிலது. கடவுளைச் சிறிது ஸ்தோத்திரஞ்செய்யத் தயை புரிந்து அனுமதி யளிக்க வேண்டுகின்றேன்.

சேவகர்—துரிதத்தில் ஆகட்டும்.

மதிவதனன்—

(இராகம்—எதுகுலகாம்போதி)

கண்ணார நீர் மல்கியுள்ள நெக்குருகாத
கள்ளனே னானலுமே
கைகுவித்தாடியும் பாடியும் விடாமலே
கண்பனித்தாரை காட்டி
பண்ணுபரஞ் சோதியப்பா உனக்கடிமை
யானெனவு மேலெழுந்த
வன்பாகி நாடக நடித்ததோ குறைவில்லை
யகில முஞ்சிறி தறியுமேற்
றண்ணரு நின்னதருளறியாத தல்லவே
சற்றேனு மினிதிரங்கிச்
சாசுவத முக்திநிலை யீதென் றுணர்த்தியே
சகச நிலைதந்து வேறொன்
றெண்ணமலுள்ளபடி சுகமாயிருக்கவே
யேழையேற்கருள் செய்கண்டா
யிகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்கு நிறைகின்ற பொருளே.

ஏ! பரமானந்த வெள்ளமே! உன்னிரு பாதமன்றி எனக்கு வேறு துணையொன்றுண்டோ! ஏ ஜெகதீசா! எனது புல்லறிவினால் யான் எத்தகைய பாவங்களைச் செய்திருப்பினும் கருணை புரிந்து அவற்றை உனது அருளொளி யாற்கருக்கி உனது பாதார விந்தமீதல் உனது கடனப்பா! சேவர்காள்! யான் தயாராயிருக்கின்றேன். இனி உங்கள் இஷ்டம் போற் செய்யலாம்.

(மதிவதனனைச் சேவகர் தூக்கும் சமயத்தில் திடீரென
ஓர் தூதன் யாதோ கூவிக்கொண்டு
ஓடோடியும் வருதல்)

தூதன்—தூக்காதீர்! தூக்காதீர்! நிறுத்துக்கள்! நிறுத்துங்கள்!

சேவகர்—யாரடா நீ! ஏன் தூக்காமல் நிறுத்தச் சொல்கின்றனை? அரசனது கட்டளையின்வாறு நாங்கள் இவனைத் தூக்கிலிடவேண்டும். உனக்கென்ன பைத்தியமோ?

தூதன்—அரசனே இவனைத் தனக்கு முன் கொணருமாறு உத்திரவளித்திருக்கின்றனன். உடனே அழைத்துக் கொண்டு வாருங்கள்.

மதிவதனன்—ஐயோ! இதென்ன துன்பம்! மரணமும் கிட்டாது கஷ்டப்படவேண்டி யிருக்கின்றதே. ஆகா! யான் இன்னம் எத்தகைய வேதனைகளை அனுபவிக்க வேண்டுமோ தெரியவில்லையே.

தூதன்—இவனுக்கு விலங்கிடாமல் அழைத்து வாருங்கள்.

சேவகர்—ஆகா! அப்படியா, இது நல்ல சமாசாரத்தைக் குறிப்பதாய் நினைக்கின்றோம். இன்னம் சில நிமிஷத்தில் உண்மை விளங்கிவிடும். செல்வோம் வாருங்கள்.

ஐந்தாங் களம்

போர்க்களத்தில் அரசனது கூடாரம்.

(அரசன், நரசிம்மவீரன், சுந்தரன், சந்திரன்,
புருஷோத்தமன் முதலியோரும் மற்றவரு மிருத்தல்)

அரசன்—எனதுயிரை யீந்த அரிய நண்பர்காள்! எனக்கெதிரில் வாருங்கள். கேவலமான உடைகளைத்தரித்துக்கொண்டு மிக்கப் பராக்கிரமத்தோடு போர்புரிந்து

என்னை மீட்ட அவ்வெளிய போர்வீரனை ஒருவரும் கண்டுபிடித்தாரில்லையே யென என் மனம் மிகவும் வருந்துகின்றது. அவனைக் கண்டுபிடித்துக்கொண்டு வருவதாய்ச் சென்ற தூதன் அவ்வாறு செய்வானாயின் அத்தூதனுக்குப் பெருத்த வெகுமதி யீந்து மகிழ்விப்பேன்.

நரசிம்மவீரன்—அரசே! அவன் ஓர் யாசகனைப்போலக் கிழிந்த உடைகளை யணிந்திருப்பினும் அவனுடைய வீரதீரச்செயல்களை யான் வேறெவரிடத்திலுங்கண்டேனில்லை. அவனே உங்களை விடுவித்தனனன்றி எங்கள் மூவரால் மாத்திரம் அக்காரியம் ஒருபோதும் முடிந்திராது.

அரசன்—அவனைப்பற்றி அறிவோர் ஒருவருமில்லையா!

புருஷோத்தமன்—அவனை உயிருட னிருப்போர்களிடத்திலும், இறந்து கிடப்போர்க் கிடையிலும் எவ்விடத்திலும் கண்டோமில்லை.

அரசன்—அவனை அழைத்து வருவதாய்ச் சென்ற தூதன் வரட்டும். எனது உயிரையளித்த நீங்கள் மூவரும் யாவர்? எங்கிருப்பவர்? சரியான தருணத்தில் வந்துதவிய விந்தை யென்னை? தயைபுரிந்து தெரிவிப்பீர்.

நரசிம்மவீரன்—பிரபு! நாங்கள் குந்தல தேசத்திலுள்ளோர் இப்போரின் விசேஷத்தைக்காண வேண்டி வந்தோம். உங்கள் விபத்தைக்கண்டு பொறுது போர் செய்தோம். இதைத்தவிற வேறு பல அரிய சௌரியங்களைக் கூறுதல் தற்புகழ்ச்சியாகும். எனினும் நாங்கள் மிக்க யோக்கியதா பக்ஷமுடையவரென்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்வதிற் குற்றமில்லை.

அரசன்—ஆகா! நண்பர்காள்! உங்களைப் பெருத்த பிரபுக்

களாக்கினேன். இனி நீங்கள் இவ்வரண்மனையிலேயே சௌக்கியமாயிருப்பீர்.

(வைத்தியன் வாசுதேவனும் தாதியரும் துக்கத்துடன் வருதல்)

அரசன்—என்ன விசேஷம்? உங்களுடைய முகங்கள் மிக்கத்துன்பத்தைப் புலப்படுத்துகின்றனவே! நமதுவெற்றியைக் குறித்து யாவருங் களிப்படைய வேண்டியதன்றோ! நிகழ்ந்ததென்ன? நீங்கள் கலிங்கதேசத்தாரைப்போலத் தோன்றுகின்றீரன்றி மாளவத்தாரைப்போலப் புலப்படவில்லையே?

வாசுதேவன்—அரசே! உங்கள் மனமகிழ்வைக் கெடுத்தற்பாலவிசேஷ சமாசாரத்தைக் கொணர்ந்திருக்கின்றனம். சரசாங்கி மகாராணியார் இவ்வுலகைத்துறந்தனர்.

பிரதாபசிம்மன்—(விசனத்துடன்) ஐயோ! இவ்வளவு விரைவில் இறந்துவிட்டனளா! ஆகா! என்ன இது பொய்யோ? மெய்யோ? உனது சிகிச்சையினாற் பிழைப்பளென உறுதியாய் நினைத்திருந்தேனே. ஐயோ! என்ன எனது பாவம்! துன்பங்கள் யாவும் ஒன்றன்மேலொன்றாய் வருகின்றனவே, ஐயோ! தெய்வமே! என்ன செய்வேன்? அடே வாசுதேவா! இவ்வளவு விரைவில் எவ்வாறிறந்தனள்?

வாசுதேவன்—ஐயோ! மிக்கபயங்கரமான மரணம்! படிப்படியாய் பைத்தியமும் பிதற்றலும் அதிகரித்தன. படுக்கையை விட்டெழுந்திராமலும் உணவுமுதலிய கொள்ளாமலும் மேன்மேலும் மெலிந்தனளேனும் பிதற்றலும் பயங்கரமான தோற்றமும் வரவர அதிகரித்தன. அவ்வாறே இறந்தனர். அம்மகாராணியார் இறப்பதற்குமுன சில விஷயங்களைத் தெரிவித்தனர். அப்பொழுது

கண்ணீருங் கண்ணுமாயிருந்த இத்தாதியருக்கும் அவை தெரியும். அவைகளை இவ்விடத்தில் தெரிவிக்க என் மனங் கூசுகின்றது.

பிரதாபசிம்மன்—என்னடா தெரிவித்தனள்?

வாசுதேவன்—அவள் உங்களை எப்பொழுதும் காதலித்ததே யில்லையென்றும், அரசியாகும் எண்ணத்தினால் உங்களை மணந்ததாயும், இது வரையில் மனதிற்குள் முற்றும் வெறுப்புடனிருந்ததாயும் கூறினள்.

பிரதாபசிம்மன்—ஆகா, அப்படியா! இன்னம் யாதாயினுந் தெரிவித்தனளோ?

வாசுதேவன்—உங்கள் சுதையான சுந்தராங்கியின் மீது வாஞ்சை யுடையவள் போல நடித்தாளே யாயினும் அவளை முற்றும் வெறுத்துப் பகைத்தனளாம். அவள் திடீரென எங்கேயோ சென்று விட்டமையின் தப்பிப் பிழைத்தனளென்றும் இல்லையாயின் அவளுக்கு விஷமீந்துகொல்ல நினைத்திருந்ததாயும் புகன்றனள்.

பிரதாபசிம்மன்—ஆகாகா! எத்தகைய நீலி! பெருத்த நடலக்காரி! பெண்களின் மனதை யாரறியக்கூடும்? இன்னம் யாதாயினு முளதோ?

வாசுதேவன்—இவற்றிலும் மிகக்கொடிய தீயவிஷயமொன்றுளது. உங்களுக்குக் கொடுக்க ஓர் பாஷாணத்தைத் தயாரித்து வைத்திருந்தனளாம். அதை உண்பவர் படிப்படியாய் மெலிந்து உதிரமற்று அதிசீக்கிரத்தில் இறத்தல் நிச்சயமாம். நீங்களதை யுண்டபின், உங்களிடத்தில் மிக்கக் காதலைத்தோற்றுவித்துப் பாசாங்கு புரிந்தும், அழுதும், அணைத்தும், குலாவியும் வருந்தியும், உங்களுக்குப்பல உபசரணை புரிந்தும் இவ்வர

சியலேத்தானும் தன் அண்ணனான ஜெயபாலனுமாய் அடைய உங்கள் அனுமதிபெற்று விடுவதாய் நினைத்திருந்தனளாம். இவையாவும் பலியாமற் போயிற்றே யெனும் ஏக்கத்தினால் புத்தி மாறாட்டம் அதிகரித்ததாம். இவ்வாறு பற்பல விஷயங்களை வெளியிட்டனள்.

பிரதாபசிம்மன்—தாதியர்காள்! சரசாங்கி இவ்வாறு தெரிவித்தனளா?

தாதிகள்—(விசனத்துடன்) ஆமாம், மகாராஜனே!

பிரதாபசிம்மன்—ஆகா! இவளைப் போன்ற கொடிய பாதகி எவளேனு முண்டோ! ஐயோ! எனதரிய செல்வியை இவளது துர்ப்போதனையாலன்றோ வருத்தினேன். அவள் இவ்விடம்விட்டுச் சென்றதும் என்னாலன்றோ. ஐயோ! தெய்வமே! எனதுயிரனைய புதல்வியை இனி எங்கு காணப்போகின்றேன்?

(சூரசேனன், பராக்கிரமபாகு முதலியோர் விலங்காற் பிணிக்கப்பட்டு அரசனுக்கு முன்னர் கொணரப் படுதல். இவர்களைத் தொடர்ந்து கோவிந்தன் வருதல். மற்றோர் புறத்திருந்து மதிவதனன் தாழ்ந்த உடைகளைத் தரித்தவனாய்த் தூதன் சேவகர் முதலியோருடன் வருதல்.)

அரசன்—அடே! பராக்கிரமபாகு! இப்பொழுது கப்பங் கேழ்க்க வரவில்லையே? மாளவ தேசத்தாரில் எண்ணிக்கையற்றவர் இறந்து விட்டனரேனும் வெற்றி எமது பக்கத்ததன்றோ, மாண்டவரின் சுற்றத்தினர், கைதிகளாக்கப் பெற்ற கலிங்கத்தாரனைவரையுங் கொன்றாலன்றித் தங்களது ஆத்திர மடங்காதெனக் கூறி இவ்வாறு கட்டளையளிக்க என்னை வேண்டினர். யானும் அவ்வாறே உத்திரவீந்து விட்டேன். இப்

பொழுது உங்கள் நிலைமையைப்பற்றிச் சிந்திப்பாய் பராக்கிரமபாகு!

பராக்கிரமபாகு—அரசே! இப்போரில் நீங்கள் எவ்வாறு வெற்றி பெற்றீரென்பதைச் சிறிது யோசனை செய்து பாருங்கள். இதுதற்செயலேயன்றி வேறிலது. நாங்கள் ஜெயித்திருப்போமாயின், எமது கைதிகளை இவ்வாறு வெறுங்கையராய் அனுதையாயிருக்கையிற் கொல்வதாய்க் கூறுவது வீரத்திற்கு இழுக்கெனக் கொள்வோம். எனினும், இவ்வாறு நடக்கவேண்டுமென்பது கடவுள் சித்தமாதலால் நடப்பது நடக்கட்டும். எங்களை நீங்கள் வெட்டி விடுவதைப் பற்றியான் சற்றுங் கவலைப் பட்டேனில்லை. யான் இறப்பதற்கு முன்னர் ஓர் சிறிய விண்ணப்பம் செய்து கொள்ளுகின்றேன். அதைக் கருணை கூர்ந்தளிப்பீர்களாயின் அதுவே போதுமானது.

பிரதாபசிம்மன்—என்ன வேண்டுகின்றனை?

பராக்கிரமபாகு—எனது வேலைக்காரன் ஓர் சிறுவனிருக்கின்றனன். அவன் மாளவதேசத்தானே. அவனைப்போன்ற வேலைக்காரர் இவ்வுலகில் எவருக்கும் இதுவரையிற் கிடைத்தது மில்லை இனி கிடைப்பதுமில்லை. என்ன அவனது நாயக விசுவாஸம்! என்ன வாஞ்சை! என்ன மரியாதை! அவனது உண்மை, நற்குணம், அன்பு, உபசரணைத்திறன், ஊக்கம், புத்தி நுட்பம் முதலிய பல விசேஷங்களையும் என்னென விரித்துரைப்பேன். அவனை மாத்திரம் உயிருடன் விட்டு விடுமாறு மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகின்றேன். அவன் இச்சண்டையிற் போர்புரியவுமில்லை. அவன் உங்கள் சேனைகட்கு யாதொரு துன்பமுமீந்ததில்லை. அவனை மாத்

திரம் காப்பாற்றிவிட்டு எங்களைக்கொல்லலாம். இதுவே எனது வேண்டுகோள் அரசே!

அரசன்—ஆகா! அவன் அத்தகைய சிறப்பினனு! அவன் எங்கே இருக்கின்றனன்? என்முன்னர் வரட்டும்.

கோவிந்தன்—இராஜாதிராஜனே! (வணங்குகின்முன்)

பிரதாபசிம்மன்—(திகைத்து) ஆகா! இவனை யான் இதற்கு முன்னர் எங்கு பார்த்தேன்? இதற்குமுன் கண்டறிந்த முகமாய்த் தோன்றுகின்றதே! எங்கு பார்த்திருக்கலாம்? எத்தகைய வசீகரமான இனியமுகம்! ஐயோ! இவனையுங் கொல்ல மனங்கொள்வரோ! இவனது முகக் குறிகளே இவனுடைய நற்குணங்களை நன்முய்ப் புலப்படுத்துகின்றனவே! அடே, சிறுவா! எனதருகில்வா! உனது பெயர் யாது?

கோவிந்தன்—அரசே! என்னைக் கோவிந்தனென அழைப்பார்கள்.

அரசன்—கோவிந்தா! உன்னை உயிருடன் விட்டு விட்டேன். ஆகா! உன்விஷயத்திற் காரணமறியக் கூடாவாறு என் மனம் மிக்க இரக்கத்தையும் அபிமானத்தையுங் கொள்கின்றன! இன்னம் உனக்கு யாது தேவையோ அதையுங்கேட்பாய், தருகின்றேன். நீ எதைக் கேட்கினும் சரி. இக்கைதிகளில் முக்கியமானவரின் உயிரைக் கேட்டபோதினும் அளிக்கத் தடையில்லை.

கோவிந்தன்—வேந்தே! இவ்வேழைமீது இவ்வளவு கிருபை கொண்டதற்காக உங்களது அடிதொழு திறைஞ்சுகின்றேன்.

பராக்கிரமபாகு—எனதரிய கோவிந்தா! என்னுடைய

பிராணனை கேட்குமாறு யான் உன்னை ஏவவில்லை. எனினும் நீ அதைத்தான் கேட்பாய் என்பதுறுதி.

கோவிந்தன்—(சூரசேனனை உற்று நோக்கி) ஆகா! சற்று பொறுங்கள்! வேறோர் வஸ்துவைக்காண என் மனம் பதைக்கின்றது.

பராக்கிரமபாகு—ஐயோ! இச்சிறுவன் இப்பொழுது என்னை வெறுத்து அலட்சியம் புரிவதின் விந்தை என்ன? ஆஹா! ஏன் இவன் எதையோ கண்டு இவ்வாறு திப்பிரமை கொண்டு கலங்கி நிற்கின்றனன்.

பிரதாபசிம்மன்—கோவிந்தா! உனக்கு யாது தேவை, தெரிவி? எனக்கு உன்னைப் பார்க்கப்பார்க்க உன்மீது வாஞ்சை அதிகரிக்கின்றது. அதன் காரணம் இன்னதென அறியக்கூடவில்லை.—நீ ஏன் சூரசேனனை இவ்வாறுமருண்டு மருண்டு நோக்குகின்றனை? அவன் உனக்குபந்துவோ? அவனை உயிருடன் விட்டு விடட்டுமா?

கோவிந்தன்—அரசே! அவன் எனக்கு எவ்வித உறவினனுமல்லன்.

அரசன்—அங்ஙனமாயின் அவனை ஏன் மேன்மேலும் உற்று நோக்குகின்றனை?

கோவிந்தன்—அண்ணலே! நீங்கள் தயை புரிவீர்களாயின் ஓர் விஷயத்தை இரகசியமாய்த் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அரசன்—அப்படியா! நாமிருவரும் சிறிது அப்பாற் செல்வோம். தனிமையில் தெரிவிப்பாய்.

(இருவரும் ஓர் புறஞ்சென்று உரையாடுதல்.)

நரசிம்மவீரன்—ஆகா! பாலகர்காள்! இவன் நமது குகைக்கு வந்தவனைப்போ லிருக்கின்றனனே! இறந்தவன் திரும்

பப் பிழைத்தானு? இதென்ன பெரும் விந்தையாயி ருக்கின்றது!

சுந்தரன்—ஆமாம்! இவன் பெயரும் கோவிந்தனுமே.

சுந்தரன்—இறந்தவன் எப்படி பிழைத்தல் கூடும்?

நரசிம்மவீரன்—சற்று பொறுங்கள்! இன்னமும் கவனிப் போம்! அவனுயிருப்பின் நம்மைக் கண்டெடுத்தும் பாராமல் இவ்வாறிருப்பனே! ஒருவரைப்போல வேறொருவரிருக்க லாமன்றோ. அவனுயிருப்பின் நம் முடன் நிச்சயமாய் வசனித்திருப்பன். பேசாது மேலுங் கவனியுங்கள்.

புருஷோத்தமன்—(தனக்குள்) ஆகா! இவளை யான் அறி வேன். எனது எஜமானியன்றோ. இவள் இறவாமல் உயிருடனிருப்பதைக்காண எனக்கு அடங்காப் பேரா னந்த முண்டாகின்றது. முடிவைக் கவனிக்கின்றேன்.

(அரசனுங் கோவிந்தனும் வருதல்.)

அரசன்—(கோபமாய் சூரசேனனைப் பார்த்து)

(இராகம்—மோகனம்.)

கலிங்கனே சூரசேனக் கசடனே யெதிரில்வாராய்
நலமிகு சிறியன் கேட்ப நவிலுவாய் வாய்மையாகப்
புலையனே யவத்தமென்பாற் புகன்றிடி லறுப்பல்நாவை
விலங்கினுங் கடையசூதா விழிகளை யொழிப்பேன் பாராய்.

அடே! கலிங்க தேசத்துப்பதரே! என் முன்பாகவா! —ஏ! பாலகா! கோவிந்தா! நீ எனது அருகில் நின்று கொண்டு உனக்குத் தேவையானதைக் கேள்—சூரசேன! இச்சிறுவன் வினவுவதை உண்மையாய்த் தெரிவிக்கக் கட வை. பொய் சொல்வையேல் உன்னை அணுவணுவாய்க் கழித்துச் சித்திரவதைசெய்ய உத்தரவளிப்பேன். என்ன யான் கூறுவதை உணர்ந்தனையா?

கோவிந்தன்—மன்னவா ! இவன் தனது கைவிரலிலணிந்து கொண்டிருக்கும் இரண்டு வைரமோதிரங்களையும் எப்படிப் பெற்றனனென்பதைத் தெரிவிக்கவேண்டும்.

மதிவதனன்—(தனக்குள்) வேலைக்காரனாகிய இப்பையனுக்கு இதைப்பற்றி என்ன கவலை ? அவன் மோதிரங்களை எங்கு பெற்றாலென்ன ?

பிரதாபசிம்மன்—அடே ! சூரசேனா ! இம்மோதிரங்கள் உனக்கு எப்படிக் கிடைத்தன ? தெரிவி.

சூரசேனன்—(திகிலடைந்து நடுங்கி) மகாப்பிரபு ! உண்மையைத் தெரிவிக்காவிடில் என்னை வதைப்பதாய்த் தெரிவித்தீர்கள். உண்மையைத் தெரிவித்தால் அது உங்களை வதைக்குமே என் செய்வேன் ?

பிரதாபசிம்மன்—அது என்னை எப்படி வருத்தும் ? பீடிகை ஒன்றுந்தேவையில்லை. தாமதமின்றித் தெரிவியடா, கள்வா ?

சூரசேனன்—

(அகவல்)

(இராகம்—நாதநாமக்கிரியை.)

அறிவினிற் சிறந்த அண்ணலே கேண்மின்
இறைவனே வஞ்சக மியற்றியே யிவைகளைப்
பெற்றனே னாதலி னேங்குதே யென்மனம்
உற்றவை யனைத்தையு முண்மையாய்க் கூறுவேன்.
இரண்டினி லொன்றுமே யிறைவநுஞ் செல்வியாம்
அரசியின் மோதிர மதற்கிணை யெனத்தகும்
மற்றதோ சிலனும் மதிவதனன் பொருள்
கொற்றவா வென்றனைக் கோபியா தொழிமின்

அரசன்—அஃ்டே ! என்னடா இது ! எனது தனயை சுந்தராங்கியின் மோதிரம் உனக்கெவ்வாறு கிடைத்ததடா ?

சூரசேனன்—

(இராகம்—காம்போதி.)

விளம்புவேன் கேண்மின் வேந்தனே யோர் நாள்
வளமிகு மென்றன் கலிங்கமா பதியில்
பலராம னென்பான் பண்புடை நண்பன்
சிலருடன் கூடியே யினிதிருக் கையிலே
மதிவத னப்பெயர் மாண்புடைத் தகைவனும்
வதியுமாறுங்குமே வந்தனன் விதியினுல்.
அன்னவன் நற்குண மென்னெனக் கூறுவேன்
மன்னவா வக்கணம் மடையன் யானங்கர்
மங்கையரழகினில் மாசிலா மேன்மையார்
பங்கமில் குணத்தினர் பதிமொழி கடவா
ரென்னவேபகர்ந்து யான்செருக்கினைக் காட்டினேன்
அன்னவ னவைகளைச் சரியெனக் கொள்ளினும்
தன்னருந்துணைவியாந் தையலை மிக்கவும்
பன்னியே புகழ்ந்தனன் கன்னிய ரெவரும்
நுண்ணிடை யவள் தன்பொன்னடி பணியும்
பண்புடை யவரே, படிதனிலுள தாம்
நன்குகள் யாவுமே நற்றவ மியற்றிட
யின்பமே யுருவென யித்தல முதித்தன
ளென்னவே பற்பல வியம்பினன் யானதை
யுன்னியே வெகுண்டு முரணினே னவனுடன்.
அவன் றரும் மொழியெலா மவத்தமாய்க் கொண்டனேன்
அவனியி லத்தகை யரிவைய ரேயில
ரெனப்பல வாதுகள் செய்தனே னவனுடன்
வனிதையின் கற்பினை யழித்திடல் செய்குவேன்
பாரெனக்கூறினேன் பந்தயம் வைத்தனம்.
நாரிமணி யாஞ்சுந்த ராங்கியின் மனதினைக்
கவர்ந்து மயக்கிடக் கருதினே னவனிடம்
கொண்டனேன் மோதிரங் குறியதோர் நிருபமுங்
கண்டனேன் கோதையைக் கண்ணிய மிழந்தனேன்.

தோற்றுத் திரும்புதல் தூஷணைக் கிடமென
எற்றனன் வஞ்சகச் செயலினைப் பெட்டியின்
வாயிலாப் போந்தனேன் மங்கையி னரியதாஞ்
சயனமா ளிகைதனிற் றனிமையிற் றுயின்ற
கயல் விழித்தோகையின் கணையாழி வௌவினேன்.
மார்பினி லுள்ளதோர் மறுவினைக் கண்டனேன்
சேர்ந்தனே னென்பதி செப்பினேன் கண்டதைக்
கோதையை வென்றதாய்க்கூறி னேன வன்வயின்
மாதிவ ளீந்ததாய்க் காட்டினேன் மோதிரம்
மற்றவர்காணுத மச்சம் யான்கண்டதால்
சொற்றதை முற்றுமே யுண்மையா யேற்றனன்
வாடியே நொந்தனன் வதங்கினன் சீறினன்
பேடையாம் பேதையை வேசையாய் மதித்தனன்
பதறினன் கதறினன் பைத்தியங் கொண்டனன்
சிதைத்திட நினைத்தினன் சேவகன் றனக்கு
விடுத்தனன் கடிதமும் வேண்டினன் கொன்றிட
முடிவினை யறிந்திலேன் முனிந்திடா தருள் மின்.

(இதைக்கேட்ட மதிவதனன் ஆத்திரத்துடன்
முன்னால் ஓடிவந்து)

மதிவதனன்—

(இராகம்—மோகனம்.)

கலிங்கனே கள்வா சூதா கபடமேயுருவாய் வந்த
புலையனே யடையாபேதைப் புல்லிய வுணர்வைக் கொண்ட
கொலைஞனே நின்னைக்காணக் கூசுதே கொடியபாவி
விலையிலா மணியாம் நாரி விண்ணுலகடைந்த தன்னால்.

(கோபத்துடன்) அடே, படுபாவி சூரசேனு ! கொலை பாதகா ! அனியாயமாகச் சுந்தராங்கியைக் கொல்லுவதற்கு வழிதேடினையே—ஆகா, பூபதி! என்னை உங்கள் வாளாலாயினும், விஷத்தின் மூலமாயினும், தூக்கின் மூலமாயாயினும், உடனே கொன்று விட உத்தரவளியுங்கள். யான் மதி

வதனன். யானே உங்களது அரிய புதல்வியைக் கொன்ற வன். எனது சரீரம் பாழும் நரகினுக்கே உரித்தது. நீங்கள் என்னை அணுவணுவாய்க் வெட்டி விடுங்கள்.—ஆகா! சுந்த ராங்கி! அவளைப் போன்ற பரிசுத்த உருவமான மங்கையர் இப்புவியிலேலது? (கீழே விழுந்து பிரலாபித்தல்) ஐயோ! சுந்தராங்கி! எனதாருயிரே! என்கண்மணி! அடி, மதிப் பிலா மாணிக்கமே! உனது தேகம் எங்கே மறைந்து விட்ட தடி! ஐயோ! ஆத்திரக் காரனுக்குப் புத்திமட்டென யான் இக்காரியஞ் செய்தேனே, அடி சுந்தரி! தேனே! என்மனம் பதறிப் பதைக்குதே...

கோவிந்தன்—சற்றுபொறும் சற்றுபொறும்.

மதிவதனன்—அடே! கேவலமான சேவகப் பயலே! யான் வசனிக்கையில் இடையில் பேசுகின்றனையா! ஓர் புறத் திற் கிடப்பாய்.

(மதிவதனன் கோவிந்தனை ஓர் அடி அடித்து
அப்பால் தள்ள, அவன் அப்புறம்
கீழே விழுதல்.)

புருஷோத்தமன்—(பதைபதைத்து) ஆகா கீழே விழுந்தது சுந்தராங்கியன்றோ!—எனதரிய தலைவா! நீங்கள் சுந்த ராங்கியைக் கொல்லவில்லை.

அரசன்—ஆகா! இதென்ன விந்தை! உலகமே முற்றும் தலைகீழாய் மாறுகின்றதா!

மதிவதனன்—ஆ! அவள் உயிருட னிருக்கின்றனளா? ஆமாம், அவளுடைய வதனமாய்த் தோன்றுகின் றதே!

புருஷோத்தமன்—தாயே! எழுந்திருங்கள்! அடி பல மாய்ப் பட்டதோ?

அரசன்—ஆகா இது நிஜமோ! அல்லது கனவோ! இவை உண்மையாயின் பேரானந்தத்தினால் எனதுயிர் போய் விடும் போலிருக்கின்றதே.

புருஷோத்தமன்—அம்மா! உடம்பு எவ்வாறிருக்கின்றது?

சுந்தராங்கி—(சிறிது கோபத்துடன்) அடே, புருஷோத்தமா! அப்பாற் போ, உனது முகத்தை பார்க்கவே எனக்கிஷ்டமில்லை. என்னிடத்தில் அமிர்த சஞ்சீவி யென விஷத்தைக் கொடுத்தனையன்றோ? உன்னை நம்பலாகாது!

அரசன்—ஆகா! எனதினிய சுந்தராங்கியின் குரலன்றோ!

புருஷோத்தமன்—தாயே! அதைச் சரசாங்கி மகாராணியார் அமிர்த சஞ்சீவி யென்று எனக்குக் கொடுத்தனர். யான் அதை உண்மையென நினைத்தேன். யான் உங்களிடம் மோசம் புரிவேனாயின் என் சிரத்தின்மீது இடியே விழும்.

அரசன்—ஆகா! விஷயங்கள் புதிது புதிதாய்க் கிளம்புகின்றனவே!

சுந்தராங்கி—அதை யான் உட்கொள்ள, அது விஷமாய் முடிந்தது.

வாசுதேவன்—அண்ணலே! சரசாங்கி இதையும் தெரிவித்தனள். யான் மறந்துவிட்டேன். இவன் சொல்வது உண்மைதான்.

அரசன்—வாசுதேவா! என்னடா அது?

வாசுதேவன்—மகாராணியார் விஷயங்களின் தன்மையைக் கற்றுக்கொடுக்குமாறு என்னை நெடுநாளாய் வற்புறுத்திக் கொண்டிருந்தனர். எலி பூனை முதலிய வற்றிற்குப் பிரயோகித்து, மாற்று மருந்தைக் கொடுத்து

மீட்கவேண்டுமெனக் கொஞ்சம் விஷத்தைக் கொடுக்குமாறு வேண்டினள். யான் சந்தேகித்து அவ்வாறு செய்யாது வேறோர் மருந்தைக் கொடுத்தேன். அதையுண்டவர் சில நாழிகை வரையில் இறந்தவரைப்போலக் கிடப்பினும் கடைசியில் முன்னிலும் வலியுடன் விழித்தெழுவர். அதனால் அவருக்கு யாதொரு பொல்லாங்கும் நிகழாது.—ஆகா! அம்மா அதை நீங்கள் உண்டீர்களா?

சுந்தராங்கி—ஆமாம். அதை உண்டவுடன் இறந்தவள் போல விழுந்துவிட்டேன். பிறகு ஒன்றையும் அறிந்தேனில்லை.

நரசிம்மவீரன்—பாலகர்காள்! உண்மையை அறிந்தீர்களா? இப்பொழுதன்றோ யாவும் ஸ்பஷ்டமாய் விளங்குகின்றன.

சுந்தரன்—நம்மிடத்தில் வந்த கோவிந்தன் இவனே.

சந்திரன்—இனி இவனேது? இவளே!

(சுந்தராங்கி மதிவதனனை உற்று நோக்கி ஓடிப்போய் அவனது கரத்தைப் பிடித்துக் கொள்ளுதல்.)

சுந்தராங்கி—

(திருப்புகழ்)

பன்னாளும் யாமொருங்கே யாவியுடல் போலவிருந்
தென்னோமேனும் பிரியா தென்குணம் நீ யறிந்து
இன்னவையே புரிய வேவியதென் மாயமிது—இனியோனே.

ஏ! மதிவதனா! உன்னை எனது உயிரென மதித்திருந்தவென்னைக் கொல்ல நினைத்துப் பதைபதைத்தையன்றோ. இப்பொழுது உன் கரத்தினாலேயே நீ என்னை வெட்டிவிடு.

யான் மனத்திருப்தியோடு இறக்கின்றேன். உனது சந்தேக மும் நிவர்த்தியாய்விடும்.

மதிவதனன்—

என்னுயிரே யெனது தேடரிய மாமணியே
துன்னுத பாதகனுஞ் சூரசேனப் பேதையவன்
உன்னுதவாறு பல வோதியெனைக் கோபங்கொள்ளப்—புரிந்
[தானே.

ஏ கண்மணி! சுந்தரி! ஆகா! என்ன வார்த்தை மொழிந் தனை? இப்பாதகனுன சூரசேனன் புரிந்த வஞ்சகத்தினுல் யான் உன் விஷயத்தில் தீங்கு நினைத்தேன். எனதாவியே! நீ அவைகளை இனி மறந்து என்னை மன்னிக்க வேண்டியது உனது கடன். இனி உன்னை ஓர் க்ஷணமும் பிரிவேனே?

சுந்தராங்கி—

நன்றாகவே மொழிந்தாய் நாரியரின் மீது நீவிர்
ஒன்றாத பாதகமுமோது வதுங் கோபம்வரின்
கன்றாத போதவரைக் காதலுடன் பேணுவதும்—அழகாமோ.

மதிவதனன்—

கண்ணேயென் காதல்மிகு காரிகையென் பேதமையை
யெண்ணுமலே யென்பிழை நீபொறுத்த லேபுரிவாய்
விண்ணேகு காலம்வரை வேறுபடுமோ வென்மனம்—மின்
[ஞளே.

அரசன்—எனதரிய செல்வி! எனது பாக்கியமே! ஏ திகட் டாத சுவைக்கட்டியே! எனதருகில் வா. என்ன என் னுடன் ஓர் அன்பான மொழி வசனிக்கலாகாதா? உன் விஷயத்தில் யான் ஏதேதோ பல தீங்குகள் புரிந்திருப் பினும் ஈன்ற தந்தையின் மீது நீ வர்மம் பாராட்டலா மா? எனது விலையிலா நிதியே! ஏ மாற்றிலாத தங்க மே! இங்கே வா!

சுந்தராங்கி—

(வணக்கத்துடன்)

எனதரிய பிதா! உங்கள் மீது எனக்கு வருத்தமேன்? நீங்களே எனது பிழைகளை மன்னித்து ஆசீர்வதிக்க வேண்டும்.

நரசிம்மவீரன்—சுந்தரா! சந்திரா! கோவிந்தனைச் சகோதரனென வாஞ்சை பாராட்டியது உங்கள் குற்றமன்று. அதற்குக் காரணமிருக்கின்றது.

அரசன்—(தன்னை வணங்கிய சுந்தராங்கியை ஆசீர்வதித்து) ஆகா! இப்பொழுதே யான் கிருதார்த்தனானேன். எனது ஆனந்தமே பேரானந்தம்! குழந்தாய்! உனது சிற்றன்னையும் இறந்துவிட்டனள்.

சுந்தராங்கி—ஆ! இறந்து விட்டனளா! ஐயோ! பாவம்! இவ்வளவு இளமையில் இறந்து விட்டனளே! இது பெருத்த துக்ககரமான சங்கதியாயிருக்கின்றதே!

அரசன்—ஜெயபாலனும் எங்கேயோ சென்று விட்டனன். அவனைக்கண்டோருமில்லை.

புருஷோத்தமன்—அவ்விஷயத்தில் யான் உண்மையைத்தெரிவிக்கின்றேன். சுந்தராங்கி அரசியார் காணாமற்போன பின் அவர் தனது வாளை உருவிக்கொண்டு என்னிடம் வந்து, சுந்தராங்கி சென்ற விடத்தை உடனே தெரிவிக்காவிடில் அப்பொழுதே என்னைக் கொன்று விடுவதாய்ப் பயமுறுத்தினர். அச்சமயத்தில் எனது எஜமானன் சுந்தராங்கி யரசியாருக்கு எழுதிய கடிதமொன்று தற்செயலாய் என்னிடமிருந்தது. அதை அவரிடங் கொடுத்தேன். அதைப்பெற்றுக்கொண்டு, அரசியின் கற்பையழித்து விடுவதாய்க் கூறிவிட்டு

விரைவில் துறைமுகப் பட்டினத்திற்குச் சென்றனர். அதற்குப் பின்னர் நிகழ்ந்த வற்றை யானறியேன்.

சுந்தரன்—மீதி விபரத்தையான் தெரிவித்து முடிக்கின்றேன். இறைவ! அவனையான் அவ்விடத்திலேயே முடித்து விட்டேன்.

அரசன்—(கோபத்துடன்) ஆகா! அப்படியா! அவன் மகாராணியின் தமையனென்பதை அறிந்தாயில்லைபோலும்.

சுந்தரன்—அவன் முற்றும் கௌரவதையற்றவன். அவனது சொல்லும் செயலும் அரசகுலத்தி லுதித்தவனுக்குத் தகாதவையாயிருந்தன. அவன் எங்களை முகாந்திரமின்றி எவ்வாறு தூஷித்துக் கோப மூட்டினன்! நாங்கள் அவன் விஷயத்தில் ஓர் விதத்தவறும் மரியாதைக் குறைவும் செய்யாதிருக்க, அவன் எங்களை வாயில் வந்தவாறு வைதனன். ஆதலின் யான் அவனது சிரத்தை வெட்டினேன்.

அரசன்—(கடுங்கோபத்துடன்) அடே! உனது வாக்கு மூலத்தினாலேயே நீ குற்றவாளியாயினாய். அதனால் நீ சட்டப்படி மரணதண்டனைக் காளானாய். அடே சேவகா! இக்குற்றவாளியை விலங்காற் பிணித்து அப்பாற் கொண்டுபோ.

நரசிம்மவீரன்—அடே சேவகா! இவனுக்கருகில் வராதே. இவனைச் சாதாரண மனிதனென நினைத்தாய்போலும்! ஜெயபாலனைப்போல ஆயிரம் ஜெயபாலர் ஒன்று கூடினும் இவனதுபிறப்பிற்கும் மேன்மைக்கும் ஈடாவரோ! மன்னவா! சிறிது பொறுத்தருளுங்கள்.

அரசன்—"அடே! விருத்தா! நீயும் உனது மக்களும் உனக்குச் செய்த உதவிக்கு யான் வெகுமதி யளிக்குமுன், நான் உன்னை வெறுத்துக் கோபிக்குமாறு என் வாயில்

வந்தவிதம் பிதற்றுகின்றனே? இவன் ஜெயபாலனிலும் எப்படி உயர்ந்தவனுவனடா?

சந்திரன்—அரசே! அவ்வாறு எங்கள் தந்தை கூறியது தவறு தான், மன்னித்தருளுமின்.

அரசன்—(கோபத்துடன்) அப்பிழைக்காக நீயும் இறக்க வேண்டியதே முடிபு.

நரசிம்மவீரன்— அரசே! அநேக வருஷங்களுக்கு முன்னர் உங்களிடத்தில் நரசிம்மவீரனென்ன ஓர் சேனைத் தலைவனிருந்தனனே அது நினைவிற்கு வருகின்றதோ?

அரசன்—ஆமாம் அவனோர் பெருத்த வஞ்சகன்! அதனுல் தேசப் பிரஷ்டனுகைப்பட்டான். அவனைப் பற்றி யாது தெரிவிக்கப்போகின்றனை?

நரசிம்மவீரன்— அவனே இம்முநியோன், அவன் எவ்வாறு வஞ்சகனுயினனோ தெரியவில்லை.

அரசன்—(கோபத்துடன்) ஆகா அப்படியா! காவலர்காள்! இம்மூவரையும் விலங்கிட்டு அப்பாற் கொண்டு போங்கள். இவர்களை ஒருபோதும் மன்னித்து விடேன்.

நரசிம்மவீரன்—அண்ணலே! ஏழைமீது தயை புரிந்து கோபியாது சற்றுப் பொறுங்கள். முதலில் உங்கள் இரண்டு புத்திரர்களையும் வளர்த்ததற்குரிய வெகுமதியை யீந்து விட்டு அதன் பின்னர் என்னைக் கொல்லுங்கள்.

அரசன்—(ஆச்சரியத்துடன்) ஆகா! எனது புத்திரரை நீ வளர்க்கவாவது! என்னடா பிதற்றுகின்றனை?

நரசிம்மவீரன்—(அரசனதுகாலில்வீழ்ந்து) சிறந்த மகிபனே! என்னைத் தந்தையென்றழைக்கும் இச்சிறுவரிருவரும்

எனது புதல்வரல்லர். உங்களது உதரத்திலுதித்த இளவரசர்கள்.

அரசன்—(திகைத்து) இவர்கள் எப்படி எனது புத்திரராவர்?

நரசிம்மவீரன்—புரந்தரா! யான் முற்றும் உண்மையாய் நடந்து உங்கள் விஷயத்திற் பலபோர்களில் வெற்றி பெற்றிருந்தும் எனது விரோதிகளின் மொழியை உண்மையென நம்பி என்னை தேசப்பிரஷ்டனுக்கினீர்கள். யான் உங்களுக்கு யாதோர் பிழையுஞ்செய்தறியேனுதலின் அப்பொழுதிருந்த என்மனதின் நிலைமையையும் துக்கத்தையும் என்னெனத் தெரிவிப்பேன்! இதற்காகப் பழிக்குப்பழிவாங்க நினைத்து இக்குழந்தைகளை வளர்த்த தாதியை இதன் பொருட்டே மணந்து அவள் மூலமாய் இவர்களை எடுத்துக்கொண்டு ஆரண்யத்திற்குச் சென்று அதன் பிறகு அவளையும் அங்கு வரவழைத்துக்கொண்டேன். யான் பின்னர்ச்செய்த குற்றத்திற்கு முந்தியே தண்டிக்கப்பட்டதாக நினைத்துக்கொண்டேன். இவ்விருபது வருஷங்களாய், இவர்களை வித்தைகளனைத்திலும் பயிற்றி யாதொரு குறைவுமின்றி வளர்த்தேன். இதோ உங்களிடம் திரும்பவுங் கொணர்ந்து விட்டு விட்டேன்.—(அழுது கொண்டு) எனினும் இளமையே யுருவாய்வந்த இவ்விரு அரிய நண்பரையும் விடுத்துப்பிரிய மாத்திரம் என்மனம் சம்மதியாது பதை பதைக்கின்றது. ஆகா! இவர்கள் எத்தகைய மேன்மைக் குணத்தைக் கொண்டிருக்கின்றனர். கடவுளது சிருஷ்டியின் விநோதத்தை என்னெனச்சொல்வேன்! இருவரும் சந்திர சூரியரெனப் பிரகாசிக்கின்றனர்.

அரசன்—ஆகா! நரசிம்மா! ஏன் அழுகின்றனை? இவர்கள் எனது குழந்தைகளாயிருப்பார்களாயின் எனது பாக்கியமே பாக்கியம்.

நரசிம்மவீரன்—சுந்தர னென்னும் பெயரைக் கொண்ட இவனே முதற்புதல்வன். மற்றவனாகிய இளையோன் சந்திரனெனும் பெயரையுடையான். இவர்களை யான் களவாடிச் சென்றபோது, இவர்களின் அன்னையால் தயாரிக்கப் பெற்ற ஓர்விநோத அங்கி. இவர்கள் மீது போர்த்தப்பெற்றிருந்தது. அதை மிகவும் பத்திரமாய்க்காப்பாற்றி வைத்திருக்கின்றேன். இதை உண்மையென உறுதிப்படுத்துவதற்கு இவ்வங்கியைப் பார்க்கவேண்டு மென்று கட்டளைவிடுவீர்களாயின் காண்பிக்கின்றேன்.

அரசன்—அடே! நரசிம்மா! எனது மூத்த புதல்வனாகிய சுந்தரனுடைய கழுத்தில் ஓர் மச்சமிருந்ததாய் ஞாபகமிருக்கின்றது. அதைப் பார்ப்போம்—சுந்தரா! அருகில்வா.

நரசிம்மவீரன்—ஆகா! அந்த அடையாளம் இதோ இருக்கின்றது, பார்த்தீர்களா? அற்பப்பொருளாகிய இவ்வியற்கை மச்சம் எனது மொழிக்கு சாக்ஷியா யமைந்தது.

அரசன்—(பெருத்த குதூகலத்துடன்) ஆகா! என்ன எனது பேரானந்தம்! ஓர் மாது ஓர் சமயத்தில் ஓர் குழந்தைக்குத் தாயாவள். யான் ஒரே காலத்தில் விலைபிலா மாணிக்கங்களாகிய மூன்று குழந்தைகளைப் பெற்றேன். ஏ! எனது உயிரை யொத்த செல்வர்காள்! சமீபத்தில் வந்து என்னைத்தழுவுங்கள்.—(அவர்களை யணைத்தவாறு சிரித்துக்கொண்டு) கண்மணி! சுந்த

ராங்கி இதனால் உனக்குத்தான் நஷ்டம். இவ்வரசு நினக்கில்லையாயிற்று.

சுந்தராங்கி—(சந்தோஷத்துடன்) இல்லை இல்லை. பிதா! இதனால் எனக்கு இரண்டு புதிய அரசுகள் கிடைத்தன.— எனதரிய சகோதரர்காள்! தெய்வமே நம்மை இதற்கு முன்னர் சந்திப்பித்தது. அப்பொழுது யான் ஒருவளே உண்மையைத் தெரிவித்தேன். நீங்கள் பொய் புகன்றீர்கள்.

சுந்தரன்—(திகைத்து) எவ்விஷயத்தில் நாங்கள் பொய்யுரைத்தோம். இனிய சகோதரி!

சுந்தராங்கி—(சிரித்துக்கொண்டு) நீங்கள் உண்மையில் எனது சகோதரர்களாதலின், யான் உங்களை அப்பொழுது சகோதரர்களென்றழைத்தது சரியானது. உங்களுக்கு யான் சகோதரியாயிருக்க, என்னை நீங்கள் சகோதரனென்றழைத்தது தவறல்லவோ?

அரசன்—ஆகா! நீங்கள் கூட இதற்கு முன்னர் சந்தித்தீர்களோ?

சந்திரன்—ஆம்! சந்தித்தோம் பிதா!

சுந்தரன்—முதலிற் சந்தித்த பொழுதே ஒருவர் பாலொருவர் பெருவாஞ்சையைக் கொண்டனம். கடைசியாய்ப் பிரியும்வரை அவ்வாறே இருந்தனம்.

அரசன்—இரத்தக்கலப்பின் கவர்ச்சி இல்லாமற்போமா! நம்மையறியாமலே பிரியமுண்டாமன்றே! ஆகா! என்ன எனது பாக்கியம்! என்ன எனது பிரமானந்தம்! அதற்கு எல்லையே இல்லை. உங்கள் ஒவ்வொருவரது வரலாறுகளையும் சாவகாசமாய் விரிவாய்க் கேட்கவேண்டும். ஆயினும் கடைசியில் என்னைக் காப்பாற்றிய அந்த

எளிய போர்வீரனைக் கண்டோரில்லையே! அவனிருந் திருப்பின் என்னுடைய மனோரதம் முற்றிலும் பூர்த்தி யாயிருக்கும்.

மதிவதனன்—மேன்மை தங்கிய அண்ணலே! அவ்வாறு யானே வந்தேன். யான் சமயோசிதமாய் வேஷம் பூண்டு வந்து போர்செய்தேன்.—அடே சூரசேனா உண்மையைத்தெரிவி—யான் உன்னை வென்று கீழே வீழ்த்திக்கொல்லும் சமயத்திலிருக்கவில்லையா?

சூரசேனன்—(மதிவதனன் காலில் விழுந்து) இதோ இன்னொரு முறை உமது கால்களில் விழுகின்றேன். முன்பு உமது பலத்தினால் விழுந்தேன். இப்பொழுது என்னுடைய மனோபாதையைப் பொறுக்கலாற்றாது விழுகின்றேன். என்னைக் கொன்றுவிடும். இதோ இரண்டு மோதிரங்களையும் பெற்றுக்கொள்ளும்.

மதிவதனன்—(மோதிரங்களை வாங்கியவாறு) அடே சூர சேனா! எனது காலில் ஏன் விழுகின்றனை? உன் மீது யான் சீற்றமுங்கொள்ளேன். விரோதம் பாராட்டி உனக்கு யாதொரு பொல்லாங்குமியற்றேன். இனியா யினும் பிறரெவரையும் இவ்வாறு வஞ்சியாது போக்கியனாயிரு. திரும்ப இவ்வாறு பிறர்க்குத் தீமைபுரிய நினைப்பையேல்

> 'மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
> னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு'

என்றவாறு அது உனக்கே துன்பமாய் முடியும்.

அரசன்— (சந்தோஷத்துடன்) ஆகா, எனது மருகனது மேன்மைக்குணமே குணம். அம்மேன்மைக் குணத்தை யாமும் மேற்கொள்வோம். இப்பொழுது பிணிக்கப் பட்டு நமது முன்னர் கொணரப் பெற்றிருப்பவரைத்

தவிர மற்றையோர் யாவருக்கும் பேரானந்தமே. அவர்களும் நம்மால் சந்தோஷப்படட்டும். அவர்களை விட்டு விடுங்கள்.

சுந்தராங்கி—(புன்சிரிப்புடன் பராக்கிரமபாகுவை நோக்கி) தலைவ! யான் தங்களுக்கு ஊழியம் செய்யட்டுமா ?

பராகிரமபாகு—(சந்தோஷத்துடன்) உனக்கு ஸர்வமங்களமுண்டாகுக! நீ நீடூழிகாலம் உனது காதலனுடன் இனிது வாழ்வையாக.

அரசன்—(சுந்தராங்கி மதிவதனன் இருவருடைய கைகளை சேர்த்து வைத்து, ஆசீர்வதித்து) இன்றே அதி விமரிசையாக கலியாணம் நடத்திவைப்போம். வாருங்கள் அனைவரும் அரண்மனைக்கு யேகலாம்.

(இங்கிலீஷ்—நோட்டு)

(1) ஆதியந்தமாகி நின்ற சோதியண்ணல் வாழவே
நீதியாவும் வேதம் நாலும் நீடுநின்றுவாழவே

(2) பூமியாவும் நேமியொன்றிலாளுகின்றபூபனுந்
தீமையின்றி நேமம் நின்று சேமமிஞ்சிவாழவே (ஆதி)

85572

சுந்தராங்கி முற்றிற்று.

P. R. Rama Iyar & Co., Printers, Madras